ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்

•

கோயமுத்தூர் வக்கீல் திருமலை நல்லான் சக்ரவர்த்தி
வெங்கரை

ஸ்ரீ உ.ப. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர்

இயற்றியது.

ஜகதாசார்ய ஸிம்மாஸநாதிபதி காஞ்சிபுரம் ப்ரதிவாதிபயங்கரம்
மஹாவித்வான்

ஸ்ரீ உ.ப. வே. அண்ணங்கராசாரிய ஸ்வாமியின்

முன்னுரையுடன் கூடியது.

ஸ்ரீ மணவாள மாமுனிகளின் ஆறுவது நூற்றாண்டு நிறைவு
மஹோத்ஸவத்தில் புதுடில்லியில்
ஸாதாரண ஸ்ரீ ஐப்பசி திருமூலத்தன்று வெளியிடப்பட்டது.

3—11—1970

(இரண்டாம் பதிப்பு)

விலை ரூ. 2-00]　　1970　　[தபாற்கூலி வேறு

மு ன் னு ரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்ருமை நன்று" என்ருர் குறளாசிரியர். "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே" என்ருர் நம்மாழ்வார். "நர : பதிதகாயோபி யச : காயேந ஜீவதி" என்ருர் வடநூலார். பஞ்சபூதவுடலை நீத்தாலும் புகழுடல் பெற்று நீடூழி விளங்கும் மஹாமேதாவிகளில் முதல் விரலை முடக்கி எண்ணக்கூடியவர் ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யஸ்வாமி. இவர் திருநாடலங்கரித்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆனுலும் அவர் பெற்றிருந்த பாண்டித்யமும், அவர் உலகுக்குச் செய்திருந்த பேருதவிகளும் அவரை மறக்கவொட்டுகின்றனவில்லை.

ஸ்ரீஸ்வாமியை முதன்முதலாக காஞ்சீபுரியிலும் பிறகு சென்னையிலும் பிறகு கோவையிலும் ஸேவிக்கப் பெற்று அளவளாவியபோது, வக்கீலென்று பேர் பெற்றிருக்குமிந்த மஹானுக்கு ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷயம் ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய சாஸ்த்ரங்கள் ஆகிய இவற்றில் இவ்வளவு ஆழ்ந்த ஞானம் எங்ஙனம் உண்டாயிற்றென்று உண்மையில் வியப்படைந்தேன்.

ஸம்ஸ்க்ருத காவ்யநாடக அலங்காரங்களில் பல பல அபூர்வமான அர்த்தங்களைப் பூப்பறித்தாற்போல அடுத்தடுத்து ஸாதித்துக் கொண்டிருந்தார். இவ்வளவு பரிபக்குவமான ஞானம் தேவரீருக்கு எப்படியுண்டாயிற்றென்று அடியேன் வினவ நேர்ந்தபோது, தமது திருத்தகப்பனுருடைய ஒப்புயர்வற்ற பாண்டித்தியத்தையும் ப்ரவசனப் பெருமைகளையும் பரக்கக்கூறி அவரிடம் சிந்திப்போனவையென்று ஸாதித்தார்.

ஸ்ரீ சக்ரவர்த்தியாசார்யஸ்வாமியோடு ஸ்வல்பபரிசயமுடைய அடியேனே அவரிடத்தில் சில நாட்களில் பல பல, அபூர்வ விஷயங்களைக் கேட்கப் பெற்றபோது, அவருடன்

நெருங்கின பழக்கம் பெற்ற பாக்யவான்கள் எவ்வளவோ கேட்டுக்களித்திருப்பர்களென்பதில் ஐயமில்லை.

அவருடைய ஞானம் அவரோடு சுவறிவிடாமல் பின்புள்ளார்க்கும் பயன்படுமாறு அவர் பரமகருணையோடு ஏடுபகுத்திவைத்த ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸாரமென்னும் சிறந்தநூல் ஏற்கெனவே 1948 ஆம் ஆண்டில் அச்சேறியிருந்தது. இப்போது நல்ல புனிதமான தருணத்தில் மறுபதிப்பெய்தி வெளிவருவது உலகுக்கும் பரம பாக்கியமேயாகும். அவர் தமது வாழ்நாளில் செய்துகொண்டிருந்த சொற்பொழிவுகளின் ஸாரமே வடிவெடுத்தது இந்நூல் என்று அறியக்கிடக்கின்றது.

இந்நூல் ஐந்து பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. 1. ஸ்ரீராமாயணதத்துவம், 2. விசிஷ்டாத்வைததத்வம், 3. குருபக்தி, 4. ச்ருதிப்ராமாண்யம், 5. ஜீவபரஸம்பந்தம், ஆக விஷயங்கள் ஐந்தேயானாலும், பலாப்பழமொன்றில் பலநூறு சுளைகளிருப்பது போலவே ஒவ்வொரு பகுதியும் முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும் திகழ நிற்பவை.

இவற்றை ஆழ்ந்து ஊன்றி வாசிப்பவர்கள் ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீராமாயணம் ஸ்ரீவசனபூஷணம் முதலிய பல நூல்களைப் பலகால் ஸேவித்துப் பெறக்கூடிய ஞானத்தை எளிதிற் பெறுவர்களென்பதில் ஐயமில்லை.

அரியபெரிய இந்நூலை மிக்க ஊக்கத்துடன் விசேஷமான பொருட்செலவு செய்து அச்சிடுவித்த அந்த ஸ்வாமியின் திருக்குமாரர்களிருவர் பக்கலிலும் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இவர்களில் மூத்த திருக்குமாரரான ஸ்ரீமான் V. S. R. சக்ரவர்த்தி மேன்மேலும் இத்தகைய பணிகளில் ஊன்றி உலகுக்கு நன்மைபுரிவாராக.

இங்ஙனம்,

ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

7—10—'70.

ஸ்ரீ:

முகவுரை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸாரம் என்கிற இந்த நூலில் அடியோங்களுடைய திருத்தகப்பனுர் பலவாண்டுகட்கு முன்பு அருளிச்செய்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்திகளின் கொள்கைகள் எளிதான தமிழ் நடையில் ஐந்து பகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

நமது ஸம்ப்ரதாயத்தின் கொள்கைகளை நன்கு எடுத்துக்காட்டுகிற இந்த நூலிலடங்கிய ஐந்து பகுதிகளும் அர்த்த பஞ்சகமெனப்படும் ஐந்து ரத்னங்கள் போன்றவையாயிருக்கிறபடியினுல் ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோருக்கும் உபயோகமாயிருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. அனைவரும் முன்வந்து இந்தப் புத்தகத்தை வாங்கி ஸம்ப்ரதாயார்த்தங்களை அறிந்துகொள்வார்களென்று நம்புகிறோம்.

தற்காலத்திய காகிதத்தின் விலை, அச்சுக்கூலி முதலியவற்றினுல் இதைப் பிரசுரிப்பதற்கு அதிக த்ரவ்யம் செலவழிந்தபோதிலும் எல்லோரும் அதிக சிரமமில்லாமல் வாங்க வேண்டுமென்கிற எண்ணத்தினுல் இதன் விலை குறைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த வ்யாஸங்களைக் கடாக்ஷித்து கீழே பிரசுரிக்கப்பட்ட முன்னுரையை உபகரித்தருளிய ஜகதாசார்ய ஸிம்மாஸநாதிபதி ப்ரதிவாதிபயங்கரம் காஞ்சீபுரம் மஹாவித்வான் ஸ்ரீ உ. ப. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமிக்கு எங்களுடைய நன்றியை ஸவினயம் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்வாமியின் குமாரர்களான
அடியோங்கள்,

4-C, காமராஜ் அவின்யூ
அடையாறு, மதருஸ்-20
3—11—1970

வே. ஸ்ரீ. ரங்கராமானுஜ சக்ரவர்த்தி
(V. S. R. Chakravarti)
வெ. ஸ்ரீ. வாஸுதேவ சக்ரவர்த்தி
(V. S. V. Chakravarti)

விஷய ஸூசிகை.



திருமலை நல்லான் சக்ரவர்த்தி

வெங்கரை ஸ்ரீ உப. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர்

(1881—1946)

ஶ்ரீ:

ஶ்ரீ ராமாயண தத்துவம்

பூர்வ பீடிகை

வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய், கௌசலை தன் குலமதலையாய், தசரதன் மகனாய்த் தோன்றிய குணம் திகழ் கொண்டலான ஶ்ரீ ராமபிரானது அவதாரதினமான இப் புண்யதினத்தில் பெரியோர்களின் நியமனத்தை சிரஸா வஹித்து அடியேன் ஶ்ரீ ராமாயணத்தில் சில தத்வங்களைக் குறுகியகாலத்திற்குள்சொல்லுவதாகத் துணிந்திருக்கிறேன்.

ப்ரதிபாதிக்கப்படும் விஷய ஸங்க்ரஹம்.

[1]कामार्थगुणसंयुक्तं धर्मार्थगुणविस्तरम् !

என்கிறபடியே ஶ்ரீ ராமாயணத்தில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், எனப்படும் நான்கு புருஷார்த்தங்களில், தர்மம், மோக்ஷம், இவைகள் விஸ்தாரமாகவும், அர்த்தம், காமம், இவைகள் சுருங்கவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. [1]**समुद्रमिव रत्नाढ्यम्** என்கிறபடியே கடலில் முத்து, பவழம், முதலிய ரத்னங்கள் உள்ளே மறைந்து கிடக்கிறாப்போலே ஆழ்ந்த சிறந்த கருத்துக்கள் இதில் உள்ளடங்கி இருக்கின்றன. இதில் பல வேதாந்த ரஹஸ்யங்களும், உலக நீதிகளும், ராஜநீதிகளும், புருஷதர்மங்களும், ஸ்திரீ தர்மங்களும் ஆங்காங்கு பதிந்துகிடக்கின்றன. வ்யங்க்யார்த்த ப்ரதானமான உத்தமோத்தம காவ்யமாதலால் மேலெழுந்த பார்வையில் தோன்றாத பல ஆழ்ந்த கருத்துக்கள் தோண்டித் தோண்டி எடுக்கப்படவேண்டியவைகளாயிருக்கின்றன. இதில் கதாபாகங்கள் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமாகையால் அவைகளை விஸ்தரிக்காமல் அவசியம் அறியவேண்டிய பொருள்களில் சிலவற்றை மட்டும் சொல்லுகிறேன்.

சிறை இருந்தவளின் ஏற்றம் சொல்லும் ப்ரகாரம்.

ஶ்ரீ ராமாயணம் முழுவதும் முக்கியமாய் சிறை இருந்தவளான பிராட்டியின் ஏற்றம் சொல்லுகிறது என்று நம் பூர்வர்

---

1. ராமா-பால—3-8.

கள் அனுஸந்திப்பார்கள். தேவ தேவ திவ்ய மஹிஷியான தன் மேன்மையையும், பெருமையையும் சிறையிருப்பின் தாழ்வையும் பாராதே, தேவஸ்திரீகளின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தது தயாபரவசமான கார்யமல்லவா! கையில் இருந்த குழந்தை தவறி சாக்கடை ஜலம் நிறைந்த பள்ளத்தில் விழுந்துவிட்டால் தாய் (அல்லது தகப்பன்) சற்றும் தயங்காமல் சடக்கென்று குதித்து குழந்தையை வெளியிலெடுப்பதைப்போல், சேதனர்கள் விழுந்து உழலும் ஸம்ஸாரஸாகரத்தில் பிறப்பிலியான தான் வந்து பிறந்து, இவர்கள் பட்டபாடெல்லாம் தானும் பட்டு, ரக்ஷிக்கையாலே மாத்ருத்வ ஸம்பந்தத்தால் வந்த வாத்ஸல்யத்தை இந்த க்ரந்தம் வெளிப்படுத்துகிறது. இந்த வாத்ஸல்யத்தின் மிகுதியை நம்மாழ்வார் [1]'தனிச் சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்' என்று வெளியிட்டார். கர்மத்தால் சிறையுண்டானால் அது தாழ்வாகும். ஆச்ரிதைகளான தேவஸ்திரீகளின் சிறையை விடுவிக்கைக்காகத் தன் அனுக்ரஹத்தாலே வலியச் செய்ததாகையாலே இந்தச் சிறை இருந்தது ஏற்றத்துக்குக் காரணமாயிற்று. ஸம்ஸாரிகள்போல் கர்ப்பவாஸம் பண்ணிப் பிறக்கும் பிறப்பு பகவானுக்கு தேஜஸ்கரமாகிறது என்பதை [2]'பலபிறப்பாய் ஒளிவரும்' 'என்று ஆழ்வார் வெளியிட்டருளினர். ச்ருதியும் 'அவன் ஒருவனேபிறக்கப் பிறக்க புகழ் பெறுபவனுகிறன்' என்று சொல்லிற்று. ஏனெனில் ஒரு கர்மத்தினுலன்றிக்கே கேவலம் தன் இச்சையினுல் ஆச்ரிதர்களை அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று பிறந்தபடியினுல் அது போலவே பிராட்டி விஷயத்திலும் இந்த சிறைவாஸம் அவளுக்கு தேஜஸ்கரம் ஆயிற்று. இந்த உண்மையை அறியாமல் ராவணபலாத்காரத்தினுல் சிறையிருந்ததாகச் சொல்வார்கள் அறிவில்லாத அல்பர்கள் என்று ஆசார்யர்கள் பணித்தார்கள். ஹனுமானுடைய வாலில் துணிகளைச் சுற்றிநெருப்பைவைத்த தகவல் அறிந்து [3]"शीतो भव हनूमतः" என்கிறபடியே உஷ்ணமான உன் ஸ்வபாவத்தை மாற்றி, ஜலதத்வத்தின் ஸ்வபாவமான குளிர்ச்சியை நீ அடையக்கடவாய் என்று அக்கினியை ஆஜ்ஞாபித்து, அக்கினிக்கு குளிர்ச்சியைக் கொடுக்கவல்ல பிராட்டியானவள் "दग्धो भव" (நீ நீருய் போகக்கடவாய்) என்று ராவணனைப் பார்த்துச் சொல்லமுடியாதா? அப்படிச் செய்யாததற்குக் காரணத்தை மஹர்ஷி

1. திருவாய்மொழி 4-8-5.
2. திருவாய்மொழி 1-3-2.
3. ஸ்ரீமத்-ஸு-ந்தர-33-29.

[1] "असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् ।
नत्वां कुर्मि दशग्रीव भस्म भस्मार्हतेजसा" ॥

என்று வெளியிட்டான். அதாவது ராமனுடைய கட்டளை இல்லாததாலும், என் தவத்தைக் காப்பாற்ற வேண்டியதற்காகவும், சாம்பலாக்க வேண்டிய உன்னைச் சுட்டு எரிக்கவில்லை என்று அருளிச் செய்தாள். ஆகையால் அசோக வனிகையில் சிறையிருந்தது தன் அனுக்ரஹத்தினாலே அந்யரக்ஷணார்த்தமாகச் செய்த கார்யமாதலால் இவளுடைய தயை முதலிய குணங்களுக்கு அது ப்ரகாசகம்.

ஸ்ரீ ராமாயணம் முழுவதும் பிராட்டியின் விஷயமானது

ஸ்ரீ ராமாயணம் முழுவதும் பிராட்டியின் ஏற்றம் சொல்லுகிறது என்பது ஸ்ரீ வால்மீகி பகவானால்

[2]**काव्यं रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत्** என்றும்,

[3]**श्रीमद्रामयणमपि प्राणिति त्वच्चरित्रे**

என்று பட்டராலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தக் காவ்யம் முழுவதற்கும் பிராட்டியின் சரித்திரம் ஜீவிதம் என்றபடி '**जीवितं व्यङ्ग्यवैभवं** என்றபடியே இந்த ஆதிகாவ்யத்திற்கு ஸீதையின் சரித்திரம் உயிர் நிலை என்று திருவுள்ளம். **रामस्य अयनं** என்றாலும், **रामायाः अयनं** என்றாலும் ராமாயணம் என்றே ஸமாஸமாகையால், ராம சரித்திரம் என்றும் ராமா சரித்திரம் என்றும் கூற இடமுண்டு. இதைத் திருவுள்ளம் பற்றியே **रामस्य चरितं कृत्स्नं सीतायाः चरितं' महत्'** என்றும் வால்மீகி அருளிச் செய்தார்.

தத்வஹித புருஷார்த்த நிருபணம்

வேதோபப்ரஹ்மணங்களில் ப்ரதானமான ஸ்ரீ ராமாயணத்தில் வேதத்தில் போல் தத்வ ஹித புருஷார்த்தங்கள் சொல்லப்படுகின்றன. சாஸ்திரார்த்தங்களை நிர்ணயிக்கிற

---

1. ராமா-ஸுந்தர-20-20.
2. ராமா-பால-4-7.
3. ஸ்ரீ குணரத்னகோசம்-14.

[1]உபக்ரம உபஸம்ஹாராதி ந்யாயத்தை ஸஞ்சாரம் பண்ணிப்பார்த்தால் இது நன்கு விளங்கும். ஸ்ரீ ராமனாய் அவதரித்த ஸ்ரீமந்நாராயணனே சதுர் முகாதிகளுக்கும் (ப்ரம்மா முதலானவர்களுக்கும்) சரண்யமாய் பரமகாரணமான (எல்லோரையும் ஸ்ருஷ்டித்த) பரப்ரஹ்மம் என்கிற அர்த்தம் ஆதி முதல் கடைசி வரையில் ஆங்காங்கு சொல்லப்படுகிறது. அப்படியே பரதத்வ வசீகரண ரூப சரணாகதியே பரம ஹிதம் (உயர்ந்த உபாயம்) என்று பல இடங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தசரதன் செய்த யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்கவந்த தேவர்கள் பகவானை சரணம் அடைதல், விசுவாமித்ரரை த்ரிசங்கு சரணமடைதல் முதலாக சுமார் இருபது இடங்களில் சரணாகதி சொல்லப்பட்டிருப்பதினால் ஸ்ரீ ராமாயணம் சரணாகதி சாஸ்திரம் என்றும், தீர்க்க சரணாகதி என்றும் சொல்லப்படுகிறது. இந்த சரணாகதி என்கிற ப்ரபத்திக்கு தேச நியமமும், காலநியமமும், ப்ரகார நியமமும் அதிகார நியமமும் பலநியமமுமில்லை. குணபூர்த்தியுள்ள விஷய நியமமேயுள்ளது. தேவர்கள் செய்த சரணாகதிக்குப் பலன் ராக்ஷஸ நிரஸனம். த்ரிசங்குவுக்குப் பலன் சரீரத்தோடு ஸ்வர்க்கம் போவது. ஸுநச்சேபனுக்கும் காகாஸுரனுக்கும் ப்ராண ரக்ஷணம் பலன். லக்ஷ்மணனுக்கு ராமானுவ்ருத்தி ஸ்ரீ விபீஷணனுக்கு ராமப்ராப்தி. பெருமாளுக்கு ஸமுத்திர தரணம். இவ்விதம் அந்தந்தப் பலன்களுக்கு அவரவர்கள் ப்ரபத்தி செய்திருக்கிறார்கள். பரம புருஷார்த்தம் மோக்ஷமே என்பதும் இதில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஜடாயுஸ் சபரீ முதலியவர்களுக்கும் [2]'அன்று சராசரங்களை வைகுந்

---

1. "இப்படி இப்ரபந்தம்

उपक्रमोपसम्हारावभ्यासोऽपूर्वता फलम् ।

अर्थवादोपपत्ती च लिंगं तात्पर्य निर्णये ॥"

என்கிற தாத்பர்ய லிங்கங்களை எல்லாம்பூர்ணமாக உடையதாய் ஸ்ரீ வால்மீகி பகவானாலே த்ருஷ்டமாயிருப்பதொரு சரணாகதி வேதம்' என்று ஸ்ரீ அபய ப்ரதான ஸாரத்தில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்திருப்பது இங்கு அனுஸந்தேயம். இதன் கருத்து ஒரு க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் விஷயம் எது என்று நிச்சயிக்கக் காரணம் என்று சொல்லப்பட்ட—ஆரம்பம், முடிவு, அடிக்கடி சொல்வது, பலத்தைநிரூபிப்பது, ஸ்தோத்திரம் செய்வது, முதலிய லக்ஷணங்கள் இதில் பூர்ணமாயிருக்கின்றன. அதாவது சரணாகதியை இதில் ஆரம்பம் முதல் காண்டம் தோறும் பல படிகளில் நிரூபித்திருப்பதினால் இது சரணாகதி வேதம் எனப்படுகிறது என்றபடி,

2. பெருமாள் திருமொழி 10-10.

தத் தேற்றி' என்றும், [1]'புற்பா முதலா புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பாலுக்கு உய்த்தனன்' என்றும்,

[2]तिर्यग्योनि गताश्चापि सर्वे राममनुव्रता: ।
[3]विवेश वैष्णवं तेजस्सशरीरस्सहानुज: ॥

என்றும் சொல்லுகிறபடியே அயோத்தியில் உள்ள சராசரங்கள் யாவற்றுக்கும் முக்தியைக் கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருப்பதினுல் அந்த முக்தியே உயர்ந்த புருஷார்த்தம் என்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

ஆழ்ந்திருக்கும் அர்த்த விசேஷங்கள்.

மஹிர்ஷியின் சொற்கள் எல்லாம் பெரும்பாலும் ஸ்தூல ஸூக்ஷ்மார்த்தங்களோடே கலந்தே இருக்கும். "பத்து முகங்களாகிற பத்து இந்திரியங்களோடு கூடிய மனதாகிற ராக்ஷஸ ராஜனுல் அதிஷ்டானம் செய்யப்பட்டு ஸம்ஸாரக் கடலால் சூழப்பட்டிருக்கிற லங்கையாகிற சரீரத்திற்குள் நின்று, தீன தசையை அடைந்து, தபித்துக்கொண்டு, கடலைக் கடக்க உபாயம் அறியமால் வருந்துகின்ற ஸீதையாகிற ஜீவன் பக்கல் ஹனுமானுகிற ஆசார்யன் வந்து நாயகனுகிற பகவானுடைய ஸ்வரூபாதிகளையும் இருப்பையும் உபதேசித்து [4]'உடன் கூடுவது என்று கொலோ' என்கிற ஆர்த்தியை உண்டாக்கி, அதன் வழியாக உபாயத்தைக் கைப்பற்றி மோக்ஷம் அடையும்படி செய்கிருன் என்பது வால்மீகியின் உட்கருத்து. இவ்வர்த்தத்தை

[5]दशेन्द्रियाननं घोरं यो मनो रजनीचरम् ।
विवेक शरजालेन शमं नयति योगिनाम् ॥

என்றிவை முதலியவைகளை அனுஸரித்து ஸ்ரீ தேசிகன்

[6]दर्पोदग्र दशेन्द्रियाननमनोनक्तंचराधिष्ठिते
देहेऽस्मिन् भवसिन्धुना परिगते दीनां दशामास्थित: ।
अयत्ने हनुमत्समेन गुरुणा प्रख्यापितार्थ: पुमान्
लङ्कारुद्ध विदेहराजतनया न्यायेन लप्स्यते ॥

---

1. திருவாய்மொழி 7-5-1.
2. ராம-உத்தர-109—22, 3. ராமா-உத்-110-12.
4. திருவாய்மொழி.
5. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 1–72.
6. தத்வார்த்தங்களைப் போதிக்கும் வ்ருத்தாந்தங்கள் ஸ்வாபதேசம்.

என்கிற சுலோகத்தில் அருளிச் செய்தார். ஸ்வாப தேசத்தில் பிராட்டியை ஜீவாத்மாவாக வைத்து வால்மீகி பேசுகிறார். ஜீவாத்மாவானவன் பரமாத்மா விஷயத்தில் எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை ஸீதையின் சரித்திரத் தால் பல இடங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறார். சேதனன் பகவத் விஷயத்தில் இழிந்து பகவானைப்பற்றும்போது பகவா னிடத்திலுள்ள குணம் கண்டன்று, இவ்வாத்மாவிற்கு அவன் வகுத்த விஷயம் என்றே பற்றவேண்டும் என்கிற ரஹஸ்ய மான அர்த்தத்தை பதிவ்ரதா ஸ்திரீயின் இருப்பைச் சொல் லுகிற வ்யாஜத்தால் சேதனன் இருக்கவேண்டிய இருப்பை உபதேசிக்கிறார். பால காண்டத்தின் இறுதியில் ஸ்ரீ ராம னுக்கும் பிராட்டிக்கும் இருந்த அன்யோந்ய அனுராகம் (ஒருவருக்கு ஒருவருள்ள ப்ரீதி) எப்படி இருந்ததென்று நிரூபிக்கும் ப்ரகரணத்தில்

[1]प्रिया तु सीता रामस्य दाराः पितृकृता इति ।
गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत ॥
तस्याश्च भर्ता द्विगुणं हृदये परिवर्तते ॥

என்று நிரூபித்திருக்கிறார். இங்கு ராமனுக்கு ப்ரீதி உண்டான தற்கு **दाराः पितृकृताइति गुणात् रूपगुणाच्चापि** என்று மூன்று காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் காரணம் தன் தகப்பனார் பண்ணிவைத்த பெண் என்பது. ஸீதையினிடத் தில் உள்ள ஸ்திரீத்வ லக்ஷணமான தயை, அடக்கம் மடப்பம், தாக்ஷிண்யம் முதலிய குணபூர்ணத்வம் இரண்டா வது காரணம். ஸீதையின் தேக ஸௌந்தர்யம் மூன்றாவது காரணம். ஆனால் பிராட்டிக்கு ஸ்ரீ ராமனிடத்தில் உண்டான ப்ரீதிக்கு ஒரு காரணமும் சொல்லாமல் **तस्याश्च भर्ता द्विगुणं हृदये परिवर्तते** என்று ஸீதைக்கு பர்த்தாவிடத்தில் இரண்டு மடங்கு

அந்யாபதேசம், பரோபதேசம், என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஸ்வாபதேசம் என்பது தனக்கு நடந்ததைத் தெரிவித்து அத்தால் மற்றவர் களுக்கு அந்த அர்த்தத்தை வெளியிடுவது. அந்யாப தேசம் என்பது தனக்கு நடந்ததைத் தானே தன் வார்த்தையாகச் சொல்லாமல் அயலா ருடைய வார்த்தையாகத் தெரிவிப்பது. பரோபதேசம் என்பது அயலாருக்கு கேவல உபதேச ரூபமாகச் சொல்வது. இங்கு 'ஸ்வாபதேசத்தில்' என்றது ப்ராட்டியின் அனுஷ்டான வ்ருத்தாந்தத்தை நிருபித்து அத்தால் ஜீவாத் மாக்களுக்கும் அப்படியே உண்டாகும் என்பது காட்டப்படுகிறது என்றபடி.

1. ராமா-பால-77—26, 27.

ப்ரீதிஇருந்தது என்று நிரூபித்தபடியினால் கேவலம் பர்த்தா என்கிற காரணத்தைக்கொண்டே அப்படிச்செய்தாள் என்று மஹர்ஷியின் கருத்து. ராமன் விஷயத்திலும் கீழ்க் கூறிய காரணங்கள் இருந்தபோதிலும் அவை அநாதரிக்கத்தக்க வைகள் என்று திருவுள்ளம். இங்கு பர்த்தா என்கிற ஆகா ரத்தினலே ப்ரீதி உண்டாயிற்று என்பதை பிராட்டிதானே அநஸூயையுடன் ஸம்பாஷிக்கும் ஸந்தர்ப்பத்தில் வெளியிட் டதையும் மஹர்ஷி நிரூபித்தான். அத்ரி பகவானுடைய ஆச் ரமத்தில் அவருடைய பத்தினியான அநஸூயை பிராட்டி யைப் பார்த்து பந்து ஜனத்தையும் அபிமானத்தையும் ஐசுவர் யத்தையும் விட்டுப் பர்த்தாவுடன் காட்டிற்கு நீ வந்த இது தைவயோகத்தாலே நன்ருய்க் கூடிற்று. நகரஸ்தனுகிலும் வனஸ்தனுகிலும் நல்லவனுகிலும், கெட்டவனுகிலும் ஸ்தீரி களுக்குப் பர்த்தாவே தைவம். நீ இப்படியே எப்பொழுதும் ராமன் விஷயத்தில் அனுகூலித்துப்போவாய் என்று சொல்ல பிராட்டி இதைக் கேட்டு வெட்கத்தினல் தலை கவிழ்ந்து கொண்டு, எனக்கு ஸ்ரீ ராமன் பக்கம் த்ருடமான (உறுதி யான) அனுராகமானது குணயோகத்தைப் பற்றியல்லாமல் ஸ்வரூப நிபந்தனமாக ஸ்வத: (தானே) உண்டாயிருக்கச் செய்தே, அதை (லோகத்தார்) அறியமால் அவர் குணுதி கராய் (குணம் மிகுந்தவராய் இருக்கையாலே எனக்கு குண நிபந்தனமான (குணத்தைக் காரணமாகக்கொண்டே) அனு ராகமே உண்டாகியிருக்கிறதுஎன்று நாட்டிலுள்ளார் நினைக் கிருர்கள். திருக்கல்யாண குணங்களுக்கு இருப்பிடமான ஸ்ரீ ராமனை அப்படிப்பட்ட குணங்களை விட்டுப் பிரித்துக் காட்டமுடியாமையாலே எனக்கு அவர் பக்கம் இருக்கும் இருப்பை அறிவிக்க முடியவில்லை. [1]அவர் குண ஹீனரு மாய் (நல்ல குணங்கள் ஒன்றுமில்லாதவராய்) விரூபராய் (விகாரமான ரூபத்தை உடையவராய்) இருந்திருப்பாரே யாகில் அப்பொழுதும் அவர் எனக்கு பர்த்தா என்கிற ஆகாரத்தால் ப்ரீதி உண்டாயேயிருக்கும் [2]'வேம்பின் புழு வேம்பன்றி உண்ணுது' [3]'கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக் குல மகள்' என்கிறபடியே இருப்பவள் நான் என்று கருத்துப்படச் சொன்னுள். ஆக இத்தால் சேதனன் பகவானைப்பற்றும் போது அவனிடத்தில் இருக்கும் குணங்களைக் கண்டல்லா மல் ஸ்வரூப ப்ராப்தம் என்றே பற்றவேண்டும் என்கிற ரஹஸ்யத்தை வெளியிட்டார்.

---

1. ராமா-அயோ-118-3 சுலோகம் விவக்ஷிதம்
2. பெரிய திருமொழி 11-8-7.
3. பெருமாள் திருமொழி 5-2.

பகவானுக்கு ஜீவன் சேஷ பூதன் என்பதை 'எந்த பகவானுக்கு நான் அடிமைப்பட்டவனோ அந்தப் பகவானையின்றி வேறு ஒருவரை நான் அடையமாட்டேன்' என்றர்த்தமுள்ள சுருதியின் கருத்தை ஸ்ரீ பரதாழ்வான் வாக்கில் வைத்துப் பேசுகிறார். ஸ்ரீ ராமனும் காட்டுக்கு எழுந்தருளி சக்ரவர்த்தியும் ஸ்வர்க்கம் அடைந்த பிறகு ராஜ்யம் அராஜகமாக (அரசன் இல்லாமல்) இருக்காமல் இருக்கவேண்டி ராஜ்யத்தை ஸ்வீகரிக்கும்படி வஸிஷ்டாதி மந்திரிகள் பரதனைப் பிரார்த்திக்க அவர் ஸபாமத்தியில் கதறிக்கொண்டு (ஆசார்யராகையால் பூஜ்யரான) வசிஷ்டரையும் குறை கூறிக்கொண்டு

[1]राज्यं चाहं च रामस्य धर्मं वक्तुमिहार्हसि

ராஜ்யமும் நானும் ராமனுடைய சொத்து அதாவது அவருக்கு சேஷமான வஸ்துக்கள், சேஷவஸ்துக்கள் ஒன்றை மற்றொன்று ஆளக்கூடுமோ? அப்படியானால் ராஜ்யம் தான் என்னை ஆளட்டுமே; லோகத்தில் ராஜ்யத்துக்காகத் தகப்பனாரையும் தமையனாரையும் கொல்லுவாருண்டு. ஆனால் புத்திரனைவிட்டுப் பிரிந்து உடனே மரணம் அடையும் ஸ்வபாவத்தை உடைய தசரதன் வயிற்றில் பிறந்த நான் எங்ஙனே ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுவது என்றான்.

இப்படியே சேஷபூதனான சேதனன் தன்னுடைய சேஷத்வத்திற்கு அனுகுணமாக ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னிவழுவிலாவடிமை செய்வதும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஒரு மிதுனத்திற்கு (பிராட்டியுடன் கூடிய பகவானுக்கு) என்பதை இளைய பெருமாளின் (லக்ஷ்மணனுடைய) அனுஷ்டானத்தினால் கவி வெளியிட்டிருக்கிறார். [2]'கோலத் திருமா மகளோடு' என்றும், [3]'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப' என்றும் நம்மாழ்வார் அனுஸந்தித்தபடியே ப்ராப்யம் (அடையவேண்டிய ப்ரயோஜனம்) ஒரு மிதுனம் என்பதை இளையபெருமாள்

[4]भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते ।
अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ॥

என்று பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே அடிமை

1. ராமா-அயோத் 82-12.
2. திருவாய்மொழி 6-9-3.
3. திருவாய்மொழி 4-9-10.
4. ராமா-அயோ-31-27.

யை (கைங்கர்யம் செய்யவேண்டும் என்பதை) ப்ரார்த்தித்துப் பெற்றார் இது ஸ்வரூபப்ராப்தம். மிதுனசேஷத்வம் ஸ்வரூபமானால் மிதுன கைங்கர்யமும் ஸ்வரூபமே. (அதாவது இருவர்களுக்கு ஒருவன் சேஷபூதனானால் அவன் அவ்விருவர்களுக்கும் கைங்கர்யம் செய்யக் கடமைப்பட்டவனாவனிறே என்றபடி.) மாதா பிதாக்கள் இருவருமான சேர்த்தியிலே ஸுச்ரூஷை (பணி) செய்யும் புத்திரனுக்குப்போல, செய்கிற அடிமை ரஸிப்பதும் பிராட்டியும் பகவானுமான சேர்த்தியிலே. ஆகையால் தனித்து இவர்களுக்கு ப்ராப்யத்வமில்லை. இருவரையும் பிரித்து விரும்பினால் ராவண ஸூர்ப்பணகாதிகளுக்குப் போலே விநாசமே பலமாயிருக்கும். பிராட்டியைத் தனித்து விரும்பிய ராவணனும், பெருமாளைத் தனித்து விரும்பிய ஸூர்ப்பணகையும் நாசம் அடைந்தார்கள். இருவரையும் பற்றினால் இளையபெருமாளைப் போலே உஜ்ஜீவித்துப் போகலாம். [1]'அல்லி மாமலராள் தன்னொடுமடியேன் கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேன்' என்றபடியே சேர்த்தியிலே பற்றினால்தான் உஜ்ஜீவனம் உண்டாகும் என்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று.

பகவானுடைய திருவடிகளில் சரணாகதி செய்த ஞானிகளில் தலைவரான ப்ரபன்னருக்கு உபாயத்தில் ப்ரவ்ருத்தியானது அவரது அத்யந்தபாரதந்த்ர்ய ஸ்வரூபத்திற்கு விரோதி என்றும் உபாயத்தில் நிவ்ருத்தியானது ருசிவிரோதி என்றும் இவ்விரண்டு அர்த்தத்திற்கும் உதாஹரணமாக பிராட்டியையும் இளைய பெருமாளையும் ஸ்ரீ வால்மீகி எடுத்துக் காட்டி இருக்கிறார். லங்கையில் வந்து ஹனுமான் பிராட்டியிடம் தன் முதுகின்பேரில் ஏற்றிக்கொண்டுபோய் இராமனிடம் ஸமர்ப்பிப்பதாகச் சொன்னபோது பிராட்டி தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ள சக்தி உள்ளவளாயிருந்தும், ஸ்வரூப பாரதந்த்ர்யத்தை வெளிக்காட்டினாள்.

[2]शरैस्तुसंकुलां कृत्वा लङ्कां परबलार्दनः ।
मां नयेद्यदि काकुत्स्थः तत्तस्य सदृशं भवेत् ॥

லங்கையில் சரக்கூடு கட்டி சத்ருவை அழித்துப் பெருமாள் என்னை அழைத்துக்கொண்டுபோவாராகில் அது (என் ஸ்வரூபத்துக்கும்) அவர் ஸ்வரூபத்திற்கும் தகுதியாகும். நானே என்னை ரக்ஷித்துக்கொள்ள முயலுவதும், அயலாரால் ரக்ஷ

1. பெரிய திருமொழி-4-3-6.
2. ராமா-ஸு-39-30.

B—2

ணம செய்து கொள்ளப் பாரிப்பதும் ஸ்வரூப விருத்தம் என்று பிராட்டி சொல்லியதும் நடத்திக்காட்டியதும் ஜீவனுக்கு உபாயத்தில் ப்ரவ்ருத்தியானது ஸ்வரூபவிருத்தமென்பதைக் காட்டுகிறது. பெருமாள் நில் என்று சொல்லியும் நிற்காமல் அவரை விட்டு ஒரு க்ஷணகாலமும் தனக்குச் செல்லாது என்பதைக் காட்டி அவருடைய வார்த்தையையும் மீறிக் காட்டிற்குத் தொடர்ந்து அடிமை செய்த இளையபெருமாளின் அனுஷ்டானத்தில் **नाकिंचित्करस्य शेषत्वम्** (யாதொரு கார்யமும் செய்யாமல் இருப்பவனுக்கு சேஷத்வம் என்பது உண்டாகாது) என்கிறபடியே உபேயத்தில் நிவ்ருத்தியானது கைங்கர்ய ருசிக்கு விரோதி என்று காட்டப்பட்டதாகிறது.

இந்தக் காவ்யத்தில் பிராட்டி முதலியவர்களின் அனுஷ்டானம், அனுபவம் முதலியவற்றால் இந்த ஸம்ஸாரத்தில் இருக்கும் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு உண்டாகக்கூடிய பல இடையூறு முதலியவைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. எங்ஙனே என்னில் :—

இளையபெருமாள்திறத்தில் பிராட்டி சொன்ன கொடியதான வார்த்தையின் பலனாக அப்பொழுதே பிராட்டிக்குப் பெருமாளை விட்டுப்பிரிய நேர்ந்த வ்ருத்தாந்தத்தினால் பாகவதாபசாரத்தின் க்ரௌர்யம் வெளியிடப்பட்டது.

பிராட்டியை ராவணன் பலாத்காரமாக எடுத்துக் கொண்டு போன ஸமயத்தில் அவனுடைய கரஸ்பர்சம் எவ்வளவு அஸஹ்யமாய் இருந்ததோ அதைப்போல இந்த தேஹஸம்பந்தமும் நமக்கு அஸஹ்யமாய் இருக்கவேண்டும் என்பது காட்டப்பட்டது.

பிராட்டிக்கு ராக்ஷஸிகளின் மிரட்டுதல் முதலியவைகளைப் போல புத்ர களத்ராதிகளின் பாஷணாதிகள் இருக்கும் என்பது தெரிவிக்கப்பட்டது.

மாயா ம்ருகமாய்த் தோன்றிய மாரீசன் பிராட்டியின் மனதை இழுத்துப் பஹுதூரம் சென்றாப்போலே சப்தாதி விஷயங்கள் நம்மை இழுத்துச் செல்லும் என்பது நிரூபிக்கப்பட்டது.

பத்துத் தலையுடைய ராவணனுடைய தோற்றம் எப்படிப் பிராட்டிக்குப் பொறுக்கமுடியாமல் இருந்ததோ அதைப்

போல இவனுக்கும் இந்திரியங்களின் ஸந்நிதி என்பது தெரி விக்கப்பட்டது.

ஹனுமானுடைய வரவுபோல ஆசார்யனுடைய ப்ராப்தி இருக்கும் என்று ஸூசிப்பிக்கப்பட்டது.

இப்படியே ராமகுணங்கள் பிராட்டிக்கு ஆறுதலாய் இருந் தாப்போல ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் இருக்கும் என்பதும், திருவாழியின் (ராமனுடைய நாமாங்கிதமான மோதிரத்தின்) வரலாற்றைத் திருவடி தெரிவித்தாப்போல ஆசார்யன் உபதேசிக்கும் குரு பரம்பரை என்பதும், திரு வாழியைப் பெறுவது போல இருக்கும் ஆசார்யனால் உபதே சிக்கப்படும் திருமந்திரம் என்பதும், அசோகவனிகையில் பிராட்டிக்கு த்ரிஜடை முதலிய சிலர் உசாத்துணையாய் இருந்தாப்போலே இங்கு இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸல்லாபம் என்பதும், ராவணவதம் செய்து பிராட்டியை மீட்டாப்போலே இவனுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தைவெட்டி, பரமபத ப்ராப்தியைத் தந்தருளுவான் என்பதும் விளக்கிக் காட்டப்பட்டதாகிறது.

பாகவதாபசாரத்தின் கொடுமை த்ரிசங்கு வ்ருத்தாந்தத் தாலும் த்ருடீகரணம் செய்யப்பட்டதாகிறது. அதாவது எப் படி த்ரிசங்கு பாகவதபசாரத்தினால் உருமாய்ந்து தக்த படம் போலே (கொளுத்தப்பட்ட துணிபோலே) ஆனானோ; அதைப்போல இச் சேதனனும் ஆவான் என்று காட்டப்பட் டது என்றபடி. தன்னுடைய சரீரத்துடன் ஸ்வர்க்கம் அடை வதற்கு ஸாதனமாக ஒரு யாகத்தை நடத்தவேண்டும் என்று தன் குலகுருவான வஸிஷ்டரை ப்ரார்த்திக்க, அவர் அது முடியாத கார்யம் என்று சொல்லியும் அதைக் கேளாமல் அவருடைய புத்திரர்களிடம் சென்று அப்படியே ப்ரார்த்திக்க அவர்களும் மஹர்ஷியால் முடியாத கார்யத்தை நாங்கள் செய்ய முடியுமோ என்று கேட்க, ராஜா கோபத்தை அடைந் தவனாய் ஆசார்யனும் அவருடைய புத்திரருமான நீங்களும் 'மாட்டோம்' என்று சொல்லிவிட்டபடியினால், நான் மற்றோ ரிடம் சென்று அப்பலனைப் பெறப் பார்க்கிறேன் என்று சொல்ல, அவர்களும் கோபம் அடைந்து 'நீ சண்டாளன் ஆகக்கடவாய்' என்று சபிக்க, அவன் உடனே பரம சண் டாளனாய்விட்டான். முன்பு ப்ரஹ்மவர்ச்சஸ்ஸுக்கு லக்ஷண மாக இருந்த யஜ்ஞோபவீதம் உடனே தோலாக மாறிவிட் டது. (சாபமானபடியினால் உடனே ப்ரத்யக்ஷத்தில் மாறுதல் ஏற்பட்ட மற்ற இடங்களில் இப்படி ப்ரத்யக்ஷமாக ஏற்படா

விட்டாலும் அவசியம் உண்டாகும் என்பது சாஸ்திர பலத்தினல் அறியத்தக்கது.)

मद्भक्तान् श्रोत्रियो निन्दन् सद्यः चण्डालतां व्रजेत्। என்றும் [1]'நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே அவர்கள் தாம்புலையர்போலும்' என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே கர்ம சண்டாளர்கள் ஆவார்கள். ஜாதி சண்டாளனுக்கு காலாந்திரத்தில் பாகவதனைக்கு யோக்யதையுண்டு. கர்மசண்டாளனுக்கு அதுவும் இல்லை. தன்னுடைய ஆசார்யனை வஸிஷ்டரை அநாதரித்து, அவருடைய அனுமதியின்றியே மற்றொரு ஆசார்யனை வரித்தமை த்ரிசங்குவிற்கு மஹாபாதகமாய் விட்டது. இதின் கொடுமையிறே விசுவாமித்ரருடைய தபோ மாஹாத்ம்யத்தால் சரீரத்துடன் ஸ்வர்க்கம் ஏறின த்ரிசங்கு இந்திரனல் கீழே தள்ளப்படுவதற்கும் **त्राहि, त्राहि** (காப்பாற்றும் காப்பாற்றும்) என்று கதறும்படி செய்ததற்கும், மீளவும் அவருடைய தபஸ்ஸின் மகிமையினல் ஒரு புது ஸ்வர்க்கம் ஸ்ருஷ்டிக்கப்பட்டாலும் அதில் அவன் தலைகீழாக நிற்கும்படியான இருப்புக்கும் காரணமாய் நின்றது. அப்படியே ஆசார்யர்களும், பகவான் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்கள் எல்லாம் பாகவதாபசாரம் பொருமையினல்' என்று அனுஸந்தித்திந்தார்கள். மஹிர்ஷிகளான பாகவதர்கள் திறத்தில் ராவணன் செய்த அபசாரத்தின் பலனக பகவான் அவதரித்து அவனை வதம் செய்யும்படி நேரிட்டது. பகவான் தன் விஷயத்தில் செய்த அபராதங்களை அதிகமாய்க் கணிசியான். தன் ஆச்ரிதர்திறத்தில் (விஷயத்தில்) ஸ்வல்ப அபராதம் பண்ணினலும் அவன் அப்போதே தண்டித்து விடுவான். [2]**त्वयि किंचित्समापन्ने किं कार्यं सीतया मम** ஸ்ரீ ராமன் எழுந்தருளி நிற்கச் செய்தே ராவணன் கோபுர சிகரத்திலே வந்து தோன்றினதை ஸஹிக்க முடியாமல் ஸுக்ரீவன் அவன் மேல் பாய்ந்து அவனைக் கீழேதள்ளி, திரும்பி வந்தபொழுது அவரை நோக்கி, நீர் மஹாராஜரான மேன்மை குலைய உம்மைத் திரஸ்கரித்து அந்த ராக்ஷஸப் பயல் ஒரு வார்த்தை சொன்னைகில் பிறகு ஸீதை தானும் எனக்கு எதற்கு? என்று சொன்னன் ராமன். தனக்கு உயிர் நிலையான பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால் தனக்கு நேருவதைவிட அதிக சீற்றம் கொள்வான் பகவான். தான் ஸமுத்திரராஜனை சரணம் புகச்செய்தேயும் அவன் முகம்

---

1. திருமாலை-43.
2. ராமா-யுத்-41—4.

காட்டாதிருக்க அவன் விஷயத்தில் कोपमाहारयत्तीव्रं என்கிற படியே பெருமாள் கோபத்தை ஏறிட்டுக் கொண்டார் (வரவழைத்துக் கொண்டார்). ஆனால் தன்னுடைய பக்தனை ஹனுமானை நோவுபடுத்திய ராவணன் விஷயத்திலோ

[1]ततो रामो महातेजाः रावणेन कृतव्रणम् ।
दृष्ट्वा प्लवङ्गशार्दूलं कोपस्य वशमेयिवान् ॥

என்கிறபடியே கோபம் இட்ட வழக்காய் அதாவது அதற்கு வசப்பட்டு நின்றார்.

ராஜதர்மங்களின் விவரணம்.

இந்தக் காவியத்தில் பல தர்மங்கள் ஆங்காங்கு பதிந்து கிடக்கின்றன.

[2]रामो राज्यमुपासित्वा ब्रह्मलोकं गमिष्यति ।

என்கிற இடத்தில் வெகு அழகான ஆழ்ந்த பொருள் அமைக்கப்பட்டிருக்கிறது. ப்ரஜைகள் எக்கேடு கெட்டாலும் கெடட்டும் நமக்கு என்ன? நம்முடைய வரும்படியும் அதிகார வல்லமையும் தான் நமக்கு வேண்டியது, ப்ரஜைகள் வரி முதலிய கஷ்டங்களினால் அதிருப்தி அடைந்தால் அவர்களை ஸைந்ய பலத்தைக்கொண்டு அடக்குவோம் என்று அரசாக்ஷி புரிந்த மன்னர்கள் போலன்றிக்கே, பகவான் தன்னைத் தாழ்ந்தவனாகவும் ப்ரஜைகளை உயர்ந்தவர்களாகவும் கருதி ஒரு உபாஸகன் தன் உபாஸ்ய தேவதை விஷயத்தில் எப்படி நடந்து கொள்வானோ அதைப்போல ராஜ்யத்தை உபாஸித்தார் என்பதினால் ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் ப்ரீதியையே லக்ஷ்யமாகக் கொண்டு, அவர்கள் மனம் கோணாமல் அவர்களுக்குக் கனவிலும் தீங்கு நினைக்காமலும் செய்யாமலும் அரசுபுரிந்தார் என்று சொல்லப்பட்டதாகிறது.

'लोकस्य चरता हितम्' 'गुर्वोधर्मधुरं वहन्'

உலக நன்மையையே செய்துகொண்டு, ப்ரஜாபாலனமாகிற பெரும்பாகத்தைத் தாங்கிவந்தேன் என்றும் தசரத சக்ரவர்த்தி வாக்கில் வைத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அயோத்தியா காண்டம் 100-வது ஸர்க்கத்திற்கு 'கச்சித்

1. ராமா-யுத்-69—136.
2. ராமா-பால-1—94.

ஸர்க்கம்' என்று பெயர். அதில் ஸ்ரீ ராமன் பரதனை ப்ரச்னம் பண்ணும் (க்ஷேமம் விசாரிக்கும்) வியாஜத்தினால் பல ராஜ தர்மங்களை விரிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். யுத்தகாண்டத்தில் ராவணன், ராமன் இவ்விருவரும் ஸபை கூட்டியதை வ்யாஜமாகக் கொண்டு நீதி சாஸ்திரங்களில் சொல்லியபடி ஸபை கூட்டினால் அது அரசனுக்கும் ப்ரஜைகளுக்கும் க்ஷேமகரமாகும் என்றும், அதற்கு விருத்தமாகக் கூட்டினால் பலன் விபரீதமாகும் என்றும் வெகு சமத்காரமாக வெளியிட்டிருக்கிறார். [விபீஷணனுடைய சரணாகதி ப்ரகரணத்தில் ஒரு ராஜா தன்னுடைய மந்திரிகளோடு எப்படிப் பேச வேண்டும் என்பதைக் காட்டியிருக்கிறார்.]

ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர் இயற்றிய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரத்தில் முதலாவது அதிகாரம் ஸ்ரீ ராமாயணதத்துவம் முற்றுப்பெற்றது.

॥ श्रीः ॥

॥ श्रियै नमः ॥

॥ अस्मद्गुरुपरंपरायै नमः ॥

ஸ்ரீவிசிஷ்டாத்வைத தத்வம்

अशेषचिदचिद्वस्तु शेषिणे शेषशायिने ।
निर्मलानन्तकल्याणनिधये विष्णवे नमः ॥

श्रीवत्सान्वयभूषणं तिरुमलै नल्लार्यवंशोद्भवम्
ख्यातानन्तगुरोस्सुताद्गुणनिधेः श्री श्रीनिवासाद्गुरोः ।
संप्राप्ताखिल नैगमान्तयुगळं मत्तातपादयं गुणैः
आचार्यं मम चक्रवर्तिनमहं श्रीरंगराजं भजे ॥

ப்ரவேசம்

நம் விசிஷ்டாத்வைத தர்சனமானது ச்ருதி மூலமானதால் ச்ருதிபோல் அநாதியானது. அநாதியான நம் தர்சனத்துக்குக் குமதிகளால் ஏற்பட்ட கலகத்தை நீக்கி நம் தர்சனத்தை நிலைநாட்டியதால் உடையவருக்கு தர்சன ஸ்தாபகர் என்று பெயர் வந்தது. அவர் புதிதாக ஒரு மதத்தையும் ஏற்படுத்தவில்லை. அவருக்கு முன்னிருந்த வ்யாஸர், போதாயனர், குஹதேவர், பாருசி. ப்ரஹ்மநந்தீ, டங்கர், த்ரமிடாசார்யர், ஸ்ரீ பாராங்குசர், ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் முதலிய பூர்வாசார்யர்களின் மதத்தையே அவர் தழுவியிருக்கிறார். அவர்களின் சொற்களை ஒவ்வொரு விஷயத்திலும் ப்ரமாணமாக அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். நம் ஸித்தார்த்தங்கள் முழுவதும் எட்டெழுத்துடைய திருமந்திரம் முதலிய மந்திரங்களில் அடங்கியிருக்கிறது. அவ்வர்த்தங்களையெல்லாம், சிறிய கண்ணாடி மலை முதலிய பெரிய உருவுங்களைக் காட்டுமாப்போலே, திருமந்திரம் சுருங்கத்தெளிவிக்கும். மந்த்ரங்களின் அர்த்தங்களையும், யோஜநாபேதங்கள் முதலியவைகளையும் ஸத்ஸம்ப்ரதாயப்படி அறிந்து கொள்ளவேண்டியது.

ப்ரக்ருத விஷயமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நாம் நன்ருயறியவேண்டுமாளுல், அதற்கு எதிர்தட்டான நிர்விசேஷாத்வைதத்தின் கொள்கை அவசியம் அறிய வேண்டியதாகையால், அதைச் சற்று சுருங்க விசாரிப்போம்.

நிர்விசேஷாத்வைதத்தின் சுருக்கம்.

தத்வம் ஒன்றே உள்ளது. அகண்டமான பரமாத்மா ஒன்றுதான் ஸத்யம். இது ஏகஸ்வரூபமாயுள்ளது. இது கேவலம் ஸத்தாமாத்ரம் (இருப்பு என்பது); சைதந்ய ரூபம் (ஞானஸ்வரூபம்), இதைக்குறித்து அறிவு (ஞானம்) என்பதை இதற்கு விதேயமாய் (Logical Predicate ஆக) சொல்ல முடியாது. ப்ரஹ்மம் என்பது ஞானமுடையதன்று; ஆளுல் ஞானமாகவேயிருக்கிறது. அதற்கு யாதொரு குணமும் விசேஷணமுமில்லை. நாம் மனதால் எந்த குணத்தை, (அடைமொழியை, விசேஷணத்தை) நினைக்கக் கூடுமோ அவை ஒன்றும் அதற்கு இல்லையென்றே சொல்லவேண்டும். (It is a homogeneous mass of objectless thought) அவ்விதம் ஏக ரஸமான ஒரு வஸ்துவைத்தவிர வேறே ஒன்றுமில்லை யென்னும் பக்ஷத்தில் நம்மைச் சுற்றிலுமுள்ள நாளுவித இப்ரபஞ்சக் காக்ஷியும், நாமெல்லோரும் இப்ரபஞ்சத்தில் தனித்தனியாக இருப்பதும் எவ்வாறு என்ருல், ப்ரஹ்மமானது அவித்யை என்றும் மாயை என்றும் சொல்லப்பட்ட ஒரு சக்தியோடு கூடியிருப்பதால் இந்த ஸமஸ்தமான ப்ரபஞ்சத்தின் தோற்றம் ஏற்படுகிறது. இந்த சக்தியை 'ஸத்' (இருப்பது) என்று சொல்லமுடியாது. ஏனெனில் ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்; **सच्चेन्न बाध्येत Sat will not be sublated** (ஸத்தாயிருந்தால் பாதம் ஏற்படாது இல்லாதது என்றும் சொல்ல முடியாது) ஏனெனில் அது ப்ரபஞ்சத்தோற்றத்தை உண்டு பண்ணுகிறது. **असच्चेन्न प्रतीयते** (அஸத்துக்குத் தோற்றம் உண்டாகாது).

ஆகையால் இது 'ஸத்' என்றும், 'அஸத்' என்றும் சொல்லமுடியாத அநிர்வசநீயமான மாயை. அதனுலன்ருே தனித்தனியாக இருக்கும் நாளுவித வஸ்துக்களையுடைய இப்பிரபஞ்சம் காணப்படுகின்றது. ஒரு மாயாவியான இந்திரஜால வித்தையைச் செய்பவன் நம்முடைய மனதிற்கு எட்டாத தன் மாயா சக்தியால் வாஸ்தவமல்லாத சராசர ரூபமான நாளுவித வஸ்துக்களையும் பிராணிகளையும் எவ்வாறு காண்பிக்கிருனே, அவ்வாறே ப்ரஹ்மமும் இம்மாயா சக்தியோடு கூடியிருந்து வாஸ்தவமல்லாத இப்பிரபஞ்சத்தின் காக்ஷியை உண்டாக்குகிறது. ஆகையால் இந்த பிரபஞ்சத்திற்குமாயை

தான் உபாதான காரணம் (material cause), அல்லது மாயையை ப்ரஹ்மத்தின் சக்தியாக விவக்ஷிக்கும்போது மாயையோடு கூடிய ப்ரஹ்மம் இந்த ஜகத்திற்கு உபாதான காரணமாய்ச் சொல்லப்படும். ஜகத்துக்குக் காரணமாகச் சொல்லும்போது அதை 'சபளிதப்ரஹ்மம்' என்றும், 'ஈச்வரன்' என்றும் சொல்லுவார்கள். ஈச்வரனுக்கு வசப்பட்டு நாமரூபங்களையுடைய (பெயர், உருவங்களையுடைய) அநேக பேதங்களோடு கூடிய ஜகத்தாக ஆகிறது. அதிலிருந்து க்ரமமாக பஞ்சபூதங்கள் முதலியவைகளும் உயிருள்ளபிராணிகளின் சரீரங்களும் உண்டாகின்றன. தனித்தனியாகக் காணப்படும் எல்லா உருவங்களிலும் அகண்டமான ப்ரஹ்மம் ஒன்றுதான் உளது, ஆனல் மாயையின் கார்யமான உபாதியால் பின்ன பின்னமாகக்காணப்படும் வஸ்துக்களால் அது 'ஜீவன்', 'ஜீவன்' என்று சொல்லப்படும் அநேக சேதனர்களாய் கண்டம் கண்டமாய் வெட்டுண்டிருப்பதாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு ஜீவனிலும் வாஸ்தவமாயிருப்பது அகண்டமான ப்ரஹ்மம் ஒன்றே. வ்யவஹாரதசையில் ஒரு ஜீவனை மற்றொரு ஜீவனிலிருந்து வகுத்துப் பிரிக்கும் (प्रातिस्विकமான) அந்தந்த ஜீவனுக்குரிய, அவயவ அமைப்புகளும் மனோவ்யாபாரங்களும் மாயையால் தோற்றுவதால் அவை வாஸ்தவமல்ல. மாயையால் மூடப்பட்ட ஜீவன் அஞ்ஞானத்தால் தன்னுடைய ஸ்வபாவத்தை அறியாமலும் தான் தான் ப்ரஹ்மம் என்று கண்டுகொள்ளாமலும் மாயையின் கார்யமான உபாதியேதான், என்று நினைத்துச் சரீரத்தையும் இந்திரியங்களையும் மனதையும் தான் என்று பிரமித்திருப்பதால் வாஸ்தவத்தில் சுத்த சைதந்யமாயும், அகர்த்தாவாயும், அகண்டமாயும், அளவில்லாமலுமிருக்கிற ஆத்மாவானது ஸ்வரூபத்திலும் ஞானத்திலும் அளவிடப்பட்டதாயும் கர்த்தாவாகவும், போக்தாவாகவும் காணப்படுகிறது. அதன் கர்மத்தால் புண்யபாவங்களை அனுபவிக்கிறது. கல்பத்தின் முடிவில் இந்த ஜகத்தானது அவ்யக்தமான மாயையாக ஆகிறது. ஆனல் ஜீவர்கள் அக்காலத்தில் உபாதி ஸம்பந்தமில்லாததால் பெரும் தூக்கத்திலுள்ளவர்கள்போல் இருக்கின்றன. மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் முன் கர்மபலனை அனுபவிப்பதற்காக சரீர ஸம்பந்தத்தையடைகின்றன. இவ்விதம் ஜன்மம், கர்மம், மரணம் என்கிற ஸம்ஸார சக்கிரம் அநாதியாய்ச் சுழன்று வருகிறது. இந்த ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷம் அடைய உபாயம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தில் கர்மங்களை விதிக்கும் கர்மகாண்டமானது மோக்ஷோபாயத்தைக் காண்பிக்காது. ஏனெனில் மிகவும் புண்யமான கர்மங்களும் புதிய சரீரங்களுக்குக்காரண

மாகின்றன. ஞானகாண்டத்திலும் இரண்டு பாகங்களுண்டு. ஜகத்தோடு ஸம்பந்தப்பட்ட ப்ரஹ்மத்தை அதாவது ஈச்வரன் என்றும், ஸபளித பரஹ்மமென்றும், 'அவரப்ரஹ்மமென்றும்' சொல்லப்பட்டதும் அநேக விசேஷணங்களுள்ளதுமான தாழ்ந்த ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் பாகம் ஒன்று; நிர்க்குணமானதும், விசேஷணமில்லாததும், ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்னும்படியானது மற்றொரு பாகம்; ஆக இரண்டு பாகங்கள். ஈச்வரன் என்று சொல்லப்பட்ட அவரப்ரஹ்மத்தை உபாஸனம் செய்கிற ஜீவன் மோக்ஷம் அடையமாட்டான். ஆனால் சரீரத்தை விட்டபிறகு தாழ்ந்த ப்ரஹ்மத்தினுடைய லோகத்திற்குச்சென்று அங்கே ப்ரஹ்மத்தைகாட்டிலும் வேருகவே இருந்துகொண்டு அதிகமான சக்திகளுடன் அதிக சுகத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான். பிறகு க்ரமேண பரஜ்ஞானத்தையடைந்து அதினல் ஆத்யந்திகமான மோக்ஷத்தை அடைவான். ஆனல் तत्त्वमसि 'நீயே அந்த ப்ரஹ்மம்' என்றிவை முதலிய ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை ப்ரதிபாதிக்கும் வேதாந்தவாக்யங்களின் ஜ்ஞானத்தால் சிறப்புற்ற ஜ்ஞானியோவென்றல் தனக்கும் ப்ரஹ்மத்திற்கும் யாதொரு பேதமுமில்லை யென்று கண்டுகொண்டு சரீரவியோகமடைந்தவுடன் மோக்ஷத்தையடைகிருன். அதாவது மாயையை விலக்கி பரப்ரஹ்ம ஸ்வரூபமாகிற தன்னுடைய ஸ்வரூபத்தோடு பிரகாசிக்கிருன். இதுதான் நிர்விசேஷாத்வைதவாதிகளின் மதம்.

நிர்விசேஷ வஸ்துவை ப்ரத்யக்ஷத்தாலும் அநுமானத்தாலும் ஸ்தாபிக்கமுடியாது.

இதைச்சற்று விசாரிப்போம். நிர்விசேஷமாயிருக்கும் ஏதாவது வஸ்துவைச்சொல்லமுடியுமா? அதற்கு ஏதாகிலும் ப்ரமாணம் உண்டா? நிர்விசேஷமான ஜ்ஞானம் நமக்கு எந்த ப்ரமாணத்தினலாவது உண்டாகக்கூடுமா? ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை முதலில் எடுத்துக்கொள்வோம். நாம் எந்த வஸ்துவைக் காண்கிறபோதிலும் (Perception) அதை விசேஷணமுடையதாகவே காண்கின்றேமல்லவா? இந்த வஸ்து பெரியது, சிறியது, நீளமானது, அகலமானது, உருண்டையானது, தட்டையானது, வெளுப்பானது, அழகானது, பழையது, பயங்கரமானது, சேர்ந்திருப்பது, தனித்திருப்பது முதலிய ஏதாவது ஒரு குணத்தோடு அதாவது விசேஷணத்தோடு கூடியதாகவே காணப்படுகிறது. கேவலம் வஸ்துமாத்திர ஜ்ஞானம் ஒருபொழுதும் உண்டாகிற

தில்லை. ஸ்ரீ சங்கராசார்யரின் கொள்கை வஸ்து மாத்திர ஜ்ஞானம் உண்டாகலாம் என்பது. புராதன ஐரோப்பிய தார்க்கிகர்களும் ஸ்ரீ சங்கராசார்யரின் கொள்கைப்படி 'Cconcept is the unit of thought' என்று சொன்னார்கள். அதாவது ஒரு வஸ்துவைக்குறித்து 'இது' என்று வஸ்து மாத்திர ஞானமும் 'வெளுப்பு' என்று விசேஷணமாத்திரஜ்ஞானமும் தனித்தனியாக முதலில் உண்டாகிறதென்றும், பிறகு 'இது வெளுப்பு' என்கிற ஸமுதாயஜ்ஞானம் (சேர்ந்தஜ்ஞானம்) உண்டாகிறதென்றும் சொன்னார்கள். அந்தப் பக்ஷத்தை நவீன ஐரோப்பிய தார்க்கிகர்கள் தூஷித்து 'Concept is not the unit of thought; but judgement is the unit of thought' என்று ஸ்தாபிக்கிறார்கள். அதாவது வஸ்துமாத்திர ஜ்ஞானமாவது விசேஷணமாத்திர ஜ்ஞானமாவது உண்டாகிறதில்லை. ஒரு வஸ்துவை நாம் பார்க்கும்போது 'இது வெளுப்பு' என்கிற விசிஷ்டஜ்ஞானமே உண்டாகிறதேயல்லாமல் துண்டு துண்டாக 'இது' என்றும், 'வெளுப்பு' என்றும் உண்டாகிறதில்லை. ஆனால் 'இது வெளுப்பு' என்கிற விசிஷ்ட ஜ்ஞானம் உண்டான பிறகு தனித்தனியாகப்பிரித்து நாம் ஆராய்ச்சி செய்கிறோமாதலால் நிர்விசேஷஜ்ஞானம் அனுபபன்னம், என்று நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். 'நிர்விகல்பகஜ்ஞானம்' என்றால் ஏதாவது சில விசேஷணமில்லாமல் ஒரு வஸ்துவை நாம் க்ரஹிப்பதேயன்றி ஒரு விசேஷணமுமில்லாமல் க்ரஹிப்பது என்பதல்ல. ஒரு விசேஷணமுமில்லாமல் நாம் க்ரஹிப்பதுமில்லை, க்ரஹிக்கவும் முடியாது. ஸந்மாத்ரத்தை (இருப்பு என்பதை மட்டும்) நாம் க்ரஹிக்கிறோம் என்னும் பக்ஷமானது 'குடமிருக்கிறது', 'வஸ்திரமிருக்கிறது' என்கிற விசிஷ்ட விஷயமான ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிற ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு விரோதமாகிறது. ஸந்மாத்திரத்தைத்தவிர அவயவ அமைப்பு என்கிற ஜாதி முதலிய பேதத்தை பிரத்தியக்ஷத்தினால் நாம் க்ரஹிக்காமற் போனால், குதிரையை விரும்புவோன் கழுதையைக் கண்டு ஏன் த்ருப்தியடைந்து திரும்பிப்போவதில்லை! ரூபத்தோடு கூடிய வஸ்துவைக் கண்ணாலும், ஸ்பர்சத்தோடு கூடியதை த்வகிந்த்ரியத்தாலும், சப்தத்தோடு கூடியதைக் காதாலும், ரஸத்தோடு கூடியதை நாவாலும், வாசனையோடு கூடியதை மூக்காலும் நாம் க்ரஹிக்கின்றோமேயல்லாமல் ஸந்மாத்ரத்தை நாம் க்ரஹிப்பதில்லை. ஆகையால் வஸ்துவின் அவயவ அமைப்பு என்கிற ஜாதி முதலிய பேதவிசிஷ்டம் தான் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயம். இப்படியே ப்ரத்யக்ஷமூலமான அனுமானப் பிரமாணத்தாலும் நிர்விசேஷ வஸ்துவை ஸ்தாபிக்க முடியாது.

சப்தமும் பேதத்தையே ஸ்தாபிக்கிறது

பிறகு சப்தப்பிரமாணத்தைக் கவனிப்போம். சப்தமும் விசேஷணத்தோடுகூடிய வஸ்துவைத்தான் போதிக்கின்றது. ஒருபதம் என்ருல் ப்ரக்ருதி ப்ரத்யயத்தோடு (பகுதி விகுதி களோடு) சேர்ந்தது. ப்ரக்ருதியும் ப்ரத்யயமும் அர்த்தத்தில் பேதமுள்ளவை யாதலால் பதம் என்பது விசிஷ்டமான அர்த்தத்தையே போதிக்கிறது. உதாஹரணமாக '**போகிருன்**' என்னும் பதத்தை எடுத்துக்கொள்வோம். இதற்குப் பொருள் **पुंस्त्वविशिष्टवर्तमानकालविशिष्टगमनक्रियाविशिष्टव्यक्तिविशेषः** அதாவது ஆண்பாலோடு கூடியதும், நிகழ் காலத்தோடு கூடியதும், போதல் என்கிற செய்கையுடன் கூடியதுமான ஒரு வஸ்து என்று இவ்வளவு விசேஷணங்களோடு கூடியது ஒரு பதமாயிருக்கிறது. பதபேதத்திற்கு காரணம் அர்த்த பேதம். ஆகையால் அநேக பதங்கள் சேர்ந்த ஒரு வாக்கியத்தில் அநேக அர்த்தபேதங்கள் அவசியமாதலால் நிர்விசேஷமான வஸ்துவை போதிக்கும் சக்தி சப்தத்திற்கு இல்லை. ஆதலால் சப்த ப்ரமாணத்தாலும் நிர்விசேஷ வஸ்துவை ஸ்தாபிக்கவொண்ணுது.

ஸ்வப்நம் முதலியவையும் அப்படியே.

ஸ்வப்னம், மூர்ச்சை முதலிய அவஸ்தைகளிலும், ஸுஷுப்தி தசையிலும் நமக்கு உண்டாகும் ஜ்ஞானம் ஸவிசேஷமாகவே உண்டாகிறது. நல்ல அயர்ந்த நித்ரையிலும் **सुखित्वं** (ஸுகியாயிருக்கும் தன்மை), **ज्ञातृत्वं** (அறியும் தன்மை), ஆகிய விசேஷணங்கள் 'நான்' என்பதற்கு பொருளான ஆத்மாவுக்கு உண்டு.

ஆகையால் ப்ரஹ்மம் குணத்தோடு கூடியதே.

ஆகையால் ஒவ்வொரு அவஸ்தையிலும் நமக்கு ஏற்படும் ஜ்ஞானம் விசேஷண விசிஷ்டமாதலால் ஜ்ஞானத்திற்கு ப்ரதியோகியான (பொருளான) வஸ்துக்களெல்லாம் விசேஷண விசிஷ்டமானவை. இந்த ஜகத்துக்குக் காரணமான ப்ரஹ்மத்தைப்பற்றி நமக்கு உண்டாகும் ஜ்ஞானமும் விசேஷண விசிஷ்டமாதலால் (குணத்தோடு கூடியவையாகையால்) ப்ரஹ்மம் விசேஷண விசிஷ்டமேயல்லாமல் நிர்விசேஷமல்ல.

ப்ரஹ்மத்தின் விசேஷணங்கள்.

பிறகு ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்கள் எவை என்கிற கேள்வி உண்டாகிறது- '**चित्**' (ஜீவன் Soul), '**अचित्**'

(அசேதனம், Matter,) இவை இரண்டும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்கள்.

ஜீவ ஸ்வரூபம்.

'சித்' என்று சொல்லப்பட்ட ஜீவஸ்ரூபமானது—சார்வாகர்கள் (நாஸ்திகர்கள்) சொல்லுகிறாப்போல் சரீரமல்ல. யானையின் சரீரத்தில் யானையின் அளவுள்ளது, எறும்பின் சரீரத்தில் எறும்பின் அளவுள்ளது என்று ஜைனர்கள் சொல்லுகிறபடி வெவ்வேறு அளவுள்ளதுமல்ல. உபாதியுடன் கூடிய, ப்ரஹ்மத்தின் கண்டம் என்று பாஸ்கரர் சொல்லுகிறபடியுமல்ல. ப்ரஹ்மத்தின் ஓர் அம்சம் ஜீவன் என்று யாதவ ப்ரகாசர் சொல்லுகிறபடியுமல்ல. பரப்ரஹ்மமே ஜீவன் முதலியவைகள் என்று அஜ்ஞானத்தால் ப்ரமித்திருப்பதால் ஜீவன் என்று பெயருள்ளது என்று ஸ்ரீ சங்கரர் சொல்கிறபடியுமல்ல. ஆனால் **वालाग्रशतभागस्य शतधा कल्पितस्य च भागो जीवः** (மயிர் நுனியில் நூறில்ஒன்றிலும் நூறில் ஒருபங்கு ப்ரமாணமுள்ளது ஜீவன் என்றறிய வேண்டும்); **नित्यो नित्यानां चेतनश्चेतनानां एको बहूनां** (நித்யர்களான அநேக ஜீவர்களுக்கு நித்யனை ஒரு சேதனன்). '**विज्ञानं यज्ञं तनुते**' (ஜீவன் யஜ்ஞத்தைச் செய்கிறான்) என்றிவை முதலிய ச்ருதிகளால் அணுஅளவுள்ளது; ஒரே ஜீவனல்ல; ஜீவர்கள் அநந்தம் (infinite in number); மித்யையல்ல, ஸத்யமானவர்கள்; ப்ரதி சரீரமும் பின்னர்கள் (as entities they are separate and real) என்று நிச்சயிக்கப்படுகிறது. அநேக ஜீவர்களிருக்கும்போது **अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदम्** (யாதொன்றினால் இந்தப்ரபஞ்சம் முழுவதும் வ்யாபரிக்கப்படுகிறது, அது நாசமடையத்தகாதது) என்றிவை முதலிய இடங்களில் ஜீவனை ஒருமையாகச் சொல்லியிருப்பது ஒரு நெல் குவியலைப்பார்த்து 'இது ஒரே நெல்' என்று சொல்லுமாப்போல் ஜ்ஞான உருவத்தில் ஒன்றாயிருப்பதுபற்றி என்று அறியத்தக்கது.

ஜீவன் ஜ்ஞானத்தை ஸ்வரூபமாகவுடையவன், ஜ்ஞானம் முதலிய குணங்களை உடையவன், நித்யன் (eternal), அழிவில்லாதவன். ஜீவனை சேதனன் என்று சொல்லுகிறது. சேதனர்கள் பக்தர், முக்தர், நித்யர் என மூன்றுவகை. அநாதியான கர்ம ப்ரவாஹத்தால் ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் பதினான்கு புவன அண்டகடாஹத்துள்ளிருக்கும் சதுர்முக ப்ரஹ்மா முதல் பூச்சி புழு ஸ்தாவரம் வரையிலுள்ள ஜீவகோடிகளான நாமெல்லோரும் பக்தர்கள். ச்ருதியில் விதிக்

கப்பட்ட உபாயத்தால் ஸம்ஸாரத்தினின்று விடுபட்டவர்கள் முக்தர்கள். என்றைக்கும் ஸம்ஸாரமில்லாமல் அளவற்ற ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் நித்யர்கள்.

அசேதனஸ்வரூபம்.

அசேதனமும் ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம் என்று மூன்று வகைப்பட்டது. இவையும் நித்யங்கள். ப்ரக்ருதி என்பது ஸத்வ ரஜஸ்தமஸ் என்கிற முக்குணமுள்ளது; எப்போதும் விகாரமுள்ளது; பகவத் ஸ்வரூபத்தை மறைப்பது; தன்னையே அனுபவிக்கும் புத்தியை ஸம்ஸாரிகளுக்கு கொடுப்பது; ஜீவர்களைப்போல் இதுவும் ஸத்யமானது; மித்யையானதல்ல (பொய்யல்ல); இதை மாயை என்றும் சொல்வதுண்டு. **मायां तु प्रकृतिं विद्यात्** (மாயை என்றால் பிரக்ருதி என்று அர்த்தம்) **दैवीह्येषा गुणमयी मम माया दुरत्यया ।** என்னால் உண்டாக்கப்பட்ட முக்குணமுள்ள மாயா ப்ரக்ருதியானது தாண்டமுடியாதது, என்று ப்ரமாணங்கள் முறையிடுகின்றன.

ஆனால் இந்த இடங்களில் 'மாயா' என்பதற்கு நிர்விசேஷாத்வைதவாதிகள் சொல்லுகிறபடி 'மித்யா' (பொய்யானது வாஸ்தவமல்லாதது) என்று பொருள் கிடையாது. பின்னையோவென்றால் அஸுரர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுடைய அஸ்த்ரம் முதலியவைகள்போல் விசித்திரங்களான கார்யங்களைச் செய்கிறபடியால் மாயை என்னும் பதம் ப்ரக்ருதியைச் சொல்லுகிறது. ஏது விசித்ர கார்யங்களைச் செய்கிறதோ அதெற்கெல்லாம் மாயை என்று பெயர். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் **ततो भगवता तस्य रक्षार्थं चक्रमुत्तमम् । आजगाम समाज्ञप्तं ज्वालामालि सुदर्शनम् । तेन मायासहस्रं तच्छंबरस्याशुगामिना ॥ बालस्य रक्षता देहमेकैकं श्येन सूदितम् ॥** (பிறகு அந்த பிரஹ்லாதனைக் காப்பாற்றுவதற்காக பகவானால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட ஜ்வாலை வரிசைகளையுடைய ஸுதர்சனம் என்கிற பெயருடைய உத்தமமான சக்ராயுதமானது வந்தது. மிகவும் வேகமாய்ப் போகிறதும் குழந்தையான ப்ரஹ்லாதனைக் காப்பாற்றுகிறதுமான அந்த சக்ராயுதத்தால் சம்பராஸுரனுடைய அநேக மாயைகள் தனித்தனியாக நாசம் செய்யப்பட்டன) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகத்தில் மாயை என்பதற்குப் 'பொய்' என்று பொருள் கூறப்பொருந்தாது. ஏனென்றால் பொய்யான வஸ்துவாகில்

சாஸ்திரங்களினுல் சொல்லப்பட வேண்டிய அவசியமில்லே. ஆகையால் மாயா சப்தத்தால் சொல்லப்பட்ட பொருள் வாஸ்தவமாகவே இருக்கவேண்டும். **मायया सततं वेत्ति च प्राणिनां शुभाशुभं** (ஜந்துக்களின் புண்யபாவங்களேத் தன்னுடைய ஜ்ஞானத்தால் எப்போதும் அறிகிருன்) என்றும், ஸ்ரீமத் ராமாயணத்தில் **देवमायेव निर्मिता** (தேவதைகளின் மாயையாலே போல ஸீதை ஸ்ருஷ்டிக்கப்பட்டாள்) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் தண்டநீதியில் ஸாம தான பேத தண்டம் என்கிற நான்கு உபாயங்களே நிரூபித்து பிறகு இன்னும் சில **மாயை, உபேக்ஷை, இந்திரஜாலம்** முதலிய அமுக்கியங்களான மூன்று உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் **மாயையாவது** ஒருவிதமாக இருக்கும் வஸ்துவை வேறுவிதமாக மாற்றும் சக்தி; இந்திரஜாலமாவது ஒருவிதமாக இருக்கும் வஸ்துவை வேறுவிதமாக காட்டும் சக்தி, என்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆச்சர்யங்களான விசித்திர வஸ்துக்களே ஸ்ருஷ்டிப்பதால் ப்ரக்ருதியை மாயை என்று சொல்லுகிறதேயல்லாமல், பொய் என்கிற காரணத்தாலல்ல. ஈச்வரனே **மாயாவி** என்று சொல்வதுண்டு. ஏனெனில் அவன் மாயையை தனக்கு வசப்படுத்திக் கொண்டிருக்கிருன். மாயையை வசப்படுத்திக் கொண்டிருக்கும் காரணத்தினுலேயல்லாமல், அக்ஜ்ஞானத்தை உடைத்தாயிருப்பதால் **மாயாவீ** என்று சொல்லக்கூடாது.

ஜீவன் ஒருவனுக்குத்தான் மாயையினுல் தடங்கல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரஜால வித்தையைச் செய்கிறவர்கள் முதலியவர்களிடத்திலும் சில மந்திரங்களினுலும், ஔஷதம் முதலியவைகளினுலும், பொய்யான வஸ்துவைப் பற்றிய உண்மையான புத்தியுண்டாகிறபடியால் 'மாயாவீ' என்று பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் 'மாயை' என்பதற்குப் பொய் என்று பொருள் இல்லேயாததால் மாயா எனப்படும் ப்ரக்ருதி மித்யையல்ல. வாஸ்தவமானது.

காலம் நித்யம் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். சுத்தஸத்வம் என்ருல் அப்ராக்ருதலோகம், அதைத்தான் 'த்ரிபாத்விபூதி' யென்றும், 'நித்யவிபூதி' யென்றும், 'ஸ்ரீவைகுண்டம்' என்றும், பரமபதம் என்றும், தெளிவிசும்பு என்றும் சொல்லுகிறது.

கீழ்ச்சொன்ன ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம், மூன்றையும் 'அசித்' என்றும் அசேதனம் என்றும் சொல்வார்கள்.

இம்மூன்றுவகையான சேதனர்களுடையவும், மூன்று வகையான அசேதனங்களுடையவும், ஸ்வரூபம், ஸ்திதி (இருப்பு), ப்ரவ்ருத்தி இவைகள் ப்ரஹ்மத்திற்கு வசப்பட்டவை. இதை ஸ்ரீ பாஷ்யகாரர் **स्वाधीनत्रिविधचेतनाचेतनस्वरूपस्थितिप्रवृत्तिभेदम्** 'தனக்கு வசப்பட்ட மூன்று விதங்களான சேதனம், அசேதனம், இவைகளுடைய ஸ்வரூபம், இருப்பு, வ்யாபாரம் இவைகளை உடையவன்' என்று அருளிச்செய்தார்.

மூர்த்த (உருவுள்ள) த்ரவ்யம் விசேஷணமாகும் ப்ரகாரம்.

இந்தச் சேதனன் அசேதனம் இவை இரண்டும் ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்கள் என்று கூறப்பட்டது. இவ்விடத்தில் ஒரு ஆக்ஷேபம் வரலாம். அதாவது உருவமில்லாத குணங்கள் (abstract qualities) ஒரு வஸ்துவுக்கு விசேஷணங்களாயிருக்கக் காண்கிறோம்; உருவுள்ளவை, (concrete objects) விசேஷணங்கள் என்று சொல்லுவது எவ்வாறு? என்று. இதற்கு ஸமாதானம் :—இங்கு விசேஷணம் என்றால் விசேஷ்யத்தை விட்டுப்பிரிக்க முடியாத பொருள். அது த்ரவ்யமாயும் (வஸ்துவாயும்) இருக்கலாம். குணமாயுமிருக்கலாம். பசுவினிடத்திலிருந்து கோத்வம் (பசுவான உருவம்), வெளுப்பு முதலிய பதார்த்தங்களை எவ்விதம் மனதால் மட்டும் பிரிக்கலாமேயன்றி, (qualities which can be abstracted only by the mind) வேறு ப்ரகாரத்தில் பிரிக்க முடியாதோ அவ்விதமே இந்தச்சேதனன் அசேதனம் இவை இரண்டையும் ப்ரஹ்மத்தை விட்டுப் பிரிக்கமுடியாது. ஆகையால்தான் இவைகளை ப்ரஹ்மத்துக்கு **अपृथक्सिद्धि विशेषणं** (பிரிக்கமுடியாத விசேஷணங்கள்) என்கிறது. ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞானம் பலம் ஐச்வர்யம் முதலிய கல்யாண குணங்களானவை எவ்விதம் விட்டுப் பிரிக்கமுடியாத விசேஷணங்களோ, அவ்விதமே சேதனன் அசேதனம் இவை இரண்டும் பிரிக்க முடியாதவைகள். இவ்விதமாக குணங்களையும் சேதனாசேதனங்களையும் விட்டுப்பிரிக்கமுடியாத விசேஷணங்களோடு கூடியதால் ப்ரஹ்மம் விசிஷ்டமேயல்லது நிர்விசேஷமல்ல; அநேக கல்யாண குணங்களோடு கூடியது என்றதாயிற்று.

நிர்குண ச்ருதிகளின் தாத்பர்யம்.

அநேக சுருதிவாக்யங்கள் '**निष्कलं निष्क्रियं निरंजनं, निर्गुणं केवलो निर्गुणश्च**' ப்ரஹ்மம் நிர்குணமென்று ப்ரதிபாதிக்கின்ற

னவே, அப்படியிருக்க ப்ரஹ்மம் ஸகுணமென்றும், விசேஷண விசஷ்டமென்றும் எவ்வாறு சொல்லலாம்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் :—

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म ஜ்ஞானமாத்ரஸ்வரூபத்தை உடையது என்ற சுருதிகளும் ப்ரஹ்மம் ஜ்ஞானஸ்வரூபம், அதாவது ஜ்ஞானம் என்பதினுலே நிரூபிக்கத்தக்கது என்றே சொல்லுகின்றன. இத்தாலே ப்ரஹ்மம் நிர்விசேஷஜ்ஞானமாத்ர தத்வம் என்று சொல்லவொண்ணுது. ஏனென்ருல் அறிகிறவனுக்கு அறிவு ஸ்வரூபம். ஜ்ஞானஸ்வரூபமான ப்ரஹ்மம், ஜ்ஞானத்திற்கு ஆச்ரயமாயிருக்கிறதென்று சொல்வது மிகவும் உசிதம். தேஜோத்ரவ்யங்களான ஸூர்யன் முதலியவைகள் ப்ரபை முதலியவைகளுக்கு ஆச்ரயமாயிருப்பது போல் ப்ரஹ்மம், ஜ்ஞானம் முதலியவைகளுக்கு ஆச்ரயமாயிருக்கிறது. ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் முதலிய அநேக குணங்களுண்டு என்பதை சுருதிகள் பல்வாறு உத்கோஷிக்கின்றன. **यस्सर्वज्ञः सर्ववित्** (எவன் யாவற்றையும் அறிகிறவனே) **ज्ञाज्ञौ द्वावजावीशानीशौ** (அறிகிறவனும் ஆளுகிறவனுமான ஒருவனும் அறியாதவனும் ஆளப்படுகிறவனுமான மற்ருெருவனும்), **परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च** இந்த ப்ரஹ்மத்திற்கு அநேக மேலான விசித்ரசக்தி ஜ்ஞானம் பலம் முதலிய குணங்கள் ஸ்வபாவமாயுள்ளது. **एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युः विशोकः विजिघित्सोऽपिपासः सत्यकामः सत्यसंकल्पः** (பாபம், கிழட்டுத்தனம், மரணம், துக்கம், பசி, தாஹம் முதலிய (கெட்ட) குணங்கள் இல்லாததும், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய நல்ல குணங்களையுடையதுமானது, ப்ரஹ்மம்) என்கிற சுருதிவாக்கியங்கள், ப்ரஹ்மம் குணம் ஒன்றும் இல்லாதது என்று சொல்லுகிற நிர்க்குண சுருதிகளுக்கு ப்ரஹ்மம் கெட்டகுணங்கள் ஒன்றும் இல்லாதது என்று சொல்லுவதிலேயேதான் தாத்பர்யமென்பது ப்ரஹ்மம் அநந்த கல்யாண குண முடையதென்று சொல்வதற்காக முதல் ஆறுவிசேஷணங்களால் கெட்டகுணங்கள் யாவற்றையும் நிஷேதித்துக்

கடைசி இரண்டு விசேஷணங்களால் ஸமஸ்தகல்யாண குணங்களை உடையவன் என்று சொல்லியிருப்பதினால் ஏற்படுகிறது என்று வெளியிடுகின்றன. ஆகையால் ப்ரஹ்மம் நிர்விசேஷமல்ல. அநந்த கல்யாணகுணங்களோடும், சேதனசேதனங்களோடும் கூடியது. இவ்விதம் சேதனசேதன விசிஷ்டமான ப்ரஹ்மம் ஒன்றுதான் தத்வம்—என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். இதுவே விசிஷ்டாத்வைத சப்தத்தின் பொருள் - விசேஷணங்களோடு கூடியவஸ்து விசிஷ்டம் எனப்படும். அப்படி விசிஷ்டமான வஸ்து ஒன்று—என்பது.

ப்ரஹ்மத்துக்கும் விசேஷணங்களுக்கும் ஆத்ம சரீரபாவஸம்பந்தம்.

இதற்குமேல் ஒரு ஆக்ஷேபம் வரலாம். அதாவது :—கீழ்க்கூறிய பிரகாரம் சேதனன், அசேதனம், ப்ரஹ்மம் இவைகள் வெவ்வேறு தனித்தனியான பதார்த்தங்களானதால், தத்வங்கள் மூன்ருயிருக்க, ஒரே தத்வம்தான் உண்டு என்று எவ்வாறு சொல்லக்கூடும் என்று. இந்த ஆக்ஷேபத்திற்குச் சரீர சரீரி பாவத்தால் விசிஷ்ட ஐக்ய விவக்ஷையினால் ஸமாதானம் சொல்லிக்கொள்ளவேண்டியது. எப்படியென்ருல் :—'நான் அறிகிறேன் என்று சொல்லும்போது அறிவது என்பது ஆத்மாவின் கார்யமாதலால் 'நான்' என்று சொல்லும்போது 'நான்' என்னும் பதத்தினால் சேதனனைத் தனித்துச்சொல்லுகிறோம். 'நான் பெருத்திருக்கிறேன்; என்று சொல்லும்போது பெருத்திருப்பது என்பது சரீரத்தின் தர்மமாதலால் 'நான்' என்னும் பதத்தினால் சரீரத்தைத் தனித்துச் சொல்லுகிறோம். "நான் பேசுகிறேன்" என்று சொல்லும்போது 'பேசுகிறது' என்பது தனித்த ஆத்மாவின் தர்மமுமல்ல; தனித்த சரீரத்தின் தர்மமுமல்ல; தனிமையான ஆத்மா பேசாது. தனித்த சரீரமும் பேசாது. ஆகையால் 'பேசுகிறேன்' என்பது சரீரத்தோடுகூடிய ஆத்மாவின் கார்யமாதலால், 'நான்' என்னும் பதத்தினால் இவ்விடத்தில் சரீரவிசிஷ்டமான ஆத்மாவைச் சொல்லுகிறோம். அது

போலவே சுருதியானது ஒன்றுகொன்று அத்யந்தம் பின்னங்களாயிருக்கும் சேதனன், அசேதனம், ப்ரஹ்மம், இம் மூன்று வஸ்துக்களையும், சில இடங்களில் தனித்தனியாகவும் சில இடங்களில் சேர்த்தும் சொல்லுகின்றது. மீமாம்ஸையில் 'அக்நி தேவதையை உத்தேசித்து அமாவாஸ்யை பௌர்ணமாஸைகளில் எட்டு கபாலங்களில் செய்த புரோடாசத்தை த்யாகம் செய்யவேண்டியது' என்கிற உத்பத்தி வாக்யத்தால் ஆக்நேயயாகத்தையும், அவர்களின் பொருட்டு பௌர்ணமாஸையில் பதினொரு கபாலங்களில் செய்த புரோடாசத்தை த்யாகம் செய்யவேண்டியது என்கிற மற்றொரு உத்பத்தி வாக்யத்தால் அக்நீஷோமீயம் என்கிற யாகத்தையும் அவ்வாறே **उपांशुयाजमन्तरा यजति।** (உபாம்ஸு யாகத்தை நடுவில் செய்யவேண்டியது) என்று மற்றொரு உத்பத்தி வாக்யத்தால் **உபாம்சுயாகத்தையும்,** ஆக இம்மூன்று யாகங்களையும் தனித்தனியே விதித்துப் பிறகு ஷை மூன்று யாகங்களையும் சேர்த்துச்சொல்லுகிறது. **य एवं विद्वान् पौर्णमासीं यजते।** (இவ்விதம் அறிந்த எவன் பௌர்ணமாஸீ யாகத்தைச் செய்கிறானோ) என்கிற விதி வாக்யத்தால் மூன்று யாகங்களையும் சேர்த்து 'பௌர்ணமாஸீ' என்னும் பதத்தாலும், அவ்வாறே முதலில் தனித் தனியாக விதித்துப் பிறகு 'அமாவாஸீ' என்னும் பதத்தால் ஆக்நேயம் 'ததியாகம்' பயோயாகம்; என்கிற இம்மூன்று யாகங்களையும் சேர்த்துச்சொல்லி, ஷை ஸமுதாயத்வயமாகிற ஆறு யாகங்களை **दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजते।** ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் தர்ச பூர்ணமாஸ யாகம் செய்யக்கடவன் என்கிற அதிகார வாக்யத்தால் சொல்லுகிறது. அது போல் பெயரும் ரூபமும் வெவ்வேறாக உள்ள சித், அசித், ஈசுவரன் இவைகளை **क्षरं प्रधानं अमृताक्षरं हरः क्षरमात्मानावीशते देव एकः॥** விகாரமுள்ள ப்ரக்ருதியையும் விகாரமில்லாத ஜீவனையும் ஆள்கின்ற ஈசுவரன் **पतिं विश्वस्यात्मेश्वरं।** (ஜகத்திற்கு சேஷியாயும், ஆத்மாவுக்கு நியந்தாவுமான ஈசுவரன்) என்றிவை முதலிய வாக்யங்களால் எல்லா அவஸ்தைகளிலும் பரமாத்மாவான ப்ரஹ்மம் சரீரி என்றும், மற்ற இரண்டும் அவனுக்

குச் சரீரமென்றும் சொல்லி, சரீரியாகிற பரமாத்மா காரணு வஸ்தையிலும் கார்யாவஸ்தையிலும் ஒரே தத்வம் என்று सदेव सोम्येदमग्रमासीत् । (ஸத் ஒன்றுதான் முதலில் இருந்தது) आत्मा वा इदमग्र आसीत् । ब्रह्मवाइदमग्र आसीत् (ஆத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்பட்டது தான் முதலில் இருந்தது, என்றிவை முதலிய வாக்யங்களால் சேதனு சேதனங்களைச் சரீரமாயுடைய பரமாத்மா விசிஷ்ட வேஷத்தாலே ஒன்று என்று சுருதி உத்கோஷிக்கிறது, ஆகையால் இச்சரீராத்ம பாவ ஸம்பந்தத்தை விட்டுச் சில இடங்களில் தத்வம் ஒன்ருக வும் மற்ற இடங்களில் தத்வம் அநேகமாகவும் அர்த்தத்தை யநுஸரித்து அந்தந்த அபிப்பிராயத்துக்குத் தக்கவாறு சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சரீராத்மபாவஸம்பந்தம் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு ப்ரதானப்ரதிதந்திரம் (differentia) அதாவது மற்றுமுள்ள ஸித்தாந்திகளொருவரும் இசையாதே நம் முடைய் ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தம். நம்முடைய ஸித்தாந்தம் ஒன்றில்தான் ஸகல ச்ருதிவாக்யங் களும் துல்ய பலமானவை (ப்ரமாணமாக அங்கீகரிக்கப்படும் தன்மை உடையவை) நிர்விசேஷாத்வைதிகளுக்கு ஜீவனுக் கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் சொல்கிருப்போல் தோன்றும் அபேதச்ருதிகளும், ஆத்மாவுக்கு யாதொரு குணமும் இல்லை யென்று சொல்லுகிருப்போல் தோன்றும் நிர்க்குண ச்ருதி களும் முக்கியமானவை. பேதசுருதிகளும் ஸகுணசுருதிகளும் முக்கியமல்லாதவை. அவை வ்யவஹாரதசையில் கற்பிக் கப்பட்ட பேதங்களையும் குணங்களையும் சொல்லுகின்றன. த்வைதவாதிகளுக்கு அபேதச்ருதிகள் முக்கியமல்ல. பேத ச்ருதிகள் மட்டுமே ப்ரபலங்கள். அபேதச்ருதிகள் துர்ப் பலங்கள். விசிஷ்டாத்வைதிகளான நமக்கோவென்ருல், சேதனுசேதனங்களுக்கும் ஈசுவரனுக்குமுண்டான சரீராத்ம பாவஸம்பந்தத்தைச் சொல்லுகிற கடக ச்ருதிகளின் பலத் தால் எல்லா ச்ருதிகளும் துல்ய பலங்கள். ஸமஸ்தகல்யாண குணங்களையும் போதிப்பதால் ஸகுணச்ருதிகளும், கெட்ட

குணங்கள் ஒன்றுமில்லையென்று சொல்வதால் நிர்க்குண சுருதிகளும், அந்தந்த பிங்கங்களான இம்மூன்று தத்வங்களின் ஸ்வரூபத்தைத் தனித்தனியாகப் பிரித்துச் சொல்வதால் பேதசுருதிகளும், சரீரவிசிஷ்டமான பரமாத்மாவை ஒன்றுஎன்று விவக்ஷிப்பதால் அபேதசுதிகளும், ஸ்வரஸங்களாய் ஸர்வசுருதி ஸாமரஸ்யம் உண்டாகையால் விசிஷ்டவேஷத்தால் தத்வம் ஒன்று என்று சொல்லக்குறையில்லை.

ப்ரஹ்மத்துக்குச் சரீரம் என்பதற்கு ஆக்ஷேபங்கள்.

இதற்குமேல் ஒருபலமான ஆக்ஷேபம் கிளம்புகிறது. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ப்ரதாந ப்ரதிதந்த்ரமான இந்த சரீராத்மபாவ ஸம்பந்தம் மிகவும் அஸங்கதம். ச்ருதி ப்ரமாணத்திற்கும் அநுபவயுக்தி வாதத்திற்கும் விரோதமாயிருக்கிறது. ஏனெனில் பரமாத்வைக் குறித்து **अपहतपाप्मा** (பாபம முப்பு, பசி தாஹம் முதலியது இல்லாதது).

1. **अनश्नन्योऽभिचाकशीति ।** (சாப்பிடாமல் கர்மபலத்தை அனுபவிக்காமல், விளங்குகிருன்.) 2. **अपाणिपादो जवनोग्रहीता पश्यत्यचक्षुः सशृणोत्यकर्णः ।** (கைகால்கள் இல்லாமல் வஸ்துக்களை எடுக்கவும், ஓடவும், கண்களில்லாமல் பார்க்கவும், காதில்லாமல் கேட்கவும், சக்தியுள்ளது.) 3. **अप्राणो ह्यमनाः ।** (பிராணனும் மனதுமலலாதவன்) என்று பரமாத்மாவுக்கு சரீரம் இந்திரியம் மனது பிராணன் ஒன்றுமில்லையென்றும், 4. **न ह वै स शरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्ति ।** (சரீரமிருக்குமளவில் ஸுகதுக்கங்கள் விடுவதில்லை) என்றும் சுருதிகள் சொல்வதாலும். சரீரத்தில் தாதுக்கள் ஸமமாயிருந்தால் ஸுகமும் விஷமமாயிருந்தால் துக்கமும் உண்டாவது நம் அனுபவஸித்தமாதலாலும், ஸர்வேச்வரனுக்குக் கர்மங்களும் கர்மபலபோகங்களும் இல்லாததாலும், அவன் இந்திரிய மூலமாய் போகத்தை அனுபவிக்கிறதில்லை யாதலாலும், அவனுக்கு நம்மைப்போல் ப்ராணன்கள் இல்லை யாதலாலும், அவனுக்கு சரீரம் இருக்க முடியாது. சேதனனும் அசேதனமும் அவனுக்குச் சரீரமா யிருக்கமாட்டா. சரீரத்திற்கு

இந்திரியம் அவசியமாய் வேண்டி யிருப்பதால் இந்திரியாச்ரய மல்லாத அசேதனவ்யஷ்டி ரூபமான (அசேதனங்களின் சேர்க்கையினுலுண்டான) த்ருணம் காஷ்டம் முதலியவை களும், ஸமஷ்டி ரூபமான பூதஸூக்ஷமமும் சரீரமாகா. ஜ்ஞானமொன்றே ஆகாரமான சேதனனுக்கும் இவை ஒன்று மில்லாததால் அவனும் சரீரமாகமாட்டான்.

'சரீரம்' என்ருல் என்ன? **भोगायतनं** (போகஸ்தாநம்) சரீரம் என்று சொல்லமுடியாது. போக ஸ்தானங்களாகிற வீடு வயல் முதலியவைகள் சரீரங்களென்று வ்யவஹரிக்கப்படுவ தில்லை. ஸ்வதஸ்ஸித்தமான நித்யநிரதிசயாநந்தத்தையுடைய ஈச்வரனுக்குத் தன்போகத்தைக் குறித்துச் சேதனர்களும் அசேதனர்களும் ஸ்தானங்கள் என்று சொல்லமுடியாது. ஆனுல் 'எவனுடைய இச்சைக்கு அதீநமான ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி இவைகளையுடையது எதுவோ அது அவனுக்குச் சரீரம்' என்று சரீர லக்ஷணம் சொல்லி எல்லா வஸ்துக்களும் ஈச்வரனுடைய இச்சைக்கு அதீநமான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுடையவையாகையால் அவனுக்கு எல் லாம் சரீரம் என்று சொல்லவும் முடியாது. ஏனெனில் நம் முடைய சரீரத்தின் ஸ்வரூபமானது நம்முடைய இச்சையால் உண்டாகிறதில்லை. அவ்விதம் லக்ஷணம் (definition) சொன் ஞல் நம்முடைய சரீரம், சரீரமாகாமற் போய்விடும். ஒரு வியாதிக்காரனுடைய சரீரம் அவனுடைய இச்சையினுல் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. அவன் சரீரமும் சரீரமாகாமற் போய் விடும். இறந்துபோனவனுடைய சரீரத்திற்கும் அந்த ஆத்மா வின் இச்சையினுல் ஸ்திதி ஏற்படுகிறதில்லை. அதுவும் சரீர மாகாமல் போய்விடும். மேலும் நாம் நம்முடைய இச்சை யினுல் ஒரு பொம்மையைச் செய்கிருேம். அதைக்காப்பாற்றி வைத்து அதை ஆட்டிவைக்கிருேம். நம் இஷ்டம்போல் அதை அழித்து விடுகிருேம். ஆகையால் அந்த பொம்மை யின் ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவைகள் நம்முடைய இச்சைக்கு அதீநமானதால் அது நமக்குச் சரீரமாய்விடும். பொம்மை நம்முடைய சரீரமென்ருல் பரிஹஸிக்கத்தக்கது.

ஆகையால் சரீரத்திற்கு லக்ஷணம் கீழ்கூறிய ப்ரகாரம் சொல்லக்கூடாது. பின்னை யெப்படிச் சொல்ல வேண்டு மென்றால் :—' கர்மபல போகமான ஸுகதுக்கத்துக்கு ஸாதந மாயும், இந்திரியாச்ரயமாயும், பூதஸங்காத (சேர்க்கை) (combination of elements) ரூபமாயும், பஞ்சப்ராணதீநதார ணமாயும் (sustained by the five breaths) இருப்பது சரீரம், என்றே லக்ஷணம் சொல்லவேண்டியது. இவ்விதமான சரீரம் ஈச்வரனுக்கு இல்லை. ஆதலால் ஈச்வரனுக்குச் சரீரம் உண்டென்றும் சேதனசேதனங்கள் அவனுக்குச் சரீரம் என்றும் சொல்லுகிற ஸித்தாந்தம் அஸங்கதம்—என்று. இதற்கு

ஸமாதானம்.

இந்த ஆக்ஷேபம் சரியல்ல. ஏனென்றால் :—எல்லா வேதாந்த வாக்கியங்களும் எவ்வித அவஸ்தையிலும் சேதன னும் அசேதனமும் பரமாத்மாவுக்குச் சரீரமென்பதைத் தெரி விக்கின்றன. ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் **यः पृथिव्यां तिष्ठन्......यस्य पृथिवी शरीरम्।** (எந்த பரமாத்மா பூமியில் இருந்து கொண்டு அதை அடக்கி ஆள்கின்றானோ, எவனுக்குப் பூமி சரீரமோ) என்று ஆரம்பித்து ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரம், பிராணன், வாக்கு முதலிய இந்திரியங்கள், மநஸ், முதலிய ஸமஸ்தமான அசித் வஸ்துக் களையும் அவனுக்குச் சரீரம் என்று சொல்லி (எவன் ஜீவாத் மாவிலிருந்துகொண்டு அதை அடக்கி ஆள்கிறானோ, எவனுக்கு ஜீவாத்மா சரீரமோ) என்று சேதனனையும், அசே தனத்தையும் பரமாத்மாவுக்குச் சரீரமாகத் தனித்தனியாகச் சொல்லியிருக்கிறது. அவ்வாறே ஸுபாலோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்திலும் **जगत्सर्वं शरीरं ते** (ஜகத்து முழுவதும் உமக்குச் சரீரம்) என்று சக்ர வர்த்தித் திருமகனைப் பார்த்து ப்ரஹ்மா சொல்லுகிறார். ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் **यत्किंचित् वैष्णवः कायः तत्सर्वं वै हरेस्तनुः।** (ஜலம் முதலிய எல்லாம் ஹரியின் சரீரம்), **तानि सर्वाणि तद्वपुः।** (அவைகள் எல்லாம் அவன் சரீரம்) என்றும் சொல்லப்பட்

டிருக்கிறது. மனுஸ்ம்ருதியிலும் **सोभिध्याय शरीरात् स्वात् सिसृक्षुः विविधाः प्रजाः।** (அவர் ஸங்கல்பித்து பூத ஸூக்ஷ்ம மான தன் சரீரத்திலிருந்து பிரஜைகள் யாவற்றையும் ஸ்ருஷ் டிப்பதற்காக) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மனு ஸ்ம்ருதி சுலோக வ்யாக்கியாதுவஸரத்தில் குல்லூகபட்டரும் **ब्रह्मैवाव्याकृत शक्त्यात्मना जगत्कारणमिति त्रिदण्डिवेदान्तसिद्धान्त एवाभिमतः प्रतिभाति।** (ஸ்ம்ருதிகர்த்தாவான மனுமஹர்ஷிக்கும் த்ரிதண்ட ஸந்யாஸ மதமாகிற ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத் திலேயே திருவுள்ளம்போல் காண்கிறது) என்று வெளியில் சொல்லிக்கொள்ள மனமில்லாமல் சொல்லுகிறார். மஹா பாரதத்திலும் ஸஹஸ்ரநாமாத்யாயத்தில் **त्रिभुवनवपुषं विष्णुमीश नमामि।** (மூன்று லோகங்களையும் சரீரமாயுடைய விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகை யால் பரமாத்மாவுக்கு சேதனாசேதனங்கள் சரீரமென்பது ஸர்வ சாஸ்திரங்களுக்கும் ஸம்மதமா யிருக்கிறது.

பிறகு சரீரலக்ஷணவிசாரம் செய்யப் புகுந்தால், லோகத் தில் சரீரம் என்று வந்த வஸ்துக்களைச் சொல்லுகிறோமோ அவைகள் ஒரே ஆகாரமுள்ளதாகக் காணப்படுகிறதில்லை. கடம் என்பது ஒருவிதமான அவயவ அமைப்புள்ள த்ரவ்ய த்தை நியமேன (எப்போதும்) குறிக்கின்றது. ஆகாரம் வேறு பட்டால் அந்த வஸ்துக்களைச் சட்டி, வாணுய் முதலிய பதங்க ளால் சொல்லுகின்றோம். சரீர சப்தம் அப்படியல்ல. ஈ, எறும்பு, கொசு, புழு, பக்ஷி, ஸர்ப்பம், பசு, விருக்ஷம், மனிதன் முதலிய ஒன்றுக்கொன்று மிகவும் வித்யாஸமுள்ள, விலக்ஷ ணங்களான வஸ்துக்கள் யாவற்றையும் சரீரசப்தம் குறிக் கின்றது. ஆகையால் நாம் சொல்லும் லக்ஷணம் மேற் குறித்த எல்லா வஸ்துக்களுக்கும் பொருந்தியதாக இருக்க வேண்டும். கர்மபலபோக ஸுகதுக்க ஸாதனமாயும், இந்திரி யாச்ரயமாயும், பூதங்களின் சேர்க்கையாயும், பஞ்சவ்ருத்தி ப்ராணுதீநதாரணமாயிருப்பது சரீரமென்று சொல்லவொண் ணுது. ஏனெனில்:—கீழ்கூறியபடி ஈச்வரனுக்குச் சரீரமாகச் சொல்லப்பட்ட ப்ருத்வீ, ஜலம், ஜீவாத்மா, முதலியவைகளிற்

பொருந்துவதில்லை. (அவ்யாப்தி தோஷம் வருகிறது) அவ்விதமே ஈசுவரனும் முக்தர்களும் தங்களிஷ்டப்படி ஸ்வீகரிக்கும் சரீரங்களிலும் லக்ஷணம் பொருந்துவதில்லை, ஏனென்றால் அந்தச் சரீரங்கள் கர்மபலபோகத்திற்காக ஏற்பட்டனவல்ல. பரமாத்மாவினுடைய இச்சா விக்ரஹங்களும் அர்ச்சா விக்ரஹங்களும் **न भूत संघसंस्थानो देहोस्य परमात्मनः।** (பரமாத்மாவின் சரீரம் பூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்டதல்ல) என்று சொல்லப்பட்டிருப்பதால் அவ்விடத்திலும் லக்ஷணம் பொருந்தாது. ஆகையால் பூதஸங்காதரூபம் என்கிற லக்ஷணாம்சம் ஸரியல்ல. **पंचवृत्तिप्राणाधनधारणम्।** (ஐந்துவிதமான வ்ருத்திகளையுடைய பராணனால் தரிக்கப்படுதல்) என்கிற அம்சமும் ஸ்தாவர சரீரத்தில் பொருந்துவதில்லை. ஏனெனில் ஸ்தாவரங்களில் பிராணன் இருந்தபோதிலும் ஐந்து விதமாக இருந்து கொண்டு சரீரத்தைத் தரிப்பதில்லை. மேலும் 'இந்திரியாச்ரயத்வம்' (இந்திரியங்களையடுத்திருத்தல்) என்கிற அம்சமும் பொருந்தாது; ஏனெனில் அஹல்யை முதலானவர்களுக்குக் கர்மத்தால் ஏற்பட்ட சிலை காஷ்டம் முதலிய சரீரங்கள் இந்திரியாச்ரயங்களல்ல. ஆகையால் ஸுகதுக்கத்திற்குக் காரணம் என்றும் சொல்லமுடியாது. ஆகையால் மேற்கூறிய சரீரலக்ஷணம் அஸங்கதம். ஸரியான லக்ஷணம் என்னவென்றால் :—'ஈசவரனைப் பற்ற நியமேன தார்யமுமாய் நியாம்யமுமாய் சேஷமுமான த்ரவ்யமாயிருக்கை அதாவது ஒரு சேதனனால் நியமேன தரிக்கப்படுகிறதும், நியமேன (எப்பொழுதும்) ஏவப்படுகிறதும், அவனுடைய அதிசயத்தை உண்டாக்குவதற்காக ஸ்வீகரிக்கப்பட்டதுமான த்ரவ்யம் சரீரம். [1]'லோகத்திலும் சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரிதமுமாய், ஸங்கல்பாச்ரிதமுமாயிருக்கக் காண்கின்றோம். ஜீவனிருந்த காலமிருந்து இவன் விட்டபோது அழிகையாலே ஸ்வரூபாச்ரிதம். இவ்வர்த்தம் ஸங்கல்பமில்லாத ஸுஷுப்தி முதலிய அவஸ்தைகளில் நன்கு விளங்கும். ஜாகராதி (முழிப்பு முதலிய) அவஸ்தைகளில் ஸங்கல்பத்தாலே விழாத

1. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்—ப்ரதானப்ரதிதந்த்ராதிகாரம்.

படி தாங்கும்போது ஸங்கல்பாச்ரிதமென்னக் கடவது. இதில் ஸ்வரூபாச்ரிதமாயிருக்கிறபடியை ஆதேயத்வமென்றும், ஸங்கல்பாதீநமாயிருக்கிறபடியை நியாம்யத்வமென்றும் சொல்லுகிறது. ஈசுவரன் சேதநாசேதனங்களைப் பற்றத் தாரகனுமாய் நியந்தாவுமாகையாவது தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் யதார்ஹம் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகனாயிருக்கை. ஈசுவரன் தன்னைத் தவிர ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக (நேராகவே) ஸ்வரூபத்தால் ஆதாரமாயிருக்கிறான். அவ்வோ த்ரவ்யங்களைப் பற்ற ஆச்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்ய முகமாக ஆதாரமாயிருக்கிறான். ஸர்வ வஸ்துக்களையுடையவும் ஸத்தை ஈசுவர ஸங்கல்பாதீனையாகையாவது, அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்களாயும் நித்யங்கள் நித்யேச்சையாலே ஸித்தங்களாயுமிருக்கை.' ஆகையால் இவ்விதம் லக்ஷணம் சொல்லில் ஈசுவரனைக் குறித்துச் சேதனாசேதனங்கள் யாவற்றும் சரீரம், அவற்றைக் குறித்து ஈசுவரன் சரீரீ, என்பது நன்கு பொருந்தும்.

ரோகியின் சரீர விஷயத்தில் நியமன சக்தி இருந்தபோதிலும், அக்நிக்கு மணி முதலிய தடைகள் இருக்கும் காலத்தில் சூடு முதலியது காணப்படாததுபோல், ப்ரதிபந்தகத்தால் (தடங்களால்) நியமன சக்தியானது காணப்படவில்லை. ம்ருத சரீர விஷயத்தில் முன்பு சரீரமாக ஏற்பட்டிருந்த ஸங்காதத்தின் ஏகதேச மிருப்பதால் சரீரமென்று வ்யவஹரிக்கப்படுகிறதே தவிர, வாஸ்தவத்தில் அது சரீரமல்ல. பகவானுக்குச் சரீரம், இந்திரியங்கள் ஒன்றுமில்லை என்கிற சுருதி வாக்யங்களுக்குக் கர்மத்தால் ஏற்பட்ட சரீராதிகள் இல்லையென்றே தாத்பர்யமாதலால், பூமி முதலிய அசேதனங்கள், சேதனர்கள் இவைகள் எல்லாம் அவனுக்குச் சரீரம் என்று சொல்லத்தட்டில்லை.

ஸ்ருஷ்டி என்பதின் அர்த்தம்.

இதன் பேரில் ஒரு ஆக்ஷேபம் சொல்லலாம். 'எல்லா சேதனர்களும் எல்லா அசேதனங்களும் பகவானுக்குச் சரீர

மென்றும் என்றைக்கும் அவனைவிட்டுப் பிரியாமலிருப்பவை யென்றும் சொல்லும் பக்ஷத்தில் **आत्मा वा इदमग्र आसीत्, सदेव सोम्येदमग्र आसीत्** ('ஆத்மா ஒன்றுதான் முதலில் இருந்தது', 'ஸத் ஒன்றுதான் இருந்தது') என்றிவை முதலிய சுருதி வாக்யங்களுக்கு விரோதம் வருகிறது. மேலும் பகவான ஜகத்தை ஸ்ருஷ்டித்தார் என்று சொல்லுவதற்கு அர்த்தமே யில்லை. எப்போதும் இருக்கும் சரீரத்தை ஸ்ருஷ்டித்தார் என்பது ஸ்வ வசன விரோதம்'—என்று. இதற்கு ஸமாதானம் :—சில சுருதிகள் அசித் வஸ்துவான போக்யத்தையும், சித்வஸ்துவான போக்தாவையும், இவ்விரண்டிற்கும் ஈசுவரனை பரப்ரஹ்மத்தையும் ஸ்வரூபத்தில் வெவ்வேறு என்று பிரித்துக் காட்டுகின்றன. உதாஹரணம் :—**भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा, प्रधान क्षेत्रज्ञ पतिः गुणेशः** என்றிவை முதலியவைகள். மற்றும் சில சுருதிகள் போக்தாவான சேதனனும், போக்யமான அசித்தும் பரமபுருஷனுக்குச் சரீரமா யிருந்துகொண்டு அவனால் அடக்கி ஆளப்பட்டு அவனை விட்டுப் பிரியாமலிருக்கின்றனவென்றும், அவைகளுக்கு பரமபுருஷன் ஆத்மா வென்றும் சொல்லுகின்றன. இவ்விதம் எல்லா அவஸ்தைகளிலும் சித், அசித், இரண்டும் அவனுக்கு ப்ரகாரம் (Mode) என்றும், அவன் ப்ரகாரி என்றும், காரணாவஸ்தை கார்யாவஸ்தை யிலுள்ள ஜகத்ரூபமாகவே அவன் இருக்கிறான் என்பதை ஜ்ஞாபித்துக்கொண்டு **सदेव सोम्येदमग्र आसीत्** (ஸத் ஒன்றேதான் முதலிலிருந்தது) **एकमेवाद्वितीयं** (ஒன்றேதான் வேறு இல்லை) **तदैक्षत बहुस्यां प्रजायेयेति** (அது நான் பஹுவாக ஆகக் கடவன் என்று ஸங்கல்பித்தது) **सन्मूलास्सोम्य** (இந்தப் பிரஜைகளெல்லாம் ஸத்திலிருந்து உண்டாயின') என்றிவைமுதலிய சுருதிகள் புறப்பட்டன. இவ்விதம் ஸர்வ வஸ்துக்களுக்கும் ஆத்மாவான பரப்ரஹ்மம் சில காலத்தில் அவிபக்த நாமரூபமாய் (பெயரும், உருவமும் பிரியாமல்) இருக்கிறது. அப்போது சித், அசித், இவைகள் ஸூக்ஷ்மாவஸ்தையில் (subtle state) இருக்கின்றன. அதாவது ஒன்றுக்கொன்று வித்யாஸம் காணப்படாமல் பெயர் உருவம் ஒன்றும் காணப்

படாமலிருக்கும் ஜீவன்களுக்கு அப்போது சரீர ஸம்பந்த மில்லாமல் ஜ்ஞானம் ஸங்குசிதமாய் (சுருங்கி)க்கிடக்கும் அசித்தானது அவ்யக்தமாயிருக்கும் (Unevolved). ஸ்வரூபத்தில் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேருக இருந்தபோதிலும், ஜலத்தில் கரைந்த உப்புக்கட்டிபோல் பெயர் உருவமற்றுக் காணமுடியாமல் மிகவும் ஸூக்ஷ்மமாயிருப்பதால் 'அவ்யக்தம்' என்று சொல்லுகிறது. அது **तमपरे देवे एकी भवति** என்றபடியே நாசத்தையடையாமல் பகவானேடு ஒன்ருய்க் கலந்து கிடக்கிறது. ஆகையினல் சித், அசித், இவைகள் விபக்தமாக இல்லாமல் பரமாத்மாவோடு ஒன்ருய்க்கலந்து ஸ்வரூபம் தெரியாமலிருப்பதால் பரமாத்மா ஒன்றுதான் இருந்தது என்றும், **ब्रह्म एवेदमग्र आसीत्। आत्मा वा इदमग्र आसीत्। एको ह वै नारायण आसीत्। एकमेवाद्वितीयम्।** ப்ரஹ்மவென்றும், ஆத்மாவென்றும், ஸத் என்றும், நாராயணன் என்றும் சொல்லப்பட்ட ஒரே வஸ்துமாத்திரம் இருந்தது என்றும் சுருதிகள் சொல்லுகின்றன. 'அத்விதீயம்' (இரண்டாவதில்லாதது) என்பதற்கு வேறே வஸ்துக்கள் சித், அசித், இவைகள் இல்லையென்று அர்த்தம்சொல்லக்கூடாது. நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி பூமண்டலத்தில் அத்வீதியர் (one without a second) என்று சொன்னல் அவர் ஒப்பும் உயர்வுமற்றவர் என்று மாத்திரம் தார்த்பர்யமேயல்லாமல், அவருக்கு புத்திரமித்திர களத்ர மந்திரி முதலானவர்கள் ஒருவருமே இல்லையென்று அர்த்தமில்லை. ஸூர்யன் ஆகாசத்தில் அத்விதீயனுய விளங்குகிருன் என்று சொல்லும்போதும் அவனுடைய கிரணங்கள் இல்லையென்று மறுக்கப்படுகிறதில்லை. அவ்வாறே ப்ரஹ்மத்திற்கு இரண்டாவதாக எண்ணக்கூடிய வஸ்து முக்காலத்திலுமில்லை அதற்கு மேலானதாவது ஸமானமானதாவது ஒன்றுமில்லையென்றே தாத்பர்யமாதலால் சேதனு சேதனரூபமான இப்ரபஞ்சம் அக்காலத்திலில்லையென்று 'அத்விதீய' சுருதிக்கு அர்த்தமில்லை. ஸர்வசக்தியுள்ள ப்ரஹ்மத்தைத் தவிர அதிஷ்டாதா வேறு இல்லை என்றே அர்த்தம். நாமரூபம் ஒன்றும் இல்லாத அவஸ்தையைத்தான் ப்ரளயாவஸ்தையென்றும், அவ்யக்தா

வஸ்தையென்றும், காரணுவஸ்தையென்றும் சொல்வது. அப்போது ப்ரஹ்மம் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமாயிருக்கும். பிறகு ப்ரளயத்தின் முடிவில் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மம் **बहुस्यां प्रजायेय।** (நான் பஹுவாக, அநேகமாக, ஆகிறேன்) என்றும், **हन्ता हमिमाः तिस्रो देवताः अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि** (என்னை ஆத்மாவாக உடைய ஜீவகோடிகளோடு அசித் வஸ்து யாவற்றையும் அநுப்ரவேசித்து, விசித்திரங்களான நாமரூபங்களையடைந்து விசித்திரநாநாவித ஸ்தாவரஜங்கம ரூபமான ஜகத்தாக ஆகிறேன்) என்றும் ஸங்கல்பித்து, **तत्सृष्ट्वा तदेवानुप्राविशत् तदनुप्रविश्य सच्चत्यच्चाभवत्।** (அதை ஸ்ருஷ்டித்து அதையே அநுப்ரவேசித்தது, நிர்விகாரமான சேதனனையும், எப்போதும் விகாரமுள்ள அசேதனத்தையும் வ்யக்தமாகச்செய்து அவைகளின் பெயர் உருவங்களை அடைந்தது. எப்போதும் எல்லா வஸ்துக்களையும் வ்யாபித்த ப்ரஹ்மத்திற்கு ஸ்ருஷ்டிகாலத்தில் அநுப்ரவேசமாவது :— பசுவின் வயிறறில் எங்கும் வியாபித்த கன்றுபோல் ஸர்வத்தையும் வியாபித்த ப்ரஹ்மத்திற்கு தனித் தனியாக ஒவ்வொரு வஸ்துவிலும் நிறைந்திருக்கும் தன்மையைக் காண்பிக்கக்கூடிய இருப்பு என்றே அர்த்தம். ஒவ்வொரு வஸ்துவின் பெயரையும் உருவத்தையுமடைவதால், ஒவ்வொரு வஸ்துவின் பெயரும் ப்ரஹ்மத்தைக் குறிக்கிறது. இத்தால் ப்ரஹ்மம் ஸர்வசப்தவாச்யமாகிறது (எல்லாப்பதங்களுக்கும் பொருளாகிறது). ப்ரஹ்மத்திற்கு ஸர்வசப்தவாச்யத்வம் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மட்டுமே இசைந்த அர்த்தம், ஆகையால் சரீராத்மபாவ ஸம்பந்தம் போல் ஸர்வசப்த வாச்யத்வமும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் மற்றொரு ப்ரதான ப்ரதிதந்த்ரம். இவ்விதமான ஸ்ருஷ்டியில் ஜீவர்கள் பூர்வஜன்ம புண்யபாபங்களுக்குத் தக்கவாறு ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்காக சரீரங்களையடைந்து ஜ்ஞானத்திலும் மலர்ச்சியை யடைகின்றார்கள். இவ்விதம் ஸ்ருஷ்டிக்குமுன் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமாயிருந்த ப்ரஹ்மமே நாமரூபங்களால் விகாரத்தை யடைந்தும், அநேக கர்த்தாக்களோடும், போக்தாக்களோடும்

போகாங்களோடும், போக்யங்களோடும் கூடியதும், போகோபக்ரணங்களோடும் ப்ரதிநியதமான தேசகால நிமித்தம் க்ரியா பலங்கள் இவைகளுக்கு ஆச்ரயமாயும், நம்முடைய மனதால் கூட நினைக்கவொண்ணாத அமைப்போடு கூடியதும், மிகவும் ஆச்சர்யமுமான இந்த ஜகத்தாக ஆகிறது. இவ்விதமான ஸ்தூல சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மத்தை கார்யாவஸ்தை யென்றும், வயக்த்தாவஸ்தை யென்றும், அநேகமென்றும் சொல்லுகிறது. ஆகையால் நாம் காண்கிற இந்த ஜகத்தாகிற ஸ்தூலமான சேதநா சேதனங்களோடு கூடிய ப்ரஹ்மத்திற்குக் காரணம் ஸூக்ஷ்மமான சேதநா சேதனங்களோடு கூடிய ப்ரஹ்மமே யாதலால், இந்த ஜகத்திற்கு ப்ரஹ்மமே உபாதானகாரணம் (Material cause) என்று ஏற்படுகிறது. ஆகையால் ஸ்ருஷ்டி என்பதற்கு 'தனக்குள் பெயர் உருவமில்லாமல் அடங்கியிருக்கும் அநேக வஸ்துக்களைப் பெயர் உருவங்களோடு வெளிப்படுத்துவது' என்பதே பொருளாதலால் ஸ்ருஷ்டி என்பதற்கு அர்த்தமேயில்லை யென்று பூர்வபக்ஷி சொன்ன ஆக்ஷேபம் நிராகரிக்கப்பட்டது.

ப்ரஹ்மமே ஜகத்துக்கு உபாதானகாரணம் என்பதற்கு ஆக்ஷேபங்கள்.

இதற்குமேல் ஒரு ஆக்ஷேபம் சொல்லலாம். அதாவது :- 'ஜகத்துக்கு ப்ரஹ்மம் உபாதான காரணம் (Material Cause) என்று சொல்வது மிகவும் அனுசிதம். அது சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் விரோதமாயிருக்கிறது. வேதாந்த வாக்கியங்கள் ப்ரதானம் என்னப்பட்ட ப்ரக்ருதியைத்தான் உபாதான காரணமாகச் சொல்லுகின்றன. எது விகாரத்தை யடையுமோ அதைத்தான் உபாதான காரணமாய்ச் சொல்ல வேண்டும். மண்ணானது குடமாக விகாரத்தை யடைவதால், குடத்திற்கு மண் உபாதான காரணம் அவ்விதமே ஜகத்தாக விகாரத்தை யடையக்கூடியது ப்ரக்ருதியாதலால், ப்ரக்ருதியே ஜகத்திற்கு உபாதான காரணம் என்று சொல்லவேண்டும். அறிவில்லாத அசேதனத்தை உபாதான காரணமாயும்

அதற்கு அதிஷ்டாதாவாய் அதைத் தன் வசமாக்கிக் கொள்ளுகிற அறிவுள்ள சேதனனை நிமித்த காரணமாயும் (Opera.ive Cause) உலகத்தில் கண்டிருக்கின்றோம். குடத்தைக் குறித்து மண் உபாதான காரணமென்பதும், குயவன் நிமித்த காரணமென்பதும் நம் அனுபவஸித்தம். ஸர்வஜ்ஞனும், விகாரமில்லாதவனும், அதிஷ்டாதாவுமான ஈசுவரன், அதிஷ்டேயமாயும், விகாரமுள்ளதுமான ப்ரதானமின்றிக் காரணமாக சுருதிகளிலும் சொல்லப்படவில்லை. ஈசுவரன் **निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरंजनम्, स वा एष महानज आत्माऽजरोऽमरः** என்றபடியே யாதொரு விகாரமு மில்லாதவனென்றும், **विकार जननीमज्ञरूपामजां ध्रुवां** என்றபடியே ப்ரக்ருதி விகாரமுள்ளதென்றும், ஈச்வரனால் அதிஷ்டிதமாயிருந்து கொண்டு ப்ரக்ருதியானது ஜகத்தை உண்டு பண்ணுகிறது, **अस्मात्मायी सृजते विश्वमेतत्** (இந்த ப்ரக்ருதியிலிருந்து ஈசுவரன் ஜகத்தை உண்டுபண்ணுகிறான்) ; '**मयाध्यक्षेण प्रकृतिस्सूयते स चराचरं**' (என்னால் ஏவப்பட்டு ப்ரக்ருதியானது ஸ்தாவர ஜங்கமரூபமான ஜகத்தை உத்பத்தி செய்கிறது) என்றும் சுருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. மேற்படி விதம் சுருதிகள் சொல்லாமற்போனாலும், 'ஈசுவரன் ஜகத்திற்குக் காரணம்' என்கிற ச்ருதிவாக்யங்களுக்கு அர்த்தமின்றிப் போகாமலிருப்பதற்காக அவனால் அதிஷ்டானம் பண்ணப்பட்ட ப்ரதானமே உபாதான காரணம் என்று சொல்லவேண்டியது அவசியமாயிருக்கும். மேலும் லோகத்தில் நிமித்த காரணத்தையும் வெவ்வேறாகக் காண்கின்றோம். மண், தங்கம், முதலிய அசேதனங்களைக் கொண்டு குடம், கடகம் முதலியவைகளைச் செய்வதில், குயவன், தட்டான் முதலியவர்களுக்கு அநேக காரகங்கள் (செய்கைகள்) அவசியமாகச் செய்யவேண்டி யிருக்கின்றன. ஆகையினால் நிமித்த காரணமும் உபாதானகாரணமும் வெவ்வேறாகவே அவச்யம் இருக்கவேண்டியதென்கிற நியமத்தையும், கார்யம் உண்டாவதில் அநேக காரகங்கள் அவச்யம் என்கிற நியமத்தையும் கடந்து, ஒரே வஸ்துவானது நிமித்த காரணமுமாய் உபாதான காரணமுமாயிருக்கிறதென்று சொல்வது யுக்தமல்ல. ஆகையால் **ईश्वरो न जगदुपादानं**:

जगन्निमित्तत्वात्, योयन्निमित्तं न तस्योपादानं यथा घटस्य कुलालः (ஈசுவரன் ஜகத்திற்கு உபாதான காரணமல்ல 'நிமித்த காரண மாயிருப்பதால், எவன் எதைக்குறித்து நிமித்த காரணமோ அவன் அதைக் குறித்து உபாதான காரணமல்ல' குடத் திற்குக் குயவன்போல்) என்று யுக்தி வாதத்தாலும் ஈசுவரன் ஜகத்திற்கு உபாதான காரணமாகமாட்டான்.

மேலும் ப்ரஹ்மமானது ஜகத்தைக் காட்டிலும் விலக்ஷணமாய் (வேருக) இருப்பதால், அது ஜகத்திற்கு உபாதான காரணமாய் இருக்கமுடியாது. நமது ப்ரத்ய க்ஷத்தில் அசேதனமாயும், அசுத்தமாயும், ஈசுவரனல்லா ததும் துக்கமயமாயும் காணப்படும் சிதசித் ரூபமான இந்த ஜகத்திற்கு ஸர்வஜ்ஞனும், ஸர்வேச்வரனும், கெட்ட குணங்களில்லாதவனும் ஆநந்தமயமாயுமிருக்கும் ஈச்வரன் உபாதான காரணமென்று சொல்லுவது எவ்விதம் பொருந்தும்? ஸர்வ தோஷங்களோடும் கூடிய ஜகத்திற்கு யாதொரு தோஷமுமில்லாத ஈசுவரன் உபாதான காரண மாகமாட்டான்.

மேலும் ஈச்வரன் ஜகத்தைக்காட்டிலும் விலக்ஷணன் என்று ச்ருதிகளும் முறையிடுகின்றன. கார்யமாகிற ஜகத்தானது அசேதனமாயும், துக்கமுள்ளதாயு மிருக்கிற தென்று ச்ருதிகளும் சொல்லுகின்றன. எது எதற்குக் காரணமோ அது அதைக்காட்டிலும் விலக்ஷணமாய் (வேருக) இராது; மண், தங்கம் முதலியவைகளின் கார்யமான குடம் கடகம் முதலானதுபோல். ஆகையால் ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமே யல்லாமல் உபாதான காரண மல்ல—என்று.

இதற்கு ஸமாதானம்

இந்த ஆக்ஷேபம் ஸரியல்ல. சாந்தோக்ய உபநிஷத்தில் ச்வேதகேதுவைப் பார்த்து அவன் பிதா சொல்லுகிருர் स्तब्धोसि उत तमादेशमप्राक्ष्यः येनाश्रुतं श्रुतं भवति अमतं मतं, यथा सोम्यैकेन मृत्पिण्डेन सर्वं मृण्मयं विज्ञातं स्यात्। (நீ எல்லா மறிந்த

வன்போல் கர்வமுள்ளவனுய்க் காணப்படுகிருய், அந்த ப்ரஹ்மத்தைப்பற்றி ஆசார்யர்களேக் கேட்கிருய் போலும்— எதைப்பற்றிக் கேட்டதால்,கேழ்க்கப்படாத மற்ற வஸ்துக்கள் யாவையும் கேழ்க்கப்பட்டதாக ஆகுமோ, எது அறியப் பட்டால் அறியப்படாத மற்ற வஸ்துக்கள் எல்லாம் அறியப் பட்டதாக ஆகுமோ, அவ்விதமான ப்ரஹ்மத்தை நீ அறிந்தவன் போலும் !)-என்று. இவ்விடத்தில் பிரதிஜ்ஞை த்ருஷ்டாந்தம் இவை இரண்டும், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணமாக இருந்தால் மட்டுமே பொருந்தும். இவ்விடம் பிரதிக்ஞையாவது 'ஒன்று அறியப்பட்டால், அறியப்படாத மற்றவையெல்லாம் அறியப்படும்' என்பது. த்ருஷ்டாந்தமாவது, ஒரு மண்கட்டியை அறிந்தால் மண் ஸாமான்கள் யாவற்றும் அறியப்படுகின்றன' என்பது முதலானவை. ப்ரஹ்மம் ஜகத்துக்கு நிமித்தகாரணமாக மட்டு மிருந்தால், ப்ரஹ்ம ஜ்ஞானத்தால் எல்லா ஜகத்தும் அறியப் பட்டதாக ஆகாது. குயவன் முதலியவர்களே அறிவதால் அவர்களால் செய்யப்பட்ட குடம் முதலியன அறியப்பட்ட தாக ஆகாது. அப்போது ப்ரதிஜ்ஞையும் திருஷ்டாந்தமும் பொருந்தாது, ப்ரஹ்மம் உபாதான காரணமாக இருந்தால் மட்டுமே, உபாதான திரவ்யமாகிற மண்ணுண்டை, தங்கக் கட்டி, இரும்பு, இவை முதலியதை அறிந்தால் அவைகளின் கார்யமாகிற குடம், கடகம், வாச்சி, கோடாலி முதலியதை அறிய முடியுமோ,அதுபோல், ப்ரஹ்மத்தின் கார்யமாகிற ஸமஸ்த ஜகத்தையும் அறியக்கூடும். காரணமே மற்ருெரு அவஸ்தையை அடைந்தால் கார்யமாகிறதே தவிர, கார்யம் காரணத்தைவிட வேருன வஸ்து அல்ல, என்று கார்ய காரண ரூபமாயிருக்கும் மண் அதின் விகாரம் இது முதலிய வற்றை திருஷ்டாந்தமாகக் காண்பித்து, பிரதிஜ்ஞையை ஸமர்த்தித்தால், ப்ரஹ்மமானது ஜகத்துக்கு உபாதான கார ணமும் ஆகிறது என்று நிச்சயிக்கப்படுகிறது.

மேலும் ஜகத்திற்கு நிமித்த காரணமும் உபாதான கார ணமும் ஒன்று என்று சுருதிவாக்யங்களால் ஏற்படுகிறது;

இந்த ஜகத்தை ஆளுகின்ற அதிஷ்டாதாவை அறிந்தால், அறியப்படாததும் அறியப்பட்டதாக ஆகும் என்றதினுல், **विकारजननीं गौर नाद्यन्तवती** (விகாரத்தைச் செய்கிற ஆதியும் அந்தமு மில்லாத ப்ரக்ருதி) என்று ப்ரக்ருதி சப்தத்தால் நாம ரூபங்கள் விடுவிக்கப்படாத காரணவஸ்தையிலுள்ள ப்ரஹ்மமே சொல்லப்படுகிறது. ஏனெனில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேருன வஸ்து ஒன்றும் இல்லை.

மேலும், **सोऽकामयत बहुस्यां प्रजायेयेति, तदैक्षत बहुस्यां प्रजायेयेति** (அந்த ப்ரஹ்மம் நான் அநேகமாய் ஆக வேண்டும்; அதாவது ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்று ஸங்கல்பித்தது) என்று ப்ரஹ்மமானது தானே சேதனுசேதன ரூபத்தால் பஹுவாய் விடுகிறேன் என்று ஸங்கல்பித்த ஸ்ருஷ்டியானது சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர **साक्षाच्चोभयाम्नानात्** என்றபடியே நிமித்த காரண மும் உபாதாந காரணமும் ப்ரஹ்மம் என்று கண்டோக்தமாய் (நேராகவே) சுருதியில் ஏற்படுகிறது. **किंस्विद्वनं क उ स वृक्ष आसीद्यतोद्यावापृथिवी निष्टतक्षुः मनीषिणो मनसा पृच्छतेदु तद्यदध्यतिष्ठद् भुवनानि धारयन्। ब्रह्मवनं ब्रह्म स वृक्ष आसीद्यतोद्यावापृथिवी निष्टतक्षुः मनीषिणो मनसा वि ब्रवीमि वः ब्रह्माध्यतिष्ठद्भुवनानि धारयन्।** என்று 'இந்த ஜகத்தாகிற மர ஸாமான் எந்த மரத்திலிருந்து செதுக் கப்பட்டது? அந்த மரம் எந்தக் காட்டில் விளைந்தது?' என்றும், 'ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரஹ்மமானது எந்த உபா தான த்ரவ்யத்தைக்கொண்டு இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தது? எந்த உபகரணங்களைக் கொண்டு ஸ்ருஷ்டித்தது? அந்த உபாதான திரவியத்திற்கு அதிகரண காரகம் யாது?' என்கிற கேள்விகளுக்கு ப்ரஹ்மமானது, ப்ரஹ்மமாகிற வ்ருக்ஷத்திலிருந்து ஜகத்தாகிற மரஸாமானைச் செதுக்கி யிருக்கிறது. அந்த ப்ரஹ்மமாகிற மரமானது ப்ரஹ்மமாகிற காட்டில் விளைந்தது' என்று ப்ரஹ்மமே உபாதாந த்ரவ்யம், ப்ரஹ்மமே அதிகரண காரகம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. **स भगवः कस्मिन् प्रतिष्ठित इति स्वे महिम्नि यदि वा न महिम्नि** (ப்ரஹ்மத்திற்கு ஆதாரம் எது? என்ருல் தன்னு

டைய மஹிமைதான் ஆதாரம்) ஆதாவது, அதற்கு ஆதாரம் யாதொன்றுமில்லை என்பதுபோல் இந்த உபாதான திரவ்யத்திற்கு ஆதாரம் ஒன்றுமில்லை, என்றிவைகளால் ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணமென்று சுருதிகள் முறையிடுகின்றன.

மேலும் ஸருஷ்டிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்த ப்ரஹ்மமானது **तदात्मानं स्वयमकुरुत ।** (தன்னையே ஸ்ருஷ்டித்துக்கொண்டது.) ஸ்ருஷ்டிக்கு கர்மாவாகவும் கர்த்தாவாசவும் (both subject and object) தானே இருந்ததென்பதால் நிமித்தகாரணமும் உபாதான காரணமும் ப்ரஹ்மமே என்று ஏற்படுகிறது. அவிபக்த நாமரூபமான ஆத்மா கர்த்தாவென்றும், விபக்த நாமரூபமான ஆத்மா கார்யமென்றும் அர்த்தம்.

சிதசித்வஸ்துக்களை சரீரமாயுடையதும் அவைகளுக்கு ஆத்மாவுமான பரப்ரஹ்மமானது ஸங்கோசம் (குறுகியிருத்தல்) என்கிற காரணாவஸ்தை, விகாஸம் (விரிவு) என்கிற கார்யாவஸ்தை, என்கிற இரண்டு அவஸ்தைகளையுடையது என்று சொல்வதில் யாதொரு விரோதமுமில்லை. ஏனெனில் ஸங்கோசம், விகாஸம் என்பது ப்ரஹ்மத்திற்கு, சரீரமாயிருக்கும் சித் அசித் இவைகளுக்கே யல்லாமல் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்திற்கல்ல. சரீரத்திற்குரிய தோஷங்கள் ஆத்மாவில் ஸம்பந்திக்கமாட்டா. ஆத்மாவிற்குரிய குணங்களும் சரீரத்திற்கு உண்டாகமாட்டா. எப்படியென்றால் தேவன், மனிதன், மிருகம், விருக்ஷம் முதலிய சரீரங்களையுடைய ஜீவாத்மாக்களின் சரீரதோஷங்களாகிற பால்யம் யௌவனம், கிழட்டுத்தனம் முதலியவைகள் ஆத்மாவில் ஸம்பந்திப்பதில்லை. ஆத்மாவுக்குரிய ஜ்ஞானம் முதலிய குணங்களும் சரீரத்தில் ஸம்பந்திப்பதில்லை. ஆகையால் சரீரம் பரிணாமத்தை (மாறுதலை) யடைவது என்பது பரப்ரஹ்மத்திற்கு தோஷமான ஸ்வபாவமல்ல. பின்னையென்னவென்றால் தடையில்லாததும் அளவற்றதுமான ஈசுவர ஸ்வபாவத்தைக் காண்பிக்கின்றது.

காரணமாகிற ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ஜகத்தாகிற கார்யம் விலக்ஷணமாய் (வேருக) இருப்பதால் ப்ரஹ்மம் உபாதான காரணமன்று என்று சொன்ன யுக்தியும் ஸரியல்ல. விலக்ஷணமாயிருக்கும் வஸ்துக்கள் காரண கார்யங்களாயிருக்கப் பார்க்கிருேம். தேன் கூட்டிலிருந்து அதைக்காட்டிலும் விலக்ஷணமான மாக்ஷிகம் என்னும் புழு முதலியவைகளும், கோமயத்திலிருந்து அதைவிட் விலக்ஷணமான தேள் முதலியதும் உண்டாகின்றதல்லவா? அதுபோல் காரணமான ப்ரஹ்மமும் தன்னைக்காட்டிலும் விலக்ஷணமான ஜகத்தாகப் பரிணமிக்கின்ற தென்று சொல்வதில் யாதொரு பாதகமுமில்லை.

மேலும் நிமித்தமும் உபாதானமும் ஒன்ருயிருப்பதை நாம் லோகத்தில் காணுமலிருப்பதால் ப்ரஹ்மம் உபாதான காரணமாக மாட்டாது என்று சொல்வதும் ஸரியல்ல. இதற்கு த்ருஷ்டாந்தம் எங்கு அகப்படும்? ப்ரஹ்மத்தைப் போல் வேறு வஸ்து ஏதாவது உண்டா? அவ்விதமிருந்தா லல்லவோ த்ருஷ்டாந்தத்தைக் காண்பிக்கலாம். எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமாயும், ஸர்வசக்தி யுள்ளதும், ஸர்வஜ்ஞுமான பரப்ரஹ்மத்திற்கு உபயவித காரணமாயிருக்கும் தன்மை பொருந்தும். அசேதனமான மண் முதலியவைகளுக்கு ஜ்ஞானமில்லாததால் அதிஷ்டா தாவாயிருக்கும் தன்மையில்லாததாலும், அவைகளுக்கு அதிஷ்டாதாவான குயவன் முதலியவர்களுக்கு ஈசுவரனுக் கிருக்குமாப்போல் விசித்ரமான பரிணுமசக்தி (மாறும் சக்தி) இல்லாததாலும், ஸத்ய ஸங்கல்பத்வம் இல்லாததாலும் நமக்கு திருஷ்டாந்தம் அகப்படுவதில்லை. ஆனல் நம் மனதிற்கு எட்டாத ஜ்ஞானுபல சக்திகளையுடைய பரப்ரஹ்ம மானது அசிந்த்ய விவிதவிசித்ரரசனையை யுடைய ப்ரஹ்மா முதல் ஸ்தம்ப பர்யந்தமான ஜகத்தாகப் பரிணமிப்பதால் ப்ரஹ்மமே ஜகத்திற்கு உபாதான காரணமென்று சொல்ல யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

'அத்வைதம், தத்வம்' என்பதின் திரண்டபொருள்.

இவ்விதம் ஸர்வத்துக்கும் ஈசுவரனுய், ஸர்வசேஷியாய், ஸ்வரூபத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் அளவிடக் கூடாதவனுய், ஸர்வகர்ம ஸமாராத்யனுய், ஸர்வபல ப்ரதா தாவாய், ஸர்வாதாரனுய், ஸர்வகார்யத்தையும் உண்டு பண்ணுகிறவனுய், ஸர்வசப்த வாச்யனுய், ஸர்வ வ்யாபக சேதனனுய், ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்ட வேஷத்தாலே ஜகதுபாதான காரணமாய், ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்த காரணமாய், காலாதிகளுக்கு அந்தர்யாமி வேஷத்தாலே ஸஹகாரி காரணமாய், ஹேய ப்ரத்யநீக அநந்த கல்யாண குணகண விசிஷ்டனுய், ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீ விசிஷ்டனுய், பரப்ரஹ்ம மென்றும் ஸர்வேச்வர னென்றும், புருஷோத்தம னென்றும், ச்ருதிகளில் முறையிடப்பட்டவனுமான ஸ்ரீமந்நாராயணன் தான் அத்வைதமான தத்வம். இவன் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறுன். அண்டத்தை ஸ்ருஷ்டித்த பின் சதுர்முகன், தக்ஷப்ரஜாபதி, காலம், இவர்களுள் அந்தர்யாமியாயிருந்து கொண்டு மற்ற ஸ்ருஷ்டியைச் செய்கிறுன். விஷ்ணு அவதார ரூபமாயும் லோகபாலர் மனு முதலியவர்கள், ராஜா, மாதா, பிதா, காலம் முதலியவர்களுள் அந்தர்யாமியாயுமிருந்து கொண்டு ஜகத்தை ரக்ஷிக்கிறுன். ருத்ரன், காலம் இவர்களுள் அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஜகத்தை ஸம்ஹாரம் செய்கிறுன்.

பகவத் ரூபத்தின் ஐந்து ப்ரகாரங்கள்.

இந்த ப்ரகாரங்களையுடைய ஈச்வரன் பர, வியூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்கிற ஐந்து ப்ரகாரமாயிருக்கிறுன். பரரூபமாவது—த்ரிபாத்விபூதி யென்கிற ஸ்ரீ வைகுண்ட லோகத்தில், திருமாமணி மண்டபத்தில் ஸ்ரீபூமி நீளா ஸமேதனுய், திவ்யாயுதபூஷண ஸஹிதனுய் **सदा पश्यन्ति सूरयः** என்றபடியே அநந்த கருட விச்வக்ஸேநாதிகளான நித்யஸூரிகளால் அநவரதம் ஸாமாதிகானங்களால் ஸ்துதிக்கப்பட்டும் மற்றுமுள்ள முக்தர்களா

லனுபவிக்கப்பட்டுமுள்ள பரப்ரஹ்ம வாஸுதேவாதி சப்தங்களால் பேசப்படும் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹம். **வ்யூஹமாவது**—ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளுக்காகவும் உபாஸனத்திற்காகவும் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன், என்கிற நான்கு விதமாயிருப்பது. **விபவமாவது**—அந்தந்த ஜாதிக்குரிய ரூபங்களோடு மத்ஸ்ய கூர்மாதிகளாக அவதரிக்கை. இந்த அவதாரங்களுக்கு பகவானுடைய இச்சைதான் காரணம்; துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனதிகள் தான் பிரயோஜனம். **அந்தர்யாமியாவது**—ஸ்வர்க்க நரகாதி அநுபவதசையிலும்கூட ஜீவாத்மாவுக்கு **सर्वस्य शरणं सुहृत्** என்றபடியே ஸுஹ்ருத்தாய் யோகிகளாய் தர்சிக்கப்படும்படியாய் ஹ்ருதய ப்ரதேசத்திலுள்ள ரூபம். ஜீவனேடுகூடக் கலந்திருந்தாலும் அவனுடைய தோஷங்களால் ஸம்பந்தப்படாதவன். **அர்ச்சா ரூபமாவது**—தேச காலத்தாலுண்டாகும் தூரமில்லாமல், தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு இஷ்டமான த்ரவ்யத்தைச் சரீரமாக ஸ்வீகரித்து அதிலும் அதே அளவுள்ள அப்ராக்ருத சரீரத்தையுடையவனாய், அர்ச்சகர்களுக்குப் பாராதீனமாய் ஸ்நான போஜநாஸந சயநாதிகளையடைந்து யாவற்றையும் பொறுத்துக் கொண்டு பரிபூர்ணனாய் க்ருஹம், க்ராமம், சிறந்த மலைகள் முதலியவைகளில் இருக்கும் மூர்த்தி விசேஷம்.

இவ்விதம் **ப்ருஹி** வ்ருத்தெள என்கிற தாதுவிலிருந்து ப்ருஹதி ப்ரஹ்மயதீதி ப்ரஹ்ம, பரஹ்மணதத்வாத்ப்ரஹ்ம என்று ஸ்வரூபம், குணம் முதலியவைகளில் தானும் பெரியதாயும், **स च आनन्त्याय कल्पते** என்கிறபடியே ஸகல ஸங்கோசத்தையும் நிவ்ருத்திசெய்து நிரவதிகமான ஜ்ஞாநாநந்த விகாஸ ரூபமான மோக்ஷம் என்கிற ஆநந்த்யத்தை (infinitude in knowledge and bliss) தன்னை வசப்படுத்திய ஜீவர்களுக்குக் கொடுக்கக் கூடிய வல்லமையும் ஸ்வபாவமு முள்ளது ப்ரஹ்மம். துக்ககரமாயும் அநாதியுமான இந்த ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷம் அடைவதற்கு உபாயம் என்னவென்றால் அவனை வசப்படுத்திக் கொள்வதுதான். அவனை ஜ்ஞானத்தால் தான் வசப்

படுத்த வேண்டும். இந்த ஜ்ஞானம் பக்தி ரூபமாகவாவது ப்ரபத்தி ரூபமாகவாவது இருக்கும். பக்தி ப்ரபத்திகளை வ்யாஜமாகக்கொண்டு ஈசுவரன் மோக்ஷத்தைக் கொடுக்கிறான். பக்தியாவது—கர்மயோக ஜ்ஞான யோகங்களினால் ஸம்ஸ்காரத்தை யடைந்த அந்த கரணத்தால் ஸாத்யமாயும், யமம் நியமம் முதலிய அஷ்டாங்க யோகத்தோடு கூடியதாயும், முதல் மூன்று வர்ணத்தாரை அதிகாரிகளாகக் கொண்டதும், அந்தந்த வர்ணம், ஆச்ரமம் இவைகளுக்குரிய தர்மங்களை அங்கமாயுடையதும், வெகு ப்ரயாஸத்தால் ஸாம்யமானதும், தைலதாரைபோல் இடைவிடாத ஸ்ம்ருதியின் தொடர்ச்சியாயும் ப்ரதி தினம் அப்யாஸத்தால் சிறப்பை யடைகிறதும், சரீர மிருக்குமளவும் அனுஷ்டிக்க வேண்டியதுமா யிருக்கும். த்யானம் என்று சொல்லப்பட்ட இந்த பக்தியானது வித்யா பேதத்தினால் அனேக விதமாயிருக்கும். அந்த வித்யைகள் ச்ருதியில் ஜ்ஞான காண்டத்தில் ப்ரஹ்ம வித்யைகள் என்று சொல்லப்பட்ட அந்தரக்ஷிவித்யா 'அந்தராதித்ய வித்யா' பூமவித்யா, ஸத்வித்யா, உபகோஸலவித்யா, சாண்டில்யவித்யா, புருஷவித்யா ந்யாஸவித்யா முதலான 32 வித்யைகள். ந்யாஸ வித்யையைத்தான் ப்ரபத்தியென்று சொல்லுவது. ப்ரபத்தி யென்பது—மஹாவிச்வாஸாதிகளால் ஸம்ஸ்காரத்தை யடைந்த அந்த:கரண ஸாத்யமாயும் ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளை மாத்ரம் பரிகரங்களா யுடையதாயும், இந்தச் சரீரத்தின் முடிவில் முக்தியைக் கொடுக்கக் கூடியதாயும், ப்ரார்த்தனையோடு கூடிய ஸமர்ப்பண ரூபமாயுமிருக்கும். இவைகளின் ஸ்வரூபாதிகளெல்லாம் ஸத்ஸம்ப்ரதாய பூர்வகமாக அறியப்படவேண்டியதாகையால் இங்கு விஸ்தரிக்கப்படவில்லை.

நம் ஸித்தாந்தத்தில் பக்தி ப்ரபத்திகளே மோக்ஷோபாயங்களென்று சொல்லப்பட்டது. வேதபாஹ்யர்களுக்குள் சிலர்கள் தேஹத்தைக்காட்டிலும் வேறான ஆத்மா என்பதை அங்கீகரிக்காமலிருப்பதால் அவர்களுக்கும், ஜ்ஞானம் க்ஷணிகம் என்று சொல்லுகிறவர்கள் பக்ஷத்தில் அதுவே ஆத்ம

நத்ல மாதலால் அவர்களுக்கும், பாஷாணத்திற்கு ஸமமா யிருப்பது தான் மோக்ஷம் என்று சொல்லும் வைசேஷிகர்கள் முதலியவர்களுக்கும், ஸாங்க்யாதிகள் ஈசுவரனை அங்கீகரிக் காததால் மோக்ஷம் ப்ரக்ருதிக்கோ அல்லது புருஷனுக்கோ என்பது ஸந்தேஹ மாதலால் அவர்களுக்கும், மாயாவாதிகள் மதத்தில் வ்யவஹாரிக வாக்யமானது பாரமார்த்திகமான அபேத ஜ்ஞானத்தை யுண்டுபண்ணுதாகையால் அவர்களுக் கும் மோக்ஷத்தில் ப்ரவ்ருத்தியே உண்டாகாது. மோக்ஷத் தில் பரவ்ருத்தியை யுண்டாக்குகிற மதம் நம்முடைய மதம் ஒன்றே.

இவ்விதமிருக்கும் மோக்ஷோபாயத்தை ஸ்வீகரித்து அனு ஷ்டித்தவன் பிறகு நித்ய நைமித்திக பகவதாஜ்ஞானுஜ்ஞா கர்மங்களை பலத்திலாசையில்லாமல் ஸ்வயம் ப்ரயோஜனமாய்ச் செய்துகொண்டு, பகவானுடைய அபசாரமும், பாகவதர்க ளுடைய அபசாரமும் நேரிடாதபடி நடந்துகொண்டு சரீர வியோக காலத்தில் தான் புண்யங்களைத் தன் ஸுஹ்ருத்துக் களிடத்திலும், பாபங்களைத்தன் சத்துருக்களிடத்திலும் வைத்துவிட்டுத் தன் ஹ்ருதயத்திலுள்ள பரமாத்மாவினிடத் தில் இளைப்பாறி, முக்திக்கு த்வாரமாகிற ஸுஷும்னா நாடி வழியாய் ப்ரஹ்மாந்திரத்தினின்றும் வெளிக்கிளம்பி, ஹார்த்த னை புருஷனோடுகூட அர்ச்சிராதி மார்க்கமாய்ச் சென்று, பிரக்ருதிக்கும் வைகுண்டத்திற்கும் எல்லையாகிற விரஜா நதி யைத்தாண்டி ஸூக்ஷ்மசரீரத்தைவிட்டு, அப்ராக்ருத திவ்ய சரீரத்தையடைந்து சதுர்புஜனாய், ப்ரஹ்மாலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்டு, வைகுண்ட நகரத்தில் ப்ரவேசித்து அங்கே திருமாமணி மண்டபத்தில் நாகபர்யங்கத்தில் வீற்றி ருக்கும் பகவானை தர்சித்து, அவரை அநுபவித்து, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் உசிதங்களான கைங்கர் யங்களைச் செய்வதில் ப்ரீதியுள்ளவனாய், குணாஷ்டகங்களைய டைந்து, ஜகத் வ்யாபாராதிகளைத் தவிர ஜ்ஞானாநந்த போகாதி களில் பகவானுக்கும் தனக்கும் யாதொரு தாரதம்யமு மில்லா மல் ஆநந்தாநுபவம் செய்துகொண்டு மறுபடியும் ஸம்ஸாரத்

திற்குத் திரும்பி வராமல், பகவானைக்காட்டிலும் என்றைக்கும் வேருகவே இருந்துகொண்டு நித்யர்களுடன் நித்ய ஸுகத்தை அநுபவித்துக் கொண்டிருப்பான்.

இதைத்தான் மோக்ஷம் என்றும், பரமபுருஷார்த்தமென்றும், ஸாயுஜ்யம் என்றும் சொல்வது. ஸாயுஜ்யமாவது, ஸயுக்கினுடைய தன்மை. ஸயுக்காவது ஒரு போக்கியத்திலே போக்தாவாய்க்கொண்டு கூட அன்வயிக்குமவன். இங்கு ஸப்ரகார ப்ரஹ்மமாகிற போக்யத்திலே ப்ரஹ்மமும் முக்தனும் கூட போக்தாக்களாய் அன்வயிக்கையாலே முக்தனை ஸயுக் என்கிறது **सामरस्यं हि सायुज्यं वदन्ति ब्रह्मवादिनः** (ஸாயுஜ்ய மென்ருல் ஸமானரஸத்தை அநுபவித்தல் என்று ப்ரஹ்மவாதிகள் சொல்லுகிருர்கள்) என்று சாகடாயனர் சொல்லுகிருர். ஸாயுஜ்ய சப்தத்திற்கு ஸ்ரீசங்கரர் முதலானவர்கள் சொல்லுகிருப்போல் ஐக்கியம் அர்த்தம் சொல்லக்கூடாது. அப்படி ஐக்கியம் அர்த்தம் சொன்ஞல் வ்யாகரண சாஸ்திரத்திற்கும், சப்த சக்திக்கும் பேத ச்ருதிகளுக்கும் விரோதம் வரும். முக்தன் பரமஸாம்யத்தையடைகிருன் என்று ச்ருதி சொல்லுகிறதே யல்லாமல் ப்ரஹ்மத்தோடு ஐக்கியமாகிருன், 'ஒன்ருய்ப்போய் விடுகிருன்' என்று சொல்லவில்லை. பகவானும் கீதையில் **मम साधर्म्यमागताः** (என்னேடு ஒப்பையடைந்தார்கள்-எனக்கு ஸமான தர்மத்தை யடைந்தார்கள்) என்று சொன்ஞரே தவிர என்னுடன் ஐக்யம் அடைந்தார்கள் என்று சொல்லவில்லை. ஆகையால் ஸாயுஜ்ய சப்தத்திற்கு ஐக்யம் அர்த்தமல்ல.

முடிவுரை.

ஸமஸ்த வேதாந்தங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்ட தத்வஹித புருஷார்த்தங்கள் இவ்விதம் நிரூபிக்கப்பட்டன. சிதசித் விசிஷ்டனை ஸ்ரீமந் நாராயணன் தான் அத்வைதமான தத்வம்; பக்திப்ரபத்திகள் ஹிதங்கள்; அதாவது அவனை யடைய உபாயங்கள், அப்ராக்ருத லோகத்தில் அவனுக்கு

நித்யகைங்கர்யம் செய்து கொண்டு அவனை அனுபவிப்பது தான் புருஷார்த்தம். இங்கு சொன்ன அர்த்தங்களெல்லாம் இப்படி ஒரு ச்லோகத்தால் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன :—

विष्णुः सर्वोत्तमः श्रीपतिरखिलतनुः नित्यमुक्तैकलभ्यः
भक्तिन्यासैकलभ्यो निखिलजगदुपादानहेतुर्निमित्तम् ।
भेदस्सत्योपवर्गः निरवधिकसुखं किंकराः शंकराद्याः
इत्थं त्रैय्यन्त सिद्धं यतिपति कथितं ताड्यतां जैत्रभेरी ॥ என்று

अंगी कुर्वन्त्वकलुषधियो नित्यमध्यात्म विद्यां
आद्यो धर्मः स्पृशतु वसुधामाशिषः पारवर्ती ।
देवः श्रीमान्निरवधिदयासिन्धुरस्मिन् प्रबन्धे
वक्ता श्रोता वचनविषयः प्रीयतां वासुदेवः ॥

ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர் இயற்றிய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரத்தில் இரண்டாவது அதிகாரம் ஸ்ரீ விசிஷ்டாத்வைததத்வம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

குருபக்தி.

உலகத்தில் ஒவ்வொருவரும் தம்தமக்கு ஸுகமே வேண்டும், துக்கம் வேண்டாம் என்று நினைத்து ஸுகப்ராப்திக்கும் துக்க நிவ்ருத்திக்கும் ஸாதநமென்று தாங்கள் கருதிய கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கிறார்கள். ஆனால் அஜ்ஞானத்தினால் மிகவும் அல்பமானதும் அழிவுள்ளதுமான ஸுகத்தையே மேலான ஸுகமென்று ப்ரமித்து அதையடையும் உபாயத்தையே தேடுகிறார்கள். வாஸ்தவத்தில் மேலான ஸுகமே யாவராலும் விரும்பத்தக்கது. ஸுகம் என்றால் என்ன? அதற்கு என்ன லக்ஷணம்? (Definition) என்றால் இதற்கு ஶாஸ்த்ரகாரர்கள் லக்ஷணம் கூறியிருக்கிறார்கள். "इतरेच्छाऽनधीनेच्छाविषयत्वं" ஸுகத்துக்கு லக்ஷணம் என்று சொல்லுகிறார்கள். அதாவது மற்றொரு இச்சைக்கு அதீநமல்லாத இச்சைக்கு விஷயமாயிருப்பது ஸுகம் என்று. இதை விவரிப்போம். ஒருவன் நல்ல பன்னிரண்டு மணி வெய்யிலில் ஓடுகிறான்; அவனுக்கு வேகமாய் ஓடுவதில் இச்சை யிருக்கிறது. ஏனென்றால் அவனுக்கு 12 மணிக்குள் ஆபீஸுக்குப் போய்ச் சேரவேண்டுமென்கிற இச்சை யிருப்பதால், அந்த இச்சைக்கு அதீநமாக, வெய்யிலில் ஓடுவது ஸ்வத: ஶ்ரமமா யிருந்தாலும் ஓடுவதில் இச்சை உண்டாகிறது. பன்னிரண்டு மணிக்குள் ஆபீஸுக்குப் போய்ச் சேரவேண்டுமென்கிற இச்சையானது, அதிகாரியைத் த்ருப்தி செய்ய வேண்டுமென்கிற இச்சைக்கு அதீநமாயிருக்கிறது. அதிகாரியைத் த்ருப்திசெய்வது ச்ரமமாயிருந்தாலும், அவரை த்ருப்தி செய்யவேண்டுமென்கிற இச்சையானது, தன் உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்கிற இச்சைக்கு அதீநமாயிருக்கிறது. உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கிற இச்சையானது ஒவ்வொரு

மாஸமும் குறைவர சம்பளத்தையும் க்ரமேண ப்ரமோக்ஷ ணேயும் அடையவேண்டுமென்கிற இச்சைக்கு அதீநமாக உண்டாகிறது. சம்பளத்தைப் பெறவேண்டுமென்கிற இச்சையானது அரிசி முதலிய உணவுப் பொருள்களே யடையவேண்டு மென்கிற இச்சையைச் சார்ந்திருக்கிறது. உணவுப் பொருள்களே யடையவேண்டு மென்கிற இச்சை யானது, சமயல்செய்து சாப்பிடவேண்டு மென்கிற இச்சை க்கு அதீநமாக உண்டாகிறது. சாப்பிட வேண்டுமென்கிற இச்சையானது பசியாகிற அநிஷ்டத்தைப் போக்கி சுகப்பட வேண்டு மென்கிற இச்சைக்கு அதீநமாக உண்டாகிறது. சுகப்பட வேண்டுமென்கிற இசசையோவென்ருல் அதற்கு மேற்பட்ட ஒரு இச்சைக்கு அதீனமன்று. அதுவே பரம உத் தேச்யம். (Happiness is the final goal, not a means to any end). த்ரவ்யம் முதலியவை போலன்றிக்கே மற்ருெரு ப்ரயோஜனத் துக்குஸாதனமல்லாமல் ஸ்வயம்ப்ரயோஜனமாய் (end in itself) இருப்பதால் ஸுகம் என்பது பரம உத்தேச்யம். இந்த ஸுகமானது எல்லோராலும் விரும்பப்படுவதால் இச்சைக்கு விஷயமாயும் மற்ருெரு இச்சைக்கு அதீநமல்லாததால் **इतरेच्छाऽनधीनेच्छाविषय** மாயுமிருக்கிறது. இந்த ஸுகம் அநுகூலமாயே இருக்கும். அநுகூலமாகவே அறியப்படும். அநுகூலமாகவே அறியப்படும். **तदेव हि सुखं यदनुभूयमानं पुरुषानुकूलं भवति ।** என்று பூமாதிகரணத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அனுக்ரஹித்திருக்கிருர். இந்த ஸுகம் புருஷனுல் ப்ரார்த்திக் கப்படுவதால் புருஷார்த்தமென்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட புருஷார்த்தம் ஐஸ்வர்யமென்றும், கைவல்ய மென்றும், பகவல்லாபமென்றும் மூன்றுவகைப்பட்டிருக்கும். அவரவர்களின் ஸுக்ருதவிசேஷமடியாக ருசிபேதத்தால் அந்தந்த தாழ்ந்த புருஷார்த்தத்தில் இச்சையுடையவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனுல் "**स महात्मा सुदुर्लभः ज्ञानी त्वात्मैव मे मतम्**" "அந்தந்த மஹாத்மா கிடைப்பது மிகவும் அரிது. அந்த ஞானீ என்னுடைய உயிர் நிலே" என்று பகவானுலே கொண்டாடப்பட்டவனும், பகவதநுபவமாகிற ஸர்வோத்க் ருஷ்டமான மேலான ஸுகத்தில் விருப்பமுள்ளவனுமான

சேதனன் மிகவும் துர்லபம். இந்த மேலான ஸுகத்தையே விரும்பி அதற்குத் தகக ஸாதனத்தையனுஷ்டித்து அந்த ஸுகத்தை எல்லோரும் அடைய வேண்டுமென்பது பகவானுடையவும், ஸர்வவேதங்களுடையவும், புராணங்களுடையவும், ஆழ்வார்களுடையவம், ஆசார்யர்களுடையவும் கருத்தென்று விளங்குகிறது.

(1) பகவான் கீதையில் **देवान्देवयजो यान्ति अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसां** (கீதை 7–13) **यान्ति मद्याजिनोपि मां मद्भक्ता यान्ति मामपि** (9-25) இதர தேவர்களையுபாஸிக்கிறவர்களும், அதனுல் புத்திக் குறைவுள்ளவர்களுமான ஜனங்களுக்குக் கிடைக்கும் பலம் மிகவும் அல்பமும் அழிவுள்ளதாயுமிருக்கும். அந்த அல்பமான பலத்தையும் நானே தான் கொடுக்கிறேன் ஆனுல் என்னையே விரும்பி என்னை உபாஸிக்கிறவர்கள் அழிவற்றதும் அளவற்றதுமான பலமாகிற என்னையடைகிருர்கள். "**मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने**" (18 - 65) "உண்மையில் என்னையடைவாய் இது ஸத்யம், என்று பிரதிக்ஞை செய்கிறேன்" என்றும் இது முதலான அநேக இடங்களில் பகவத்ப்ராப்தியானது மேலான ஸுகமென்றும் அதை ஒரு விவேகியானவன் விரும்பவேண்டுமென்றும் முறையிடுகிருர்.

மேலும் "**मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम्। नाप्नुवन्ति महात्मानस्संसिद्धिं परमां गताः॥ आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोर्जुन। मामुपेत्य कौन्तेय पुनर्जन्म न विद्यते॥**" 8-15, 16 என்னையடைந்த பிறகு மறுபடியும் எல்லா துக்கங்களுக்கும் இருப்பிடமான அழிவுள்ள பிறப்பையடைகிறதில்லை. ஏனெனில் இந்த மஹாமனதையுடையவர்கள் என்னை உள்ளபடியறிந்து, என்பேரில் மிகவும் அதிகமான அன்பினுல் என்னைவிட்டு க்ஷணகாலமும் தரிக்கமுடியாமல் என்னையே மனதில் த்யானம் செய்துகொண்டு என்னை உபாஸித்து மேலான ஸித்தியாகிற என்னையடைகிருர்கள். ப்ரஹ்மலோகபர்யந்தமான எல்லா உலகங்களும் அழிவுள்ளவை. ஆனதால் அந்த லோகங்களிலுள்ள போக ஐச்வர்யங்களும் அவைகளோடு

அழிகின்றன. என்னையடைந்தவர்களுக்கோ வென்றால், அழிவுக்குக்காரணமில்லாததால் மறுபிறப்பில்லை என்பதால் இந்த மேலானஸுகத்துக்கு அழிவு இல்லையென்றும் கூறுகிறார்.

(2) தைத்தரீய யஜுர் ப்ராஹ்மணத்தில் அச்சித்ரத்தில் '**यस्यास्मि नतमंतरेमि योऽहमस्मि ससन् यजे**' 'யாதொரு பகவானுக்கு அடியனாக இருக்கிறேனோ அந்தப் பகவானை விட்டு நீங்கமாட்டேன். நான் இயற்கையான அடிமையினால் யாவனாக இருக்கிறேனோ அவனாகவே இருந்துகொண்டு அந்த பகவானை ஞானமாகிற யாகங்களால் ஆராதிக்கிறேன்' என்றும், சாந்தோக்யத்தில் '**ब्रह्मलोकमभि संपद्यते न च पुनरावर्तते न च पुनरावर्तते**' மேலான ஸுகமாகிற ப்ரஹ்மத்தையடைந்து பிறகு திரும்புவதில்லை' என்றும் வேதங்களில் சொல்லு வதால் பகவத்ப்ராப்தியே பரம புருஷார்த்தமென்று நிர்ண யிக்கப்பட்டிருக்கிறது.

(3) புராணரத்னமாகிய ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் கடைசி யில் ஸ்ரீபராசரபகவானும் **स दिशतुभगवानशेषपुंसांहरिरपजन्मजरादिकां समृद्धिं** ஸர்வேஸ்வரனான பகவான் எல்லா ஆத்மாக்களுக் கும் ஜன்ம மரணமாகிற அநிஷ்டத்தைப் போக்கி மேலான ஸுகமாகிற மோக்ஷஸுகத்தைக் கொடுக்கட்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

(4) ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வரும் பகவானு டைய ஜகத் ஸ்ருஷ்டியின் கருத்தை விளக்கிக்காட்டுகிறார். "**நின்று நின்று பல நாளுய்க்கும் இவ்வுடல் நீங்கிப்போய் சென்று சென்றாகிலுங்கண்டு சன்மம் கழிப்பானெண்ணி ஒன்றியொன்றி யுலகம் படைத்தான்**" (3—9—10) என்று அநேக காலம் இருந்து சேதனனைத் தன்வசத்திலேயாக்கித் துன்பங்களுக்கு ஆளாக்குமதான இந்த சரீரத்தை விட் டொழிந்துபோய், இப்படியே பலபல ஜன்மங்கள் மரணங்கள் நடந்தபின்பாகிலும் ஏதேனும் ஒரு காலத்தில் தன்னைக்கண்டு பிறவியைக் கழிக்க கூடுமென்று எண்ணி ஒரு காலத்திலும்

சோம்பிக்கைவிடமால், மேல்மேலும் ஊக்கம் கொண்டு, எம்பெருமான் உலகங்களைப் படைத்துவருகின்றான். உலகில் க்ருஷி செய்பவன், தான் செய்த க்ருஷி பழுதுபட்டாலும் இன்னமொரு தடவை செய்துவைப்போம் என்று விடா முயற்சியுடன் மீண்டும் மீண்டும் ஆசையாலே க்ருஷியையே செய்து பார்ப்பான். அதுபோல எம்பெருமானும் **“பத்தி யுழவன்”** என்று திருமழிசையாழ்வார் அருளிச்செய்தபடி **பத்தியுழவன்** ஆனதால் பக்தி க்ருஷி செய்வதற்காக, எத்தனை தடவைகளில் முட்டுப்பட்டாலும் இன்னொரு தடவையிலாவது பலிக்கமாட்டாதோவென்று கொண்டு திரும்பவும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்து வருகிறான் என்று அருளிச்செய்தார். இதையடியொற்றியே ஸ்ரீ தேசிகனும் தயாசதகத்தில் **“ शरणागतसस्यमालिनीयं वृषशैलेशकृषीवलं धिनोति”** பக்தியால் தன்னைச் சரணமடைந்த ஆத்மஸமூகமாகிற பயிர்க்கூட்டம் நிறம்பிய பூமியானது **“கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல் மலியப் புகுந்ததாய்”** திருவேங்கடமுடையானாகிற வேளாண் மைக்காரனை (cultivator) ஸந்தோஷப்படுத்துகிறதென்றருளிச் செய்தார். மேலும் **“பொருளென்று இவ்வுலகம் படைத்தவன்”** (2—10—11) என்றார். ஆழ்வார் எம்பெருமான் ஜகத்ஸ்ருஷ்டி யைப் பண்ணுவதாவது இறகொடிந்த பறவைபோல சரீர இந்திரியங்களை இழந்திருக்கும் ஆத்மாக்களுக்கு அவற்றைக் கொடுக்கை. அப்படி எத்தனை தடவை ஸ்ருஷ்டித்தாலும் என்றேனும் ஒருநாள் பயன்படுமென்று அதாவது இவ்வுலகம் சீர் அடைந்து அன்பு தன்பால்வைத்து பக்திசெய்து ஸுக மடையக்கூடுமென்று கருதி மேன்மேலும் ஸ்ருஷ்டிகளைச் செய்கிறவன், என்றும், **“வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை மூழ்த்தநீர் உலகெல்லாம் படையென்று முதல் படைத்தாய்”** (3—1—7) தன்னைத் துதிப்பவர்கள் பலர் உண்டாவதற்காக, காரணஜலமான ஏகார்ணவத்துக்குள்ளே உலகங்களை ஸ்ருஷ்டிப்பாயாக என்று சொல்லி உன்னுடைய ஸங்கல்பத்திலே சதுர்முகப்ரஹ்மாவை முதலில் ஸ்ருஷ்டித் தவனே என்றும், தாம்பாலாப்புண்டாலும் அத்தாம்புதான் இளக பாம்பாலாப்புண்டு பாடுற்றாலும்—சோம்பாது இப்பல்லுரு

வையெல்லாம் படர்வித்தவித்தா (பெரியதிருவந்-18) அனுகூலை யான யசோதையினுல் தாம்புக்கயிறுகொண்டு கட்டி அடிக்கப் பெற்றுலும், அத்தாம்பினுல் கட்டியதாலுண்டான காய்ப்பு அல்ப்பம் என்னும்படி பிரதிகூலனுன காளியன் என்கிற பாம்பினுல் கட்டப்பட்டும், இப்படி அநுகூலரோடும் பிரதிகூலரோடும் வாசியற கஷ்டங்களை யடைந்தாலும் சிறிதும் திருவுள்ளம் வருந்தாமல் ஜகத்ஸ்ருஷ்டியில் சோம்பல் படாமல், என்றைக்காவது ஒருநாள் இவ்வுலகம் சீர்பட்டு பக்திசெய்து தன்னையடைந்து ஸுகத்தைப்பெறக்கூடுமென்று திருவுளம்பற்றி, ப்ரஜைகளைப் படைக்கிருன் எம்பெருமான் என்றும் அருளிச் செய்தார்.

(5) ஸ்ரீ பராசபட்டரும் ஸ்ரீ ரங்கவிமானத்துக்கும் வேதத் துக்கும் ஸாம்யம் அருளிச்செய்யும் ஶ்லோகத்தில்—

अनाद्याम्नातत्वात् पुरुषरचनादोषरहितं
जने तांस्तान्कामान् विदधदपि सायुज्यहृदयम् ।
असन्देहाध्यासं भगवदुपलंभस्थलममी
प्रतीमः श्रीरङ्गं श्रुतिशतसमानर्धिशरणम् ॥

ஸ்வயம் வியக்தமாக ஓதப்பட்டிருப்பதால், மனிதர்கள் நிர்மாணம் செய்தால் ஸம்பவிக்கக்கூடிய தோஷமொன்று மில்லாததும், ஜனங்களிடத்தில் பலவகைப்பட்ட ஆசைகளை உண்டுபண்ணு நின்றதாயிருந்தாலும்—பலவகைப்பட்ட புரு ஷார்த்தங்களைக் கொடுப்பதாயிருந்தாலும், மோக்ஷத்திலேயே கருத்தையுடையதும், ஸம்ஶயமும் விபர்யயமுமற்றதான எம்பெருமான் விளங்குமிடமாயிருப்பதும், (உளன் சுடர்மிகு சுருதியுள்) என்றபடி ஆனதுபற்றியே அநேக வேதங்களோ டொத்த அதிசயத்தை யுடையதுமான ரங்கவிமானத்தை இவ்வடியோங்கள் புகலிடமாக எண்ணுகிருேம் (விஶ்வஸிக் கிருேம்) என்று சொன்னதால் ஸர்வ வேதங்களுடைய உள் கருத்தாவது எல்லோரும் மோக்ஷஸுகத்தை விரும்பியடைய வேண்டியதென்று ஆசார்யர்களும் கூறுகின்றனர்.

கோடிக்கணக்கான ஜீவாத்மாக்கள் இந்த ஸம்ஸாரத்தில் படும் துக்கத்தைக் கண்டு விசாலமான மனதோடு எல்லோருக்கும் துக்கம் நீங்கவேண்டுமென்று முறையிட்டுக் கதறின மஹாபுருஷர்களில் முக்கியமானவர்கள் நால்வர். (1) ரந்திதேவ மஹாராஜர் (2) புத்ததேவர் (3) நம்மாழ்வார் (4) உடையவர் ஆகிய இந்நால்வரும்.

न कामयेहं गतिमीश्वराणां अष्टर्धियुक्तपुनामर्भवं वा
आर्तिं प्रपत्स्येऽखिलदेहभाजां अन्त:स्थितो येनभवन्त्यदु:खा: ॥
(ஸ்ரீ பாகவதம் 9—21—12)

அணிமா முதலான ஐச்வர்யத்தையுடைய சதுர்முக ப்ரஹ்மாதிகளினுடைய ப்ராப்தியை நான் விரும்பவில்லை. திரும்புதலில்லாத மோக்ஷஸுகத்தையும் நான் விரும்பவில்லை. ஆனால் எல்லா ஜீவாத்மாக்களுடைய துக்கங்கள் யாவற்றையும் சேர்த்து நான் அடைய விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் துக்கங்கள் அனைத்தையும் நான் அனுபவிப்பதால் எல்லா ஜீவர்களும் தம்தம் துக்கங்களிலிருந்து விடுபடுவார்களல்லவா? என்று மற்றவர்களின் துக்கத்தைப் பார்த்து ஸஹிக்கமுடியாதவராய் ரந்திதேவர் கதறினார்.

(2) அவ்விதமே புத்ததேவரும் தந்த்ரவார்த்திகத்தில் சொல்லியபடி **कलिकलुष कृतानि यानि लोके मयि निपतन्तु विमुच्यतां हि लोक:** கலியின் கொடிய பாவங்கள் யாவும் என்பேரில் மட்டுமே விழட்டும். உலகம் யாவும் அக்கொடுமையில் நின்றும் விடுபடட்டும் என்றார் பரானர்த்தம் பொறுமல்.

(3) ஞானிகளுக்குள் தலைவரான நம்மாழ்வாரும் திருவிருத்தம் முதல் பாசுரத்தில்—"பொய்மை நிலைபெற்ற அறிவும், தீய நடத்தையும், அசுத்தங்களோடு கூடிய சரீரமும், ஆகிய இவற்றோடுகூடி இவ்வண்ணமான இயல்பை அதாவது பிறவித் துன்பத்தை இனிமேல் நாங்கள் அடையாதபடி உனது அடியவனாகிய நான் சொல்லும் உண்மையான விஞ்ஞாபனத்தை நீ கேட்டருள வேணும். இப்போது தேவரீர்

முன்னிலையில் நின்று விண்ணப்பம் செய்பவன் அடியேன் ஒருவனேயாகிலும், என் ஒருவனுடைய அநர்த்தத்தைப் பரிஹரித்துக் கொள்வதற்காக மாத்திரம் அடியேன் விண்ணப்பம் பண்ணுகிறேனல்லேன். அடியேனுடன்கூட இவ்விருள் தருமாஞாலத்தில் துவள்கின்ற மற்றும் பலபல ஸம்ஸாரிகளின் அநர்த்தமும் நீங்கவேண்டுமென்று அனைவர்க்கும் ப்ரதிநிதியாய் அடியேன் விண்ணப்பம் செய்கிறேன் என்று பரார்த்தம் நெஞ்சில் படுக்கையால் நாட்டாருக்காகத் தாம் மன்றாடுகிறார்.

(4) உடையவருக்குத் திருக்கோட்டியூர் நம்பி திருமந்த்ரார்த்தத்தை உபதேசிப்பதற்கு முன் 18 தடவைகளில் வரச் சொல்லி அலக்கழித்துப் பரீக்ஷைசெய்து, பிறகு உடையவருடைய ஆர்த்தியைக்கண்டு உபதேசித்தபோது, இவ்வர்த்தத்தை மற்றொருவர்க்குச்சொல்லாதே கொள்ளும் என்று நியமித்துத் தம்முடைய கிருபையாலே உபதேசித்தார். உடையவரும் க்ருதார்த்தராய், மறுநாள் அவ்வூர் எம்பெருமானை தெற்காழ்வார் திருமுன்பே எடுத்துக்கைநீட்டின அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அந்த பரம ரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தார். இதைக் கேட்டுத் திருக்கோட்டியூர் நம்பி, உடையவரையழைத்துக் கேட்டதில், உடையவர் "தேவர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு அடியேன் சொன்னது வாஸ்தவம்தான்"—என்று விண்ணப்பம் செய்ய, நம்பியும், நம் ஆக்ஞையை நீர் மீறிச்சொன்னதற்கு பலம் ஏதென்று? கேட்டருள, உடையவரும், "ஆசார்யநியமனத்தை மறுத்துச்சொன்ன அடியேனுக்கு நரகமே பலம்" என்று சொல்ல, "அதையறிந்திருந்தும் ஏன் மீறிச்சொன்னீர்"—என்று நம்பி கேட்க, உடையவரும் 'அடியேன் ஒருவன் அன்றோ நரகம் புகுவது; தேவரீர் திருவடிகளை முன்னிட்டுச் சொல்லுகையாலே இவ்வாத்மகோடிகள் எல்லாரும், தேவரீர் திருவடிஸம்பந்தத்தாலே உஜ்ஜீவித்து மோக்ஷமடைவார்கள் என்று நினைத்துச் சொன்னேன்"—என்று விண்ணப்பம் செய்ய, நம்பியும், "இந்த பரஸம்ருத்தி (பரஸம்ருத்தி)

நமக்குக் கூடிற்றில்லையே" என்று உடையவருடைய பரஸம்ருத்திக்கும் விசாலஹ்ருதயத்திற்கும் மெச்சி மிகவும் உகந்து 'எம்பெருமானாரே, இந்த நம்முடைய தர்சனம் பரம வைதீக ஸித்தாந்தமென்றிருந்தது. இன்று முதல் எம்பெருமானார் தர்சனம் என்று சொல்லுங்கள்' என்று எல்லாருக்கும் அருளிச்செய்தார். ஆகையால் விவேகியானவன் துக்க நிவ்ருத்திக்கும் ஸுகப்ராப்திக்கும் உபாயத்தைப் பற்ற வேண்டும். பகவானுடைய ஜாயமானகாலகடாக்ஷத்தாலே, சேதனன் பரமஸத்வநிஷ்டனாய் மோக்ஷஸுகத்தில் ஆசை பிறந்தபோது, அந்த மோக்ஷஸுகமானது அனுஷ்டான பர்யந்தமான அர்த்தபஞ்சகஜ்ஞானத்தாலே கிடைக்குமாதலாலும், அந்த ஞானமில்லாதபோது மீண்டும் மீண்டும் ஜன்ம மரணமாகிற ஸம்ஸார துக்கமே மேலிட்டு உஜ்ஜீவிக்க வழியில்லையாதலாலும், வேதத்தில் சொல்லுகிறபடி அந்த முமுக்ஷுவான சேதனன், அந்த ஞானத்தைப்பெறுவதற்காக சுச்ரூஷுவாய் குருவுக்குப்பணிவிடை செய்வதில் ஆசையுடன் வேதவேதாந்த ஸாரார்த்தத்தை நன்கு அறிந்தவரும், பகவானொழிந்த விஷயங்களில் வைராக்யபூர்வமாக ப்ரஹ்மாநுபவநிஷ்டருமான ஸதாசார்யனையாச்ரயிக்கவேண்டும். சிஷ்யர்கள் செய்யும் பணிவிடையால் ஆசார்யர்கள் மிகவும் அதிகமான ப்ரீதியையடைந்து அனுக்ரஹம் செய்வார்களாகில் சிஷ்யர்களுக்கு எல்லா வித்யைகளும் ப்ரகாசிக்கும். இதற்கு ப்ரமாணம் பாரதம் ஆதிபர்வாவில் தௌம்யருடைய மூன்று சிஷ்யர்களான (1) உபமன்யு (2) ஆருணி (3) பைதர் இவர்கள் சரிதத்திலிருந்து காணலாம். தௌம்யர் முதல் சிஷ்யனான உபமன்யுவைப்பார்த்து "நீ வயலுக்குத் தண்ணீர் கட்டிவிட்டுவா" என்று சொல்லியனுப்ப, அவன் போய்த் தண்ணீர் கட்டக்கட்ட தண்ணீர் வயலிலிருந்து வெளியே போக, அதை அடைக்க வேறு வழியில்லாமல் தண்ணீர் வெளியே போகாமல் தண்ணீர் த்வாரத்தில் தானே படுத்துக் கொண்டான். பிறகு தண்ணீர் வெளியே போகவில்லை. வெகு நாழி கழித்தும் சிஷ்யன் வராததால் தௌம்யர் மற்ற சிஷ்யர்களுடன் வயலுக்குப் போய்ப்பார்க்க, அவன் படுத்துக்

கொண்டு தன் சரீரத்தால் நீரைத்தேக்கி வைத்திருந்தான். குருவும் சந்தோஷமடைந்து " **सर्वे च ते वेदाः प्रतिभास्यन्ति सर्वाणि च धर्मशास्त्राणि** " " உனக்கு எல்லா வேதங்களும் தர்மசாஸ்த்ரங்களும் பிரகாசிக்கக்கடவன " என்று அனுக்ரஹித்தார். அப்படியே அவனுக்கு எல்லா ஞானமும் உண்டாயிற்று. இரண்டாவது சிஷ்யனை ஆருணியைப் பார்த்து க்ரமமாக நீ பிக்ஷை யெடுத்துக் கொண்டுவரும் எல்லா அன்னத்தையும் எனக்கே கொடுத்துவிட வேண்டுமென்றும், குருவுக்குக் கொடுத்துவிட்டு மறுபடியும் பிக்ஷைக்குப் போய்க்கொண்டு ஜீவித்துவந்தவனை மறுபடி பிக்ஷைக்குப் போகக்கூடாதென்றும், பசுக்களின் பாலைச்சாப்பிட்டு வந்தவனை பாலைச் சாப்பிடக்கூடாதென்றும், கன்றுக்குட்டிகளின் வாயிலுள்ள நுரைகளை சாப்பிட்டு ஜீவனம் செய்துவந்தவனை அதுவும் செய்யக்கூடாதென்றும், இம்மாதிரி உத்தரவு செய்ததால், அவன் வேறு கதியில்லாமல் காட்டிலுள்ள எருக்கம் இலைகளைத் தின்றுகொண்டுவந்து ஜீவித்துவந்து, நாளடைவில் கண்கள் பொட்டையாய் ஒரு நாள் கால்தவறி ஒரு பாழும் கிணற்றில் விழுந்தான். அவன் வழக்கம்போல் வீட்டுக்கு வராததால், குருவும் அவனைத்தேடிப்போய் பாழும்கிணற்றில் கண்டு ஸங்கதிகளைத்தெரிந்து அவனது குருபக்திக்கு மெச்சிக் கண்கள் வருவதற்காக அசுவினீ தேவதைகளை ஸ்தோத்திரம் செய்யக் கற்பித்துக் கொடுத்து, பிறகு கண்கள் வந்தவுடன் உபமன்யுவை அனுக்ரஹித்த பிரகாரம் அனுக்ரஹிக்க, அவனும் எல்லா வேததர்மசாஸ்திரங்களினும் ப்ரகாசத்தையடைந்தான். மூன்றுவது சிஷ்யனை பைதனை எருது ஸ்தானத்தில் வண்டியிலும், கலப்பையிலும் கட்டி பாரத்தை இழுக்கும்படி செய்ததில், அவன் வெய்யில் மழை, குளிர், பசி, தாஹம், யாவற்றையும் ஸஹித்துக்கொண்டு குருவுக்கு மிகவும் அனுகூலனாய் சுச்ரூஷை செய்துவந்ததால், குருவும் மிகவும் ப்ரீதியடைந்து அவனை அனுக்ரஹிக்க அவனும் ஸர்வஜ்ஞனாக ஆய்விட்டான். எல்லா நன்மைகளையுமடைந்தான். ஆகையால் குருவின் ப்ரீதிக்கு குருசுச்ரூஷையே காரணமாகும் என்று ஏற்படுகிறது. **गुरुसेवाभिगच्छेत्, आचा**

यद्धैव विद्याविदिता साधिष्ठं प्रापत् என்று ஒரு சேதனன் குருவை யாச்ரயித்தே வித்யைகளை, விசேஷித்து ப்ரஹ்மவித்யை யைப் பெறத்தக்கவன் என்றும், குருமுகமாக அடையப்பட்ட வித்யைதான் இவனுக்கு கார்யகரமாமென்றும் சுருதிகள் முறையிடுவதால், குருவை உபஸர்ப்பணம் செய்து வித் யையை க்ரஹிப்பது நியமவிதியென்று சாஸ்த்ரங்கள் கூறு கின்றன. இந்த நியமத்தைத் தவருமல் ஸ்ரீ ராமனுயும் க்ருஷ் ணனுயுமவதரித்த பகவான் வஸிஷ்டவிச்வாமித்ர ஸாந்தீபன் யாதிகளையும் ஆச்ரயித்து வித்யாக்ரஹணம் செய்ததாக இதி ஹாஸ புராணங்கள் கூறுகின்றன. வஸிஷ்டபுலஸ்த்ய மஹரிஷிகளுடைய வரபலத்தால் ஸ்ரீ பராசரபகவானுக்கு பரதேவதாபாரமார்த்ய ஞானம் உண்டாயிற்று. மந்த்ர ப்ரதி பாத்யனை பகவானிடத்தில்போல், மந்த்ரப்ரதனை ஆசார்ய னிடத்தில் மேலான பக்தியுண்டானால்தான் ஆசார்யன் உபதேசித்த அர்த்தங்கள் சிஷ்யனுக்கு ப்ரகாசிக்குமென்று **'यस्य देवे परा भक्तिः यथा देवे तथा गुरौ। तस्यैते कथिताह्यर्थाः प्रकाशन्ते महात्मनः'॥** என்று சுருதிகள் உத்கோஷிக்கின்றன.

பகவத் பக்தியில்லாமல் பகவத் விஷயக சாஸ்த்ரங்களின் ஞானம் உண்டாகமாட்டாது. இவ்வர்த்தத்தை நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் விளக்குகிறார்.

"உணர ஒருவர்க்கு எளியனோ? செவ்வே இணரும் துழா யலங்கல் எந்தை—உணரத்தனக்கு எளியவரெவ்வளவர் அவ் வளவனால் எனக்கு எளியன் எப்பெருமான் இங்கு"—

திருமேனியின் ஸம்பந்தத்தாலே மேன்மேலும் தழைத்து ஓங்குகின்ற திருத்துழாய் மாலையையுடைய எம்பெருமான் தானாகவே முயற்சி செய்பவர்களில் ஒருவர்க்காவது நேராக அறியக் கூடியவனோ? இல்லை. அப்படி ஒருவர்க்கும் அறியக் கூடியவன் அல்லனாயினும், தனக்கு அடிமைப்பட்டவர்கள் தன்மேல் எவ்வளவு அன்புள்ளவர்களோ அவ்வளவன்— அவர்களுக்குத் தானும் தன்னை அவ்வளவு காட்டிக்கொடுப் பன் திருமால். ஆனதால் புத்திசாதுர்யத்தாலே மற்ற சாஸ்த்

ரங்களேயெல்லாம் கற்றுணர்ந்தவர்களுக்கும் பகவத்பக்தியில் லாவிடில் ப்ரஹ்மஞானம் உண்டாகமாட்டாது.

'மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே' (3-1-10) என்ருர் நம்மாழ்வார். மறைபொருளேயுடையவையான நான்கு வேதங்களுக்கும் உள்ளுரைப்பொருளாய் நிற்பவன் பகவான் என்ருர். **மறை** என்ருல் மறைத்துக் காட்டுவது என்று பொருள். **வேதம்** என்ருல் விளங்கக்காட்டுவது என்று பொருள். **वेदयतीति वेदः** ஆஸ்திகராயிருப்பார்க்கு தன் அர்த்தங்களே வெளியிட்டுக் காட்டுதலால் **வேதம்**. பாஹ்யராய் நாஸ்திகராயிருப்பார்க்கு மறைத்தால் **மறை**. துஷ்டஸ்வாபமுள்ளவர்களுக்கு **மறையாய்** ஸத்வப்ரக்ருதிகளுக்கு **வேதமா**யிருக்கும். கீதாசார்யனும் **भक्त्या मामभिजानाति यावान् यश्चास्मि तत्त्वतः** (கீ. 18-55) "ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் நான் எப்படிப்பட்டவனே, குணத்தாலும் விபூதியாலும் நான் எவ்வளவனே அவ்விதமான என்னேக் கீழ்ச்சொன்ன பக்தியினுல் தான் உள்ளபடியறிய முடியும். "**भक्त्या त्वनन्यया शक्यः अहमेव विधोऽर्जुन ज्ञातुम्**" என்றுமுபதேசித்தார்.

கூரத்தாழ்வானும் தமது வைகுண்டஸ்தவத்தில் "**ये तु त्वदङ्घ्रि सरसीरुहभक्तिहीनाः तेषाममीभिरपि नैवयथार्थ बोधः। पित्तघ्नमंजनमाप्नुषि जातुनेत्र नैवप्रभाभिरपि शङ्खसि तत्त्वबुद्धिः॥**" உன்னுடைய திருவடித் தாமரைகளில் பக்தியற்றவர்கள் எவ்வளவேனும் தர்க்கம் மீமாம்ஸை முதலிய ஸாமான்ய சாஸ்திரங்களில் நிபுணர்களாயிருந்தாலும், அவர்களுக்கு பகவத் விஷயகமான உண்மையான ஞானம் உண்டாகாது. பித்த வ்யாதியினுல் வெளுப்பாயிருக்கும் சங்கத்தை, மஞ்சள் நிறமானதென்று நிணைத்திருக்குமவனுக்கு வெளிச்சமும் கண்களுமிருந்தபோதிலும், சங்கம் வெண்மையானது என்கிற ஞானம் ஒருநாளும் உண்டாவதில்லையல்லவா! அதுபோல் என்ருர்.

ஸஞ்சயனும் திருதராஷ்டிரனேப் பார்த்து "**शुद्धभावं गतो भक्त्या शास्त्राद्वेद्मि जनार्दनं**" சாஸ்திரத்திலிருந்து நான் பகவானே

பக்தியினுல் அறிகிறேன் என்ருன். ஆகையால் பகவத்பக்தியானது பகவத் விஷயக ஞானத்துக்குக் காரணமாகிறது.

அதுமாத்திரமல்ல, குருபக்தியும் அந்த ஞானத்திற்குக் காரணம். சிஷ்யர்களுடைய ஞான தாரதம்யத்தைக்கொண்டு அவர்களின் குருபக்திதாரதம்யத்தை அறியலாம் என்று ஆசார்யர்கள் கூறுகின்றனர். "आचार्यदेवो भव" என்று தைவத்தைப்போல் ஆசார்யனைப் பூஜிக்க வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. ஆசார்யஸமாச்ரயணத்திற்கு முன்பு ஒரு சேதனன் மஹாபாபியாயிருந்தபோதிலும், அவனை ஆசார்யன் சுத்தனுக்குகிருன். எவ்வளவு புண்யவானுயிருந்தபோதிலும் ஆசார்யஸமாச்ரயணமில்லாவிடில் உஜ்ஜீவிக்க வழியில்லை. "अच्छेद्यनच्छेपि शरीरिवर्गे श्रेयस्करीसद्गुरुपादसेवा। समित्पशुच्छेदकशस्त्रयुग्मे रसेनहैमीकरणं समानम्॥" ஸமித்துக்களை தேவகார்யுங்களுக்காக வெட்டிக்கொண்டுவருவதால் நல்ல கார்யத்தில் ப்ரவ்ருத்தித்துவரும் ஒரு கத்தியையும், கசாப்புக் கடையில் தினமும் ஆடு முதலிய பிராணிகளை வெட்டிக் கொண்டு வருவதால் கெட்ட கார்யத்திலேயே ப்ரவ்ருத்தித்து வரும் மற்ருெரு கத்தியையும் யாதொரு வித்யாஸமில்லாமல் ஒரு ரஸகுளிகையானது (philosopher's stone) பொன் ஆக்குமாப்போலே, புண்யபுருஷ பாபபுருஷ வித்யாஸமில்லாமல் ஸதாசார்ய ஸம்பந்தமானது உத்தாரகமாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசார்ய ஸமாச்ரயணத்திற்கு முன்பு கொடிய பாபங்களையே செய்துபோந்த க்ஷத்ரபந்து என்கிற க்ஷத்ரியக்கேடனுக்கு ஆசார்யஸம்பந்தத்தால் முக்தி கிடைத்தது. அவன் பண்ணிய பாபங்கள் மோக்ஷத்திற்கு இடையூருக நிற்கவில்லை. ஆசார்யஸமாச்ரயணத்திற்கு முன்பு புண்ணியங்களையே செய்துபோந்த புண்டரீகன் என்னும் ப்ராஹ்மணோத்தமனுக்கு அவன் புண்ணியங்கள் ஒன்றும் மோக்ஷத்திற்குக் காரணமாகவில்லை. ஆசார்ய ஸம்பந்தமட்டுமே காரணமாயிற்று. ஆகையால் ஒரு முமுக்ஷுசேதனன் பக்தியுடன் ஆசார்யனை உபாஸிக்க வேண்டியது.

சிஷ்யன் ஆசார்யனை உபாஸிக்கவேண்டிய ப்ரகாரத்தை ஸ்ரீதேசிகன், ஆசார்யனுக்கும் பகவானுக்குமுள்ள ஸாம்யத்தை ஒற்றுமையைக் காட்டி உபதேசிக்கிறார்.

(1) "**अज्ञानध्वान्तरोधात्**" தத்வஹித புருஷார்த்த விஷயகமான அஞ்ஞானமாகிற இருளை பகவானும் ஆசார்யனும் இருவரும் நீக்குகிறார்கள். "**तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः । नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ॥**" (கீ. 10-11) என்னிடத்தில் எப்போதும் ஸததயோகத்தை விரும்புகிறவர்களை அனுக்ரஹிக்கவேண்டி அவர்களுடைய மனோவ்ருத்திக்கு விஷயமாய் நான் இருந்துகொண்டு, என்னுடைய கல்யாண குணகணங்களை அவர்களுக்குக் காண்பித்துக்கொண்டு, என் விஷயமான ஞானமாகிற விளக்கினால், ஞானவிரோதியானதும் "**अविद्याकर्मसंज्ञान्या**" என்று சொல்லப்பட்ட முன் கர்மமாகிற அஞ்ஞானத்தினாலுண்டானதுமான விஷயப்ராவண்யம் விஷயப்பற்று என்கிற இருளைப்போக்குகிறேன் என்று சொன்னபடி பகவான் அஞ்ஞானமாகிற இருளைப்போக்குகிறான். குருவும் சிஷ்யனுடைய அஞ்ஞானத்தைப் போக்குகிறான். **गु** என்றால் இருட்டு, **रु** என்றால் அதை நீக்குகிறவர். என்று குரு சப்தத்திற்கு நிர்வசனம் செய்யப்பட்டிருக்கிறது.

"என்னைப்பெற்ற அத்தாயாய்த்தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா" (2—3—2) தாயாகியும் தந்தையாகியும் ஆசார்யனாயும் உபகாரகன் ஆனவனே, நீ செய்த உபகாரத்தை நான் அளவிட்டு அறியமாட்டேன் என்றார் நம்மாழ்வார். எம்பெருமானாருடைய காலக்ஷேபகோஷ்டியில் இந்த பாசுரம் வந்தவளவிலே இவ்வாத்மாவுக்கு முதல் குரு யார் என்று விசாரமுண்டாயிற்று. ஆசார்யன் என்று சிலர் சொன்னார்கள். வேறு சிலர் ஆசார்யனுடைய ஸ்ரீ பாதத்திலே கொண்டு சேர்த்த ஸ்ரீ வைஷ்ணவன் முதல்குரு என்றார்கள். முடிவில் எம்பார் அருளிச்செய்ததாவது — **"இசைவித்தென்னை உன் தாளிணைக்கீழ் இருத்துமம்மானே"** — (5—8—9) என்று அருளிச்செய்கையாலே, என் உள்ளத்திலேயிருந்து இசைவித்த

ஸர்வேசுவரனே முதல் குரு. ஆசார்யன் அழைத்தாலும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவன் அழைத்தாலும், இவன் மாட்டேன் என்று சொல்லிவிட்டால் செய்யலாவது ஒன்றுமில்லை. அப்படிச் சொல்லாமல் இசைவித்தது ஸர்வேசுவரனுடைய க்ருத்யமே என்பது எம்பாருடைய திருவுள்ளம். ஆகையால் அஞ்ஞான இருளை இருவரும் போக்குகிறார்கள்.

(2) "**अघपरिहरणात्**" பாபங்களைப் போக்குவதில் இருவருக்கும் ஸாம்யம். "**हरिर्हरति पापानि दुष्टचित्तैरपि स्मृतः। यदृच्छयापि संस्पृष्टः किन्न दहति पावकः॥**" கெட்ட மனதையுடையவர்கள், தன்னை நினைத்தாலும் ஹரியானவர் அவர்கள் பாபங்களைப் போக்குகிறார். தற்செயலாய் மிதிக்கப்பட்ட தீயானது நம்மைச் சுடுகிறதல்லவா? **"சேர்ந்தார் தீ வினைகட்கு அருநஞ்சை"** (2—3—6) பக்தர்களின் கொடிய பாபங்களுக்கு ஆற்றவரிதான விஷயமாயிருப்பவன் எம்பெருமான், என்றிவை முதலிய ப்ரமாணங்களால் பகவானுக்கு பாபஹரத்வம் ஸ்பஷ்டம். பாபிஷ்டனான க்ஷத்ரபந்துவுக்கும் ஆசார்ய ஸமாச்ரயணத்தால் மோக்ஷம் கிடைத்ததால், ஆசார்யனுக்கும் சிஷ்யபாபஹரத்வம் ஸித்தம்.

(3) "**आत्मसाम्यावहत्वात्**" ஞானாதிகளாலே தனக்குச் சமமாக ஆக்குகை இருவர்க்கும் துல்யம், "**निरञ्जनः परमं साम्यमुपैति**" "**मम साधर्म्यमागताः**" (கீ. 14-2) **आत्मभावं नयत्येवं तद्ब्रह्मध्यायिनं मुने**" **தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு தம்மையேயொக்க அருள் செய்வர்"** (பெரிய திருமொழி 11—3—5) என்கிறபடியே தேவதாந்தரபஜனத்தை நெஞ்சிலும் நினையாதவர்களாய், ப்ரயோஜனாந்தரத்தையும் சிந்தையில் கொள்ளாதவர்களாய் ஆச்ரயிக்கின்ற பக்தர்களுக்கு தன்னோடு பரம ஸாம்யாபத்தியைத் தந்தருள்பவன் எம்பெருமான். ஏனென்றால் தன்னை யனுபவிப்பாரையும் தன்னைப் போலேயாக்கி உஜ்ஜீவிப்பிக்கும் ஸ்வபாவமுடையவன் அவன். முக்தி தசையில் பரமஸாம்யம். இங்கும் யதோசித ஸாம்யத்தைக் கொடுப்பவன், ஸ்ரீ ராமாயணத்தில் (அயோ-

கா. 12-105) "अहं पुनर्देवकुमाररूपमलंकृतं तं सुतमात्रजन्तम्। नन्दामि पश्यन्नपि दर्शनेन भवामि दृष्ट्वा पुनर्युवेव ॥" தசரதன் இராமனைப்பற்றி கைகேயினிடம் சொல்லும்போது "இயற்கையில் அழகுள்ளவனும், அலங்காரங்களால் அதிக அழகையுடையவனும், யானைபோல் நடந்துவருபவனுமான இராமனை மனதால் நினைத்த மாத்திரத்தால் நான் களிக்கிறேன். நேரில் கண்டவுடன் மறுபடி யௌவனத்தை யடைந்தவன்போல், அதாவது "**युवासुवासाः**" என்று நித்யயுவாவான பகவானுடைய யௌவனம் போன்ற யௌவனத்தையடைந்தவன்போல் உடம்பெல்லாம் பூரித்துக் களிக்கின்றேன்" என்றார். வஸு தேவரும் தன் புத்ரனுடைய முகதர்சனமாகிற மஹோத்ஸவத்தைப் பெற்றதினால் தனக்குவந்த கிழத்தனத்தை விட்டுவிட்டு வாலிபனாகவே ஆனார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "**युवैव महोत्सवमिवासाद्य पुत्राननविलोकनम्। सुदेवोभूद्विहायाभ्यागतां जराम् ॥**"

(4) **जन्मप्रध्वंसिजन्मप्रदगरिमतया** ஸம்ஸார ஜன்மத்தைப் போக்கி ஞானரூப ஜன்மத்தைக் கொடுக்கும் மாஹாத்ம்யம் இருவருக்கும் ஸமானம். "**அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்**" பகவான் என்னைப் பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது, இருப்பது, கிடப்பதாக நிற்க அக்காலத்தில் நான் ஞானலாபரூபமான ஜன்மத்தையுடையனாகப் பெற்றிலேன். அந்த ஜன்மமுண்டான பின்பு அவனை யொருக்காலும் மறந்திலேன்" என்றும், **இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்**" (10—8—9) "பொருளல்லாத என்னைப் பொருளாக்கி" (5—7—3) "என்னைப் புவியிலொரு பொருளாக்கி" (இரா-நூற்ற. 4) '**वस्तु तानुपयातोहं**' என்றும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் சொல்லியபடி தன் விஷயீகாரத்துக்கு முன்பு '**असन्नेव भवति**' என்று அஸத் ஸமனாயிருந்தவனை **सन्तमेनं** என்று ஞானரூப ஜன்மத்தைக் கொடுப்பது இருவர்க்கும் துல்யம். '**स हि विद्यातः तं जनयति तत् श्रेष्ठं जन्म**' வித்யையைத் தாயாகப்பெற்று

ஆசார்யனுல் கொடுக்கப்பட்ட ஜன்மம் மிகவும் சிறந்தது என்று சாஸ்த்ரம் கூறுகிறது.

(5) "दिव्यदृष्टिप्रभावात्" பகவானுடைய ஜாயமானகால கடாக்ஷத்தாலே ஸத்வகுணம் மேலிட்டு மோக்ஷருசி பிறந்து மோக்ஷஸாதனத்தைத் தேடிசேதனன் உஜ்ஜீவிக்கிருன். அது போல் ஆசார்யனுடைய கடாக்ஷத்தாலே, ஸ்தாவரம், பசு, பக்ஷி,மனுஷ்யன், பாலர்கள், ஊமைகள், ஜடர்கள், குருடர்கள் சப்பாணிகள், செவிடர்கள் எல்லோரும் உஜ்ஜீவிக்கிருர்கள் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. முன்பு ஒரு காலத்தில் நம் பிள்ளை என்கிற ஆசார்யர் காஞ்சீபுரத்திலிருந்து ஸ்ரீரங்கத் திற்கு எழுந்தருளும்போது நெடுந்தூரம் நடந்து வெய்யிலால் தபிக்கப்பட்டு வரும்போது ஒரு ஆலமரம் நன்ருய்ப்பணைத்துத் தழைத்து நிழலோடு கூடியிருந்ததால் அதின் கீழே ஆசார் யரும் சிஷ்யர்களும் தங்கி இளைப்பாறி, அங்கே பெருமாளுக்கு அமுது செய்யப்பண்ணித் தாமும் சிஷ்யர்களும் அமுது செய்து, அன்றிரவு அங்கேயே படுத்திருந்து, மறுநாள் பயணம் புறப்படும்போது, நம்பிள்ளை சிஷ்யர்களைப் பார்த்து, இது நமக்கு எல்லோருக்கும் பசி, தாஹம், தாபம் யாவற்றை யும் போக்கிற்றல்லவா? இதற்கு நாம் என்ன செய்தோம், என்றும், 'गच्छलोकाननुत्तमान्' என்று சொல்லி ஸ்ரீராமன் ஜடாயுஸ்ஸை அனுக்கிரஹித்தார். போலே "மேலான வைகுண்டலோகத்துக்குச் செல்வக் கடவாய்" என்றுவிசேஷ கடாக்ஷம் பண்ணி இரண்டு திருக்கைகளாலும் தடவிவிட்டுப் போகும்போது, ஸமீப க்ராமவாஸியான ஒரு ப்ராஹ்மணன் கண்டு பரிஹாஸம் செய்துவிட்டுப் போனுன். நம்பிள்ளை முதலானவர்கள் பிறகு ஸ்ரீரங்கத்தை நோக்கிப் போனுர்கள். அன்று இரவில் "சூழ்விசும்பணிமுகிலில்" (10-9-1) நம்மாழ் வார் அனுபவித்தபடி பெரிய மஹோத்ஸவ கோஷம் பிறந்தது. ப்ராஹ்மணனும், அவ்வூரிலுள்ள எல்லோரும் காணவந்து நிற்க, ஆகாசத்தில் திவ்யதேஜஸ் ஒன்று தோன்றிற்று. அதை எல்லோரும் கண்டு ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்த போது அந்த விருக்ஷம் இரண்டு கூருய்ப் பிளந்துபோயிற்று.

பெரிய சப்தத்தோடே அந்த திவ்ய தேஜஸ்ஸானது புறப்பட்டு ஆகாசத்தின் மேலேபோய் ஸூர்யனுடைய தேஜஸ்ஸிலே கலந்துபோனபடியைக் கண்டு, காணவந்தவர்கள் பெரிய ஆச்சர்யத்துடனும் குழப்பத்துடனும் இது என்னவென்று விசாரிக்க, பரிஹஸித்த ப்ராஹ்மணன், அந்த விருக்ஷத்தை நம்பிள்ளை கடாக்ஷித்தபடியைச் சொன்னான். எல்லோரும் கேட்டு விஸ்மிதராய்ப் போனார்கள். மறுநாள் இந்த ஸம்பவத்தைக் கேட்டு, நம்பிள்ளையும், எண்ணெய்க்காப்பு, ஸ்ரீ சூர்ண பரிபாலனம் பண்ணி, திருவத்யயனத்தை நடத்திப் போனார் என்று ஐதிஹ்யம். ஆகையால் இருவருடைய கடாக்ஷமும் உத்தாரகம்.

(6) **निष्प्रत्यूहानृशंस्यात्**—தடையற்ற தயையானது பகவானுக்கும் ஆசார்யனுக்கும் ஸமம். தயை தடையற்றிருப்பதாவது, அறிவுள்ளவன் அறிவில்லாதவன், தேவன் மனுஷ்யன் அஸுரன், மிருகம் பக்ஷி, அபராதி நிரபராதி, முதலான விஷய விடாமில்லாமல் எங்கும் ஸ்வரஸமாகப் பெருகுவது. **"वधार्हमपि कृपया काकुत्स्थः पर्यपालयत्"** கொல்லக்தகுந்த காகாஸுரனையும் பகவான் கிருபையால் ரக்ஷித்தான். தயை அவனுக்கு ஸ்வபாவகுணம். பிரிவாற்றாமையாலே வருந்திய பிராட்டியானவள், தன் ஆற்றாமைக்கு உதவவந்து பெருமாள் முகம் காட்டப்பெறாத வருத்தத்தினால் **ख्यातः प्राज्ञः कृतज्ञश्च सानुक्रोशश्च राघवः। सद्वृत्तो निरनुक्रोशश्शंके मद्भाग्य संक्षयात्॥** என்று பெருமாளை தயையற்றவராக சங்கித்துச் சொல்லுகிற அவஸ்தையிலும், அவ்விதம் சங்கிக்கைக்கு அடிதன்னுடைய பாக்யஹாநி என்கையாலே சங்கா காரணத்தை ஸ்வகதமாக தன்னிடத்திலே யிருப்பதாகச் சொன்னாள். ஆசார்யனும் தயாபரவசனாய், ஞானானுஷ்டான-உபதேச யோக்யதையில்லாதவர்களுக்காகத் தாமே பகவானை சரணவரணம் பண்ணி, ஔஷத ஸேவைக்கு யோக்யதையில்லாத ஸ்தனந்தய சிசுவுக்கு வ்யாதியுண்டானால், தான் ஔஷத ஸேவைபண்ணித் தன்னுடைய ஸ்தன்ய பானத்தாலே சிசுவின் ரோகத்தை நிவர்த்தி செய்யும் மாதாவைப்போலே, இச்சேதனர்களைத்

தாம் அபிமானித்து, தம்முடைய தீர்த்த ப்ரஸாத ஸேவா மாஹாத்ம்யததாலே இவர்களின் ஸம்ஸாரமாகிற ரோகத்தை நிவ்ருத்தி செய்வித்து மோக்ஷத்தை அடைவிப்பிக்கிருன். ஒரு ஊமையானவன் ஆர்த்தனுயிருக்கிறபடியைக் கண்டு ஒரு நாள் எம்பெருமானுர் தயாபரராய் தம்முடைய திருவடிகளைக் காட்டி, கையாலே ஜாடை செய்து; இத்திருவடிகளை ஹ்ருதயத்திலே வைத்துக் கொள்ளென்று அவன் தலையிலே திருவடிகளை வைக்க அதை கூரத்தாழ்வான் கண்டு 'ஐயோ நாம் கூரகுலத்திலே பிறந்து சாஸ்த்ராப்யாஸம் பண்ணிக் கெட்டோம், நாமும் ஒரு ஊமையாய்ப் பிறந்திருந்தால் பாத ஸ்வீகாரம் லபிக்குமே' என்று பரிதபித்தாராம். ஆகையால் தயாபரவசத்வம் இருவர்க்கும் ஸமானம்.

(7) **नियतरसतया** நிரதிசயாநந்தரூபத்வம் இருவர்க்கும் துல்யம். "**रसो वै सः**" "**आनन्दो ब्रह्म**" "**அப்பொழுதைக்கப் பொழுது என் ஆராவமுதே**" என்று பகவானை நிரதிசயபோக்யமாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. "**தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே**" "**நாவினுல் நவிற்று இன்பம் எய்தினேன்**" — நம்மாழ்வார் என்கிற சொல்லைச் சொன்னுல் பரம போக்யமாயிருக்கும். என் ஒருவனுடைய நாவுக்கே அம்ருதம் ஊருநிற்கும் என்று மதுரகவியாழ்வார் சொன்னபடி ஆசார்யனும் போக்கியமாயிருக்கும்.

(8) **नित्यशेषित्वयोगात्** நிருபாதிகஸ்வாமித்வம் இருவர்க்கும் துல்யம்.

இப்படி கீழ்ச்சொன்ன எட்டு குணங்களாலே, ஆசார்யன் ஸச்சிஷ்யர்களாலே ஸர்வேசுவரன்போலே உபாஸிக்கத் தக்கவன் என்று ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ந்யாசவிம்சதியில் அருளிச் செய்தார்.

ஆசார்யன் பகவானேடு துல்யன் என்பது மட்டுமல்ல. சில அம்சங்களில் உயர்ந்தவன் என்றே சொல்லலாம். பகவானை ஆச்ரயிப்பது மிகவும் துர்லபம். ஆசார்யனை ஆச்ர

யிப்பது ஸுலபம். ஏனென்றால் பகவானை சாஸ்த்ரத்தினால் மட்டுமே அறியமுடியும். ஆசார்யனைக் கண்களால் கண்டு பற்றலாம். பகவானை அர்ச்சாரூபேண ஸ்ரீரங்காதி ஸ்தலங்களில் கண்டாலும் வாய்திறந்து ஒரு வார்த்தையருளிச் செய்யமாட்டான். மேலும், சேதனன் தன்னுடைய துர்வாஸனையாலே விஷயங்களில் மண்டிக் கெட்டவழியில் ப்ரவ்ருத்தித்தபோதிலும், இவன் ருசியைப்பார்த்து அனுமதிதானம் பண்ணி கர்மத்துக்குத் தக்கவாறு பலனை யடைவிப்பான். ஆசார்யன் அவ்விதம் செய்யாமல் சிஷ்யனை நிர்ப்பந்தித்துத் திருத்தி பகவானுக்கு இஷ்டவினியோக யோக்யனாக ஆக்குவான். இவ்வர்த்தத்தை "இடுமே இனிமே சுவர்க்கத்தில்" என்கிற பாட்டிலே "எம்பெருமானாரை 'சரணம்' என்று சொல்லிவிட்டால் நம்மை ஸன்மார்க்கத்தில் திருத்தி, சில நாளிருந்து ஸுகம் அனுபவித்துப் பிறகு மீள்வதற்கு உறுப்பான ஸ்வர்க்கத்திலாவது, துன்பங்களையே அனுபவிப்பதற்கு இடமான நரகத்திலாவது, இன்பதுன்பங்களை மாறிமாறி அனுபவிப்பதற்கிடமான இந்த ஸம்ஸாரத்திலாவது வைக்காமல், தம்முடைய பாதங்களில் சேரும்படி தாமே அங்கீகரிப்பார்" என்று அமுதனார் சொன்னார்.

இவ்வித ஆசார்யஸம்பந்தத்தைப் பெறுவதுமட்டும் போராது. பெற்ற ஸம்பந்தம் நீங்காமலிருக்கவேண்டும். ஆசார்யஸம்பந்தம் குலையாதேயிருந்தால், ஆத்மாவுக்கு அலங்காரங்களான தத்வ ஞானம், அநுசிதவிஷயவைராக்யம், உசித விஷயபக்தி இவையாகிய ஆத்மகுணங்கள் இல்லையாகிலும், அந்த ஆசார்யனுடைய அனுக்ரஹாதிகளாலே க்ரமேண உண்டாக்கிக் கொள்ளலாம். ஸர்வமங்களஹேதுவான ஆசார்யஸம்பந்தம் குலைந்தால், ஞானம் முதலிய குணங்கள் இவனுடைய பூர்வஸுக்ருதத்தால் சிறிது உண்டானாலும், பகவதங்கீகாரஹேதுவாகாமையாலே நிஷ்ப்ரயோஜனமாய் விடும். பதிவ்ரதையான ஒரு ஸ்திரீக்கு, பதிசம்பந்தசூசகமான தாலி (திருமங்கல்யம்) ஒன்றுபோகாமல் கிடந்தால், மற்ற ஆபரணங்கள் இல்லாவிட்டாலும், கையில் பணம் கிடைத்த

போது பண்ணிப்போட்டுக் கொள்ளலாம். இத்தனை ஆபர ணங்கள் இருக்கின்றனவேயென்று நினைத்துத் தாலியை வாங்கிப் போட்டால் விதவாலங்காரஸமமாகையாலே அணிந்த ஆபரணங்களெல்லாம் குற்றமாகும். '**नारायणोऽपि विकृतिं याति गुरोः प्रच्युतस्य दुर्बुद्धेः। अमलं जलादपेतं शोषयति रविर्नतोषयति॥**' தாமரையை அலர்த்தக்கடவனான ஸூர்யன், தானே, தாமரை நீரைவிட்டுப் பிரிந்தால் அதை உலர்த்து கிறதுபோல், சேதனனுக்கு ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈசுவரன் தானே ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அதை வாடப்பண்ணுவான். "தன் குருவின் தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார், அன்புதன்பால் செய்தாலும் அம்பு யைகோன், இன்பமிகுவிண்ணாடு தானளிக்க வேண்டியிரான், ஆதலால் நண்ணார் அவர்கள் திருநாடு"—என்று மாமுனிகள் அருளிச் செய்தார். ஆகையால் ஆசார்ய ஸம்பந்தத்தை யொழிய பகவத்ஸம்பந்தம் கிடைக்காததால் ஆத்மோஜ் ஜீவனத்துக்கு இரண்டும் அவசியம் என்பது திரண்டபொருள்.

ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர் இயற்றிய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரத்தில் மூன்ருவது அதிகாரம் குருபக்தி முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

ச்ருதி ப்ராமாண்யம்

அவதாரிகை.

அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸகலகல்யாணகுணாத்மகனா யிருக்கும் ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீ வைகுண்டம் என்கிற திவ்யலோகத்தில் திருமாமணி மண்டபத்தில் ஸ்ரீ பூமி நீளா ஸமேதனாய் ரத்நஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து நித்யர் களாலும் முக்தர்களாலும் இடைவிடாமல் கைங்கர்யம் செய் யப்பெற்று, அநவரதம் பரிசரிக்கப்பட்ட தாமரைத் தாள்களை யுடையவனாய், அவர்கள் போலவே தம் பாதபத்ம ஸேவைக்கு அர்ஹர்களாயிருந்தும் அதை இழந்து, ப்ரளய காலத்தில் உரைமெழுகில் பதிந்த ஸுவர்ணகணம் போல், ப்ரக்ருதியில் லயித்து ஞானம் குன்றியிருக்கும் ஜீவர்களைப் பார்த்துக் கிருபை கூர்ந்து, மஹத், முதலிய ஸ்ருஷ்டி க்ரமத்தில் அவர் களுக்குத் தன் பாதாரவிந்த ஸமாச்ரயணத்திற்கு உசிதங்க ளான கரணகளேபரங்களைக் கொடுத்தும், அவைகளைக் கொண்டு அவர்கள் உஜ்ஜீவிக்காமல் நதியைத் தாண்டுவதற் காகக் கொடுக்கப்பட்ட ஓடங்கள் மீதேறி நதிவேகம்போன போக்கிலேயே சென்று கடக்கமுடியாத மஹா ஸமுத்ரத்தை யடைவார்போல அந்தக் கரணகளேபரங்களைக் கொண்டே விஷயஸுகங்களில் மேன்மேலும் பற்றுதல் வைத்து அவற் றையே அனுபவித்துக் கொண்டு இந்த ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கியிருக்கும் சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்க வேண்டி அவர் கள் நன்மை தீமைகளை அறியும்பொருட்டு ஆதியும் அந்தமு மில்லாததாயும் விச்சேதமற்ற பாடஸம்ப்ரதாய முள்ளதாயும் ப்ரமாதம் முதலிய தோஷலேச கந்தமுமில்லாததாயுமிருக்கும் **வேதமென்னும் சாஸ்திரத்தை ப்ரவர்த்திப்பித்தான்.**

அந்த சாஸ்திரமானது, பரம புருஷாராதனம் என்கிற புண்யகர்மாவைச் செய்தால் அவனுடைய அநுக்ரஹத்தால்

ஸுகரூப பலம் கிடைக்குமென்றும், அதற்கு வித்யாஸமாய்ப் பாபரூபமான கர்மாவைச் செய்தால் அவனுடைய நிக்ரஹத்தால் துக்கரூப பலம் கிடைக்குமென்றும் சொல்லுகிறது. வேதம் கர்மகாண்டமென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இரண்டு பாகத்தோடு கூடியது. ஆராதந ரூபமான கர்மத்தை ப்ரதிபாதிப்பது பூர்வகாண்டம். ஆராதிக்கப்படும் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிப்பது உத்தரகாண்டம்.

ஶ்ருதி முதலிய பதங்களின் அர்த்தம்.

இவ்விதம் இரண்டு பாகங்களான கர்மப்ரஹ்ம காண்டங்களோடு கூடியதாய் அதனுல் ஒரே சாஸ்திரமாயிருக்கும் ஸ்ருதி யென்றும், நிகமமென்றும், ஆகமமென்றும், ஆம்நாயமென்றும், ஸமாம்நாயமென்றும், சந்தஸ்ஸென்றும், ஸ்வாத்யாயமென்றும், அநுஶ்ரவமென்றும், த்ரயீ என்றும் சொல்லப்பட்ட அக்ஷரராசி ரூபமான சாஸ்த்ரமானது இன்னுரால் இக்காலத்தில் செய்யப்பட்டதென்று சொல்லமுடியாததும், நமது ஆர்யமதத்திற்கும், தர்மாநுஷ்டானங்களுக்கும், சட்டத்திற்கும், தத்வநிர்ணயத்திற்கும் மூலமாய் நெடுங்காலமாய் வழங்கி வருகிறதென்பதும் ஆஸ்திகர்களனைவருக்கும் தெரிந்த விஷயம். **श्रूयते नित्यं इति श्रुतिः** என்றைக்கும் கேட்கப்படுவதால் ஶ்ருதி என்று பெயர். **विद्यन्ते ज्ञायन्ते लभ्यन्ते वा धर्मादि पुरुषार्थाः इति वेदाः** (தர்மம் முதலிய புருஷார்த்தங்கள் கிடைப்பதால் வேதமென்று பெயர்) **प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते। एतं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता॥** ப்ரத்யக்ஷாநுமானங்களால் அறியமுடியாத உபாயத்தைத் தெரிவிப்பதால் வேதமென்று பெயர். இவை மூலமாய்க் கொண்டதால் ஸ்ம்ருதிகளுக்கும் சாஸ்த்ரமென்று பெயர். **शिष्यते उपदिश्यते अनेन इति, शासनात् शास्त्र** ப்ரவ்ருத்தி தர்மங்களையோ அல்லது நிவ்ருத்திதர்மங்களையோ எது உபதேசிக்கின்றதோ, அது நித்யமானுலும் உண்டானதாயிருந்தாலும் அதற்குச் சாஸ்திரமென்று பெயர். **प्रवृत्तिर्वा निवृत्तिर्वा नित्येन कृतकेन वा। पुंसां येनोपदिश्येत तच्छास्त्रमभिधीयते॥**

வேதத்தின் ரூபங்கள்.

வேதம் மந்த்ர ரூபமாயும் ப்ராஹ்மணரூபமாயுமிருக்கிறது. அவைகளில் மந்த்ரம் என்பது ப்ரயோககாலத்தில் அவச்யம் அறியவேண்டிய கர்மத்தின் ஞானத்தை உண்டாக்குவது. **आपो हि ष्ठा मयो भुवः** என்கிற மந்த்ரமானது ஜலப்ரோக்ஷணத்தை ஜ்ஞாபிக்கின்றது. ப்ராஹ்மணம் என்பது விதி, நிஷேதம், அர்த்தவாதம் என மூன்றுவகைப்பட்டது. அவற்றில் விதி என்பது **सत्यं वद धर्मं चर** (ஸத்யத்தைச் சொல் தர்மத்தைச்செய்) என்பதுபோன்ற கட்டளை. நிஷேதம் என்பது **नकलञ्जं भक्षयेत् न सुरां पिबेत्** (களஞ்சபக்ஷணம் செய்யாதே—ஸுராபாநம் செய்யாதே) என்றிவைபோன்ற விலக்கான ஆஜ்ஞை. அர்த்தவாதங்கள் என்பவை விதியையோ அல்லது விலக்கையோ நன்ருய் எடுத்துக்காட்டி நாம் ப்ரவ்ருத்திப்பதற்கோ அல்லது நிவ்ருத்திப்பதற்கோ நமக்கு ருசியை உண்டுபண்ணவேண்டி, திருஷ்டாந்தரூபமான கதைகள் போல் உள்ளன. உதாரணமாய், **वर्म वा एतद्यज्ञस्य क्रियते यत्प्रयाजानु याजाइज्यं ते** ப்ரயாஜாநுயாஜங்கள் தர்சபூர்ணமாஸயாகத்திற்குக் கவசம் போன்றவை என்பதால் ப்ரயாஜாதிகளைச் செய்யவேண்டும் என்பதில் ருசியை உண்டுபண்ணுகின்றன.

வேதத்தின் நான்கு சாகைகள்.

இப்படி, மந்த்ர, ப்ராஹ்மண ரூபமான வேதமானது ரிக் யஜுஸ் — ஸாம அதர்வணம் என்கிற நான்கு சாகைகளையுடைய ஒரு வ்ருக்ஷம். அந்த சாகைகளில் ரிக்வேதம் என்பது பாத அமைப்போடுகூடின ஸ்தோத்ரரூபமான ரிக்குக்களின் ஸமூஹம். யஜுஸ் என்பது யாகம் முதலியவைகளின் ஸ்வரூபம் முதலியவற்றைப் போதிப்பது. ஸாமம் என்பது கானம் செய்யக்கூடிய மந்த்ரஸமூஹம். அதர்வணம் என்பது சாந்தி ப்ரதிஷ்டை முதலிய க்ரியைகளுக்கும், மாரணம், உச்சாடனம், ஸ்தம்பனம், மோஹனம், ஆபிசாரிகம் முதலிய க்ரியைகளுக்கும், ஆக்னேய வாயவ்யாதி அஸ்த்ர ப்ரயோகங்களுக்கும்

உபயுக்தமான மந்த்ரங்களை விசேஷமாயுடையதாயும், இன்னும் சில ஸௌம்ய மந்த்ரங்களும் ப்ராஹ்மணங்களும் அடங்கியது.

இவ்விதம் மந்த்ர ப்ராஹ்மணரூபமான நான்கு வேதங்களும் ஐஹிக ஆமுஷ்மிகங்களையும், அவைகளின் ஸாதனங்களையும் (யதாபூதவாதிகளாய்) உள்ளது உள்ளபடியே சொல்லிக்கொண்டு அந்தந்த அதிகாரிகளுக்கு வேண்டிய விஷயங்களைப் போதிக்கின்றன. அதில் அந்தந்த அதிகாரி தனக்கு வேண்டிய அம்சத்தை 'எங்கும் ஜலம் நிறைந்த குளம் முதலியவற்றில் நமக்குத்தேவையான அளவு ஜலத்தை நாம் ஸ்வீகரிப்பதுபோல், எடுத்துக் கொள்ளவேண்டு' மென்று முமுக்ஷுவான அதிகாரியைப்பற்றி **यावानर्थ उदपाने** என்கிற ச்லோகத்தில் ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்தார்.

வேதமும் மற்ற வித்யைகளும்.

வேதத்தில் ஸர்வவித்யைகளும் அடங்கியிருக்கின்றன. அநேக தர்சன வாதங்கள் ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாஹரணமாய் ச்வேதாச்வதரோபநிஷத்தில் **कालःस्वभावः नियतिर्यदृच्छा भूतानि योनिः पुरुष इति चिन्त्यं । संयोग एषां न त्वात्मभावात् आत्माप्यनीशः सुखदुःख हेतोः ॥** ஸர்வஜகத்திற்கும் காரணம் எது என்றால்

(1) காலம் தான் காரணமென்று காலக்ஞர்களும்,

(2) ஸ்வபாவமே காரணம் என்று லோகாயதிகர்களும்,

(3) நியதி என்கிற புண்யாபுண்ய ரூபமான கர்மமே காரணமென்று மீமாம்ஸகர்களும்,

(4) தற்செயலாய் உண்டாயிற்றென்று நிரீஶ்வர வாதிகளும்,

(5) பூதங்கள் தான் காரணமென்று ஜகத்து நித்யமென்னும் வாதிகளும்,

(6) ப்ரக்ருதிதான் காரணமென்று ப்ரக்ருதி வாதிகளும்,

(7) மற்றும் சிலர் புருஷன் காரணமென்றும் சொல்லு கிறுர்கள்.

கீழ்க்கூறியவை அநேக தோஷங்களையுடையவையாகை யால் காரணமாகமாட்டா. ஏனெனில், அசேதநமோ அல்லது சேதநமோ தனித்தனியாக ஜகத்காரணமாகாது. இவைகளைச் சேர்ப்பதற்கு ஆத்மா இருப்பதால் சேர்க்கைகூடும் என்று சொல்லவொண்ணுது. ஆத்மாவுக்கு ஸ்வாதந்த்ர்யம் இருக்குமாளுல் ஸுகத்தையே அனுபவிக்கும்; துக்கத்தை அனுபவிக்கவேமாட்டாது என்று இவ்வகையான தர்சனங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மேலும் ஸாஹித்ய சாஸ்திரத்தைச் சேர்ந்த அலங்காரங்களும் ரஸம் முதலிய மற்ற விஷயங்களும் அலங்கார ப்ரியையும் ரஸிகையுமான ஶ்ருதிதேவியினிடத்தில் காணப்படுகின்றன.

(1) अभ्रातेव पुंस एति प्रतीची गर्ता रुगिव सनये धनानां। जायेव पत्य उशती सुवास उषाहस्रे वनिरिणीते अप्सः।

ரிக்வேதம் அக்நியிலிருந்தும், யஜுர்வேதம் வாயுவினிடமிருந்தும், ஸாமவேதம் ஆதித்யனிடமிருந்தும் உண்டாயின என்றிவை முதலிய வாக்யங்களால் கர்மாதீனமான சரீரத்தையுடைய அக்நி முதலிய ஜீவர்களிடமிருந்து வேதங்கள் உண்டாயின என்று ஏற்படுகிறது. ஆகையால் வேதத்திற்குச் சரியான லக்ஷணம் சொல்லமுடியாது.

அதுபோலவே இதர ப்ரமாணத்தால் வேதத்தை அறிய முடியாது. குடம் வஸ்திரம் முதலிய வஸ்துக்களை, அவைகளைக் காட்டிலும் வேருன வெளிச்சம் முதலியவற்ருலேயே அறிகிறோம். ஒரு வஸ்து தன்னைக் குறித்துத்தானே ப்ரமாணம் ஆகாது. ஒருவன் தன்னுடைய தோளின்மேல் தானே ஏறி உட்காரமுடியுமா? முடியாது. அதுபோல வேதம் தன்னைக்குறித்துத் தானே ப்ரமாணம் ஆகாது. அதற்கு வேறு

ப்ரமாணமுமில்லை. ஆதலால் வேதம் என்பதற்கு லக்ஷணமும் ப்ரமாணமும் இல்லாததால் வேதம் என்பதே கிடையாது - என்று.

இதற்கு ஸமாதானம்.

மந்த்ர ப்ராஹ்மண ரூபமாயிருப்பது வேதம் என்று லக்ஷணம் சொல்லில் யாதொரு தோஷமும் வருவதில்லை. ஆபஸ்தம்பரும் **मन्त्रब्राह्मणयोर्वेद नामधेयं ।** (மந்த்ர ப்ராஹ்மணங்களுக்கு வேதம் என்று பெயர்) என்னும் ஸூத்ரத்தினல் வேதஸ்வரூபத்தைத் தெரிவித்தார்.

வேதம் என்னும் பதார்த்தம் உண்டென்பதற்குச் சுருதி ஸ்ம்ருதி லோக ப்ரஸித்தி இவைகள் ப்ரமாணங்கள். சுருதி மூலமாய் ஸ்ம்ருதியும் அவ்விரண்டு மூலமாய் லோகப்ரஸித்தியும் ப்ரமாணங்கள். அவைகளில் ச்ருதி ஸ்வயமாய்த் தானே ப்ரமாணம். ஸூர்யன் சந்திரன் முதலியவைகள் மற்ற வஸ்துக்களையும் தங்களையும் எவ்விதம் காட்டிக் கொடுக்கின்றனவோ, அவ்விதம் சுருதியும் தன்னைக் காட்டிலும் வேருன வஸ்துக்களைப் பிரகாசிப்பித்துக் கொண்டு தன்னையும் பிரகாசிப்பிக்கின்றது. ச்ருதிக்குத் தடங்கலற்ற சக்தியுண்டு. அது நடந்தது, நடக்கப்போகிறது, தூரத்திலிருப்பது, பக்கத்திலிருப்பது முதலிய வெகு அர்த்தங்களைப் போதிக்கும். ஆகையால் ச்ருதி ஸ்வதஃப்ரமாணம். இவ்விதம் லக்ஷண ப்ரமாண ஸித்தமான வேதத்தை ஆக்ஷேபிக்க முடியாததலால் வேதம் என்கிற பதார்த்தம் உண்டு என்று சொல்லத் தட்டில்லை.

மந்த்ரங்களின்மேல் ஆக்ஷேபம்.

லக்ஷண ப்ரமாணங்களால் வேதம் என்கிற வஸ்து ஒன்று இருப்பதாக ஏற்பட்டாலும் அது மற்ற விஷயங்களைப் பற்றி ப்ரமாணமல்ல. ஏனெனில் "நல்ல அறிவுக்கு ஸாதனம், அல்லது அறியப்படாத அர்த்தத்தை அறிவிப்பது ப்ரமாணம்" என்று ப்ரமாணத்திற்கு லக்ஷணம் சொல்வதுண்டு. அவ்வித லக்ஷணம் மந்த்ர ப்ராஹ்மணங்களில் இல்லை.

(1) **सृण्येव जर्भरी तुर्फरी** முதலிய மந்த்ரங்கள் யாதொரு அர்த்தத்தையும் அறிவிப்பதில்லையே ?

(2) **अधःस्विदासीत् उपरिस्विदासीत्** என்னும் மந்த்ரத்திற்கு கீழேயுள்ளதா அல்லது மேலேயுள்ளதா என்று அர்த்தம். இந்த மந்த்ரத்தால் ஸந்தேஹம் உண்டாகிறதே யல்லாமல் நிச்சய ஜ்ஞாநம் ஏற்படுகிறதில்லையே ?

(3) **एको रुद्रो न द्वितीयायतस्थे** (ஒரே ருத்ரன் இரண்டாவதில்லை.) **सहस्राणि सहस्रशो ये रुद्राः अधिभूम्याँ** (இந்தப்பூமியில் அநேகமாயிரம் ருத்ரர்கள் இருக்கிறார்கள்) என்று இம்மந்த்ரங்கள் பரஸ்பர விரோதமான அர்த்தங்களாயிருக்கின்றனவே ?

(4) சில மந்த்ரங்கள் அஸம்பவமான அர்த்தங்களைச் சொல்லுகின்றன. உதாஹரணம் **चत्वारि शृंगाः त्रयोस्यपादाः द्वे शीर्षे सप्त हस्ता सोस्य त्रिधावद्धः वृषभोरोरवीति महोदेवमर्त्यांगे आविवेश** (நான்கு கொம்புகளும் மூன்று கால்களும் இரண்டு தலைகளும் ஏழு கைகளும் உள்ள ஒரு எருது மூன்றுகப் பிரிக்கப்பட்டு சப்திக்கின்றது. அது மனிதர்களைப் பிரவேசித்தது) என்று இவ்விதமான எருது லோகத்தில் இல்லையே ?

(5) **ओषधे त्रायस्वेनं** (ஓஷதியே இவரை ரக்ஷிக்க வேண்டும்.) **शृणोतु ग्रावाणः** (கற்களே கேளுங்கள்) ;

என்றிவை முதலிய மந்த்ரங்களில் அசேதனமான வஸ்துக்களைப் ப்ரார்த்தித்தல் சொல்லப்படுகின்றதே ?

இவையெல்லாம் எப்படி ப்ரமாணமாகக்கூடும்? என்று ஆக்ஷேபம் உண்டாகின்றது.

ஸமாதானம்

(1) **जर्भरीतुर्फरीतु** முதலிய மந்த்ரங்களின் அர்த்தம் பர்யாலோசனை செய்யாதவர்களுக்குத் தெரியாததுதான். இத்தகைய மந்த்ரங்களின் அர்த்தம் யாஸ்க மஹர்ஷியால் செய்யப்பட்ட நிருக்தமென்னும் வேதாங்கத்தைக் கொண்டும்

வ்யாகரண சாஸ்த்ரத்தைக் கொண்டும் அறியத்தக்கது. இம்மந்த்ரம் ஆச்விநிக ஸூக்தத்தில் உள்ளது; அஸ்விநீ தேவதைகளைச் சொல்லுகிறது. ஜர்ச்சரீ என்பது த்விவசன மாக (இருமையாக) இருக்கிறது. ஜர்ச்சரீ என்றால் பரணம் செய்கிறவர்கள் भर्तारावित्यर्थः துர்ப்பரீ என்றால் கொல்லு கிறவர்கள் हन्तारावित्यर्थः ஆகையால் இம்மந்த்ரம் ப்ரமாண மாகக் குறையில்லை. இதை ஜைமினி सतः परमविज्ञानं என்கிற ஸூத்ரத்தில் சொன்னார். विद्यमानोऽप्यर्थः प्रमादालस्यादिभिः नोपलभ्यते निगम निरुक्तव्याकरणवशेन धातुतः अर्थतः कल्पयितव्यः (இருக்கும் அர்த்தமே புத்தி மாறாட்டத்தாலாவது சோம்பலினா லாவது புலப்படுகிறதில்லை, வேதத்தின் நிருக்தம் வ்யாகரணம் இவற்றின் உதவியினால் வினைப்பகுதியிலிருந்து அர்த்தம் கற்பிக்கப்படவேண்டும்) என்று சபரஸ்வாமி இதற்கு வ்யாக் யானம் பண்ணினார்.

(2) கீழேயுள்ளதா அல்லது மேலேயுள்ளதா என்னும் மந்த்ரம் ஸந்தேஹத்தை உண்டுபண்ண ப்ரவ்ருத்திக்கவில்லை; ஜகத்காரணமான வஸ்துவின் மிகுந்த காம்பீர்யத்தை நிச்ச யிப்பதற்காக ப்ரவ்ருத்தித்தது. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பரவஸ்துவை அளவிடமுடியா தென்பதைக்காட்டி அதன் மஹிமையைப் போதிக்க வந்த தால் இம்மந்த்ரம் ஸம்சய ஹேதுவாகாது.

(3) ருத்ரன் ஒருவனே இருந்தாலும் தன்னுடைய ஐச் வர்ய யோகப்ரபாவத்தால் அநேகமாயிரம் சரீரங்களை ஸ்வீ கரிக்கக்கூடும். आत्मनो वै शरीराणि बहूनि भरतर्षभ। योगी कुर्याद्बलं प्राप्य तैश्च सर्वैः महीं चरेत्॥ प्राप्नुयात् विषयान् कैश्चित् उग्रं तपश्चरेत्। संक्षिपेच्च पुनस्तानि सूर्यो रश्मिगणानिव॥ (ஓ! பரத ஸ்ரேஷ்டனே ஒரு யோகியானவன் தன் யோகமஹிமை யினால் அநேக சரீரங்களை ஸ்வீகரித்துக்கொள்வான். அந்த சரீரங்களால் லோகமெங்கும் ஸஞ்சரிப்பான். சில சரீரங்க ளால் விஷயங்களை அனுபவிப்பான், மற்றவைகளால் உக்ர மான தபஸ்ஸைச் செய்வான். அவைகள் யாவற்றையும், சூர்யன் தனக்குள் தன் கிரணங்களை அடக்கிக்கொள்வது

போல ஒடுக்கிக்கொள்வான்)' என்று மஹாபாரதாதிகளில் சொல்லப்பட்டிருப்பதுபோல ஸர்வக்ஞனை ருத்ரன் அநேக சரீரங்களை ஸ்வீகரிக்கமுடியுமாதலால் இந்த மந்த்ரங்களும் ப்ரமாணங்களேயாம்.

(4) 'चत्वारि शृंगाः' என்னும் மந்த்ரத்தால் பரமாத்மா விருஷப ரூபமாய் ரூபகப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நான்கு கொம்புகள் என்பதினால் நான்கு வேதங்களையும் மூன்று பாதங்கள் என்பதால் நித்ய முக்த பத்தர்களென்கிற மூன்றுவித சேதனர்களையும், இரண்டு தலைகள் என்பதினால் ப்ரக்ருதி சுத்த ஸத்வம் என்கிற உபயவிபூதிகளையும், ஏழு கைகள் என்பதினால் மஹத் முதலிய ப்ரக்ருதியின் விக்ருதிகளையும் உடையவனாயும், மூன்றாய்ப் பிரிக்கப்பட்டு என்பதினால் ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்தர்கள் என்கிற மூன்று வ்யூஹங்களாக வகுக்கப்பட்டவருமான வ்ருஷப: ச்ரேஷ்டமான வாஸுதேவன் சப்திக்கிறான்—அதாவது நாம ரூபங்களையுடையதாய்ச் செய்கிறான். மஹோதேவ:—தேவர்களுக்கெல்லாம் தேவனான வாஸுதேவன் சேதனாசேதன ரூபங்களான பதார்த்தங்கள் யாவற்றிலும் அந்தராத்மாவாய் ப்ரவேசித்தான்" என்று அர்த்தம். இங்கு யாகம் வ்ருஷப ரூபமாய் வர்ணிக்கப்பட்டிருப்பதென்பது குமாரிலபட்டருடைய அர்த்தம். ஆகையால் இம்மந்த்ரம் அஸம்பவமான அர்த்தத்தைச் சொல்லவில்லை.

(5) 'யாகத்தில் உபயோகப்படும் அசேதனமான ஔஷதியும் ரக்ஷிக்குமானால் அந்த யாகம் மனிதர்களை ரக்ஷிக்கும் என்பதற்குக் கேட்பானேன்? அப்படியே ப்ராதரனுவாகங்களைக் கற்களும் கேட்கின்றனவென்றால் வித்வான்களான ப்ராஹ்மணர்களும் கேட்கவேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? என்று அர்த்தமாதலால் இத்தகைய மந்திரங்களும் ப்ரமாணமாகக் குறையில்லை.

ப்ராம்மணங்கள்மேல் ஆக்ஷேபங்கள்.

ப்ராம்மணம், விதி என்றும் அர்த்தவாதம் என்றும், இரு வகையென்று சொல்லப்பட்டது. அவைகளில்

விதிவிஷயமான ஆக்ஷேபம்.

(1) 'उदितो जुहोति' சூர்யோதயத்திற்குப்பிறகு ஹோமம் செய்யவேண்டும். अनुदितो जुहोति (சூர்யோதயத்திற்கு முன் ஹோமம் செய்யவேண்டும்).

(2) 'सदेव सोम्येदमग्रमासीत्' (இது முதலில் ஸத்தாகவே இருந்தது) 'असदेवेदमग्रमासीत्' (இது முதலில் அஸத்தாயிருந்தது) என்று இருந்தது இல்லாமலிருந்தது என்றிவை முதலிய பரஸ்பரவிரோதமான வாக்யங்கள் காணப்படுகின்றன.

(3) தவிர 'श्येनेनाभिचरन् यजेत' (சத்ரு ஸம்ஹாரம் செய்வதற்காக ஶ்யேந யாகத்தைச் செய்) என்கிற விதியானது ஒருவனைக் கொல்லும்படியாகக் கெட்டகார்யத்தில் ஏவுகின்றதே?

(4) மேலும் 'ஜ்யோதிஷ்டோமாதி யாகம் செய்தால் ஸ்வர்க்கம் கிடைக்குமாதலால் அவைகளைச்செய்' என்று விதிக்கின்ற வாக்யங்களை நம்பி நாம் ஷை யாகங்களைச் செய்தவுடன் நமக்கு ஸ்வர்க்கம் கிடைப்பதில்லையே. பசியடங்கவல்லவோ போஜனம் செய்கிறோம். போஜனம் செய்தபிறகும் பசியடங்காமற் போவதுண்டா? யாகம் செய்தவுடன் ஸ்வர்க்கம் கிடைக்கக்காணோம்? இவையெல்லாம் ப்ரமாணமாவதெப்படி?

ஸமாதானம்.

(1) 'உதயத்துக்குமுன் ஹோமம் செய்', 'உதயத்திற்குப் பின் ஹோமம் செய்' என்கிற வாக்யங்கள் விகல்பங்களானதால் விரோதமில்லை, ஒரு வாக்கியம் மற்றொன்றைப் பாதிக்காது.

(2) 'இது ஸத்தாக இருந்தது' என்கிற வாக்யத்தில் 'அஸத்' என்னும் சப்தத்திற்கு 'துச்சம்' (ஒன்றுமேயில்லை என்பது) அர்த்தமில்லை அஸத் என்பதற்குச் சூன்யம் அர்த்தமென்றால் 'சூன்யம் இருந்தது' என்றதாயிற்று, அதாவது

'ஒன்றுமில்லை இருந்தது' என்று ஸவவசன விரோதமாகிறது. ஒன்றுமில்லாதது இருக்கமுடியாது. ஆகையால் அஸத் என்றால் சூன்யம் என்று அர்த்தமில்லை. ஆனால் பூர்வகாலத்தில் அதாவது ப்ரளயகாலத்தில் இந்தக் கார்யரூபமான ஜகத்தானது வேறு தர்மத்தோடு கூடியிருந்தது, அதாவது வேறொரு அவையவ அமைப்போடு கூடியிருந்தது என்று அர்த்தம். த்ரவ்யத்திற்கு ஸத்வம் (இருப்பு) அஸத்வம் (இல்லாமை) என்று இரண்டு தர்மங்களுண்டு. ஸத்வ தர்மத்தைக்காட்டிலும் அஸத்வம் என்கிற தர்மம் வேறானது. இது என்று சொல்லப்பட்ட ஜகத்துக்கு ஸத்வ தர்மமாவது நாம ரூபங்கள். அஸத்வ தர்மமாவது அதற்கு விரோதமான ஸூக்ஷ்மாவஸ்தை. ஆகையால் நாம ரூபத்தோடு கூடிய ஜகத்துக்கு அதற்கு விரோதமான ஸூக்ஷ்ம தசையை அடைவதுதான் அஸத்வம் என்று ஏற்படுகிறது. 'ஸத் ஒன்றேதான் இருந்தது', என்பதற்கு ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டமாய், ஸத் என்றும் ஆத்மா என்றும், நாராயணன் என்றும், சொல்லப்பட்ட பரப்ரஹ்மமானது இருந்தது, என்று அர்த்தமாதலால் யாதொரு விரோதமுமில்லை.

(3) ஸ்யேநயாகத்தை விதித்தது எதற்கென்றால்:—அத்ருஷ்டமான ஸ்வர்க்கமோக்ஷங்கள், அவற்றுக்குஸாதந விஷயங்கள் முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு அவைகளில் நம்பிக்கையுண்டாவதற்காக, த்ருஷ்ட பல விஷயங்களில் மனுஷ்யன் புத்திக்கு எட்டாத சில ஸாதனங்களைச் சொன்னால் அதை அனுஷ்டிப்பதில் பலம் கண்டால், அந்த அம்சத்தில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு அதுமூலமாய் அத்ருஷ்ட விஷயங்களிலும் நம்பிக்கை பிறக்குமாதலால், ஸ்யேந யாகம் முதலிய ஆபிசார ப்ரயோகங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

(4) ஸ்வர்க்கம் அடைவதற்குச் சொன்ன பசி போஜந திருஷ்டாந்தம் அநுசிதம், யாகம் செய்து முடிந்த அடுத்த க்ஷணத்தில் ஸ்வர்க்கம் கிடைக்குமென்று சுருதி சொல்லவில்லை. இந்த யாககர்மாவினால் ஆராதிக்கப்பட்ட யஜ்ஞ

புருஷனுன பகவான், கர்த்தாவின் சரீரம் அழிந்தபின் அந்த ஜீவனுக்கு ஸ்வர்க்கத்தைக் கொடுக்கின்ருன் என்பதில் யாதொரு விரோதமுமில்லை.

அர்த்தவாதங்களின் விஷயமான ஆக்ஷேபம்.

(1) "तस्मात् धूमएवाग्नेः दिवाददृशे नार्चिः
तस्मादर्चिरेवाग्नेः नक्तं ददृशे न धूमः"

(பகலில் அக்னியின் ஜ்வாலை காணப்படவில்லை, புகை மட்டும்தான் காணப்படுகிறது. ராத்ரியில் புகை காணப்படுகிறதில்லை. ஜ்வாலைமட்டிலும் காணப்படுகிறது) என்றிவை முதலியவை ப்ரத்யக்ஷ விரோதமான வாக்யங்கள்.

(2) மேலும் சூர்யோதயத்துக்கு முந்தி ஹோமம் செய்ய வேண்டியதென்றும், ஸூர்யோதயத்திற்குப் பிறகு ஹோமம் செய்யவேண்டியதென்றும் விகல்பமாக ஹோமத்தை விதித்த பிறகு, '**प्रातः प्रातरनृतं ते वदन्ति पुरोदयाज्जुह्वतियेऽग्निहोत्रं**' என்கிற வாக்யங்கள் சூர்யோதயத்திற்குமுன் அக்நிஹோத்ர ஹோமம் செய்வதைப் பலவாறு நிந்திக்கின்றன. அப்படியே **यदुदिते सूर्ये प्रातर्जुहुयाद्यथातिथये** என்கிற வாக்யமும் சூர்யோதயத்திற்குப் பின்பு செய்யும் ஹோமத்தையும் அவ்வாறே நிந்திக்கின்றது. ஓரிடத்தில் செய்யவேண்டியதென்று சொன்னதையே செய்யக்கூடாதென்று நிந்தித்தால் அந்த வாக்யங்கள் ப்ரமாணமாகுமா ?

ஸமாதானம்.

(1) '**अग्निर्ज्योतिः ज्योतिरग्निः स्वाहा**' என்று சொல்லி ஸாயங்காலத்திலும் '**सूर्यज्योतिः ज्योतिः सूर्यःस्वाहा**' என்று சொல்லிக் காலையிலும், ஹோமம் செய்யவேண்டியது என்கிற இந்த இரண்டு விதிகளை ஸ்தோத்ரம் செய்வதற்காக 'இரவில் புகை காணப்படவில்லை. ஜ்வாலைதான் காணப்படுகிறது; பகலில் ஜ்வாலைக் காணப்படவில்லை, புகைதான் காணப்படுகிறது' என்கிற இரண்டு அர்த்தவாத வாக்யங்கள் புறப்பட்டன. பகலில் அக்நி ஜ்வாலை அதிக தூரத்தில் நன்ருய்த்

தெரியாதாதலால் காலையில் சூர்யமந்த்ரத்தையே சொல்ல வேண்டும்; இரவில் சூர்யன் அக்நியில் ப்ரவேசிப்பதால் அக்நி ஜ்வாலையானது அதிக தூரத்தில் காணப்படுகிறது. ஆகையால் அக்நி மந்திரத்தை இரவில் ப்ரயோகம் செய்யவேண்டியது; என்று மேற்படி விதிகளை ஸ்தோத்ரம் செய்வதில் அர்த்தவாதங்களுக்குத் தாத்பர்யமாதலால் யாதொரு விரோதமுமில்லை.

(2) ஸூர்யோதயத்துக்குப்பின் செய்யும் ஹோமத்தையும் முன் செய்யும் ஹோமத்தையும் முறையே நிந்திப்பதாய்த் தோன்றும் வாக்யங்கள் அவைகளை நிந்திக்க ப்ரவ்ருத்திக்கவில்லை. ஆனால் மற்றொன்றை ஸ்திதிக்க ஏற்பட்டன. லோகத்தில் ஒரு மனுஷ்யனைப் பார்த்து 'இவன் தான் மனுஷ்யன், மற்றவர்கள் பசுக்கள்' என்று சொன்னால் அவ்வாக்யம் மற்றவர்கள் மிருகங்கள் என்று சொல்லி அவர்களை நிந்திக்காமல் எவ்விதம் ப்ரஸ்தாப மனுஷ்யனை ஸ்தோத்ரம செய்வதாக ஆகிறதோ, 'நான் எல்லா வேதங்களையும் எல்லா வித்யைகளையும் அத்யயனம் செய்தும் கேவலம் மந்த்ரத்தை மட்டும் அறிந்தவனாகிறேனே தவிர ஆத்மாவை அறியவில்லை' என்கிற நாரதருடைய வாக்யமானது இதர வேத பாகத்தை நிந்திக்கக் கருதாமல் அங்கு சொல்லப்படும் பூமவித்யையை மட்டும் ப்ரசம்ஸிப்பதற்கு எவ்வாறு புறப்பட்டதோ; 'ஸாங்கமான வேதாத்யயனம் செய்தும் நிஷ்டையடையாமல் சாண்டில்யர் பாஞ்சராத்ரத்தை அத்யயனம் செய்தார்' என்கிற வாக்யமானது வேதத்தை நிந்திக்க ப்ரவ்ருத்திக்காமல் கேவலம் பாஞ்சராத்ரத்தை ஸ்தோத்ரம் செய்யப் புறப்பட்டதோ; அவ்விதமே அந்தந்த ஹோமத்தை ச்லாகிப்பதற்காக கீழ்க்கூறிய அர்த்தவாத வாக்யங்க்ள் புறப்பட்டன. இதை 'நஹிநிந்தா ந்யாயம்' என்று சொல்லுவார்கள். இந்த ந்யாயத்தைக் கவனிக்காமல் ஸ்ரீசங்கராசார்யர் ப்ரம்ஹ ஸூத்ரத்தில் உத்பத்ய ஸம்பவாதிகரணத்தில் '**विप्रतिषेधाच्च**' என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் 'நான்கு வேதங்களிலும் நிஷ்டையடையாமல் சாண்டில்யர்

இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை அத்யயனம் செய்தார் என்று வேதத்தை நிந்திப்பதால் இந்தக் கற்பனை அஸங்கதம்' என்று எழுதியிருக்கிறார். ஆகையால் இந்த ந்யாயத்தைக் கவனித்து நிந்தை தோன்றும் இடங்களில் ஸமாதானம் செய்து கொள்ளவேண்டும். ஆதலால் யாதொரு விரோதமும் இல்லை.

இதனால் மந்த்ர ப்ராம்மண ரூபமான வேத பாகங்கள் யாவையும் ப்ரமாணம் என்று ஸித்தித்தது.

'த்ரயீ' என்றால் மூன்று வேதமா? நான்கு வேதமா?

இவ்விதம் ப்ரமாணங்களாக நிரூபிக்கப்பட்ட மந்த்ர ப்ராஹ்மணரூபங்களான வேதங்கள் நான்காயிருக்க '**த்ரயீ**' என்று வேதங்களுக்கு எப்படிப் பெயர் வந்தது என்றால்:— '**த்ரயீ**' என்று சொல்வதற்குக் காரணம் வேதமந்த்ரங்களில் மூன்றுவிதமான ரசனைகள் இருப்பதுபற்றி யென்றே சொல்லவேண்டும். அதாவது **பத்யம்** (செய்யுள்) என்று ஓர் ரசனையுள்ளது; அதைத்தான் '**ரிக்**' என்று சொல்லுகிறோம். '**கத்யம்**' (வசநநடை) என்று ஓர் ரசனை. அதைத்தான் '**யஜுஸ்**' என்று சொல்வது. '**காநம்**' (பாட்டு) என்று ஓர் ரசனை; அதை '**ஸாம**' என்று சொல்வது கத்ய பத்யகாநங்களைத் தவிர வேறு ரசநாப்ரகாரமானது ரிக்ஸம்ஹிதையிலாவது யஜுஸ்ஸம்ஹிதையிலாவது ஸாமஸ்ஹிதையிலாவது அதர்வஸம்ஹிதையிலாவது இல்லை. இதை ஜைமினி '**तेषां ऋक् यत्रार्थवशेन पादव्यवस्था गीतिषु सामाख्याशेषे यजुश्शब्दः**' என்று சொன்னார்.

அதர்வணம் வேதமா? அல்லவா?

இவ்விடத்தில் சிலர் ஆக்ஷேபிப்பதாவது:—

'த்ரயீ' என்றால் மூன்று வேதங்கள் என்றுதான் அர்த்தம். அதாவது முன்காலத்தில் ரிக், யஜுஸ், ஸாம, என்று மூன்றே வேதங்கள் இருந்தன. அதர்வண வேதம் முதலில் இல்லை. அதனாலன்றோ வேதங்களுக்கு த்ரயீ என்று

பெயர் வந்தது. ஆகையால் மிகவும் பழைய க்ரந்தங்களில் த்ரயீ என்ற பெயர் வேதங்களுக்கு வழங்கிவந்தது. **अग्नेः ऋचः वायोः यजूंषि सामान्यादित्यात्'** (அக்நியிலிருந்து ரிக்வேதமும், வாயுவிலிருந்து யஜுர்வேதமும் ஆதித்யனிடமிருந்து ஸாமவேதமும் உண்டாயின). **स एतां विद्यां त्रयीमभ्यतपत्'** என்று சாந்தோக்ய ப்ராம்மணத்திலும்,

अग्निवायुरविभ्यस्तु त्रयंब्रह्म सनातनम् ।
दुदोहयज्ञसिद्ध्यर्थं ऋग्यजुस्सामलक्षणम् ॥

(ரிக் யஜுஸ் ஸாம என்கிற புராதனமான வேதங்களை முறையே அக்நி வாயு ஸூர்யன் இவர்களிடமிருந்து கறந்தார்) என்று மநு ஸம்ஹிதையிலும், ஆகிய இது முதலிய பழைய க்ரந்தங்களில் த்ரயீ என்ற பெயர் வேதத்திற்கு வழங்கிவந்தது. ஆனல் சாந்தோக்யாதிகளுக்குப் பிறகு ஏற்பட்ட நவீந க்ரந்தங்களிலோ வென்றல் வேதங்கள் நான்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் அப்போது அதர்வ வேதம் எழுதியாய்விட்டது. உதாஹரணமாய் **'अरे अस्य महतो भूतस्य ऋग्वेदः यजुर्वेदस्सामवेदः अथर्वांगिरसः'** என்று ப்ருஹதாரண்யகத்திலும் **एकतश्चतुरोवेदान् भारतं चैतदेकतः। पुराकिलसुरैस्सर्वैः समेत्य तुलयाधृतम्॥ चतुर्भ्यस्सरहस्येभ्यः वेदेभ्योह्यधिकं यथा। तदा प्रभृति लोकेस्मिन् महाभारतमुच्यते॥'** (முன்பு ஒரு காலத்தில் தேவர்களனைவரும் சேர்ந்து நான்கு வேதங்களை ஒரு தராசுத் தட்டிலும் பாரதத்தை மற்றோர் தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்த்ததில் ரஹஸ்யங்களோடு கூடிய நான்கு வேதங்களைக்காட்டிலும் பாரதம் அதிகமாயிருந்ததால் அதற்கு மஹாபாரதம் என்று பெயர் வந்தது) என்றும்,

योविद्याच्चतुरोवेदान् सांगोपनिषदो द्विजः ।
नचाख्यानमिदं विद्यान्नैवसस्याद्विचक्षणः ॥

(அங்கங்களோடும் உபநிஷத்தோடும் கூடியதாயிருக்கும் நான்கு வேதங்களை அறிந்தும் இந்த மஹாபாரதத்தை எவன்

அறியவில்லையோ அவன் தெளியக்கற்றவன் அல்லன்) என்று பாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் த்ரயீ என்னும் சப்தத்தினுல் ரிக் யஜுஸ் ஸாமாவைத் தான் சொல்லவேண்டும். அதர்வ வேதம் பிற்பாடு ஏற்பட்டதால் அது உபசாரமாக வேதம் என்று சொல்லப்படுவதே யல்லாமல் வாஸ்தவத்தில் அது வேதத்தில் சேரவில்லை என்று.

இந்த வாதம் அஸமஞ்ஜஸமும் நிர்மூலமாயுமிருக்கிறது. த்ரயீ என்கிறபெயரே 'வேதங்கள் மூன்றுதான் இருந்தன' என்று சொல்வதற்குக் காரணமாகாது. ஏனெனில் கீழ்க் கூறியபடி மூன்று வித ரசனைகளோடு கூடியதால் த்ரயீ என்ற பெயர் வழங்கிவந்தது என்கிற காரணம் எப்போதும் ஸித்தமாயிருக்கிறது. ஆகையால் நான்கு வேதங்களையும் த்ரயீ என்று சொல்லத்தட்டில்லை. ஆனது பற்றியே ஸாமவேதத்தில் ரிக்குக்களுடையவும் யஜுஸ்ஸுக்களுடையவும் பாடங்கள் காணப்படுகின்றன. அவ்விதமே யஜுஸ் ஸுக்களிலும் ரிக்குக்களின் பாடங்கள் காணப்படுகின்றன. இதை ஸர்வாநுக்ரமணீ வ்ருத்தியில் 'विनियोक्तव्यरूपश्च त्रिविधस्संप्रदर्श्यते । ऋग्यजुस्सामरूपेण मन्त्रोवेदचतुष्टये । ऋक्पादबद्धा-गीतं तु सामगद्यं यजुर्मन्त्रः । चतुर्ष्वपि वेदेषु त्रिधैव विनियुज्यते ॥ என்று சொல்கிருர். மேலும் சாந்தோக்யம் முதலிய ப்ராசீன க்ரந்தங்களில் மட்டுமே த்ரயீ என்கிற வ்யவஹாரம். அவைகளுக்குப் பிறகு உண்டான ப்ருஹதாரண்யகாதிகளில் அப்படியில்லை என்று சொன்னதும் சரியல்ல. ஏனென்ருல்:— சாந்தோக்யத்திலேயே 'ऋग्वेदं विजानाति यजुर्वेदं सामवेदमाथर्वणं चतुर्थम्' என்றும், மனுஸம்ஹிதையில் 'अभिचारेषु' 'कृत्यासु' என்றும், சதபத ப்ராஹ்மணத்தில் 'त्रयोवेदाः अजायन्त என்றும், மஹாபாரதத்தில் 'अग्निहोत्रं त्रयीविद्या' 'कच्चिद्धर्मे त्रयी मूले' 'नसामऋग्यजुर्वर्णाः' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் எந்த க்ரந்தத்தில் வேதங்கள் நான்கு என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விடத்திலேயே த்ரயீ என்றும் எங்கே த்ரயீ என்று காணப்படுகிறதோ அங்கே வேதங்கள்

நான்கு என்றும் சொல்லியிருப்பதால் பூர்வ பக்ஷியின் வாதம் ஸரியல்ல. ஆனதுபற்றி வாஸ்தவத்தில் ஒன்ருயிருக்கும் வேதமானது மூன்றுவித ரசனேயுடையதாயிருப்பதால் த்ரயீ என்று ப்ரஸித்தியடைந்து கொண்டு, ரிக்ஸம்ஹிதை, யஜுஸ்ஸம்ஹிதை, ஸாமஸம்ஹிதை, அதர்வஸம்ஹிதை, என்கிற நான்கு ஸம்ஹிதைகளால் நான்கு என்று சொல்லப் படுகிறது.

சுருதி நித்யமும் அபௌருஷேயமுமானது.

இவ்விதம் ப்ரமாணங்களாக நிரூபிக்கப்பட்ட த்ரயீ என்கிற நான்கு வேதங்களும் நித்யஸித்தங்களாய் அபௌருஷேயங்களாயிருக்கின்றன. ஏனென்ருல் சப்தத்திற்கும் (பதத்துக்கும்) அர்த்தத்திற்கும் சம்பந்தம் ஸ்வபாவத்தில் ஏற்பட்டது. அக்நி, ஜலம் முதலியவைகளுக்கு சூடு, குளிர்ச்சி முதலிய சக்திகளின் ஸம்பந்தம் எப்படி ஸ்வபாவமோ, கண் முதலிய இந்திரியங்களுக்கு ஜ்ஞான விசேஷத்தை உண்டாக்கும் சக்தியானது எப்படி ஸ்வபாவமோ, அப்படியே சப்தத்திற்கும் அர்த்தத்தைப் போதிக்கும் சக்தி ஸ்வபாவத்தில் ஏற்பட்டது. சப்தத்தை உச்சரித்த மாத்திரத்தினுல் அதின் அர்த்தம் அறியப்படுகிறது. அர்த்தத்தை விட்டுத் தனியாக சப்தம் நிற்காது. சப்தத்திற்கு ஆதாரம் ஆகாசம். சப்தத்திற்கு ஸூக்ஷ்ம ஸ்திதியென்றும் ஸ்தூலஸ்திதியென்றும் ஆக இரண்டு நிலேகளுண்டு. உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களுக்கும் ஸ்தூல ஸூக்ஷ்ம நிலேகளுண்டு. அவ்வாறே சப்தமும் இரண்டு அவஸ்தையோடு கூடியது. ஸ்தூலாவஸ்தையாவது நாம் காதால் கேட்கும்போது அபிவ்யக்தமாயிருக்கும் (வெளியிடும்) அவஸ்தை. நாம் பேசும்போது இல்லாத சப்தத்தைப் புதிதாய் உண்டாக்குவதில்லே. ஏற்கனவே இருக்கும் சப்தததை வெளியாக்குகிறோம். அப்படி நாம் வெளியாக்குவதற்கு முன் சப்தமானது ஸூக்ஷ்மரூபமாய் ஆகாசத்திலிருக்கிறது. வெயிற்காலத்தில் மிகவும் ஸூக்ஷ்மமாயிருக்கும் வாயுவை, விசிறி முதலிய கருவியை அசைப்பதால் ஸ்தூலமாக்குவது போல்,

ஆகாசத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் சப்தத்தை நாம் நமது வாக்கு இந்திரியமாகிய கருவியால் அபிவ்யக்தமாக்குகிறோம். நவீன யந்திரமான (Phonograph) போனோக்ராப் கருவியால், சப்தத்திற்கு ஸூக்ஷ்மாவஸ்தை உண்டென்பது நன்கு விளங்கும். மேல் நாட்டவர்கள் புதியதாய்க் கண்டுபிடித்த தாகச் சொல்லி வரும் ஒவ்வொரு விஷயங்களும் நமது பூர்விகர்கள் வேதத்திலிருந்து சொல்லியிருக்கும் விஷயங்களை த்ருடமாய் ஸ்தாபிக்கின்றன வென்பதற்கு இந்த சப்தானு கரண யந்த்ரம் நமக்கு ஓர் திருஷ்டாந்தம். இந்தப் போனோ கிராப் யந்திரத்தின் உருளையில் ஸூக்ஷ்ம ரூபமாய் அடங்கி யிருக்கும் நாதமே உருளை சுற்றிவரும்போது நமது காதுக்குக் கேட்கும்படியான ஸ்தூலநிலைமையடைகிறது. அதாவது ஆகாசத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் நாதத்தை இந்தக் கருவியானது வாகிந்திரியஸ்தானத்திலிருந்து கொண்டு வ்யக்தமாக்குகிறது. ஆகையால் லோகத்திலுண்டாகும் வ்யக்தமான சப்தங்களெல்லாம் உச்சாரணம் செய்து ஒய்ந்த பிறகு ஆகாசத்திலேயே ஸூக்ஷ்மமாய் ஒடுங்கியிருக்கின்றன. இதை நாம் ஆராய்ச்சி செய்தால் நமது காதுக்குப் புலப்படாததாக ஸூக்ஷ்ம ஸ்திதியில் கோடிக் கணக்காய் சப்தங்கள் ஆகாசத்திலிருக்கின்றன வென்று ஏற்படுகிறது. அக்ஷரரூபமான சப்தங்கள், அக்ஷரங்களின் முன் பின் க்ரமத்தைஅனுஸரித்து ஸூக்ஷ்மரூபமாகப் பதிந்திருக்கின்றன. ஸ்தூல சப்தத்தின் அக்ஷர க்ரமப்படியே இருக்கின்றன. ஆனால் அந்த சப்தங்கள் யாவற்றையும் கேட்பதற்கு நமக்குச் சக்தியில்லை. சக்தியில்லாத காரணத்தினாலேயே அந்த சப்தங்கள் ஒன்றுமில்லை யென்றும், ஆகாசம் சூன்ய மாயிருக்கிறதென்றும் சொல்லத்தகாது. சக்தி விசேஷத் தாலும், அப்யாஸ பாடவத்தாலும் அந்த ஸூக்ஷ்மமான சப்தங்களை ஸ்தூல சப்தங்கள் போல் திவ்ய யோக ஸித்தியடைந்த மஹர்ஷிகள் கிரஹித்திருக்கிறார்கள். அநேக மாயிரம் தூரத்திற்கப்பால் மற்றவர்கள் பேசிக்கொண்ட ஸம்பாஷணைகளை யோக ப்ரபாவத்தால் அறிந்து சொல்லி யிருக்கிறார்கள், அதாவது ஸர்வ வியாபியான ஆகாசத்தில்

ஸூக்ஷ்மமாயிருந்ததையே அறிந்து சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் ஏகாக்ர சித்தர்களாகக் காதுக்கும் ஆகாசத்துக்குமுள்ள ஸம்பந்தத்திலேயே புத்தியை நாட்டி, அப்படியே ஆவ்ருத்தி செய்து அப்யாஸ மஹிமையினால் பெறும் ஸித்தியை திவ்ய ச்ரோத்ரம் என்பார்கள். இதைத்தான் பதஞ்சல மஹர்ஷியானவர், '**श्रोत्राकाशयोः संबन्धसंयमाद्दिव्यं श्रोत्रं**' என்று யோகஸூத்ரத்தில் கூறியிருக்கிறார். இத்தகைய திவ்ய யோக ப்ரபாவத்தால் மஹர்ஷிகள் அநாதியான வேதங்களை அபிவ்யக்தமாக்கியிருக்கிறார்கள். இதையே ஸ்ரீவேதவ்யாஸரும், '**युगांते ऽन्तर्हितान् वेदान् सेतिहासान् महर्षयः । लेभिरे तपसा पूर्वमनुज्ञाताः स्वयंभुवा**' (முன்பு யுகாந்தத்தில் ஸூக்ஷ்மமாய்ப் பதிந்திருந்த வேதங்களை ப்ரஹ்மாவின் அருளால் மஹர்ஷிகள் தபோமஹிமையினால் கண்டுபிடித்தார்கள்) என்று சொன்னார். ஸ்ரீபாஷ்யகாரரும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில், '**वेदानामनन्तत्वात् दुरवगाहत्वाच्च परमपुरुषनियुक्ता परमर्षयः कल्पे कल्पे निखिलजगदुपकारार्थं वेदार्थं स्मृत्वा स्मृत्वा विध्यर्थवादमन्त्रमूलानि धर्मशास्त्राणि इतिहास पुराणानि च चक्रुः**' (வேதங்கள் அநந்தங்களானதாலும் எளிதில் அறியமுடியாததாலும் ஸமஸ்த ஜகத்துக்கும் உபகாரார்த்தமாய்ப் பரமபுருஷனால் ஏவப்பட்ட மஹர்ஷிகள் ஒவ்வொரு கல்பத்திலும் வேதார்த்தங்களை நினைத்து நினைத்துத் தர்ம சாஸ்திரங்களையும் இதிஹாஸ புராணங்களையும் செய்தார்கள்) என்று அருளிச்செய்தார்.

ப்ரளயகாலத்தில் சப்தத்திற்கு ஆதாரமான ஆகாசமும் தனது காரணமாகிய ப்ரக்ருதியில் லயித்திருக்கும்போது, இன்னும் அதிக ஸூக்ஷ்மமாயுள்ள வேதமானது இன்னும் அதிக ஸூக்ஷ்மமான காரணாவஸ்தையையடைந்து ப்ரக்ருதியில் கேவலம் மக்னமாய் (அடங்கி) இருந்தபடியால், அந்தக் காலத்தில் பரம ஸூக்ஷ்மாவஸ்தையைப் பெற்ற வேதத்தை மற்றவர்கள் காணமுடியாது. ஜகத் காரணனும் புருஷோத்தமனுமான ஸ்ரீமந் நாராயணன் ப்ராக்ருத ப்ரளயத்தின் முடிவில் அதற்கு முன்னிருந்த ஜகத்தின்

அவயவ அமைப்பை ஸ்மரித்து, बहुस्यां (பஹு"வாக ஆகக் கடவேன்) என்று ஸங்கல்பித்து தன்னிடத்தில் சக்தி மாத்ராவசேஷமாய் லயித்திருக்கும் (அசேதனங்கள் சேதனங்கள்) யாவற்றையும் பிரித்து மஹத் தத்வம்தொடக்கமான ப்ரஹ்மாண்டத்தை ஹிரண்யகர்ப்பன் வரையில் முன்போலவே ஸ்ருஷ்டித்து, பூர்வபூர்வமான ஆநுபூர்வி விசேஷத்துடன் (வரிசை க்ரமத்துடன்) முன்பின் கிரமத்துடனிருக்கும் வேதங்களை வெளியாக்கி ஹிரண்யகர்ப்பனுக்கு உபதேசம் பண்ணி, முன்போலவே தேவாதி ஆகாரங்களோடு கூடிய ஜகத்தின் ஸ்ருஷ்டியில் அவரை நியமித்துத் தானும் அவருக்கு அந்தராத்மாவாக இருந்தார். இதைத்தான் **'योब्रह्माणं विदधाति पूर्वं योवै वेदांश्च प्रहिणोति तस्मै' 'अस्यमहतोभूतस्य निश्वसितमेतत् ऋग्वेदो यजुर्वेदस्सामवेदोथर्वांगिरसः'** என்கிற சுருதிகளும் ஸ்மிருதி வசநங்களும் சொல்லுகின்றன.

இப்படி ஸ்ரீமந் நாராயணனிடமிருந்து உபதேசம்பெற்ற ப்ரஹ்மா, அவரால் ஏவப்பட்டு லோகங்களையும் ப்ரஜைகளையும் மற்ற எல்லா வஸ்துக்களையும் வேத சப்தங்களைக்கொண்டே ஸ்ருஷ்டித்தார். **'वेदेनरूपे व्याकरोत्सतासती प्रजापतिः'** (ப்ரஜாபதியானவர் சித் அசித் ரூபங்களை வேத சப்தங்களைக் கொண்டு நாநாவிதங்களாகச் செய்தார்) **'सभूरिति व्याहरत् सभूमिमसृजत; सभुवइति व्याहरत् सोन्तरिक्षमसृजत'** (அவர் பூ: என்று சொல்லிப் பூமியை ஸ்ருஷ்டித்தார், புவ: என்று சொல்லி அந்தரிக்ஷத்தை ஸ்ருஷ்டித்தார்) **'एत इति वै प्रजापतिः देवानसृजत, असृग्रमिति मनुष्यान्, इन्दवइति पितॄन्, तिरःपवित्रमिति ग्रहान् आशव इति स्तोत्रं विश्वानिति शस्त्रं, अभि सौभगेत्यन्याः प्रजाः** (ஏதே என்பதினால் இந்திரன் முதலியவர்களின் ஆக்ருதிகளை ஸ்மரித்து அவர்களையும், **அஸ்ருக்ரம்** என்னும் பதத்தைக் கொண்டு மனுஷ்யர்களையும், **இந்தவ:** என்னும் பதத்தைக் கொண்டு பித்ருக்களையும், **திர:பவித்ரம்** என்பதைக் கொண்டு க்ரஹங்களையும் ஆசு சப்தத்தைக்கொண்டு கீதி ரூபங்களான ஸ்தோத்ரங்களையும், **விச்வ** சப்தத்தைக்கொண்டு ஶஸ்த்ரங்களையும் **அபிஸௌபக** என்னும் சப்தத்தினால் மற்ற ஸௌ

பாக்யங்களையுடைய ப்ரஜைகளையும் ஸ்ருஷ்டித்தார்). **'समनसावाचं मिथुन समभवत्'** (அவர் வேதத்தால் ப்ரகாசிக்கப் பட்ட ஸ்ருஷ்டியை மனதால் நினைத்தார்) என்கிற ச்ருதி வாக்யங்களாலும், **'अनादि निधनाह्येषा वागुत्सृष्टास्त्वयंभुवा। आदौवेदमयी दिव्यायतस्सर्वाः प्रसूतयः॥ सर्वेषां तु सनामानि कर्माणि च पृथक् पृथक्। वेदशब्देभ्य एवादौ पृथक् संस्थाश्च निर्ममे॥ नामरूपं च भूतानां कृत्यानां च प्रपंचनं। वेदशब्देभ्य एवादौ देवादीनां चकार सः'** என்றிவை முதலிய மனு பராசராதி வசனங்களாலும், வேத சப்தங்களைக்கொண்டே ஜகத் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று ஏற்படுகிறது. லௌகிக சப்தங்கள் யாவற்றும் வேதராசி யிலிருந்து ஏற்பட்டு அந்தந்த அர்த்தத்தைப் போதிக்கும் படியாய் முன்போலவே ப்ரயோகிக்கப்பட்டுப் பரம்பரையாக வழங்கிவருகின்றன. ஆனல் எல்லா சப்தங்களும் வைதிக சப்தங்களாமாயின் **'छन्दस्येवं भाषायामेवं'** (வேதத்தில் இந்த சப்த ஸ்வரூபம் இவ்விதம், லௌகிக பாஷையில் இவ்விதம்) என்று தனித்தனியாக லக்ஷணம் சொல்லப்பட்டிருப்பது எதனுல் என்ருல்? அந்த வைதிக சப்தங்களுக்கே ச்ருதி யிலிருக்கும் முன்பின் கிரமத்தில் ஆனுபூர்வியிலிருப்பவை களுக்கு வைதிக சப்த லக்ஷணம் என்றும், இல்லாவிடில் லௌகிக சப்த லக்ஷணம் என்றும் தாத்பர்யம்.

ஆகையால் ப்ரளயகாலத்தில் ஸூக்ஷ்ம ரூபமாய்ப் பரமாத் மாவினிடத்தில் வேதமானது இருக்கிறது, பிறகு முன் கல்பத் திலிருந்தபடியே அபிவ்யக்தமாகிறது என்று ஏற்பட்டது. ஒவ் வொரு கல்பத்திலும் இதே மாதிரியாக இருந்தது. ஓவ்வொரு கல்பாரம்பத்திலும் அதற்கு முன்னிருந்த அக்ஷர க்ரமத்தோடு ஸூக்ஷ்மரூபமாயிருந்த வேதத்தைப் பகவான் உபதேசத்தால் அபிவ்யக்தமாக்குகிருர். ஆகையால் வேதத்திற்கு ஆதியே இல்லையென்று ஸித்தமாயிற்று. இனிமேல் வரப்போகிற ப்ரளயங்களிலும் ஸூக்ஷ்மரூபத்தையடைந்து மறுபடியும் ஸ்தூல ரூபத்தையடையப் போவதால் அந்தமுமில்லையென்ற தாயிற்று. ஆகையாலன்ருே ஆதியந்தமில்லாத சுருதியா னது பகவானைப்போல் நித்யமென்று சொல்வது ஆனதால்

சுருதி நித்யமேயல்லாமல் அநித்யமல்ல. ஒருவராலும் உண்டாக்கப்படாததால் அபௌருஷேயமென்றதாயிற்று.

வேதம் அபௌருஷேயம்.

கீழ்க்கூறிய ப்ரமாணங்களால் வேதம் அபௌருஷேயம் என்பது ஸித்தித்தாலும், சிலர் நம்மைப்பார்த்து 'வேதம் மனிதனால்ஏற்பட்டதல்ல என்பதை வைதிகர்களாகிய நீங்கள் ருசுப்படுத்துங்கள்' என்று கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது சரியல்ல, நாகரிகமுள்ள எந்த ராஜாங்கத்திலும், நியாய ஸ்தலங்களிலும் இம்மாதிரியான வாதம் செல்லாது. "நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை, யாதொரு கடனும் வாங்கவில்லை" என்று ஒருவன் சொன்னால், அவன் குற்றம் செய்ததாயும், கடன் வாங்கியதாயும் யார் ருசுப்படுத்தவேண்டியது? குற்றம் சாட்டுகிறவனும் கடன் கொடுத்ததாகச் சொல்லுகிறவனுமல்லவோ ருசுப்படுத்தவேண்டும்? அப்படிக்கல்லாமல் "நீ குற்றம் செய்யவில்லையென்றும் கடன் வாங்கவில்லையென்றும் நீதான் ருசுப்படுத்தவேண்டு" மென்று சொல்லத் தகாது. அதுபோல் வேதம் மனிதரால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிறவர்கள், எக்காலத்தில் எந்த மனிதரால் உண்டாக்கப்பட்டதென்பதைருசுப்படுத்தவேண்டியபாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள். அப்படி அவர்கள் ருசுப்படுத்தாமற்போனால் வேதத்தின் அபௌருஷேயத்வம் த்ருடமாயிற்று. இதுவரையில் எவரும் வேதபௌருஷேயத்வத்தை ருசுப்படுத்தவில்லை.

வேதம் பௌருஷேயம் என்னும் வாதம்.

வேதம் மனிதரால் ஏற்படுத்தப்பட்டதென்று வேதவாக்யங்களைக்கொண்டே ஸ்தாபிக்கமுடியும்.

(1) சில வேதமந்திரங்களுக்கு ரிஷி - சந்தஸ் - தேவதை இவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. 'इमं मे वरुण' என்கிற யஜுர் மந்த்ரத்திற்கு சுநச்சேபர் ரிஷி என்றும், இதுபோல மற்ற ஒவ்வொரு மந்திரங்களுக்கும் ரிஷியின் பெயர் சொல்லப்

பட்டிருக்கிறது. ஆகையால் அந்தந்த மந்திரங்கள் அந்தந்த ரிஷிகளால் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(2) தவிர, காடகம், தைத்திரீயம், என்று வேதபாகங்களின் பெயர்கள் வழங்கப்பட்டுவருகின்றன. கடரால் சொல்லப்பட்டது காடகமென்றும், தித்திரியால் சொல்லப்பட்டது தைத்திரீயமென்றும், '**तेन प्रोक्तं**' என்கிற பாணினி ஸூத்ரத்தால் தத்திதந் என்னும் உருபின் அர்த்தம் ஏற்படுகிறது. தித்திரியால் சொல்லப்பட்டதை அத்யயனம் செய்கின்றவரோ அல்லது அறிகின்றவர்களோ தைத்திரீயர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஆகையால் காடகம், தைத்திரீயம், கௌமுதம் முதலிய ஸகல வேதபாகங்களும்; '**व्यासेनप्रोक्तं' वैयासिकं**' (வ்யாஸரால் சொல்லப்பட்டது, வ்யாஸபுத்ரரால் சொல்லப்பட்டது) என்பதுபோல அந்தந்த மனிதர்களால் செய்யப்பட்டன. காளிதாஸன் முதலியவர்களால் செய்யப்பட்ட வாக்யங்கள் போல அவைகளும் வாக்யங்களானதால் அவைகள் புருஷ நிர்மிதங்கள்.

(3) மேலும் சுருதியில் கண்டோக்தமாய் (மறைபொருளின்றி நேராய்) '**मन्त्रकृतो वृणीते**' (மந்திரஞ்செய்தவர்களை வரிக்கிறான்) '**नमऋषिभ्यो मन्त्रकृद्भ्यः**' (மந்திரங்களைச்செய்த ரிஷிகளுக்கு நமஸ்காரம்) '**अयं सोग्निरिति विश्वामित्रस्य सूक्तं भवति**' (இது விச்வாமித்ரருடைய ஸூக்தம்) என்றிவை முதலிய வாக்யங்களால் ரிஷிகள் மந்த்ரங்களைச் செய்தவர்களென்றும், காண்டங்களை செய்தவர்களென்றும் ஸூக்தங்களை செய்தவர்கள் என்றும் வ்யக்தமாய்த் தெரியவருவதால் அவையெல்லாம் மனிதர்களால் செய்யப்பட்டன என்று.

வேத பௌருஷேயத்வ வாதகண்டனம்.

(1) ஒவ்வொரு மந்த்ரத்தின் அனுஷ்டானகாலத்தில் அந்தந்த ரிஷிகளின் பெயரைச் சொல்லுகிறோமென்பதினாலேயே அந்த மந்திரங்களைப் புதிதாய்ச் செய்தார்கள் என்ற அர்த்தம் ஏற்படாது. அந்த மந்திரங்களை அவர்கள் முறை தவறாமல் அப்யாஸம் செய்து ஸித்திபெற்றார்கள் என்று மட்டுமே தாத்

பர்யமாதலால் அவர்கள் அவைகளைப் புதிதாய்ச் செய்தவர்க ளல்ல. ஆனால் அவர்களின் பெயர்களைச் சொல்லுவது, அந்தந்த மந்த்ரங்களுக்கு மிகுந்த ப்ரபாவம் இருக்கிறதென்றும் அந்தந்த மந்த்ர ஸித்தியைப்பெற்று அவரவர்கள் மஹிமையை யடைந்தார்களானதால் அந்தப்படியே பிறரும் மந்த்ரத்தை அப்யஸித்துப் பெருமையையடையவேண்டுமென்ற எண்ணத் துடனும் அவர்களின் நாமத்தைச் சொல்லும்படி விதிக்கப் டிருக்கிறது. ஸ்ரீமத்ராமாயணம் முதலியவற்றில் ப்ரஸித்தரான சுநச்சேபர், ஒரு ராஜா செய்த யாகத்தில் நரபசுவாக அகப் பட்டுக்கொண்டு விசுவாமித்ரர் உபதேசித்த மந்த்ரத்தால் வருணனை உபாஸித்து அதனால் தனக்கு வந்திருந்த ஆபத்தி னின்றும் விடுபட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, ரிஷி ஜ்ஞானபூர்வகமாக மந்திரானுஷ்டானம் செய்யவேண்டி யதென்றும் அப்படிச் செய்யாவிடில் தோஷம் உண்டு என்றும் சுருதியே சொல்லுகிறது. '**योह वा अविदितार्षेयच्छन्दो दैवतेन मन्त्रेण यजति याजयति वा अध्यापयति व स्थाणुं वर्छति गर्तं वापद्यते प्रवामीयते पापीयान् भवति यातया मान्यस्य छन्दांसि भवन्ति। अथ यो मन्त्रे मन्त्रे वेद, स सर्वमायुरेति श्रेयांश्च भवति अयातया मान्यस्य छन्दांसि भवन्ति तस्मादेतानि मन्त्रे विद्यात्**'। (மந்திரங்களின் ரிஷி சந்தஸ் தேவதை இவைகளையறியாமல் ஒருவன் தான் யாகம் செய்தாலும், பிறருக்குச் செய்வித்தாலும், பிறருக்கு அத்யயனம் செய்வித்தாலும், அவன் ஸ்தாணுவாக (கட்டை-யாக) ஆகிறான். அல்லது படுகுழியில் வீழ்கிறான் நாசத்தை யடைகிறான் மஹாபாபியாயிறான். அவன் செய்த அத்யயனம் பயனற்று கார்யகரமாகிறதில்லை. ஆனால் எவனொருவன் ஒவ்வொரு மந்திரத்திலும் அவைகளை அறிந்து செய்கிறானோ அவன் தீர்க்காயுஸ்ஸாய்ப் பெருமைபெற்று, அத்யயனத்தின் பயனைப்பெறுகிறான். ஆகையால் மந்த்ரங்களின் ரிஷி சந்தஸ் தேவதைகளை அறிந்து அனுஷ்டானம் செய்யவேண்டும்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(2) மேலும் '**तेन प्रोक्तं**' என்பதற்கு அவர்களால் புதிதாய் உண்டாக்கப்பட்டது என்று அர்த்தமல்ல. ஆனால் ப்ர—உக்த

என்று சிஷ்யர்களின் புத்தியில் நன்முய்ப் பதியும்படியாக உபதேசித்து பரவச்செய்யப்பட்டது என்றே அர்த்தமாதலால் விரோதமில்லே. காளிதாஸன் முதலியவர்களின் க்ரந்தங் களின் அந்தந்த ஸர்க்கத்தின் முடிவில் கிரந்தகர்த்தாக் களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதுபோலவே வேதம் புருஷநிர்மிதமாயிருக்கும் பக்ஷத்தில் கர்த்தாவின் பெயர் காணப்படவேண்டாமா ? அப்படிக் காணப்படுகிறதில்லேயே? ஆகையாலும் வேதம் மனுஷ்ய நிர்மிதமல்லவென்றதாயிற்று.

(3) மந்த்ரக்ருத்துக்கள், ஸூக்த க்ருத்துக்கள், (மந்த்ரம் செய்தவர்கள், ஸூத்ரம் செய்தவர்கள்) என்று ரிஷிகளேப் பற்றிச் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் அறியப்பட வேண்டும். அந்த ரிஷிகளுக்கு மந்த்ரக்ருத்வமாவது வேதா த்யயனம் செய்யாமலே க்ரமம், ஸ்வரம், வர்ணம் முதலியவை களில் தவறுதலில்லாமல் மந்த்ரங்களே அறிவது என்பதுதான். உண்மை என்னவென்முல்—ப்ரஜாபதியானவர் பகவானுல் ஏவப்பட்டு '**मन्त्रकृतो वृणीते**' முதலிய வேத சப்தங்களேக் கொண்டே அந்தந்த மந்த்ரம் ஸூக்தம் இவைகளேப் பார்த்த முன்னிருந்த ரிஷிகளுடைய ஆக்ருதிகள் சக்திகள் இவை களேப் பராமர்சித்து அந்தந்த வ்யக்திகளே அந்தந்த சக்தி யுடையவர்களாக ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டிக்கப்பட்ட ரிஷிகளே அந்தந்த மந்த்ரங்களேப் பார்ப்பதற்கு அநுகுணமான தபஸ் ஸுக்களேச் செய்யுங்களென்று ஏவினுர். இவ்விதம் ப்ரஜா பதியால் தத்தந்மந்த்ர ஸ்மிருதி பூர்வகமாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அந்தந்த நாம ரூபங்களேயடைந்து ப்ரவாஹ பரம்பரையாக வந்திருக்கும் கடர், வஸிஷ்டர் முதலிய ரிஷிகள், ப்ரஜா பதியால் கொடுக்கப்பட்ட சக்தியையுடையவர்களாய் தபஸ் ஸைச் செய்து, நித்ய ஸித்தங்களாயும், பூர்வ பூர்வ வஸிஷ் டாதிகளால் பார்க்கப்பட்டனுவுமான மந்த்ரம் முதலியவை களேப் பூர்வகல்பத்தில் அத்யயனம் பண்ணப்பட்ட வேதமந்த்ர ஜ்ஞாநத்தை முன்னிட்டு, அத்யயனம் செய்யாமலே ஸ்வர வர்ணுதிகளால் தவறுதலின்றித் தர்சிக்கின்றுர்கள். அப்படி பார்த்தவர்கள் மதுச்சந்தர் முதலியவர்களென்று சொல்லப் பட்டிருக்கிறது.

காடகம் முதலிய சப்தங்களுக்கும் கல்பாதியில் ரிஷிகள் தபஸ்ஸினுல் அடைந்த வேதபாகங்களைப் பிரவ்ருத்திப் பித்ததால் அப்பெயர்கள் வந்தனவென்றே சொல்ல வேண்டும். வேறுவிதமாகச் சொல்லமுடியாது. கடரால் முதலில் சொல்லப்பட்ட தென்பது சரியல்ல. வேதபௌருஷேயத்வம் சொல்லுகிறவனும் அப்படியே சொல்லுகிருன். தவிர, ஈச்வரனுல் சொல்லப்பட்டதென்பதற்கு விரோதம் வருகிறது. அல்லது கடாதிகள் ப்ரவசனம் செய்ததால் காடகம் முதலிய பெயர்கள் வந்ததென்ருலும் சரியல்ல. ஏனென்ருல் இந்தக் காலத்தில் ப்ரவசனம் செய்கிறவர்களின் பெயர்களும் அந்த வேதபாகங்களுக்கு வரக்கூடும். தவிர கடர் முதலியவர்களுக்கு முன்பு ப்ரவசனம் செய்தவர்களின் பெயர்களும் வந்திருக்கவேண்டும். ஆனுல் அவ்விதம் வரவில்லை. கடருக்கு முன்னிருந்தவர்கள் அநேக சாகாத்யயனம் செய்தவர்கள். கடாதிகள் ஒரே சாகையை மட்டும் அத்தியயனம் செய்தார்கள். ஆதலால் ஏகசாகாத்தியயனம் செய்த கடாதிகள் பெயர் மட்டிலும் வழங்கிவருகிறது என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் கடாதிகளுக்கு முன்னிருந்தவர்கள் அநேக சாகாத்யயனம் செய்தார்களென்று தீர்மானமாய்ச் சொல்வதற்கு ப்ரமாணமில்லை. த்ருஷ்டத்திற்கு விரோதமாய்க் கற்பிப்பது அனுசிதம். அல்லது கல்ப ஆதியில் கடர் முதலியவர்கள் முதலில் ப்ரவசனம் செய்தார்கள் என்கிற காரணத்தால் அந்தப் பெயர் வழங்கி வருகிறதென்றும் சொல்லமுடியாது. ஏனென்ருல் அந்தக்காரணம் ஜகந்நித்யம் என்னும் பக்ஷத்திற்கு விரோதமானது. ஆதியான ப்ரவசனம் என்பதே கிடையாது. ஆகையால் காடகம் முதலிய வேதபாகங்களின் பெயர் வந்ததற்குக் காரணம் வேறு சரியானபடி சொல்ல முடியாததால் கீழ்க்கூறியபடி கடர் முதலிய மஹர்ஷிகள் தங்கள் தபஸ்ஸால், நித்யஸித்தமான வேதபாகங்களை யறிந்தார்கள் என்கிற காரணத்தாலேயே காடகம் முதலிய பெயர்கள் வழங்கிவருகின்றன என்றே சொல்லவேண்டும். ஏனவே ரிஷிகள் மந்த்ரம் செய்தவர்கள் என்றும், வேதங்கள்

நித்யங்கள் என்றும் சொல்வதில் யாதொரு விரோதமுமில்லை யாதலால் வேதம் புருஷ நிர்மிதமல்ல.

மேலும் த்ருஷ்டமான சில பலங்களைப்பற்றியே அதற்கு ஸாதனமான உபாயங்கள் மனிதன் புத்திக்கு எட்டுவதில்லை. நினைத்தபோது மழையை வரவழைப்பதற்கு உபாயத்தை மனிதன் தன்னுடைய புத்திபலத்தால் மனதால்கூட நினைக்க முடியுமா? **'कारीरीं वृष्टिकामो यजेत'** (மழை வேண்டுவோன் காரீரியாகம் செய்யவேண்டும்) என்பதை மனுஷ்ய புத்தியால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும். விதிப்படி காரீரியாகம் செய்தால் மழை நிச்சயமாய் வருவதென்பதைக் கண்டிருக்கிறார்கள். அதைப் பரம நாஸ்திகனும் மறுக்கமுடியாது. த்ருஷ்டமான பலவிஷயத்திலும் மனிதனால் சிந்திக்கமுடியாத ஸாதனத்தை வேதம் சொல்லுகிறது. அவ்விதமே அத்ருஷ்டமான ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளின் ஸ்வரூபங்களையும் அவைகளையடைய உபாயங்களையும் வேதம் ப்ரதிபாதிக்கின்றது. வேதம் மனிதனால் செய்யப்பட்டதென்கிறபக்ஷத்தில் அதைச் செய்தவர் ஸ்வர்க்க மோக்ஷஸ்வரூபங்களையும் அவற்றின் ஸாதனங்களையும் எப்படி அறிந்தார்? ஒரு மனிதனால் அறியமுடியாததும் அடைய முடியாததுமான பலத்தையும் அதின் உபாயத்தையும் மற்றவர்களுக்கு உபதேசித்தான் என்றும், அதை மற்றவர்கள் நம்பி நடந்தார்கள் என்றும் சொல்வது மிகவும் பரிஹஸிக்கத்தக்கது. ஒரு பிறவிக்குருடன் வெளிச்சத்தின் ஸ்வரூபத்தையும் அதையடைய உபாயத்தையும் உபதேசித்தான் என்று சொல்லும் வாக்யம்போல் இதுவும் ஸ்வவசன விரோதமாயும் அஸம்பவமாயுமிருக்கிறது.

அல்லது, பித்தன் பிதற்றுவதுபோல், அஸங்கதமாய் யாரோ ஒருவன் வேதத்தை எழுதிவைத்தான் என்று சொன்னால் அதுவும் சரியல்ல, ஏனென்றால் வேதங்களில் சொல்லியிருக்கும் விஷயங்களைப் பார்த்தால் அந்த வாதம் ஒரு க்ஷணமும் நிற்காது. ஒவ்வொரு பல விஷயத்திலும் ஸாத்ய ஸாதக இதி கர்த்தவ்யதா (செய்யப்பட்

வேண்டியது, செய்பவன், அங்கம்) ரூபமாய் அங்கோபாங்கங்களோடு கூடிய மிகவும் அத்புதமான அநேக காரிய கலாபங்களும், அவற்றின் பலங்களும், வாக்கு மனதுகளுக்குக் கோசரமல்லாத பரப்ரஹ்ம ஸ்வரூபாதிகளும், ஜகத் ஸ்ருஷ்டி முதலியவைகளும், மயிர்க்கூச்சலுண்டாக்கும்படியான அழகிய ஸ்தோத்ர வர்ணநங்களும் அதி விசித்ரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. வெகு ப்ரயாஸத்துடனேயே ஸாதிக்கத் தக்கதாயும், அநேக புருஷர்களாலே அனுஷ்டிக்கப்பட வேண்டியதாயும் ஒவ்வொரு சிறு விஷயங்களிலும் மந்த்ர தந்த்ர ஸ்வரவர்ணாதி விவரங்களோடும் கூடிய ஜ்யோதிஷ்டோமம் என்றும் ஸோமமென்றும் இன்னும் பலவிதங்களான யாகங்கள் முதலியவற்றை ஒரு பைத்தியக்காரன் விதித்தான் என்றும், அதைப் புத்திமான்கள் அநேகர் வெகுகாலமாய் அந்த (குருட்டு) பரம்பரையாய் அனுஷ்டித்துக்கொண்டு நெருப்பில் நெய்யைக் கொட்டித் தங்களுடைய சக்தி திரவ்யம் காலம் முதலியவைகளை வ்யர்த்தமாக்கினார்களென்றும் சொல்வதை உன்மத்தன் தவிர வேறு எவன் நம்புவான்?

அல்லது ஒரு புத்திமானான மனிதன் மற்றவர்களை வஞ்சிப்பதற்காக இவ்விதம் எழுதி வைத்தானென்றும், அதை நம்பிப் பின் வந்தவர்கள் ஏமாந்து அனுஷ்டித்து வந்திருக்கிறார்களென்றும் சொல்லத்தகாது. ஏனென்றால் முன்சொன்னபடி எவ்வளவு புத்திமானாக இருந்தாலும் அத்ருஷ்ட விஷயங்களைப்பற்றி ஒரு மனிதன் சொல்ல முடியாது. அந்தப் புருஷன் பிறரை வஞ்சிக்கக் காரணமும் சொல்லமுடியாது. தவிர **'सत्यं वद' 'धर्मं चर' 'नहिंस्यात्सर्व-भूतानि'** (உண்மை பேசு, தர்மம் செய், எந்த ப்ராணியையும் ஹிம்ஸிக்காதே) என்பது முதலிய ஸாமாந்ய தர்மவிதி வாக்யங்களைப் பார்த்தால் ஸகல லோகத்தினுடைய நன்மைக்காகவே ஸர்வ வேதங்களும் புறப்பட்டனவென்று ஏற்படுமே தவிர, ஜனங்களை வஞ்சிக்கப் புறப்பட்டனவென்று ஏற்படாது. காரீரி முதலியவைகளால் ஸாத்யமான த்ருஷ்டமான மழை

முதலியவற்றுல் அத்ருஷ்டமான ஸ்வர்க்க மோக்ஷாதிகளும் அவற்றின் ஸாதநங்களும் உண்மையென்றே சொல்ல வேண்டுமாதலால், ஆயிரம் தாய் தந்தையர்களைக் காட்டிலும் அதிகவத்ஸலையான சுருதியானது உண்மையை உள்ளபடி உரைப்பதாய் ஸமஸ்த ஜகத்துக்கும் ஹிதத்தையே போதித்துக்கொண்டு அநாதி ஸித்தமாயும் அபௌருஷேயமாயுமிருக்கிறதென்பதில் யாதொரு ஸம்சயமுமில்லை.

இப்படி ஸர்வவித்யாஸ்தானங்களுக்கும் மூலபூதமாயும், ஸத்யமாயும், நித்யமாயும், உள்ளபடி உண்மையுரைக்குமதாயிருக்கும் வேதமானது ஸர்வப்ரகாரத்திலும் ஸர்வவிஷயங்களிலும் ப்ரமாணம், என்பதையும், நமது பூர்விகர்கள் அநாதி காலமாக க்ரந்தமூலமாயும், அநுஷ்டான மூலமாயும், உபதேச மூலமாயும் தெரிவித்து, ஸத்யவிஷயங்களில் ப்ரமாண்யசங்கை மற்றவர்களுக்கு நேர்ந்த காலத்தில் வேதத்தில் சொல்லப்பட்ட தப்தாய: பரசுயாயமாக (உலையில் காய்ச்சப்பட்ட இரும்பையும் கோடாலியையும் கையில் தரித்து) பந்தயங்களை நிர்வஹித்து ஸத்யத்தை நிலைநாட்டியிருக்கிருர்களென்பது பூர்விகர்களின் சரித்ரங்களால் தெரிய வருகிறது. சுருதியைக் காட்டிலும், மேலான ப்ரமாணம் ஒன்றுமில்லையென்றும், அதனுல் ப்ரதிபாதிக்கப்படும் கேசவனைக்காட்டிலும் பரதத்வமில்லையென்றும் ஸத்யம் பண்ணும் தீர்மானத்தோடுகூட இரண்டு கைகளையும் உயரத்தூக்கிக்கொண்டு அநேக வித்வான்களின் கூட்டத்தில் சபதஞ்செய்து 'सत्यं सत्यं पुनस्सत्यमुद्धृत्यभुजमुच्यते। वेदशास्त्रात्परं' என்று வஸிஷ்ட புலஸ்த்ய வரப்ரஸாதத்தால் பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞானம் பெற்ற பராசரர் குமாரரும் பஞ்சமவேத கர்த்தாவுமான ஸ்ரீவேதவ்யாஸ பகவான் சொன்ஞர்.

आद्यन्ताभाववन्तोऽपुरुषमतिकृता: सृष्टिहेतुश्च नित्या:
चत्वारस्संहिताभि: त्रिविधरचनया लब्धसंज्ञास्त्रयीति ।
वेदामन्त्रादिरूपा अनघगुणगणास्स्यु: प्रमाणं स्वतस्ते
सत्यं सत्यं च सत्यं पुनरिति कथयन् डिंडिमस्ताड्यतां न: ॥

(ஆதியந்தமில்லாதவைகளாயும், புருஷபுத்தியிலும் செய்யப் பட்டதல்லவாயும், ஜகத்ஸ்ருஷ்டிக்குக் காரணமாயும், நித்யங் களாயும், நான்கு ஸம்ஹிதைகளுடனும் மூன்றுவித ரசனை களுடனும் கூடியவையாயும், த்ரயீ என்று பெயர்பெற்றவை யாயும், மந்த்ரம் ப்ராம்மணம் என்னும் ரூபங்களையுடையவை யாயும், தோஷலேசமுமற்ற உயர்ந்த குணங்களையுடையவை யாயும், பிறஉதவியின்றியே தாமே ஸ்வயமாகவே ப்ரமாணங் களாயிருக்கும் வேதங்கள், இது ஸத்யம், ஸத்யம், மேலும் ஸத்யம் என்று சொல்லிக்கொண்டே நமது ஜயபேரிகை முழங்கட்டும்.)

ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர் இயற்றிய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரத்தில் நான்காவது அதிகாரம் ஶ்ருதி ப்ராமாண்யம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஜீவபர ஸம்பந்தம்.

ஸ்ரீபாஷ்யகாரர் வேதார்த்தஸங்க்ரஹத்தின் ஆரம்பத்தில் ஜீவாத்ம பரமாத்மாவின் யதாவத்தான ஸ்வரூபஸ்வபாவஞானத்துடன் வர்ணாச்ரம தர்மங்களை அங்கமாகவுடைய பரம புருஷ சரணயுகள த்யான அர்ச்சன ப்ரணாம நாமஸங்கீர்த்தனம்முதலிய மானஸ, வாசிக காயிகமான மூன்றுவித உபாஸனத்தை மிகவும் ப்ரீதியுடன் செய்வதற்கு பலம் பரமாத்ம ப்ராப்தியென்று அருளிச் செய்தார். எந்த கர்மம் செய்தாலும் ஜீவபரயாதாத்ம்யஞானத்துடன், பலத்தில் ஆசையில்லாமல் செய்யவேண்டியதென்று கீதாசார்யன் கீதையில் முறையிடுகிறன். ஆகவே, ஜீவபரஸம்பந்தஞானம் மிகவும் அவசியமென்று ஏற்படுகிறது. நம் ஆசார்யர்கள் முதல் ரஹஸ்யமான திருமந்திரத்தினுடைய தாத்பர்யமானதும், ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ளதுமான ஒன்பதுவித ஸம்பந்தமும் ஸ்வரூபஞானத்துக்கு நித்யம் அனுஸந்தேயமென்று, தாங்கள் அனுஸந்தித்தும் பிறருக்கு உபதேசித்தும் போருவார்கள். **'पिता च रक्षकः शेषी भर्ताज्ञेयो रमापतिः। स्वाम्याधारो ममात्मा च भोक्ताचाद्यमनूदितः॥'** என்று சொல்லப்பட்ட ஒன்பதுவித ஸம்பந்தங்களுள் முதலாவது.

(1) பித்ருபுத்ரஸம்பந்தம்

இதை ஜன்யஜனகஸம்பந்தம் என்றும் சொல்லுகிறது. ஸமஸ்த ஜீவாத்மாக்களுடைய ஸ்வரூபத்திற்கு பரமாத்மா காரணமானதுபற்றி இந்த ஸம்பந்தத்தை பித்ருபுத்ரஸம்பந்தமென்றூர்கள். **'यतो वा इमानि भूतानि जायन्ते'** — (போக்தாக்களான ஜீவாத்மாக்களும், போக்ய வஸ்துக்களான அசேதன பதார்த்தங்களும் பரமாத்மாவினிடத்திலிருந்து உண்டாகின்றன) என்று சுருதியானது ஜீவாத்மாக்களுக்கு பரமாத்மா

ஸ்ருஷ்டிகர்த்தா என்று சொல்லுகிறது. ஸ்வரூபமாவது - '**व्यवहारार्हत्वं मानसंबन्धार्हत्वं च**' வ்யவஹாரத்துக்கு லாயக்கா யிருப்பது அல்லது ப்ரமாணஸம்பந்தத்திற்கு லாயக்காயிருப் பது என்று லக்ஷணம் கூறுகின்றனர். இவ்வர்த்தத்தை கீதையில் பகவான் **न तदस्तिविनायत्स्यात् मयाभूतं चराचरं** ஸர்வ பூதங்களும், நான் அவைகளுக்கு ஆத்மாவாக நிற்காமற் போனல் இருக்கமாட்டா. எல்லா வஸ்துக்களும், எல்லா அவஸ்தைகளிலும் அவைகளுக்கு உயிர்நிலையான என் னேடே கூடியிருக்கின்றன என்று ஜீவஸ்வரூபத்திற்குத்தான் காரணமென்று சொன்னன். ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாரும், "**நாம் அவனிவனுவன் அவளிவளுவளெவள், தாமவரிவருவர் அதுவிதுவுது வெது, வீமவையிவையுவை அவை நலம் தீங்கவை ஆமவையாயவை ஆய்நின்ற அவரே**'' என்கிற பாட்டில், ஆண், பெண், அலி, சிறந்த பொருள்கள், அழியும் பொருள்கள், விலக்ஷணப் பொருள்கள், அவிலக்ஷணப் பொருள்கள், இறந்தகாலப் பொருள்கள், எதிர்காலப் பொருள்கள் என்று சில வகைகளாலே இந்த லீலாவிபூதியி லுள்ள ஸகல பதார்த்தங்களையும் நிர்தேசித்து, இவற்றின் ஸ்வரூபம் எம்பெருமான் அதீனமென்று அருளிச் செய்தார். இங்கு **வீமவை** என்று அழியக்கூடிய பொருள்களைச் சொன் னது அழியாப் பொருள்களுக்கும் உபலக்ஷணமாகும். ஸ்வரூ பேண நித்யங்களான வஸ்துக்களுக்கும் ஸ்வரூபம் பகவதா யத்தமாயிருக்குமென்று பாஷ்யத்திலே சொல்லப்பட்டிருக் கிறது. **नित्यतया शास्त्रावगतस्य वस्तुनः परमपुरुषनित्येच्छ्या देव तथात्वमस्तीति शास्त्रादवगम्यते** - நித்யமென்று சாஸ்த்ரத்தாலே யறியப்பட்ட வஸ்துவினுடைய நித்யத்வம், பரமபுருஷனுக்கு நித்யேச்சா விஷயமாகையாலே உண்டாயிற்று என்று அவனுடைய ஸர்வஸத்தாஹேதுத்வத்தைக் காட்டுகிற சாஸ்த்ரத்தாலே யறியப்படுகிறது—என்று, இப்படியே ஆழ் வானும் '**इच्छात एव तव विश्व पदार्थसत्ता नित्यं, प्रियास्तवतु केचन ते हि नित्याः। नित्यं त्वदेकपरतन्त्रनिजस्वरूपाः भावत्कमंगलगुणाहिनि दर्शनं नः॥** சேதன அசேதனம் என்கிற எல்லா பதார்த்தங் களுடையவும் உத்புத்தியானது உன்னுடைய ஸங்கல்பத்தினு

லேயே ஏற்படுகிறது. ஆனால் சில பதார்த்தங்கள் உனக்கு நித்யம் ப்ரியமாயிருக்கின்றன. அதாவது நித்யமாகவே யிருக்கவேண்டுமென்று விரும்பப்படுகின்றன. அவைகள் தான் நித்யவஸ்துக்களென்று சொல்லப்படுகின்றன. இதற்கு த்ருஷ்டாந்தம், உன் ஒருவனுக்குமே பரதந்த்ரமான உன்னுடைய திருக்கல்யாணகுணங்கள். ஆகையால் நித்யவஸ்துக்களின் ஸத்தையும் உன்னுடைய ஸங்கல்பாதீனம் என்று சொல்லத்தட்டில்லை. இந்த பித்ருபுத்ரஸம்பந்தமானது திருமந்த்ரத்தின் ப்ரதமாக்ஷரமான அகாரத்தாலே சொல்லப்படுகிறது. இந்த ஸம்பந்தத்தின் ப்ரகாரம் விசேஷணவிசேஷ்ய ஸம்பந்தம். இந்த விசேஷணவிசேஷ்ய ஸம்பந்தமானது ப்ரக்ருத்யர்த்தத்தால் பிறக்கும் சங்கையை நிவர்த்திக்கிறது. இதை விவரிப்போம். **ब्रह्मणः प्रणवं कुर्यादादावन्ते च सर्वदा। स्रवत्यनोंकृतं पूर्वं परस्ताच्च विशीर्यते ॥** (வேதாத்யயனத்துக்கு முன்னும்பின்னும் ப்ரணவத்தைச் சொல்லவேண்டியது. முன்புபண்ணாதபோது ஒழுகிப்போம் பின்புபண்ணாதபோது சிதறிப்போம்) என்கையாலே வேதத்தின் ஆதியிலும் கடைசியிலும் ப்ரயோகிக்கப்படுவதான ப்ரணவத்துக்கு **यो वेदादौ स्वरः प्रोक्तः वेदान्ते च प्रतिष्ठितः तस्य प्रकृतिलीनस्य यः परस्स महेश्वरः** என்று ஸ்வரசப்தவாச்யமாய் செப்புப்போலே வேதத்தை ஆத்யந்தங்களிலே மூடியிருப்பதான இந்த ஸ்வபாவத்துக்கு மேலே ப்ரக்ருதிலயத்தைச் சொல்லி அதற்கு ஸர்வேசுவரன் வாச்யன் என்கையாலே, இந்த ப்ரணவத்துக்குச்சொன்ன ப்ரக்ருதிலயமாவது ஸ்வகாரணபூதமான அகாரத்திலே லயிக்கையென்றபடி. இத்தாலே அகாரமானது ப்ரணவத்துக்குக் காரணம் என்றதாயிற்று. **ओंकारप्रभवा वेदाः** என்று எல்லா வேதஸமூஹத்துக்கும் காரணம் ப்ரணவம். ப்ரணவத்துக்குக் காரணம் அகாரம். ப்ரணவத்துக்குக் கார்யமான வேதமானது தனக்குக் காரணமான ப்ரணவத்திலே லயிக்கும். அகாரத்துக்குக் கார்யமான ப்ரணவமும் தனக்குக் காரணமான அகாரத்திலேலயிக்கும். இப்படி ப்ரணவத்துக்கு ப்ரக்ருதியான (காரணமான) அகாரத்துக்கு எவன் வாச்யனோ அவன் ஸர்வாதிகனான ஸர்வேசுவரன் என்றதாயிற்று. ஆகையாலே

எல்லா வாசக ஸமூஹத்துக்கும் ப்ரக்ருதியான அகாரத்துக்கு प्रकृतिश्च प्रतिज्ञा दृष्टान्तानुपरोधात् என்கிற ஸூத்ரத்தாலே உபாதானகாரணமாகச் சொல்லப்பட்டதும், எல்லா வாச்ய ஸமூஹத்துக்கும் ப்ரக்ருதிபூதமுமான பரப்ரஹ்மவாசகத்வம் ஸித்தமாகையாலே, இவ்வகாரத்தாலே ஸர்வவாசகத்வம் சொல்லப்படுகிறது. அகாரத்துக்கு ஸமஸ்தசப்தமூலத்வம் ஸ்வபாவமானபடியாலும், ப்ரஹ்மத்துக்கு ஸர்வவாச்யமூலத்வம் ஸ்வபாவமானபடியாலும், இரண்டுக்கும் வாச்ய வாசகஸம்பந்தம் அர்த்தஸித்தமாய்த் தோற்றுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையாலேதான் "अकारोवैसर्वावाक्" என்கிற ஸாமாநாதிகரண்யசுருதியானது (co-ordination) காரணத்வத்தைப்பற்றியிருக்கிறது: அதாவது 'எல்லா வாக்கும் அகாரம்' என்றால், அகாரம் எல்லா சப்தத்துக்கும் காரணம் என்று பொருளாயிற்று. அது எதுபோல் என்றால் 'सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शांत उपासीत' இந்த ஜகத்தெல்லாம் ப்ரஹ்மம், தஜ்ஜமாய் அந்த ப்ரஹ்மத்தில் நின்றும் பிறக்கையாலும், தல்லமாய் அதிலே லயிக்கையாலும், ததநமாய் அத்தாலே உயிர்பெற்று ரக்ஷிதமாகையாலும், அதுவாயிற்று என்று சொல்லுமாப்போலே, இங்கு ஸர்வசப்தகாரணம் அகாரமாயிற்று. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார் திருவள்ளுவரும். 'अकारो वै विष्णुः' 'अकारो विष्णुवाचकः' 'अक्षराणामकारोस्मि' என்றும் சொல்லியிருப்பதற்குக் காரணம், 'अ इति भगवतो नारायणस्य प्रथमाभिधानं' என்று சொன்னபடி, அகாரமானது பகவானுக்கு முதல் திருநாமம் என்பதைப்பற்றியேயாம். பரதேவதாபாரமார்த்ய நிஷ்கர்ஷம் செய்த ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களும் ஆழ்வார்களும் அகாரவாச்யமான பரப்ரஹ்மமானது ஸ்ரீமந் நாராயணன்தான் என்று உத்கோஷம் செய்கின்றனர். यःपूर्व्याय वेधसे नवीयसे सुमज्जानयेविष्णवेददाशति - பூர்வமான வேதாவாய், இப்படி முன்பே ஸ்ரஷ்டாவாயிருக்கச்செய்தே மிகவும் புதியன் என்னும்படி நவீனனாய், ஸுமஜ்ஜானியாய்— சோபனமான ஞானத்தையுடையவளாயும் சோபனமான ஆனந்தத்தையுடையவளாயுமுள்ள பத்னியையுடையவனாய்,

அல்லது ஸுமதியாய், சோபனவதியான ஜாயையையுடைய வன் என்னுதல்; இத்தால் ஞானனந்தமயியாய், மங்களாவ ஹையான லக்ஷ்மியை பத்னியாகவுடையவன் என்றும், 'ह्रीश्चतेलक्ष्मीश्चपत्न्यौ' என்றும் சொல்லப்பட்ட ஸர்வேசுவரனு க்கு யாவன் ஒருவன் ஆத்மஸமர்ப்பணத்தைப் பண்ணுகிருன் என்றுசொல்லுகையாலே, காரணபூதனுயிருப்பவன் ச்ரிய:பதி என்றதாயிற்று. அகாரவாச்யனுன பகவான் ஸமஸ்த சித்துக் களுக்கும் ஸமஸ்த அசித்துக்களுக்கும் காரணம் என்று சொன்னல், நித்யவஸ்துக்களும் கார்யங்கள் உண்டானவை என்று ஏற்படுகிறது. கார்யங்களாகில் அநித்யங்களாக வேண்டும். ஆகையால் நித்ய வஸ்துக்கள் அநித்யங்களாய் விட்டனவே! என்கிற சங்கை தோன்றுகிறது. இந்த சங் கைக்கு பரிஹாரம் விசேஷண விசேஷ்ய ஸம்பந்தத்தால் செய்யப்படுகிறது. நித்யமான ப்ரஹ்மத்திற்கு கீழேசொன்ன நித்யவஸ்துக்கள் விசேஷணம் (attributes) ஆகையாலே, அவைகளுக்கு அநித்யத்வம் சங்கிக்க முடியாது. வஸ்த்ரத் துக்கு, அதனுடைய வெளுப்பு முதலிய நிறமானது வஸ்த் ரத்தையாச்ரயித்தே நிற்குமேயல்லது வஸ்த்ரத்தை விட் டுத் தனியே நிற்காது. அதுபோல் சித்துக்களும் அசித் துக்களும் பகவத்ஸ்வரூபத்தைப்பற்றியல்லது ஸத்தையற் றிருக்கும். ஆகையால் இந்த ஸம்பந்தம் நித்யகார்யாகாதித்வ ஸூசகமாயிற்று. ஆக திருமந்த்ரத்தில் ப்ரணவத்தின் முத லக்ஷரமான அகாரத்தாலே ஏற்படுகிற கார்யகாரணபாவ விசேஷண விசேஷ்ய ஸம்பந்தஞானம் பிறந்தால், பகவானைத் தவிர வேறுபொருள் இந்த ஜகத்துக்குக் காரணமாகுமோ என்கிற சங்கை வேறுடன் அற்றுப்போகும்.

(2) ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தம்.

இப்படி அக்ஷரஸ்வபாவத்தாலே உபாதான காரணத் தைச் சொல்லுகிற 'அ' என்கிற பதத்தினுடைய தாதுப்ரத்ய யமுகத்தால் (by root and termination) உண்டான வ்யுத்பத் தியை ஆராய்ந்தவாறே இரண்டாவது ஸம்பந்தம் தோன்று கிறது. येन जातानि जीवन्ति,, ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்

மாக்கள் ஸ்ருஷ்டிக்கும் பரமாத்மாவினால் ரக்ஷிக்கப்படுகின்றனர் என்கிற ப்ரஸித்தமான ரக்ஷ்யரக்ஷக ஸ்வரூபத்தைக் காட்டுகிற இந்த இரண்டாவது ஸம்பந்தம் காரணத்வ ஸம்பந்தத்திற்கு அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது. "மூவாத்தனிமுதலாய் மூவுலகுங்காவலோன்"—என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி காரணவஸ்துவே ரக்ஷகனாக வேண்டும்.

அவ-ரக்ஷணே என்கிற தாதுவின் (root) மேலே **अन्येभ्यो हि दृश्यते'** என்கிற க்விப் ப்ரத்யயத்தைப் பண்ணி, அதினுடைய அனுபந்தங்களை லோபித்து, **'लोपोव्योर्वलि'** என்று தாதுவினுடைய வகாரத்தையும், **वेरपृक्तस्य** என்று ப்ரத்யய வகாரத்தையும் லோபிக்கச்செய்தால், 'அ' என்று ரூபமாய் அது ஸர்வரக்ஷகனான ஸர்வேசுவரனைச் சொல்லுகிறது. தாதுவின் அர்த்தம் ரக்ஷணமாகையாலே, ரக்ஷணமாகிற தர்மமானது ஆச்ரயத்தைவிட்டு நிற்காமல் ஸாச்ரயமாய் ஸர்வவிஷயமுமாயல்லது இராமையாலே, அதுக்கு ஆச்ரயமாக பகவத்ஸ்வரூபம் புகுந்தது. **नहिपालनसामर्थ्यं मृते सर्वेश्वरं हरिम्'** என்கிறபடியே ரக்ஷணஸாமர்த்தியம் ஸர்வேசுவரனிடத்திலேயேயிருப்பதால் பகவத்ஸ்வரூபம் ப்ரஸ்துதமாயிற்று. ப்ரதமாக்ஷரமான அகாரம் தாதுவிலே பதமாய் நிஷ்பன்னமாகையாலே ரக்ஷகனான ஈசுவரனுக்கு வாசகமாகும். இந்த ரக்ஷணத்தை ஸ்திதி என்றும் சொல்வதுண்டு. **'सत्तानुवृत्तिः स्थितिः'** ஸத்தை தொடர்ந்து நிற்பது ஸ்திதியாகும். **स्वरूपस्य कालान्तरावच्छिन्नाकारविरहः**—முற்கூறிய ஸ்வரூபமானது மற்றொரு காலத்தில் வேறு உருவை அடையாமலிருப்பது ஸ்திதி என்னப்படும். ஜீவாத்மாக்களை பரமாத்மா ரக்ஷிக்கிறான் என்கிற காரணத்தால் இந்த ஸம்பந்தம் சொல்லப்படுகிறது. பகவான் கீதையில் **'मयिसर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव'** (7-7) இந்த சேதனாசேதன வஸ்துக்களெல்லாம் கார்யாவஸ்தையிலும் காரணாவஸ்தையிலும் எனக்கு சரீரமாகவே இருந்துகொண்டு ஒரு நூலில் மணிக்களின் கூட்டம் போல் ஆத்மாவாகிய என்னையாச்ரயித்து நிற்கின்றன என்

கிற சுலோகத்தால் அவைகளின் ஸ்திதியானது தனது அதீனமென்று சொன்னான். நம்மாழ்வாரும், " அவரவர் தம தமது அறிவறி வகைவகை அவரவர் இறையவர் என அடியடைய வர்கள்அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர் அவரவர் விதி வழி அடையநின்றனரே" (1–1–5) என்கிற பாசுரத்தால், ஸகல பதார்த்தங்களினுடைய ஸ்திதி என்றுசொல்லப்பட்ட ரக்ஷண மானது பரமாத்மாதீனம் என்றருளிச்செய்கிறார். உலகத்தில் நடக்கிற ரக்ஷணத்தொழில் யாவும் எம்பெருமானுடையதே. சிவன், பிரமன், இந்திரன், அக்னி முதலிய இதர தெய்வங்க ளைக்குறித்து அந்தந்த சேதனர்கள் வழிபாடுசெய்து, தாம் தாம் கோலின பலன்களைப்பெறுவதாகக்கண்டாலும், அதுவும் எம்பெருமான் தானே அந்த தெய்வங்களுக்கு உள்ளீடாக இருந்து நடத்திவருகிற ரக்ஷணமேயன்றி, அந்த தெய்வங்களே ஸ்வதந்த்ரமாகச் செய்துவிடுகிற ரக்ஷணமன்று—என்று அனுக்ரஹித்தார். கீதாசார்யனும் **कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्य-देवताः । लभते च ततः कामान्मयैव विहितान् हि तान्** (7-20, 22)— வெவ்வேறு ஆசைகளால் ஸ்வரூப ஞானமிழந்து மற்றோர் தெய்வங்களைச் சரணம் புகுகின்றனர். ஆனால் அவரவர்கள் கோலின அல்பபலன்களை, அத்தெய்வங்களுக்கு அந்தர்யாமி யாய் நின்று நானே கொடுக்கிறேன்—என்று தான் அந்தர் யாமியாக நின்று ரக்ஷிக்கும் ப்ரகாரத்தை வெளியிட்டான். ஜீவர்களின் ஸ்வரூபமும் ஸ்திதியும் பகவததீனம் என்று சொன்னது ப்ரவ்ருத்திக்கும் உபலக்ஷணம். ஜீவாத்மாக் களின் ப்ரவ்ருத்தியும் பகவததீனம் என்றதாயிற்று. ப்ரவ்ருத் தியாவது - **कार्योत्पत्त्यनुगुणव्यापारः** கார்யம் உண்டாவதற்குத் தக்க வ்யாபாரம். இதை நம்மாழ்வார் " நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந் திலர், என்றுமோரியல்வினர் எனநினைவரியவர், என்றுமோரி யல்வொடு நின்ற வெந்திடரே "—ஸகல ஜீவாத்மாக்களுடைய வும் நிற்றல் இருத்தல் கிடத்தல் என்கிற ப்ரவ்ருத்திரூபமான கார்யங்களும் அதற்கு எதிர்த்தட்டான நிவ்ருத்திகளும் பகவத தீனமே என்றருளிச்செய்தார். ப்ரவ்ருத்திரூபமான கார்யங் களெல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பாதீனமென்பதில்

ஸம்சயமில்லை. நிவ்ருத்தியும் (cessation of activities) அவனுடைய அதீனம் என்று எதற்காக ஒப்புக்கொள்ளவேண்டும்? என்கிற சங்கை உதிக்கலாம். இதற்கு எம்பார் அருளிச்செய்த ஸமாதானமாவது—"ஸ்வர்க்கத்தில் நின்றும் விழுகிற த்ரிசங்குவை சக்திமான் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே, — அப்படியே நிவ்ருத்திக்கும் அவன் வேணும் காண்" என்று. இந்திரன் த்ரிசங்குவைப் பார்த்து "உன்னுடைய குருவின் சாபத்தினால் நீசனாகிய நீ இங்கு ஸ்வர்க்கத்திலிருக்க அர்ஹனல்ல. ஆகையால் நீ தலைகீழாக விழக்கடவாய்" என்று சொன்னான். த்ரிசங்குவும் அப்படியே விழுகையில் கதறினான். அதுகேட்ட விசுவாமித்ரன் 'நீ அங்கேயே நில்' என்று சொல்லித் தன்னுடைய தபோமஹிமையினால் அவனை ஆகாயத்தில் தான் பார்த்தவிடத்தில் நிறுத்தினான். மேலேயிருந்து கீழேவிழுகிற த்ரிசங்குவுக்கு அந்த வீழ்ச்சிக்கும் ஒரு தடை ஏற்பட்டதல்லவா? அது பகவத் ஸங்கல்பத்தாலேதான். ஆகையால் ப்ரவ்ருத்தியோடு நிவ்ருத்தியோடு வாசியற எல்லாம் பகவத்ஸங்கல்பாதீனம் என்று சொல்லத்தட்டில்லை. வாஸ்தவத்தில் ஸ்ரீதேசிகன் தத்வத்ரயாதிகாரத்திலும் கத்யபாஷ்யத்திலும் அருளிச்செய்தபடி ப்ரவ்ருத்தியாவது=ப்ரவ்ருத்திநிவ்ருத்திரூபமான வ்யாபாரம். 'निवृत्तिरपि अकरणसंकल्परूपवृत्तिविशेषः' நிவ்ருத்தியாவது ஒன்றும் செய்வதில்லையென்னும் ஸங்கல்பமாகிய ஒருவகை ப்ரவ்ருத்தியேயாம். ஆகையால் நிவ்ருத்தியும் ப்ரவ்ருத்தியிலடங்கிற்று. இந்த ப்ரவ்ருத்தி விஷயமாக கீதாசார்யனும் 'मत्तः सर्वं प्रवर्तते' (10-8) சிதசித்வஸ்துக்களெல்லாம் என்னால் தான் ப்ரவ்ருத்திக்கின்றன—என்று சொன்னான். ஸ்ரீபாஷ்யகாரரும், 'स्वाधीनत्रिविध चेतनाचेतनस्वरूपस्थितिभेद'—பத்தமுக்த நித்யர் என்கிற மூன்றுவித சேதனர்களுடையவும் ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம், என்கிற மூன்றுவித அசேதனங்களுடையவும் ஸ்வரூபம்—ஸ்திதி—ப்ரவ்ருத்தி இவையெல்லாம் பரமாத்மாவுக்கு அதீனம் என்று அருளிச்செய்தார். இன்னார்க்கு ரக்ஷகன் என்று ஸங்கோசித்துச் சொல்லாமையால் மூன்றுவித ஜீவாத்மாக்களும் பரமாத்மாவால் ரக்ஷிக்கப்படு

கின்றனர் என்றும் அவன் அவர்களுக்கு ரக்ஷகன் என்றும் சொல்லப்பட்டது. ரக்ஷிக்கையாவது விரோதிகளைப்போக்குகையும், வேண்டியவற்றைக் கொடுக்கையும். இந்த இஷ்டாநிஷ்டங்கள் அந்தந்த அதிகாரி சேதனர்களுக்குத் தக்கபடி வேறுபட்டிருக்கும். ஸம்ஸாரி சேதனர்களான பத்தஜீவர்களுக்கு விரோதி சத்ருக்களால் வரும் பீடைகள். அவர்களுக்குத் தேவையானவை அன்னபாநாதிகள். முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்ஸாரஸம்பந்தம். அவர்களுக்குத் தேவையானது பரமபதப்ராப்தி. முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் விரோதி பகவத் கைங்கர்யஹாநி. அவர்களுக்குத் தேவையானது கைங்கர்யாபிவ்ருத்தி. ஆகவே மூன்றுவித சேதனர்களின் அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைக் கொடுத்து அவர்களை பகவான் ரக்ஷிக்கையால் '**மூவுலகுங் காவலோன்**' என்று சொல்லப்பட்டது. இன்ன தேசத்தில் ரக்ஷகன் என்று ஸங்கோசித்துச் சொல்லாமையாலே ஸர்வ தேசரக்ஷகத்வம் சொல்லிற்று. இன்னகாலத்தில் ரக்ஷகன் என்று சங்கோசித்துச் சொல்லாமையாலே ஸர்வ காலத்திலும் ரக்ஷகன் என்று சொன்னதாயிற்று. இன்ன ப்ரகாரத்தில்தான் ரக்ஷகன் என்று ஸங்கோசியாதலால் ஸர்வப்ரகார ரக்ஷகத்வம் சொல்லிற்று.

இந்த ரக்ஷ்யரக்ஷகஜ்ஞானம் பிறக்கவே மற்ற தேவதாந்தரங்கள் ரக்ஷகர்களோ என்கிற சங்கையானது வேறற்றுப் போய்விடும். ஆக திருமந்த்ரத்தில் முதல் அக்ஷரமான அகாரத்தால் ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும் சொன்னதால் பித்ருபுத்ர ஸம்பந்தமும் ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தமும் சொல்லப்பட்டது.

(3) சேஷசேஷி ஸம்பந்தம்.

இது விபக்தியினால் ஏற்பட்ட ஸம்பந்தம். ப்ரணவத்தில் '**அ**' என்கிற பதமானது முதலில் '**ஆய**' என்று நான்காம் வேற்றுமையையுடையதாய் '**தாதர்த்யே**' சதுர்த்யேகவசனமாய் '**ஸுபாம் ஸுலுக்**' இத்யாதி ஸூத்ரத்தாலே விபக்தி

யானது லோபத்தை யடைந்திருக்கிறது. இது ப்ரத்யயாம்சத்தாலே தாதர்த்ய ரூபமான சேஷத்வத்தைச் சொல்லுகையாலே அதுக்கு ப்ரதிஸம்பந்தியான (relative) சேஷித்வமே, ப்ரக்ருத்யம்சமான அகாரத்துக்கு முக்யார்த்தமாகிறது. மற்ற வேற்றுமைகள் இருக்கும்போது இந்த அகாரத்தில் முதலில் சதுர்த்தீ விபக்தியானது ஏறி நின்றது என்று ஏன் சொல்ல வேண்டும்? சதுர்த்தீவிபக்தியாலல்லவோ தாதர்த்யரூபமான சேஷத்வம் ஸித்திக்கும்? என்கிற கேள்வி பிறக்கிறது. இதற்கு ஸமாதானம் பின்வருமாறு. **ब्रह्मणेत्वामहस ओमित्यात्मानं युंजीत**' என்று தாதர்த்யாநுஸந்தானரூப ஸமர்ப்பணத்தை விதிக்கிற வாக்யத்திலே ஸமர்ப்பண மந்த்ரமான ப்ரணவத்தை ப்ரகாசிப்பிக்கிறவிடத்திலே '**ப்ரஹ்மணே**' என்று சதுர்த்யந்தமாக ப்ரஹ்மசப்தத்தைச் சொல்லுகையாலே, ச்ருதி ஸித்தமான ப்ரஹ்மவாசகத்தையுடைத்தான அகாரத்தினுடைய சதுர்த்யந்தத்வம் ஸூசிக்கப்படுகிறது. ஸ்ரீ பராசரபட்டரும் இந்த தைத்தரீயோபநிஷத் வாக்யத்தை சப்தத்தாலும் அர்த்தத்தாலும் அனுபாஷித்துக்கொண்டு '**आयुःप्रजानाममृतंसुराणां रंगेश्वरं त्वां शरणं प्रपद्ये । मां ब्रह्मणेस्मै महसे तदर्थं प्रत्यंचमेनं युनजै परस्मै ॥**' என்று இந்த ப்ரணவார்த்த ப்ரகாசமான வாக்யத்தின் அர்த்தத்தை ஸ்வாநுஷ்டான பர்யந்தமாக அனுஸந்திக்கிற தசையிலே—"ப்ரஜைகளுக்கு ரக்ஷகராயும் தேவர்களுக்கு போக்யராயும் ஸ்ரீரங்கத்திற்குத் தலைவராயுமிருக்கிற தேவரீரைச் சரணம் புகுகின்றேன் பரப்ரஹ்மஸ்வரூபியாயும் தேஜஸ்ஸ்வரூபியாயுமிருக்கிற இப்பெருமான் பொருட்டு தாதர்தயமாகிற சேஷத்வமே வடிவாகவுள்ள ப்ரத்யகாத்மாவும் ஸ்வயம் ப்ராகாசமுமான அடியேனை வினியோகிக்கக்கடவேன்—ஸமர்ப்பிக்கக் கடவேன்" என்று ஸமர்ப்பண விஷயத்தை சதுர்த்யந்த ப்ரஹ்மசப்தத்தாலே அருளிச்செய்தார். ஆகையால் இந்த அகாரத்தில் சதுர்த்தீ விபக்தியே ஏறிக்கழிந்தது. மேலும் இந்த அகாரமானது வ்யக்தமான சதுர்த்தியையுடைய 'நாராயணாய' என்கிற பதத்திற்கு ஸங்க்ரஹமாகையாலே இதிலும் சதுர்த்தீ விபக்தியே ஏறிக்கழிந்தது என்று சொல்லவேண்டும். இங்ஙனம் சொல்லாவிடில் அகாரம்

ஸங்க்ரஹமான பதமென்றும், அதற்கு நாராயணுய என்கிற பதமானது விவரணமென்றும் ஸித்திக்காது. இந்த சதுர்த்தீ விபக்திக்கு அர்த்தம் தாதர்த்யமாதலால் மகாரவாச்யனை ஜீவன் ஈச்வரனுக்கு சேஷம் என்று சொல்லுகிறது. சேஷ சப்தத்துக்கு அர்த்தம் பூர்வமீமாம்ஸையில் '**शेषः परार्थत्वात्**' என்கிற ஸூத்ரத்திஞல் அறிவிக்கப்படுகிறது. இந்த ஸூத்ரத்துக்கு வ்யாக்யானரூபமாக சேஷத்வலக்ஷணத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் வேதார்த்த ஸங்க்ரஹத்திலேயே அருளிச் செய்தார். அதாவது "**परगतातिशयाधानेच्छया उपादेयत्वमेवयस्-यस्वरूपं सःशेषः परः शेषी**" "மற்ருெரு வஸ்துவுக்கு ஓர் அதிசயத்தை (மேன்மையை) உண்டுபண்ணுவதற்காக ஸ்வீகரிக்கப்படுவதே எதற்கு ஸ்வரூபமோ அது சேஷவஸ்து. மற்றது அதாவது மேன்மையைப்பெறும் வஸ்து சேஷீ" என்று. இதைச் சற்று விவரிப்போம். உலகத்தில் வஸ்த்ரம், வீடு, வயல், தோட்டம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலிய வஸ்துக்கள் நம்முடைய ப்ரயோஜனத்திற்காகவும் மேன்மைக்காகவும் ஸ்வீகரிக்கப்படுகின்றன. இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் நமக்கு சேஷமான வஸ்துக்கள். அவைகளால் ப்ரயோஜனத்தையும் மேன்மையும் பெறுகின்ற நாம் அவைகளுக்கு சேஷிகள். இவ்விதம் ஸ்வீகரிக்கப்படுவது சேஷவஸ்துவின் இச்சையிஞலாவது, சேஷியின் இச்சையிஞலாவது மூன்ருவது வஸ்துவின் இச்சையிஞலாவது ஏற்படலாம். ஒரு யாகத்துக்கு நெல் முதலியது சேஷம். யாகமானது சேஷீ. ஏனென்ருல் யாகத்திற்காக நெல் ஸ்வீகரிக்கப்படுகிறது. இவ்விடத்தில் ஸ்வீகரிப்பதில் இச்சையானது சேஷமான நெல் முதலியவற்றிற்கும், சேஷியான யாகத்திற்கும் இல்லையாதலால், மூன்ருவது வஸ்துவான யாகம் செய்கிறவனுடைய இச்சையால் ஸ்வீகரிக்கப்படுகிறது. பலோத்பத்தியில் இச்சையிஞல் யாகமும் அது செய்வதில் ப்ரயத்னமும் ஸ்வீகரிக்கப்படுகிறது. யாக ஸித்தியில் இச்சையிஞல் மற்றவை ஸ்வீகரிக்கப்படுகின்றன. இதுபோலவே ஈசுவரனுக்கு ஓர் அதிசயத்தை உண்டு பண்ணுவதற்காகவே ஸ்வீகரிக்கப்படுவதானது சேதனங்கள்;

அசேதனங்கள், நித்யவஸ்துக்கள், அநித்ய வஸ்துக்கள், ஆகிய எல்லா வஸ்துவினுடையவும் ஸ்வரூபமாயிருக்கிறது. ஆகையால் எல்லாம் ஈசுவரனுக்கு சேஷபூதம். எல்லாவற்றிற்கும் ஈசுவரன் சேஷீ. **'सर्वस्यवशीसर्वस्येशानः पतिं विश्वस्य'**—'எல்லாவற்றையும் தனக்கு வசமாக்கிக்கொண்டு ஆள்கிறவன் யாவற்றிற்கும் சேஷீ' என்றிவை முதலிய ப்ரமாணங்களால், பரமாத்மா ஸர்வசேஷீ என்னப்படுகிருன். இவ்வர்த்தத்தை பட்டர் **'उपादत्तेसत्तास्थितिनियमनाद्यैश्चिदचितौ स्वमुद्दिश्य श्रीमानितिवदतिवागोपनिषदी'**—'உபநிஷத் வாக்யங்கள் என்ன தெரிவிக்கின்றனவென்ருல் :—சேதநாசேதன பதார்த்தங்களைப் படைப்பதோ, ரக்ஷிப்பதோ, நியமிப்பதோ மற்றும் எது செய்வதோ அவையெல்லாம் எம்பெருமான் தனக்காகவே செய்வதாகத் தெரிவிக்கின்றன. அவன் ஸ்வாமியாகவும், மற்றவை யாவும் ஸ்வம் ஆகவும் இருக்கையாலே, உடைமைகள் விஷயமாக உடையவன் செய்யும் ஸகல கார்யங்களும் ஸ்வார்த்தமாகவே யிருப்பதாகக் காண்கின்ற லோகானுபவத்திஞலும் இவ்வர்த்தம் நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. ஸகல ஜீவாத்மாக்களுக்கும் சேஷத்வமே ஸ்வரூபமென்று ப்ரமாணங்கள் முறையிடுகின்றன. **'यस्यास्मिनतमन्तरेमि योहमस्मि ससन् यजे'**—'எந்தபகவானுக்கு அடியனுக இருக்கிறேனே, அந்த பகவானைவிட்டு நீங்கமாட்டேன். இயற்கையான அடிமையினல் யாவனுக இருக்கிறேனே அவனுகவேயிருந்துகொண்டு அந்த பகவானை ஞானமாகிற யாகங்களினுல் ஆராதிக்கிறேன்'–என்று சுருதியும், **आत्मदास्यं हरेः स्वाम्यं, दासभूताः स्वतस्सर्वेह्यात्मानः परमात्मनः'**—"இயற்கையில் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவுக்கு அடியவர்கள்—சேஷபூதர்கள்". என்று பகவச் சாஸ்த்ரங்களிலும், **'அடியேனுள்ளான்"** என்று நம்மாழ்வாரும், **'நானுமுனக்குப்பழவடியேன்'** என்று பெரியாழ்வாரும், ஜீவனுடைய பகவச்சேஷத்வத்தை நிர்ணயித்துச் சொன்னூர்கள். "அஹங்காரமாகிற ஆர்ப்பை (அழுக்கை)த்துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாத பேர் அடியான்"—என்ருர் உலகாசார்யர். ஆகையால் ஸ்வாதந்த்ர்யம் ஜீவனுக்கு ஔபாதிகம்— வந்தேறி. ஆனதுபற்றி அது

த்யாஜ்யம். இதற்குமேல் ஒரு ஆக்ஷேபம் வருகிறது:— "அத்யந்தம் சேஷமாயிருக்கை ஆத்மாவுக்கு மிகவும் அதிகமான ஸுகம் என்று சொல்லுவது ஸர்வலோகந்யாயத்துக்கு விருத்தமானது. ஏனென்றால், எல்லா சேதனர்களுக்கும் ஸ்வாதந்த்ர்யமே மிகவும் விரும்பத்தக்கதென்று காண்கிறோம். அதுபோலவே பாரதந்த்ர்யமும் மிகவும் துக்கரூபமாகக் காண்கிறோம். மனுஸ்மிருதியில் "பிறற்கு வசப்பட்டிருப்பது எல்லாம் துக்கம். தனக்குத்தானே வசமாயிருப்பது அதாவது ஸ்வாதந்தர்யம் ஸுகரூபமென்றும், மற்றவனுக்கு ஆட்செய்வது நாய்வ்ருத்தியாதலால் அந்த ஸேவையைத் தவிர்க்கவேண்டு" மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது— என்று. இந்த ஆக்ஷேபமானது தேஹத்திற்காட்டில் ஆத்மா வேறுபட்டதென்று ஆத்மஸ்வரூபத்தையறியாமல், சரீரமே ஆத்மாவென்று சரீரத்திலே விபரீதமான ஆத்மாபிமானம் பண்ணுமவர்களின் சரீராத்மாபிமான கார்யமாகும். எப்படியென்றால்:—சரீரம் என்பது மனுஷ்யத்வாதிஜாதி, குணங்கள், இவைகளுக்கு ஆச்ரயபூதமான பிண்டமாய் ஸ்வதந்த்ரமாய்த் தோன்றுகிறது. 'இந்த சரீரமே நான்,' என்று ஸம்ஸாரிகள் நினைக்கிறார்கள். ஆத்மாபிமானம் எவ்விதமாயிருக்கிறதோ, அதற்கு ஈடாயிருக்கும் புருஷார்த்தஜ்ஞானம். சிங்கம், புலி, பன்றி, மனிதன், யக்ஷன், ராக்ஷஸன், பிசாசம், தேவன், தானவன், ஆண், பெண் என்கிற வ்யவஸ்தையுடைய ஆத்மாபிமானமுள்ளவர்களுக்கு ஸுகங்களும் வ்யவஸ்திதங்களாயிருக்கும் அவைகள் ஒன்றுக்கொன்று விருத்தங்களாய் வேறுபட்டிருக்கும் இவையெல்லாம் விபரீதமான ஆத்மாபிமானத்தின் கார்யம். ஆகையால் ஆத்மாபிமானத்துக்கனுகுணமாக புருஷார்த்த வ்யவஸ்தையைக் கொண்டு எல்லாவற்றிற்கும் ஸமாதானம் செய்யவேண்டியது. ஆத்மாவுக்கு அனுகூலம் ஸுகம், ஆத்மாவுக்குப்ரதிகூலம் துக்கம்-என்பதுதான் ஸுகதுக்கலக்ஷணம். 'நான் ஸ்வதந்த்ரன்' என்று ஆத்மாபிமானமிருக்கும்போது, பிரதிகூலமானதால் பாரதந்த்ர்யம் துக்கமாகிறதே யல்லாமல் பாரதந்தர்யம் என்கிற காரணத்தாலல்ல. ஆத்மஸ்வரூபமோ வென்றால்

தேஹேந்திரியங்களைக்காட்டிலும் வேறுபட்டு ஞானவடிவான து. அது பகவானுக்கு சேஷமாயிருப்பதையே ஸ்வரூபமாயுடையது. ஆனதால் ஆத்மா உள்ளபடியே அபிமானமிருந்தால் அதற்கு அனுகுணமாக புருஷார்த்தஞானம் உண்டாகும். "आत्मा ज्ञानमयोऽमलः" என்பதால் ஞானவடிவுள்ளது ஆத்மா என்கிற ஞானம் பிறக்கும். "पतिं विश्वस्य" என்றிவை முதலிய ப்ரமாணங்களால் பரமாத்மாவுக்கு சேஷமாயிருப்பது ஜீவனுடைய ஆகாரம் என்று சொல்லப்படுகிறது. ஆனதால் சிங்கம், புலி முதலிய சரீரத்தில் ஆத்மாபிமானம்போல் 'நான் ஸ்வதந்த்ரன்' என்கிற அபிமானமும் கர்மத்தாலே ஏற்பட்ட விபரீதாத்மாபிமான ரூபமென்றறியத் தக்கது. ஆகவே பரமாத்மாவைத் தவிர மற்ற விஷயங்கள் ஸுகமென்றிருப்பது கர்மத்தால் ஏற்பட்டது. அதனால்தான் அந்த விஷயஸுகங்கள் கர்மக்ருதமாதலால் அல்பமாயும் நிலையற்றதாயுமுள்ளன. பரமபுருஷனுக்கோவென்றால் ஸ்வத:ஏவ ஸுகத்வமுள்ளது. ஆனதால் அதுவே நிலையுள்ளதும் அளவற்றதுமான ஸுகம் என்று 'कं ब्रह्म खंब्रह्म', 'आनन्दो ब्रह्म' — என்றிவை முதலான ப்ரமாணங்கள் கூறுகின்றன. ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களுக்கும் ஸ்வரூபேண ஸுகத்வாபாவமும், கர்மக்ருதத்வேன அஸ்திரத்வமும் பராசரபகவானால் சொல்லப்பட்டது. எல்லா வஸ்துக்களுக்கும் ஸுகதுக்காத்மகத்வம் கர்மக்ருதமேயல்லது வஸ்து ஸ்வரூபக்ருதமல்ல. விஷசஸ்த்ராதிகள் ப்ரதிகூலங்களாயும் சந்தனகுஸுமாதிகள் அனுகூலங்களாயும் தோற்றுகிறது தேஹாத்மப்ரமாதிகளாலே. ஈசுவராத்மகமாகையாலே எல்லா பதார்த்தங்களுக்கும் ஆனுகூல்யமே ஸ்வபாவம். ஆகையால் அவ்வகாரத்தாலே காணும்போது ஸர்வவிஷய ப்ரகாசனதசையிலும் ஞானம் ஆனந்தரூபமாயிருக்கும். 'ஸர்வம்பரவசம் துக்கம்' என்று சொன்னது பரமபுருஷனைத் தவிர மற்ற வஸ்துக்களுக்கெல்லாம், பரஸ்பரம் சேஷசேஷி பாவமில்லாததால் பகவானைத் தவிர மற்றவைகளைக் குறித்து சேஷமாயிருப்பது துக்கமாகவேயிருக்கும் என்பதைப்பற்றியாம். ஸேவை நாய் வ்ருத்தியென்று சொன்னது அஸேவ்ய

ஸேவையைப்பற்றியது. "सह्यार्थैस्सदोपास्यः समस्तैरेक एव"— "ஆத்மயாதாத்ம்ய ஞானமுள்ளவர்களால் எப்போதும் பகவான் ஒருவனே உபாஸிக்கத் தகுந்தவன்" என்றும், "मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते। स गुणान् समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते॥" (கீதை, 14-26) "யாவனொருவன் தேவதாந்தரபரித்யாக பூர்வகமாக பக்தியோகத்தால் என்னை ஸேவிக்கிறானோ, அவன் தாண்டமுடியாத முக்குண ப்ரக்ருதியைத் தாண்டி யதாவஸ்திதமான ஆத்மஸ்வரூபத்தையடைகிறான்" என்று பகவானும் சொன்னான். இதுவே பக்திரூபையான ஸேவையாகும். ஆனதால் ப்ராப்தவிஷயமான பகவத்ஸேவையானது ஸுகரூபமாகவேயிருக்கும். தவிர, உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்குமிருப்பு ஸுகரூபமாகவே நாம் காண்கிறோமல்லவா? "பணிமின்திருவருள்" (4—1—5) என்று சொன்னபடி, சிற்றரசர்கள் தங்கள் காலில் விழும்படி தாங்கள் ராஜ்யம் ஆள்கின்ற நாளில், தங்கள் ராஜ்யத்தை காமினிகளுக்கு ஸ்த்ரீதனமாக்கி அவர்களைப் படுக்கையிலே வைத்துத் தாங்கள் தாழநின்று, "மங்கைமீர்! கிருபை பண்ணியருளவேண்டும். உங்கள் திருவுள்ளத்தில் ஓடுகிறதை வெளியிடவேண்டும். அதை உடனே செய்து தலைக் கட்டுவோம்"— என்று சொல்லிக்கொண்டு தங்களுக்கு அபிமதமான ஸ்த்ரீகளிட்டவழக்காய் அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு தங்கள் காமினிகளுக்கு சேஷபூதர்களாகத் தங்களை ஆக்கிக்கொண்ட பலபல அரசர்கள் உலகத்திலிருக்கவில்லையா? ஆகையால் ஸ்வதந்த்ரனாய் அபிமானித்திருக்கும் ஒருவனுக்கு சில வ்யக்தி விசேஷங்களில் பாரதந்த்ர்யமே போகரூபமாகக் காண்கிறோம். ஆனதால் சேஷத்வம் ஸுகரூபமாகில் ஸ்வீகரிக்கத்தக்கது. ஸ்வாதந்த்ர்யம் துக்கரூபமாகில் விடத்தக்கது. ப்ராப்த விஷயத்தில் ஸேவையை உபாதேயமாகச் சொன்னார்கள். "சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" என்றும் "दास्यमहारसज्ञाः" என்றும், "दास्यसुखैकसंगिनां" என்றும், ஈசுவர சேஷத்வம் விஹிதமாயும், போகரூபமாயுமிருப்பதால் அது உபாதேயமாகக்கடவது. இந்த சேஷசேஷி ஞானம்

பிறக்கவே; பகவானைத் தவிர மற்றவர்கள் சேஷீ என்கிற ஞானம் வேரற்றுப்போம்.

ஆகவே இவ்வளவாக அகாரமாகிய அக்ஷரஸ்வபாவத்தாலே காரணத்வத்தைச் சொல்லி அத்தால் பித்ருபுத்ர ஸம்பந்தத்தையும், அவ ரக்ஷணே என்கிற தாத்வர்த்தத்தால் ரக்ஷகத்வத்தைச் சொல்லி அத்தால் ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தத்தையும், 'ஆய' என்பதில் சதுர்த்தியின் அர்த்தமான தாதர்த்யத்தின் ப்ரதிஸம்பந்திதையாலே சேஷித்வத்தைச் சொல்லி, அத்தால் சேஷசேஷிஸம்பந்தத்தையும் சொல்லிற்றாயிற்று.

(4) பர்த்ருபார்யா ஸம்பந்தம்.

பிறகு அவதாரணார்த்தமான உகாரமானது சேஷத்வத்தினுடைய அநந்யார்ஹதையை ப்ரதிபாதிக்கைக்காக ப்ரதிஸம்பந்தியான பகவானுடைய சேஷித்வத்தை அநந்யஸாதரணமென்று காட்டுகிறது. அதாவது ரக்ஷகனான புருஷோத்தமனுக்கே ரக்ஷ்யமான ஆத்மஸ்வரூபம் அற்றுத் தீர்ந்திருக்குமென்பதைக் காட்டுகிறது. உகாரம் அவதாரணார்த்தமானது எப்படியென்றால்" तदेवभूतं तदुभव्यमाइदं " அதுவே பூதம் (past) அதுவே பவ்யம் (future) என்கிற வாக்யத்திலும் 'तदेवाग्निस्तद्वायु: तत्सूर्यस्तदुचन्द्रमा:' 'அதுவே அக்நி அதுவே வாயு அதுவே ஸூர்யன் அதுவே சந்த்ரன்'- என்கிற வாக்யத்திலும் ஏவகாரம் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் உகாரத்தை இடுகையாலே, இந்த ஸ்தானப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம் என்று நிச்சயிக்கப்படுகிறது. ஒரு பதிவ்ரதையினுடைய சேஷத்வம் அநந்யார்ஹமாயிருக்குமாப்போலே, லுப்தசதுர்த்தியின் அர்த்தமான சேஷத்வமும் அநந்யார்ஹமென்றதாயிற்று. பும்ஸ்த்வ ஸ்த்ரீத்வங்களுக்கீடான ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யங்களைக்கொண்டு கேவலம் பதிவ்ரதா ஸ்த்ரீ ஸாம்யத்தாலே ரூபகாலங்கார ப்ரக்ரியையிலே நிரூபிக்கப்பட்டதன்று. வாஸ்தவமாகவே பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள பர்த்ருபார்யாஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. ஜீவாத்மாக்களெல்லாம் ஸ்த்ரீகளென்றும் பரமாத்மா

ஒருவனே புருஷன் என்றும் ப்ரமாணங்கள் கூறுகின்றன. "सएववासुदेवो हि साक्षात्पुरुष उच्यते। स्त्रीप्रायमितरत्सर्वं जगद्ब्रह्मपुरस्सरम् ॥" "வாஸுதேவன் ஒருவனே ஆண். உலகில் மற்ற ஆத்மாக்களடங்கலும் பெண்களே" என்றும், "स्वामित्वात्मत्वशेषित्वपुंस्त्वाद्याः स्वामिनोगुणाः। स्वत्व-दासत्वकायत्वशेषत्वस्त्रीत्वदायिनः ॥"—"ஸ்வாமித்வம், ஆத்மத்வம், சேஷித்வம், பும்ஸ்த்வம் முதலிய குணங்கள் பகவானுக்கே உள்ளன- அக்குணங்களுக்கு ப்ரதியான ஸத்வம், தாஸத்வம், சரீரத்வம், சேஷத்வம், ஸ்த்ரீத்வம் முதலிய குணங்கள் ஜீவாத்மாவுக்கே உள்ளன"—என்றும் ப்ரமாணங்கள் கூறுவதால் ஜீவனுக்கு ஸ்த்ரீத்வம் வந்தேறியன்று, ஸ்வாபாவிகம். "புருஷோத்தமனன எம்பெருமானது பேராண்மைக்குமுன் உலகம் முழுவதும் பெண்தன்மையதாயிருக்கையாலும், ஜீவாத்மாவுக்கு ஸ்வாதந்த்ர்யலேசமுமின்றி பாரதந்த்ரயமே ஸ்வரூபமாயிருப்பதாலும் இவர்களுக்கேற்ப ஸ்த்ரீபாவனை வந்தேறியன்று. ஆனல் ஸ்வாபாவிகம்" என்று ஆழ்வார்களின் பெண் பேச்சு விஷயமாக ஆசார்யர்களும் அருளிச்செய்திருக்கிறுர்கள். "எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தை யழித்து பெண்ணுடையுடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வமிருப்பது"—என்பார்கள் ஆசார்யர்கள். "एकीभवद्भि-र्युतैरपि मन्मथानां यत्कांतिसिंधुपृषतानुकृतिर्नशक्या। संप्रेक्ष्य तं यदुपतिं यमिनोपिनूनं स्त्रीभावमेव मनसा विवशं व्यधुः ॥" "அநேககோடி மன்மதர்கள் ஒன்று சேர்ந்தாலும் எந்தக் கண்ணபிரானது வடிவழகான கடலின் ஓர் திவலைக்கும் ஒப்பாகாதோ அந்தக் கண்ணபிரானைக் கண்டதும் 'ஊன்வாட உண்ணுது உயிர்காவலிட்டு உடலில் பிரியாப்புலனைந்தும் நொந்து தாம்வாடவாட. காயொடு நீடு கனியுண்டு, வீசுகடுங்கால்நுகர்ந்து நெடுங்காலம் ஐந்துதீயோடு நின்று' தவம் செய்யும் மாமுனிகளும் கூட அவனை நன்கு அனுபவிக்கப் பெண்மையை மனதால் அடைந்தார்கள்"—என்று ஸ்ரீதேசிகனும் ஸ்ரீயாதவாப்யுதயத்தில் அருளிச்செய்தார். ஜீவாத்மாவுக்கு ஸ்த்ரீபாவம் வந்தேறியன்று, ஸ்வாபாவிகம் என்பது வெகு அழகாயும் அத்புதமாயுமுள்ள ஒரு சூர்ணிகையால் ஆசார்யஹ்ருதயத்தில் விஸ்

தரிக்கப்பட்டிருக்கிறது—" வித்யை தாயாகப்பெற்றுப் பாலு மமுதுமான திருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்ச மாகிய தந்தை மற்றொருவருக்குப் பேச்சுப்படாமல் விசுவபதி லோகபர்த்தாவென்னும் மணவாளரை நாலிரண்டிழைகொண்டு முப்புரியான ப்ரஹ்மஸூத்ரபந்தத்தோடேவரிப்பிக்க, பரமபுருடன் கைக்கொண்டபின் சதுர்த்தியியல்புக்கு இடையீடு நடுக்கிடக்கும் நாள் கழித்து ஜன்மபூமியைவிட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன்சென்று குடைந்து நீராடிவியன் துழாய் அஞ்சனத்தின் நீறு நானப்பொடி பீதகவாடைபல்கலன் கொண்டு நோக்கிய லங்கரித்துப் பல்லாண்டிசைத்துக் கவரிசெய்ய நிறைகுட விளக்க மேந்தி யிளமங்கையரெதிர்கொள்ள வைகுந்தம் புக்கிருந்து வாய்மருத்துப் பெருங்களிச்சியாக வானவர்போகமுண்டு. கோப் புடைய கோட்டுக்கால் கட்டில் மிதித்து ஆரோஹித்து, பரதா க்ரூரமாருதிகளைப் பரிஷ்வங்கித்த மணிமிகுமார்பிலே குருமாமணி யாயணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று" — என்று. ஆசார்யன், திருமந்த்ரத்வாரா ஸ்வரூபஞானத்தை யுண்டாக்கினபோது இவ்வாத்மாவுக்கு ஸத்பாவமாகையாலே, வித்யையை மாதாவாகக் கொண்டு இவ்வாத்ம வஸ்துவை ஜனிப்பித்து, போக்யபதார்த்தமான திருமந்த்ரத்தாலே அநங் யார்ஹசேஷவாதிகளாலே லக்ஷ்மீஸத்ருசமாக வளர்த்துக் கொண்டு போந்த, ஸ்வரூபபோத்பாதகனாய் ஒரு தசையிலும் கைவிடாதே ஹிதைஷியாய் உஜ்ஜீவபரனாய்க் கொண்டு மோக்ஷஹேதுவாயிருக்கையாலே, ஆத்மரக்ஷகனான ஆசார் யனாகிற பிதா, அன்யசேஷத்வப்ரஸங்கம் பரவாதபடி. 'पतिंविश्वस्य' என்று விச்வபதியாயும், 'कौसल्यालोकभर्तारं' என்று ஸர்வலோகநாயகனாய்ச் சொல்லப்படுகிற மணவா ளரை எட்டு அக்ஷரமாய் மூன்று பதமாய் ஈசுவரஸம்பந்த ப்ரகாசமான திருமந்த்ரமாகிற மங்களஸூத்ர பந்தத்தோடே 'पाणिगृहीष्वपाणिना' என்கிறபடி வரிக்கும்படிபண்ண, பரம புருஷனான மணவாளர் பரிக்ரஹித்த பின்பு, விவாஹாநந்தரம் சேஷஹோமபர்யந்தமான நாலுநாட்களிலும் அகலுதலும் அணுகுதலுமற்று அநந்யார்ஹ சேஷத்வானுகுணமான பரி மாற்றத்துக்கு அர்ஹமென்னுமளவை ப்ரகாசிப்பித்துக்

கொண்டிருக்குமாப்போலே, ப்ரணவோக்தமான அநந்யார்ஹ சேஷத்வதில் குறைவற அங்கீகரிக்கையாலும், ததனுகுண மாகக் கிட்டிப் பரிமாறப் பெருமையாலும் அணுகுதலும் அக லுதலுமற்று, கைங்கர்யப்ப்ரார்த்தனையோடே செல்லும் சரம சதுர்த்தியிலே உட்புக்கு, தம்பதிகள் இருவரும் ஓரேபடுக்கை யிலேயிருந்தும்கூட அன்யோந்யஸ்பர்ச யோக்யதையில்லாத படிஇடையீடான ஸோமாதிகள் நடுவேகிடக்கும் நாள்போலே, சேஷத்வஞானமும் சேஷவ்ருத்தி ப்ரார்த்தனையுமுண்டாகை யாலே இரண்டுபேருக்கும் (அண்ணிமை) உண்டாயிருக்கவும் சேர்த்துப் பரிமாறவொண்ணுதபடி '**நண்ணியும் நண்ணகில் லேன் நடுவே யோருடம்பிலிட்டு**' என்கிறபடியே, அனுபவ விரோதியாய் இடையீடான சரீரம் நடுவேகிடக்கிற நாலு நாளையும் கழித்து, திருமந்த்ரத்தால் ஆசார்யன் உண்டாக்கின ஜன்மத்திற்கு ஜன்மபூமியான இவ்விபூதியை விட்டகன்று, '**சூழ்விசும்பு**' என்கிற திருவாய்மொழியில் சொல்லுகிறபடி அர்ச்சிராதி மார்க்கத்தாலே வழியிலுள்ளாரெல்லோரும் ஸத்கரிக்க, நாயகன் முன்னே போகத் தான் பின்னேபோய் பர்த்ருகிருஹத்துக்குப் போகிற பெண் அவ்வூர் எல்லையிலே சென்றவாறே அவர்கள் குளிப்பாட்டத் தான் குளிக்குமாப் போலே, அம்ருதவாஹினியான விரஜாநதியிலே இப்பாலுள்ள அழுக்கு அறும்படி நீராடி, குளித்தேறின பெண்ணை பர்த்தாவின் பந்துக்களான ஸ்த்ரீகள் வந்து அலங்கரிக்குமாப் போலே அலங்காரோபகரணங்களான திவ்யமால்யம் திவ் யாஞ்சனம் திவ்யசூர்ணம் திவ்யவஸ்த்ரம் திவ்யாபரணங்கள் இவைகளை ஏந்திக்கொண்டு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிரே வந்து, மங்களாசாஸநம் பண்ணி சாமரம் பணிமாற, அலங்க்ருதையாய் சீராட்டத்தோடே செல்லுகிற பெண் பர்த்ருகிருஹத்தை யணுகச் சென்றவாறே அங்குள்ள ஸ்த்ரீகள் மங்களதீபாதிகளை ஏந்திக்கொண்டு எதிரேவந்து ஸத்கரிக்குமாப்போலே நித்யநவயௌவநஸ்வபாவைகளான வேறே சில திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிர்கொள்ள, சீராட்டத் தோடே சென்ற பெண் பர்த்தாவின் கிருஹத்திலே புக்கிருக் குமாப்போலே, ஸ்ரீயःபதியானவனுக்கு போகஸ்தானமான

ஸ்ரீவைகுண்டத்தையடைந்து, அவனோடே கூடியிருந்து, பர்த்ரு கிருஹத்திலே பெண் வந்தபின்பு தம்பதிகளும் மற்றுள்ள பந்துக்களும் கூடியிருந்து பெருங்களிச்சியுண்ணு மாப்போலே அடியார்கள் குழாங்களுமவனுமாக இருக்கிற சேர்த்தியிலே நித்யஸூரிகள் அனுபவிக்கும் போகத்தை புஜித்து, பர்த்ருஸம்ஶ்லேஷத்துக்குப் படுக்கையிலே ஏறுமாப் போலே, திவ்யபர்யங்கத்திலே பாதபீடத்திலே அடியிட்டேறி, ஸ்ரீபரதாழ்வானையும் அக்ரூரனையும் திருவடியையும் ஆதரித்து அணைத்துக்கொண்ட, ஸ்ரீகௌஸ்துபம் நிறம் பெறும்படி யழகியதான திருமார்பிலே 'குருமாமணிப்பூண்' என்று ச்லாக்யமாய் ஈசுவரத்வ சின்னமான ஸ்ரீகௌஸ்துபம் போலே போக்யமாய் தேஜஸ்கரமாய்க்கொண்டு அணைகிற ஆத்ம வஸ்துவுக்கு, கொடிபோன்றவள் என்கிற ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமாய் வரும் பேச்சு வந்தேறி யன்று ஸ்வாபாவிகம் என்றபடி. இவ்விதம் ஸ்வாபாவிகமான பர்த்ருபார்யாஸம்பந்த ஞானம் பிறக்கவே அநந்யார்ஹசங்கையானது அற்றுப்போம்.

(5) ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம்.

பரமாத்மாவே அறியத்தகுந்தவனென்றும், அவனையறி பவன் ஜீவாத்மாவென்றும் காட்டும் இந்த ஐந்தாவதான ஜ்ஞாத்ரு ஜ்ஞேயஸம்பந்தம். உகாரார்த்தமான பர்த்ருபார்யா ஸம்பந்தானுஸந்தானத்துக்கு அபேக்ஷிதம் இந்த ஜ்ஞாத் ருத்வம். அசித்தைக்காட்டிலும் வேறுபட்டு ஸம்பந்தங்களையும் ஜ்ஞேயத்தையுமறிந்து ஜ்ஞேயத்துக்கு அதீனமாய், ஜ்ஞேய ப்ரயோஜனமுமாயிருக்கும் ஜ்ஞாத்ருத்வம் என்று காட்டுமிந்த ஸம்பந்தம். இது ப்ரணவத்தில் மூன்றுவது அக்ஷரமான மகாரத்தைப் பற்றியிருக்கிறது. அநந்யார்ஹமான சேஷத்வ தர்மத்துக்கு ப்ரதிஸம்பந்தியான சேஷீ அபேக்ஷிக்கப்படுவது போல், சேஷத்வத்திற்கு ஆச்ரயமான சேஷவஸ்துவும் அபேக்ஷிதமாகையாலே கீழ் அனுக்தமான ஆச்ரயத்தை வ்யஞ்சனரூபமான மகாரம் சொல்லுகிறது. கவர்க்கத்தாலே ப்ருதிவ்யாதி பூதங்களும் சவர்க்கத்தாலே வாக் முதலிய கர்மேந்திரியங்களும், டவர்க்கத்தாலே செவி முதலிய ஜ்ஞா

னேந்திரியங்களும் தவர்க்கத்தாலே கந்தாதி விஷயங்களும், பகாரத்தாலே மனஸ்ஸும், பகாரத்தாலே அஹங்காரமும் பகாரத்தாலும் பகாரத்தாலும் மஹானும் ப்ரக்ருதியும் சொல்லப்பட்டன. மகாரத்தாலே இருபங்தைந்தாவதான ஜீவாத்மா சொல்லப்படுகிறனென்று பாத்மோத்தரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. **मन ज्ञाने** அல்லது **मन-अवबोधने** என்கிற தாதுவிலிருந்து நிஷ்பன்னமாகையாலே, ஞானவாசியாயுமிருக்கையாலே 'சென்றுசென்றுபரம்பரமாய்' என்று தேஹேந்திரியங்களைக் காட்டில் விலக்ஷணமாயும், "**विज्ञानात्मा पुरुष:**" "**विज्ञातारमरेकेन विजानीयात्**" என்கிறபடியே ஜ்ஞான ஸ்வரூபமாயும் ஜ்ஞானகுணகனுமிருக்கிற ஜீவாத்மாவை இந்த மகாரம் சொல்லுகிறது. கீழ் சொல்லப்பட்ட சேஷத்வம் ஸர்வாத்ம ஸாதாரணமாகையால், பத்தமுக்தநித்யர்களாகிற மூன்றுவித ஜீவவர்க்கத்தையும் குறிக்கிறது. இந்த மகாரம் லுப்தமான ப்ரதமைகவசனமாய் ஜாத்யேகவசனமாயுமிருப்பதால், இந்த ஜ்ஞானவாசகமானசப்தமானது ஜ்ஞானைகநிருபணீயமான ஆத்மாவைச் சொல்லுகிறது. "**तद्गुणसारत्वात् तद्व्यपदेश: प्राज्ञवत्**" ஈசுவரன் ஆனந்தகுணஸாரனாகையாலே அவனுக்கு ஆனந்தவ்யபதேசம்போலே, ஜீவனும் ஞானகுண ஸாரனாகையாலே அவனுக்கு ஞானவ்யபதேசமென்றும், **ज्ञोतएव** ஆத்மஜ்ஞானமாத்ரமல்லாமல் ஜ்ஞாத்ருஸ்வரூபன் ஜ்ஞானவடிவாய்மட்டுமல்லாமல் ஜ்ஞானத்தை குணமாகவுமுடையவன் என்றும் சுருதி ஜ்ஞாதாவாகவும் சொல்லுகையாலே ஆத்மாஜ்ஞாதாவாயுமிருக்குமென்று வேதாந்த ஸூத்ரங்களில் சொல்லப்படுகிறது. ஜ்ஞாதா என்றபோதே கர்த்தா போக்தா என்னுமிடம், சொல்லிற்றாயிற்று: ஏனென்றால் கர்த்ருத்வபோக்த்ருத்வங்கள் ஜ்ஞானாவஸ்தா விசேஷங்கள். இந்த ஜ்ஞாத்ருத்வஸாமர்த்தியத்தாலே இவ்வாத்மாவினுடைய அஹமர்த்தத்வம் சொல்லப்பட்டது. எங்ஙனேயென்னில் :- "**अहमर्थो न चेदात्मा प्रत्यक्त्वं नात्मनो भवेत् । अहं बुद्ध्या परागर्थात् प्रत्यगर्थो हि भिद्यते ॥**" "ஆத்மா அஹமர்த்தமன்றாகில், ஆத்மாவுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வ ரூபமான ப்ரத்யக்த்வம் இல்லாமல் போய்விடும். அஹம் புத்தியாலேயன்றோ

பாஹ்யமான பராகர்த்தங்களிற்காட்டில் ஆந்தரமான ப்ரத்ய கர்த்தம் வேருக அறியப்படுகிறது"—என்கிற பூர்வாசார்ய வசனத்தாலே, ஆத்மாவுக்கு பராகர்த்தவ்யாவர்த்தகமான ஸ்வரூபம் அஹம்புத்திபோத்யத்வம். அல்லாதபோது இவனுடைய ஸ்வஸம்வேத்யத்வமும் ஸித்திக்காது. ஆகையாலே ஸ்வயம்ப்ரகாசனுய், ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு ஸர்வாவஸ்தையிலும் அஹமர்த்தத்வம் அவசியம் கொள்ளவேணும். अहमन्न என்றிவை முதலான வாக்யங்களாலே மோக்ஷதசையிலும் அஹம் சப்தவிஷயத்வம் காண்கிரேும். ஆகையாலே 'अकारार्थायैवस्वमहं' அகாரார்த்த பூதனை ஈசுவரனுக்கே சேஷபூதன் நான் என்று, மகாரார்த்தத்தை அஹம் சப்தத்தாலே பட்டர் அருளிச்செய்தார். மணத்தால் பூவையும், ஒளியால் ரத்னத்தையும் நாம் ஆதரிப்பதுபோல், பகவானுக்கு சேஷமென்பதால் ஆத்மாவை சாஸ்த்ரங்களும் ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் ஆதரித்தார்கள். 'यस्यास्मि नतमंतरेमि' 'अस्तिब्रह्मेतिचेद्वेद सन्तमेनं ततोविदुः' எந்த பகவானுக்கு நான் சேஷபூதனே அவனை விட்டு நான் விலகமாட்டேன். ப்ரஹ்ம ஞானமுள்ளவன் ஒருவனையே - அதாவது சேஷத்வஞானமுள்ள ஒருவனையே இருப்பவனுயும், அதில்லாதவனை, இல்லாதவன் அஸத் என்று வேதசாஸ்த்ரமும், 'ज्ञानानन्दमयस्त्वात्मा शेषो हि परमात्मनः। योह्येनं पुरुषं वेद देवा अपि नतं विदुः' பகவச்சேஷத்வஜ்ஞான முடையவனுடைய மஹிமையானது நித்யஸூரிகளாலும் அளவிடமுடியாது—என்று ரிஷிகளாலும், "தொழுது எழு என்மனனே" என்று ஆழ்வார்களும், 'तवदास्यसुखैकसंगिनां' உன்னுடைய அடிமையாகிற இன்பமொன்றிலேயே விருப்பமுள்ள மஹான்களுடைய திருமாளிகைகளில் அடியேனுக்குப் புழுவாகப் பிறப்பதும் ஆயிடுக. ஜீவபரஸ்வரூபத்தை உள்ளபடியுணர்ந்தவர்கள் எம்பெருமான் திறத்தில் சேஷத்வத்தோடு நிற்கமாட்டார்கள். பாகவதசேஷத்வபர்யந்தம் போனுல்தான் சேஷத்வம் ரஸிக்கும் என்று ஆசார்யர்களும், சேஷத்வத்தால் ஜீவனையாதரித்துப் போனுர்கள். இவ்விதம் சேஷத்வத்திற்கு ஆச்ரயமல்லாமற்போனுல் 'உயிரினுல்குறைவிலம் என்றபடி

ஆத்மா த்யாஜ்யமாகும். "கொள்ளும் பயனென்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வனே"—என்று ஆண்டாளும் பகவதனுபவத்திற்கு உபயுக்தமாகாத ஆத்மா - ஆத்மீயங்களெல்லாம் 'ஆழ்ந்த பக்தியுடையவர்களுக்கு உபேக்ஷிக்கப்படும் என்பதைக் காட்டினார்கள். 'न देहं न प्राणान्' 'உனக்கு சேஷப்பட்டிருக்கையாகிற செல்வத்திற்கு புறம்பான அதாவது உனக்கு சேஷப்படாத உடம்பை ஒரு க்ஷணமும் பொறுக்கமாட்டேன். அப்படிப்பட்ட ப்ராணனையும் பொறுக்கமாட்டேன். எல்லாரும் விரும்பக்கூடிய ஸுகத்தையும் ஸஹிக்கமாட்டேன். ஆத்மாவையும் ஸஹிக்கமாட்டேன். சேஷத்வசூன்யமான வேறு எதையும் ஸஹிக்கமாட்டேன். சேஷத்வசூன்யமான இவையெல்லாம் உருமாய்ந்து போகட்டும்'—என்று ஸ்ரீ ஆளவந்தாரும் இதையடியொற்றி பகவத்கைங்கர்யத்துக்கு உறுப்பல்லாதது முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யம் என்கிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிட்டார். ஆத்மஸ்வரூபமானது பகவதநந்யார்ஹ சேஷத்வைகநிரூபணீயமாயிருக்குமென்று, சேஷத்வத்தில் ஊற்றம் தோற்ற சேஷத்வத்தை முந்துறச் சொல்லி பிறகு ஆத்மாவை மகாரத்தால் சொல்லுகிறது ப்ரணவம். இப்படி ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு ஜ்ஞேயமான அறியத்தகுந்த பொருள் பரமாத்மா ஒருவனேதான் என்பதை இந்த ஸம்பந்தம் காட்டுகிறது. ஜ்ஞானம் என்பது உலகில் பலவிதம். ஆயுர்வேதம், சோதிடம், தர்க்கசாஸ்த்ரம் வான சாஸ்த்ரம், மோட்டார் வண்டி, ஆகாய விமானம் முதலியன செய்யும்படியான ஜ்ஞானம், ஆகாசவாணீ விஷயகருவி ஜ்ஞானம், வெடிகுண்டுகளால் ஜகத்தை அழிப்பதற்குள்ள ஞானம் முதலியவற்றில் ஒவ்வொன்றில் யோக்யதை பெற்றவனும் தன்னை ஜ்ஞானியென்றே நினைத்துக்கொள்ளுகிறான். ஆனால் உண்மையான ஜ்ஞானம் எது? ஜ்ஞானி என்பவன் எவன்? என்கிற கேள்விக்கு சாஸ்த்ரங்கள் பதில் கூறுகின்றன. 'तत्कर्म यन्नबन्धाय सा विद्या या विमुक्तये । आयासाय परं कर्म विद्यान्याशिल्पनैपुणम् ॥' ஸம்ஸாரத்தில் அகப்படுவதற்குக் காரணமாகாத கர்மம் எதுவோ அதுதான் கர்மம். முக்தி

பெறுவதற்கு உறுப்பான ஜ்ஞானம் எதுவோ அதுதான் ஜ்ஞானம். கீழ்சொன்னபடியில்லாத கர்மம் வீணை ஆயாஸரூபமேயாம். பகவத்விஷயகமல்லாத ஜ்ஞானம் செருப்புக்குத் தக்கற்றதுபோலேயாம்' என்றும்; 'संज्ञायते येनतदस्तदोषं शुद्धं परं निर्मलमेकरूपम् । संदृश्यते वाप्यधिगम्यते वा तज्ज्ञानमज्ञानमतोऽन्यदुक्तम् ॥' 'சாஸ்த்ரஜன்யமான எந்த ஜ்ஞானத்தால் பகவான் அறியப்படுகிருனே, பகுத்தறிவிஞலுண்டாகிய எந்த ஜ்ஞானத்திஞல் பகவான் பார்க்கப்படுகிருனே, பக்திரூபமாயும் தர்சனஸமாகாரமுமான எந்த ஜ்ஞானத்திஞல் பகவான் அடையப்படுகிருனே, அதுவேதான் ஜ்ஞானம்—மற்ற விதமான ஜ்ஞானங்கள் அஜ்ஞானமேயாம்'—என்றும் பராசரபகவான் அருளிச்செய்தார். "**मोक्षेधीः ज्ञानमन्यत्रविज्ञानशिल्पशास्त्रयोः**" 'மோக்ஷவிஷயமான புத்திதான் ஜ்ஞானமெனப்படும். மற்ற சாஸ்த்ரங்களிலும் சில்பசாஸ்த்ரங்களிலும் ஜ்ஞானம் விஜ்ஞானம் எனப்படும்'—என்று அமரஸிம்ஹனும் சொன்னுன். "**ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு**"—ஜ்ஞானமானது அழகிய தாமரைப்பூவில் பிறந்த பிராட்டிக்கு வல்லபனை பெருமான் ஒருவனையே சென்று பற்றும் என்று பொய்கையாழ்வார் நிஷ்கர்ஷித்தார். இந்த சேஷத்வஜ்ஞானமில்லாத போது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்தர்யபுத்தி நடக்கையாலே ஸ்வரூபமழிந்துவிடும். ஆகவே இந்த ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தஞானம் பிறக்கவே மற்றவை அறியத்தக்கவையோ என்கிற சங்கையறும். இவ்விதம் ப்ரணவத்தால் இந்த ஐந்து விதஸம்பந்தமும் சொல்லப்பட்டது.

(6) ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தம்.

கீழ்ச்சொன்ன சேஷத்வத்துக்கு ஆச்ரயமான ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வமானது நல்லதைப் பற்றுகைக்கும் கெட்டதை விடுவதற்கும் ஹேதுவாயிருக்கும். அந்தந்த ஹேயங்களை விடுகையாலும் உபாதேயங்களைப் பற்றுகையாலும் உண்டான சிகீர்ஷை (செய்ய இச்சை) கர்த்ருத்வமடியாயிருக்கும். கர்த்தாவுக்கே சிகீர்ஷையுள்ளது.

அந்த கர்த்ருத்வமானது ஸ்வாதந்த்ர்யத்தோடே கூடியிருக்கும் என்று சொல்லவேண்டும். ஏனென்றால் "स्वतन्त्रः कर्ता" 'கர்த்தாவாகிய ஸ்வதந்த்ரனாக வேண்டும்' என்று வ்யாகரண சாஸ்த்ரம் சொல்லுகிறது தவிர இதைச் செய்யவேண்டும், இதைத்தவிர்க்கவேண்டும் என்று விதிநிஷேத ரூபமான சாஸ்த்ரங்களில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு சக்தனானவனே கர்த்தாவாக நியோகிக்கப் படுவான்—ஏவப்படுவான். அல்லாதபோது ஸகல சாஸ்த்ரங் களும் நிஷ்ப்ரயோஜனமாய்விடும். 'कर्ता शास्त्रार्थवत्त्वात्' (2—3—33) என்று சாஸ்த்ரத்துக்கு ப்ரயோஜனம் வேண்டுகையாலே, ஜீவாத்மாவானவன் கர்த்தாவாக வேணும் என்று வேதாந்த ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டது. ஆகையாலே கர்த்ருத்வநிபந்தனமான ஸ்வாதந்த்ர்யத்தை ஸ்வரூபமாக வுடைய ஜீவனுக்குக் கீழ்ச்சொன்ன சேஷத்வமானது யுக்த மல்லவே! என்கிற சங்கை உண்டாகிறது. இந்த சங்கையை மந்த்ரசேஷமான நமச்சப்தம் நிவ்ருத்தி செய்து ஸ்வஸ்வாமி ஸம்பந்தத்தைத் தெரியப்படுத்துகிறது. இவ்வாத்மாவினுடைய ஸ்வார்த்தமான கர்த்ருத்வத்தை நிஷேதித்துக்கொண்டு அத்யந்த பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பிக்கையாலே அந்த சங்கையைக் கழித்துக்கொடுக்கிறது. 'परात्तु तच्छ्रुतेः' ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் பரமாத்மாவினால் ஏற்படுகிறது. பரமாத்மாவின் ப்ரயோஜனத்துக்காகவேயல்லாமல் ஜீவாத் மாவின் ஸ்வப்ரயோஜனத்திற்காக அல்ல. ஸ்வார்த்தமான கர்த்ருத்வத்தை நமః என்கிறது எப்படி நிஷேதிக்கிறது என்றால் மః என்று கீழ்ச்சொல்லப்பட்ட மகாரவ்யஞ்ஜனத்தில் ஷஷ்டியில் ஏகவசனமாய், மகாரவாச்யனான அஹமர்த்த பூதனான ஆத்மாவினுடைய மமத்வத்தைச்சொல்லி அதாவது தனக்கு உரியன் என்பதைச் சொல்லி நகாரத்தாலே அதை நிஷேதிக்கிறது. அதாவது நமம என்று தனக்கு உரியன் அன்று என்று சொல்லுகிறது. ஆனால் தாதர்த்ய விரோதியான ஸ்வார்த்தத்தைச் சொல்லுகிற மః என்கிற பதம் ஷஷ்ட்யந்தமாகாமல் சதுர்த்யந்தமல்லவா ஆக வேணும் ஏனென்றால் முன்பின் பதங்களான 'ஆய' 'நாராயணாய'

என்கிற பதங்கள் சதுர்த்யந்தமாகவல்லவோ இருக்கின்றன. முன்பின் பதங்களையனுஸரித்து மஹ்யம் என்று இதுவும் இருக்கவேணுமே. இல்லாவிடில் வாக்யத்துக்கு வைரூப்யம் வரும். ஆகையால் மஃ என்று ஷஷ்ட்யந்தத்வம் சேராதே? என்று ஆக்ஷேபம் வரில அப்படியன்று, இந்த ஷஷ்டியானது ஸம்பந்தஸாமான்யத்தைச் சொல்லுகையாலே தாதர்த்யத்தையும் காட்டும். ஆகையாலேதான் நமச்சப்தத்தை விவரிக்கும்போது 'அதமஹ்யம் ந' என்று ஷஷ்டிக்கு சதுர்த்தீ பொருளாக பட்டர் அருளிச்செய்தது. இந்த நமஃ என்கிற பதத்தில் முதலில் இருக்கிற ந என்கிற நஞ்ஞாலே 'வீடுமின் முற்றவும்' என்னுமாப்போலே, த்யாஜ்யஸ்வரூபநிரூபணம் பண்ணுவதற்கு முன்னே த்யாகத்தை ப்ரதிபாதிக்கிறது. கீழே ஆத்மஸ்வரூபம் பகவதநந்யார்ஹசேஷத்வைகநிரூபணீயமாயிருக்குமென்று சேஷத்வதில் ஊற்றம் தோன்ற, ப்ரணவத்திலே, ஜீவாத்மஸ்வரூபத்தை ப்ரதிபாதிப்பதற்கு, முன்பே சேஷத்வத்தை ப்ரதிபாதித்தாப்போலே, இவ்விடத்திலும் விரோதிஸ்வரூபமானது நிஷித்ததைக நிரூபணீயமாயிருக்குமென்று ப்ரகாசிப்பிக்கைக்காக, நிஷித்த ஸ்வரூபப்ரதிபாதனத்துக்கு முன்பே நிஷேதப்ரதிபாதனம் பண்ணுகிறது. ஈசுவரனுக்கு கௌஸ்துபம்போல் ஸ்ப்ருஹா விஷயமான ஜீவன் அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்தது ஸ்வரூப விரோதியான அஹங்காரத்தாலும் மமகாரத்தாலும் 'அஹமந்' என்று ஜீவன் ஈசுவரனுக்கு போக்யமாம்போது 'நீர்நுமதென்றிவை வேர்முதல்மாய்த்து' என்கிறபடியே அஹங்காரமமகாரங்கள் கழியாமற்போனல் ஈசுவரஸம்பந்தயோக்யதையேயில்லை. யானே யென்றனதே என்றிருந்தேன்' என்று அஹங்காரமமகாரங்களிரண்டையுமனுஸந்தித்து 'யானே நீ யேன்னுடைமையும் நீ' என்று பிறகு அவற்றினுடைய நிவ்ருத்தியையும் ஆழ்வார் அனுஸந்தித்தார். அஹங்காரம் போனபோதே மமகாரமும் போய்விடும் இந்த ஸ்வரூப விரோதியான அஹங்காரமமகாரம் போல் உபாயவிரோதியும் ப்ராப்ய விரோதியும் கழியவேணும். உபாயவிரோதியாவதுதானே தனக்கு ரக்ஷகன் எனறிருக்கை அது கழிகையாவது "களைவாய் துன்பம் களையா

தொழிவாய்களேகண் மற்றிலேன் "—நீ என் துக்கத்தைப் போக்கினுலும் ஸரி போக்காமற்போனுலும் ஸரி உன்னைத் தவிர வேறு ரக்ஷகவஸ்து இல்லை என்றிருக்கை. ப்ராப்யவிரோதியாவது ஸ்வப்ரயோஜன புத்தி. அது கழிகையாவது " மற்றைநங் காமங்கள் மாற்று "—உனக்குப்புறம்பான எங்களுடைய ஆசையைப் போக்கு என்றிருக்கை. 'स्वत्वमात्मनि संजातं स्वामित्वं ब्रह्मणिस्थितम्'—என்று சொல்லுகிறபடியே எப்போதும் ஜீவாத்மா பரமாத்மாவின் உடைமை, பரமாத்மா சொத்துக்கு உடையவன்—என்று சொல்லுவதால் சொத்துக்கு ஸ்வரக்ஷணகர்த்ருத்வமில்லை யென்றும், ஸ்வாமிக்கே அது தொழில் என்றும், சொத்தின் ப்ரயோஜனம் ஸ்வாமிக்கே உள்ளதென்றும் காட்டுகிறது இந்த ஸ்வஸ்வாமிஸம்பந்தம். இந்த ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ஸ்வாதந்த்ரய சங்கையறும்.

(7) சரீரசரீரிஸம்பந்தம்.

கீழ் ப்ரணவத்தாலும் நமச்சப்தத்தாலும் சொல்லப்பட்ட ஜீவாத்மாவின் அத்யந்தபாரதந்த்ர்யப்ரயுக்தமான பகவதேகசேஷத்வமானது, பகவானுக்கு ஜீவன் சரீரமாய் நின்றுலொழிய பொருந்தாமையாலே, அந்த சேஷத்வபாரதந்த்ர்யங்களை நிரூபிப்பதற்காக ஜீவபரர்களுடைய சரீராத்மஸம்பந்தத்தை ப்ரகாசிப்பிக்கிறது மேலிருக்கும் நாராயணபதம். நாராயணபதத்தில் பஹுவ்ரீஹிஸமாஸத்தில் नाराः अयनं यस्य सः வ்யாப்யமான நாரங்கள் சரீரமாய் அந்தர்வ்யாப்தியாலே வ்யாபகஸ்வரூபம் சரீரியாய்த் தோன்றும். நரः - நாரः - நாராः என்று நித்யபதார்த்தத்தையும், அதினுடைய ஸமூஹத்தையும், ஸமூஹபாஹுன்யத்தையும், சொல்லுகிறது. ப்ரக்ருதிபுருஷ காலங்களோடு, பரமபதத்தோடு, நித்யமுக்தவர்க்கத்தோடு, சத்ரசாமரம் முதலிய பரிச்சதங்களோடு, ஆயுதாபரணங்களோடு, பெரியபிராட்டியார் முதலான நாச்சிமார்களோடு, திவ்யமங்களவிக்ரஹத்தோடு ஸர்வத்தையும் நாரசப்தம் ப்ரதிபாதிக்கிறது. 'எண்பெருக்கந் நலத்தொண்பொருள்' என்றும் 'எண்ணமுடியாதவர்களாய்

ஜ்ஞானம் ஆனந்தம் என்கிற குணங்களையுடையவர்களாய், நித்யமாய் விலக்ஷணமான ஸ்வரூபத்தையுடையவர்களான ஸகல ஆத்மாக்களையுமுடையவனும், என்றும், 'நாரணன் முழுவேழுலகுக்கும்நாதன்' என்றும் அருளிச்செய்கையாலே சேதனுசேதனங்களிரண்டும் நாரசப்தவாச்யமாகக்கடவது. நரன் பக்கல் நின்றும் பிறந்த தத்வங்களைப் பிறப்பாலே நாரங்களாக அறிகிறுர்கள். அவைதான் அவனுக்கு வாஸஸ்தானமாகையாலே நாராயணன் என்றறியப்பட்டான்' என்கையால் நாரசப்தமானது கார்யபூதங்களான ஸர்வதத்வங்களையும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. இவ்விடத்தில் நரசப்தம் நாராயணனுக்குப்பர்யாயமான திருநாமம். 'जह्नुर्नारायणो नरः' என்று ஸஹஸ்ரநாமத்திலே திருநாமமாகச் சொல்லப்பட்டது. இப்படி காரணபூதனுன நாராயணனுக்கு, கார்யபூதமான ஸமஸ்த வஸ்துக்களிலும் அனுப்ரவேசரூபமான வ்யாப்தியாலே, நாமரூபவ்யாகரணமுண்டாகையால் அந்தந்த பதார்த்தங்களில் அந்தராத்மதயாவ்யாப்தியாலே அவற்றை சரீரமாக உடையவனுகையாலே, அந்தந்த பதார்த்தங்கள் தானேயாம்படி ப்ரகாரியாய் நிற்கையும், அவற்றுக்கு வாசகமான சப்தங்களுக்குத் தான் வாச்யனுய் நிற்கையுமாகிற ப்ரகாரம் சுருதியிலே சொல்லப்படுகிறது. "நான் இந்த தேஜோபன்னரூபமான தத்வங்கள் மூன்றையும் இந்த ஜீவனை ப்ரகாரமாகக் கொண்டு அனுப்ரவேசித்து நாமரூபங்களைப்பண்ணுவேன்"— என்று ஸங்கல்பிக்கையாலே, இந்த ஜகத்தெல்லாம் காரணமான ஸச்சப்தவாச்ய வஸ்துவை ஆத்மாவாக உடைத்தாயிருக்கும், அது ஸத்யம், அவன் ஆத்மா, இது சரீரம். த்வம் சப்தவாச்யமுமந்த காரணவஸ்துவென்றிட்டு நீயுமதுவேயென்றும் 'யாவனெருவன் ப்ருதிவிக்குள்ளே வர்த்திக்கிருன், எவனுக்கு ப்ருதிவி சரீரமாயிருக்கிறதோ' என்று ஆரம்பித்து, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், ஸூர்யன், சந்த்ரன், நக்ஷத்ரம், ப்ராணன், வாக் முதலிய இந்திரியங்கள், மனஸ் முதலிய ஸமஸ்த அசித்வஸ்துக்களையும் அவனுக்கு சரீரம் என்று சொல்லி, 'य आत्मनितिष्ठन् यस्यात्माशरीरं'–'यो विज्ञाने तिष्ठन् यस्य विज्ञानं शरीरं' எவன் ஜீவாத்மாவுக்குள் இருந்துகொண்டு

அடக்கி ஆள்கின்ருனே எவனுக்கு ஜீவாத்மா சரீரமோ என்று சேதனனையும் அசேதனத்தையும பரமாத்மாவுக்கு சரீரமென்று தனித்தனியாகவும் சொல்லியிருப்பதால் சரீரமான யாவற்றையும் 'உடல்மிசைஉயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்' என்றபடியே அனுப்ரவேசித்து அவைகளுக்கு ஆதமாவாக பகவான வ்யாபித்து நிற்கிருன் என்று ஏற்படுகிறது. ஸ்வதஸ்ஸித்தமான ஸர்வாவஸ்தாவ்யாப்தியையுடைய ஸர்வேசுவரனுக்கு அனுபரவேசமாவது - அந்தந்த கார்யோத்பத்திதசையிலே அபூர்வாவஸ்தாநரூபமான விசேஷவ்யாப்தியைக் குறிக்கிறது. இந்த சரீராத்மஸம்பந்தத்தால், கீழ்ச் சொன்ன ஸ்வஸ்வாமிஸம்பந்தமானது, வீடு, வயல், தோட்டம் முதலிய சொத்துக்களபோல் உடையவனை விட்டுப்பிரிந்த நிலையுள்ளவையன்றிக்கே ஸ்வாமியை விட்டுப் பிரிக்கமுடியாதவையான உடைமைகளைப் பற்றியதாயிருக்கும் என்று ஸித்திக்கிறது. இந்த சரீராத்மஸம்பந்தமானது நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ப்ரதாநப்ரதிதந்த்ரம். அதாவது மற்றுமுள்ள ஸித்தாந்திகளொருவரும் இசையாதே நம்முடைய ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தம். நம்முடைய ஸித்தாந்தம் ஒன்றில்தான் ஸகல சுருதிவாக்யங்களும் துல்யபலமானவை. நிர்சேஷாத்வைதிகளுக்கு, ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் சொல்லுகிறுப்போல் தோன்றும் அபேத ச்ருதிகளும், ஆத்மாவுக்கு யாதொரு குணமுமில்லையென்று சொல்லுகிறுப்போல் தோன்றும் நிர்க்குணச்ருதிகளும் முக்கியமானவை. பேதச்ருதிகளும் ஸகுணச்ருதிகளும் முக்கியமல்ல. அவை வ்யவஹார தசையில் கல்பிக்கப்பட்ட பேதங்களையும் குணங்களையும் சொல்லுகின்றன. த்வைதவாதிகளுக்கு அபேத ச்ருதிகள் முக்கியமல்ல. பேதச்ருதிகள் மட்டுமே ப்ரபலங்கள். அபேதச்ருதிகள் துர்ப்பலங்கள். விசிஷ்டாத்வைதிகளான நமக்கோவென்றுல் சேதனுசேதனங்களுக்கும் ஈசுவரனுக்கும் உண்டான சரீராத்மபாவஸம்பந்தத்தைச் சொல்லுகிற கடகச்ருதிகளின் பலத்தால் எல்லா ச்ருதிகளும் துல்யமான பலமுள்ளவை. ஸமஸ்த கல்யாணகுணங்களையும் பகவானிடத்தில்

ருப்பதாக போதிப்பதால் ஸகுணச்ருதிகளும், கெட்டகுணங்கள் ஒன்றுமில்லையென்று சொல்லுவதால் நிர்க்குணச்ருதிகளும், அத்யந்த பின்னங்களான சித், அசித், ஈசுவரன் என்கிற இம்மூன்று தத்வங்களின் ஸ்வரூபத்தைத் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லுவதால் பேதச்ருதிகளும் சரீரவிசிஷ்டமான பரமாத்மாவை, விசிஷ்டவேஷேண ஒன்று என்று விவக்ஷிப்பதால் அபேதச்ருதிகளும் ஸ்வரஸங்களாய் ஸர்வச்ருதி ஸாமரஸ்யமுண்டாகையால் விசிஷ்டவேஷத்தால் தத்வம் ஒன்று என்று சொல்லக்குறையில்லை. **'श्रीमन्नारायण एव चिदचिद्विशिष्टः अद्वैतं तत्वं'** என்பது நம்முடைய ஸித்தாந்தத்தின் சுருக்கம். இதுவே விசிஷ்டாத்வைத சப்தத்தின் பொருள். **विशिष्टस्य अद्वैतं** = விசிஷ்டாத்வைதம் என்று. இந்த சரீராத்மஸம்பந்தத்தையிட்டு சில இடங்களில் தத்வம் ஒன்ருகவும் மற்ற இடங்களில் தத்வம் அநேகமாகவும் அர்த்தத்தை அனுஸரித்து அந்தந்த அபிப்பிராயத்துக்குத் தக்கவாறு சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது ஆகவே இந்த சரீரசரீரிஸம்பந்த ஜ்ஞானம் பிறக்கவே ஜீவபரஸ்வரூபைக்யசங்கையறும்.

(8) தார்யதாரக ஆதாராதேயஸம்பந்தம்.

ஆதாராதேயஸம்பந்தம். இது நாராயணதத்புருஷஸமாஸத்திலே ஸித்தமாயும், கீழ்ச்சொன்ன சரீராத்ம ஸம்பந்தத்திற்கு முக்கிய லக்ஷணமாயுமிருக்கும் 'नाराणां अयनं,' – 'நாரங்களுக்கு இருப்பிடம்' என்கிற ஷஷ்டிதத்புருஷஸமாஸத்தாலே, ஸாவத்துக்கும் வாஸஸ்தானம என்று சொல்லுகையாலே, 'उभे अस्मिन् द्यावा पृथिवी अंतरेवसमाहिते उभावग्निश्च वायुश्च सूर्याचन्द्रमसावुभौ विद्युन्नक्षत्राणि यच्चास्येहास्ति यच्चनास्ति सर्वं तदस्मिन् समाहितं' இந்த தஹராகாச சப்தவாச்யனை பரமாத்மாவின் பக்கலிலே த்யாவாப்ருதிவிகள் இரண்டுமிருக்கும். அக்நி வாயு சந்த்ரன் ஸூர்யன் மின்னல் நக்ஷத்திரங்கள், இன்னும் இந்த ஜகத்தில் அஸ்தி சப்தத்தால் சொல்லப்பட்ட சேதன ஸமூஹமும், நாஸ்தி சப்தத்தால் சொல்லப்பட்ட அசேதன வஸ்துவும் இவையெல்லாம் இவன் பக்கலிலேயிருக்கின்றன என்றும், 'तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदुनात्येति कश्चन' அவன்

பக்கலிலே எல்லா லோகங்களும் ஆச்ரயித்திருக்கும் அந்த பரவஸ்துவையொழிய புறம்புபோவது ஒன்றுமில்லை- என்று சுருதியிலும் 'विष्टभ्याहमिदं सर्वं एकांशेन स्थितो जगत्' (கீதை, 10-42) 'यस्यायुतायुतांशांशे विश्वशक्तिरियं स्थिता' எவன் ஒருவனுடைய ஸ்வரூபத்திலே பதினுயிரத்தில் ஒன்றைப் பதினுயிரம் கூறிட்டு ஓர் அம்சத்தில் ஏகதேசாம்சத்தில் ஸகல ஜகத்துமிருக்கிறது என்று புராணத்திலும் எவனுடைய அயுதாம்சாம்சத்தில் ஒரு கலையினுடைய அம்சத்தினுடைய அம்சத்தில் விசித்ரமான சிதசித்துக்களினுடைய வேறு பாட்டையும் ப்ரவ்ருத்தியையுமுடைத்தான இந்த ஜகத் தெல்லாம் இருக்கிறதோ என்கிற ஸ்ரீ ஆளவந்தார் வசனத் தாலும், அபரிச்சின்னுகாரமாய் ஆநந்தஜ்ஞானச்சுடராகி அகலம் கீழ்மேலளவிறந்த பரமாத்மஸ்வரூபத்தின் ஏக தேசத்தில், ஸ்வத:நித்யமாயும், ப்ரவாஹத:நித்யமாயும், உபயவிபூத்யந்தர்கதமான ஸமஸ்தவஸ்து ஸமூஹங்களு மிருக்கும் என்று சொன்னதால், பரமாத்மாவானவன் தன் னைத்தவிர மற்ற எல்லா வஸ்துவுக்கும் ஆதாரம் என்றும், மற்ற வஸ்துக்கள் ஆதேயமென்றும், சொல்லப்பட்டது. இத்தால் ஈச்வரனுடைய பஹிர்வ்யாப்தி சொல்லப்பட்டது. நாரசப்த வாச்யங்கள் தார்யமென்றும், அயநசப்தவாச்யனை பகவான் தாரகன் என்றும் சொல்லப்பட்டது. அயநபதத்தால் இந்த ஸம்பந்தம் கிடைத்தது. ஆதேயத்வ-விதேயத்வ-சேஷத் வங்கள் சரீரத்துக்கு லக்ஷணங்களாயும், ஆதாரத்வ-விதாய கத்வ-சேஷித்வங்கள் சரீரிக்கு லக்ஷணங்களாயும் சொல்லப் பட்டிருப்பதில் ப்ரதானமான ஆதேயத்வ-தாரகத்வமாகிற லக்ஷணம் இந்த ஸம்பந்தத்தால் தோன்றுகிறது. சித் அசித் இவைகளின் நித்யஸ்திதிக்குக் காரணம் இந்த ஸம்பந்தம். உலகத்தில் சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரிதமுமாய் ஸங்கல்பாச்ரிதமுமாயிருக்கக் காண்கிறோம். ஜீவனிருந்தகால மிருந்து இவன் விட்டபோது அழிகையாலே ஸ்வரூபாச்ரிதம். இவ்வர்த்தம் ஸங்கல்பமில்லாத ஸுஷுப்தி முதலிய அவஸ் தைகளில் நன்கு விளங்கும். விழிப்பு முதலிய அவஸ்தை களில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்போது ஸங்கல

பாச்ரிதமென்னகடவது. இதில ஸ்வரூபாச்ரிதமாயிருக்கிற படியை ஆதேயத்வமென்றும் ஸங்கல்பாதீனமாயிருக்கிற படியை நியாம்யத்வமென்றும் சொல்லுகிறது. ஈசுவரன் சேதனுசேதனங்களேப்பற்ற தாரகனுமாய் நியந்தாவுமாகை யாவது தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் யதார்ஹம் ஸத்தா-ஸ்திதி - ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகனுயிருக்கை. இந்த தார்யதாரக ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே தாரகாந்தர சங்கையறும்.

(9) போக்த்ருபோக்ய ஸம்பந்தம்.

இது 'நாராயணாய' என்பதில் 'ஆய' என்கிற நான்காம் வேற்றுமையிலே, அநங்யார்ஹசேஷபூதனுன, மகாரவாச்யனுன ஜீவனுடைய ஸஹஜசேஷவ்ருத்தி தோன்றும்படி அதில் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சரீரியான பரமசேஷிக் கேயாதலால் சரீரமான சேஷபூதனுக்கு அன்று என்றிருக்கை. அதாவது ஸ்வார்த்தமான கர்த்ருத்வபோக்த்ருத்வங்கள் இல்லேயென்றிருக்கை. ஜீவனுக்கு ஜ்ஞாத்ருத்வஸ்வபாவத்தாலே கர்த்ருத்வம்போலே போக்த்ருத்வமும் பரமாத்மாயத்தமாயிருக்கும் 'चतुर्थीचाशिषि' (2–3–73) (இத்யாதி ஸூத்ரத்தாலே பிரார்த்தநாயாம் சதுர்த்தீயாதலால் ஸர்வஸ்வாமியான ஸர்வேசுவரன் பக்கல் இச்சேதநன் பண்ணும் வ்ருத்தி விசேஷ ப்ரார்த்தனையை ப்ரதிபாதிக்கிறது. இங்கு ப்ரார்த்திக்கப்படவேண்டிய வ்ருத்திவிசேஷமாவது, ஸ்வரூபவிருத்தங்களாயிருக்கிற புருஷார்த்தாபாஸங்களான ஐசுவர்யகைவல்யபுருஷார்த்தங்கள் போலன்றிக்கே, உயர்ந்தஸுகமாய், ஆத்மாவுக்கு நித்யஸித்தமாய் பகவானுடைய முகவிலாஸத்துக்கு ஹேதுவாயிருக்கிற பகவதனுபவஜனிதப்ரீதியினுல் ஏவப்பட்ட கைங்கர்யம். இது மனோ வாக் காயம் என்கிற மூன்று கரணங்களாலும் அனுஷ்டிக்கத்தக்கதாயிருக்கும். 'ஒழிவில்காலமெல்லாமுடனுய்மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டும்நாம்'—என்றும், 'சென்றுல்குடையாம் இருந்தால் சிங்காசனமாம் நின்ருல் மரவடியாம் நீள்கடலுள் என்றும் புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம்

திருமாற்கரவு '—என்றும் சொல்கிறபடியே திருவனந்தாழ்வானைப்போலே ஸர்வவிதமான கைங்கர்யங்களையும் செய்ய வேண்டுமென்று அபேக்ஷிக்கப்படுகிறதும், ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும் ஸர்வாவஸ்தையிலும் அனுவர்த்திக்கக் கடவதுமாயிருக்கும். இந்த கைங்கர்யம் '**क्रियतां इति मां वद**' '**கூவிப்பணிகொள்ளாய்**' என்றும், '**ஏவமற்றமரர் ஆட்செய்வார்**'—என்றும் சொல்லுகிறபடியே பகவானுடைய நியோக கார்யமாயிருக்கும். பரதந்த்ரனுக ஜீவனுக்குப் பிறக்கும் போக்யம் பாரதந்த்ர்யவிதியினுலல்லது புருஷார்த்தமல்லாமையாலே, இவனுடைய புருஷார்த்ததைக்கு ஹேதுவான பகவத் ப்ரீதிஜனகத்வப்ரதிபத்தியையொழிய, ஸ்வயம் போக்கியமாயிருக்குமாகாரமானது விரோதியாயேயிருக்கும். இதையாழ்வார் புருஷார்த்தநிஷ்கர்ஷம் பண்ணும் திருவாய்மொழியாகிற எம்மாவீட்டுத்திறத்தில் தெளிவாக அருளிச்செய்தார், ஆழ்வாருக்கு மோக்ஷத்தில் ருசியாகில் அதை இவருக்குக் கொடுத்துவிடுவோமென்று திருவுள்ளம்பற்றி, "ஆழ்வாரே, நீர் அபேக்ஷிக்கிற மோக்ஷத்தைக்கொள்ளும்"—என்று பகவான் சொல்ல, அதைக்கேட்ட ஆழ்வார் "எம்பெருமான் இப்படிக் கொடுக்கும் மோக்ஷம் நமக்கு எதுக்கு? நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றவேணுமென்ற திருவுள்ளத்தோடே அவன் தந்தருளும் மோக்ஷம் நமக்குப்புருஷார்த்தமாகுமோ? அவன் தன்னுடைய ருசிக்கீடாகக்கொடுத்தருளினுல்மட்டுமே அது நல்லதேயல்லது, நம்முடைய ருசிக்கீடாகக் கொடுக்குமது நரகத்துக்கு ஒப்பாகும்' என்று திருவுள்ளம் பற்றி 'பிரானே, நான் முக்தனுய் எல்லையற்ற இன்பம் அனுபவித்தாலும் ஸரி, கைவல்யானுபவம் பெற்றுலும் ஸரி, ஆத்ம விநாசமடைந்தாலும் ஸரி, நரகானுபவம் பண்ணினுலும் ஸரி, இவற்றில் எனக்கு ஒரு நிர்பந்தமில்லை. ஆனுல் உன்னுடைய ருசிக்கீடாக வருமதானுல் இவைபித்தனையும் வரவுமாம். எனக்காகவருமாகில் மோக்ஷமும் வேண்டாம். ஆனபின்பு தேவரீருடைய ருசிக்கு ஏற்றது எதுவோ அதுவே எனக்கு ப்ராப்யமாகும்படிசெய்தருளவேணும்' என்றருளிச்செய்தார். ஜீவன் தன்னுடைய ப்ரீதிக்காகச் செய்யும் அடிமை வழுவுள்

ளதாகும் (குற்றமுள்ளதாகும்). இதை கைங்கர்யத்தில் களை என்பார்கள். 'உனக்கே நாம் ஆட்செய்வோம்'—சேஷிக்கே உகப்பாகப்பண்ணவேணும்—'மற்றை நம் காமங்கள் மாற்று' என்ருள் ஆண்டாளும். கைங்கர்யத்தில் ஸ்வப்ரயோஜனத்வ புத்தியைத் தவிர்க்கவேணும். ப்ராப்யவிரோதி கழிகையாவது மற்றை நம் காமங்கள் மாற்று என்றிருக்கை' என்றுஉலகாசார்யர் அருளிச்செய்தார். 'अहमन्नं' 'என்கிற சுருதியும் பகவானே போக்தா என்றும், ஜீவன் போக்யமென்றும் சொல்லுகிறது. कदाहमैकांतिकनित्यकिंकरः प्रहर्षयिष्यामि सनाथजीवितः'—என்ருர் ஸ்ரீ ஆளவந்தாரும். நித்யகைங்கர்யம்செய்பவனுக என்னை ஆக்கினுலொழிய என்னுடைய ஸத்தை பயன்பெறமாட்டாது. தன்னுடைய அனுவ்ருத்தியால் பகவானுக்குப் பிறந்த ஹர்ஷமே சேதனனுக்கு ப்ராப்யம். 'உன்னை அனுபவித்து நான் எப்போது களிக்கப்போகிறேன்'—என்று சொல்லாமல் 'எப்போது நான் உன்னை ஸந்துஷ்டனுகச்செய்யப்போகிறேன்'—என்று சொன்னதால், சேதனலாபத்தால் எம்பெருமான் திருவுள்ளமே உகப்பது, அதனுலுண்டாகும் உகப்பே ஜீவனுக்குள்ளது. ஸ்ரீ பாஷ்யகாரரும் கடைசி ஸூத்ரபாஷ்யத்தில் 'न च परमपुरुषः सत्यसंकल्पः, अत्यर्थं प्रियं ज्ञानिनं लब्ध्वा कदाचिदावर्तयिष्यति'—பகவான் தனக்கு மிகவும் ப்ரியமான ஞானியையடைந்து, பிறகு அவனை லீலாவிபூதிக்குத்திருப்புவதில்லை, என்று ஜ்ஞாநிநம்லப்த்வா என்கிற பதங்களால் சேதனன் அடையும்மோக்ஷமானது பகவானுக்கே கிடைத்தலாபம் என்கிற அர்த்தம் தோன்றும்படி பதமிடுகிருர். போக்யவஸ்துவையடைவது போக்தாவுக்குக் கிடைத்தலாபமல்லவா? சேதனலாபத்தால் எம்பெருமான் திருவுள்ளம் உகந்து அதனுலுண்டாகும் உகப்பே ஜீவனுச்கு உள்ளது என்பதை 'अहमन्नादः' என்கிற சுருதி சொல்லிற்று. இந்த போக்த்ரு போக்யஸம்பந்த ஜ்ஞானம் பிறக்கவே சேதனன் போக்தா என்கிற சங்கையறும்.

ஆக இந்த ஒன்பது வித ஸம்பந்தத்தை ப்ரதிபாதிக்கிற திருமந்த்ரத்தால் ஸர்வகாரணனும் ஸர்வரக்ஷகனுமான ஸர்வே

சுவரனுக்கு அநந்யார்ஹசேஷபூதனாய், எனக்கு உரியனன்றிக்கேயிருந்துள்ள நான் ஸர்வசேஷியான நாராயணனுக்கு நித்யகைங்கர்யம் பண்ணப்பெறுவேனாகவேணும் என்று ப்ரார்த்தித்ததாயிற்று.

श्रीशैलचक्रवर्ती जीवपरसहजनवविधसंबन्धान् ।
आचार्यदर्शितपथा परमपुरुषमुदे व्यवृणुतैतान् ॥

ஸ்ரீமதுபயவே. (கோவை) ஸ்ரீசைல சக்ரவர்த்தியாசார்யர் இயற்றிய
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரத்தில் ஐந்தாவது அதிகாரம்
ஜீவபரஸம்பந்தம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்
முற்றுப்பெற்றது.